
பூங்கொடி
பதிப்பகம்
ஊன்றுகோல்
லக்ஷ்மி

## நூல் விவர அட்டவணை


நூல் தலைப்பு : ஊன்றுகோல்

ஆசிரியர் : லக்ஷ்மி

நூல் உரிமை : டாக்டர் கே. மகேஸ்வரன்

பொருள் : நாவல்

மொழி : தமிழ்

வெளியிடுவோர் : பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-4.
தொலைபேசி : 24943074

பதிப்பு ஆண்டு : முதற்பதிப்பு, மே, 1981
இரண்டாம் பதிப்பு, மே,1983
மூன்றாம் பதிப்பு, டிசம்பர், 1986
நான்காம் பதிப்பு, மே, 1994
ஐந்தாம் பதிப்பு, செப்டம்பர், 2004

நூல் அளவு : 18.5 x12.5 செ.மீ.

எழுத்து : 11 புள்ளிகள்

பக்கங்கள் : 188

நூல் கட்டு : கார்டு போர்டு

லேசர் அச்சுக் கோப்பு : அழகர் கிராஃபிக்ஸ், சென்னை-50

அச்சிட்டோர் : எம்.கே. எண்டர்பிரைசஸ்
சென்னை - 600 005.

விலை : ரூ.60.00



சென்னை மாவட்ட கிளை நூலகம் ★ கொளத்தூர், சென்னை ★

39795

5693998


உள்ளே...


1. இவனும் ஒரு பரசுராமன் ... 5

2. ஊன்றுகோல் ...54

''லக்ஷ்மி''யின்

பூங்கொடி வெளியீடுகளில் சில...

| | |
|---|---|
| அழகின் ஆராதனை | 52.00 |
| அவள் தாயாகிறாள் | 30.00 |
| அவளுக்கென்று ஒரு இடம் | 56.00 |
| அவள் ஒரு தென்றல் | 42.00 |
| இரண்டு பெண்கள் | 27.00 |
| இனிய உணர்வே என்னைக் கொல்லாதே | 85.00 |
| இன்றும் நாளையும் | 65.00 |
| உறவுகள் பிரிவதில்லை | 20.00 |
| உயர்வு | 50.00 |
| என் வீடு | 40.00 |
| ஒரு காவிரியைப் போல (சாகித்ய அகடமி பரிசுபெற்றது) | 100.00 |
| கடைசி வரை | 25.00 |
| கங்கையும் வந்தாள் | 80.00 |
| கணவன் அமைவதெல்லாம் | 60.00 |
| காஷ்மீர் கத்தி | 30.00 |
| காளியின் கண்கள் | 53.00 |
| கூண்டுக்குள்ளே ஒரு பச்சைக்கிளி | 24.00 |
| கைமாறிய போது | 42.00 |
| திரும்பிப் பார்த்தால் | 30.00 |
| தை பிறக்கட்டும் | 21.00 |
| நாயக்கர் மக்கள் | 120.00 |
| நிற்க நேரமில்லை | 38.00 |
| நிகழ்ந்த கதைகள் | 70.00 |
| நீதிக்குக் கைகள் நீளம் | 50.00 |
| பவானி | 50.00 |
| புதை மணல் | 50.00 |
| பெண் மனம் (தமிழ்நாடு அரசு பரிசு பெற்ற நூல்) | 50.00 |
| மீண்டும் வசந்தம் | 80.00 |
| மீண்டும் ஒரு சீதை | 42.00 |
| முருகன் சிரித்தான் | 24.00 |
| மோகத்திரை | 32.00 |
| ராமராஜ்யம் | 20.00 |
| ரோஜா வைரம் | 27.00 |

சென்னை மாவட்ட கிளை நூலகம் கொளத்தூர், சென்னை
39795
5693998

# இவனும் ஒரு பரசுராமன்

## 1

**சந்தனக் கட்டைகள் போன்று நிமிர்ந்து**
**புடைத்த தோள்கள், பரந்த மார்பு,**
**தீர்க்கமான கண்கள், நடையில் எத்தனை**
**மிடுக்கு! பார்வையில் என்ன கம்பீரம்!**

அன்று காலை பார்வதிக்கு திடீரென்று வீடு தொலை தூரத்தி லிருப்பது போன்றதொரு மலைப்பு ஏற்பட்டது.

இடுப்பில் அவள் சுமந்து கொண்டிருந்த குடம் இரும்புக் குண்டாகக் கனத்தது.

வெட்கமும் துயரமும் கலந்த உணர்வு நெஞ்சில் சுமையாகக் கனக்க மூச்சுத் தடுமாறி குடத்து நீர் தளும்பி இடுப்புப் புடவையை நனைக்க சோர்வுடன் அவள் வீட்டை நோக்கி நடந்து கொண்டி ருந்தாள்...

என்றும்போல அவள் மௌனமாக மற்ற பெண்கள் பேசுவதைக் கேட்டபடி குடத்தைத் தேய்த்து அலம்பிவிட்டு காவேரி நீரை முகந்துகொண்டு வந்திருக்க வேண்டும்.

லதா வாயாடி என்பதைக் கேள்விப்பட்டிருந்தாள். அதுவும் சென்னைக்குச் சென்று கல்லூரிப் படிப்பு படித்து விட்டு திரும்பிய பின்னர்...

சங்கரநல்லூரைத் தொட்டுக் கொண்டு ஓடிய அகன்ட காவேரியைவிட அவள் வாய் அகன்று விட்டதாக மற்ற பெண்கள் கேலி செய்ததையும் அவள் அறிவாள். பம்பாயில் வேலை பார்த்த பெரியதொரு ஆபீசருக்கு வாழ்க்கைப்பட்டிருந்தாள். பிறந்த வீட்டுக்குச் சில நாட்கள் சீராட வந்தவள் தன் புக்ககத்துப் பெருமையைப் பறைசாற்றிக் கொள்ள சில நாட்களாக காலை வேளைகளில் காவேரிக்குக் குளிக்க வந்து கொண்டிருந்தாள்.

பார்வதி வீட்டிலேயே குளித்து முடித்துவிட்டு சிவன் கோயிலில் பூஜை செய்யும் தன் பெரிய மாமனாருக்குக் குடிக்கத் தண்ணீர் எடுக்கத்தான் தினசரி காவேரிக்கு வருவது வழக்கம்.

கிழவருக்கு வீட்டுப் புழக்கடையிலிருக்கும் கிணற்றுத் தண்ணீர் தொண்டையில் இறங்காது.

கணவன் வெளியூரிலிருந்த திரும்பும்வரை கிழவரை நன்றாகக் கவனித்துக் கொள்ள வேண்டியது அவள் பொறுப்பில் இருந்தது.

''பாவம் வயசானவர் உன் பெரிய மாமனார். சின்ன வயசில் பெற்றோர்களை இழந்த உன் கணவனைத் தன் பிள்ளையாக நினைத்து ஆளாக்கினவர். அவருக்கும் அவனைத் தவிர ஆதரவு தர வேறு யார் இருக்கா? இன்னும் கொஞ்சம் நாள்தான். பொறுத்துக்கோ. மாப்பிள்ளை வந்ததும் கோவில் அர்ச்சகர் பதவியை ஏத்துக்கொண்டு விடுவார். அப்படித்தான் ஏற்பாடு. அதுக்கப்புறம் கிழவர் க்ஷேத்திராடனத்திற்குப் புறப்பட்டு விடுவார். உனக்கு ஓடற பாம்பை மிதிக்கிற வயசு. ஒரு குடம் ஜலத்தைத் தூக்கிக் கொண்டு வரது கஷ்டமா என்ன?''

அவள் அப்பா நடராஜன் வற்புறுத்தலாக உத்தரவிட்டு இருந்ததைத் தவிர்க்க இயலவில்லை.

அன்று வெள்ளிக்கிழமை, விடியற்காலையிலேயே அவள் வீட்டில் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு விட்டிருந்தாள். மாமனார்



கோவிலுக்குப் புறப்பட்டு விட்டிருந்தார். அவள் கணவன் கேட்டுக் கொண்டபடி தம் மகளுக்கு உதவி செய்யவும் துணையாக இருக்கவும் அரசலூரிலிருந்து வந்து அவர்களோடு தங்கிவிட்டிருக்கும் நடேசன், வாயில் வராந்தாவில் கிடந்த பெஞ்சில் காலைப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தார். அவருக்குக் காப்பியைக் கலந்து கொடுத்து விட்டுத்தான் அவள் கிளம்பினாள்.

''சீக்கிரம் வந்துடு - ரொம்ப ஆழமான இடத்தில் இறங்காதே'' தினமும் சொல்லும் எச்சரிப்பை முணுமுணுத்தபடி நடேசன் பத்திரிகையிலேயே ஆழ்ந்து கிடந்தார்.

காலை பூஜை முடிந்ததும் மாமனார் கோவிலிலிருந்து பசியோடு திரும்புவார். கொஞ்சநாளாக அவருக்குப் பசியே தாளமுடிவதில்லை.

''எல்லாம் ஒருபிடி சோற்றுக்குத்தானே அம்மா. இந்தக் கல்லைக் கட்டிக்கொண்டு சிரமப்படறேன்.''

ஒருநாள் அவர் அலுத்துச் சலித்துக்கொண்டு பேசியபோது அவள் மனம் வேதனைப்பட்டது.

வெளிநாட்டிற்கு அர்ச்சகராகப் பணி செய்ய, தன்னைத் தவிக்க விட்டுப் போய்விட்டான் தம்பி மகன் என்று அவர் அப்படிச் சாடுகிறார்... புரிந்து கொண்டாள். கிழவர் தன்னாமையில் ஏதேதோ சொல்கிறார் என்று நெஞ்சுருகிப் போனாள். என்ன செய்வது? அவள் கணவன் சபேசன் பக்கத்து ஊரிலா இருக்கிறான் கூப்பிட்டதும் ஓடி வந்துவிட? ஆறாயிரம் மைல்களுக்குக்கப்பாலிருந்த ஆப்பிரிக்காவுக்கு அர்ச்சகராகப் பணி செய்யப்போயிருந்தான். மூன்று வருஷ ஒப்பந்தத்தில் போய் இருந்தான். முறித்துக் கொண்டு திரும்பி விட முடியாத சிக்கல். அவன் வரும்வரை சங்கமேஸ்வரனின் ஆலயத்தின்

பூஜா காரியங்களைத் தாம் பார்த்துக்கொள்வதாக ஒப்புக் கொண்டு அவனை ஆசியுடன் அனுப்பியவரும் அவர்தான்.

வலு ஒடுங்கத் தொடங்கியதும் கிழவருக்கு பூஜா காரியங்களைச் செவ்வனே செய்து முடிக்க சிரமமாக இருந்தது. சிடுசிடுப்பும் அதிகரித்தது.

பார்வதிக்குத் தன் மாமனார் கைலாசத்திடம் மிக்க மரியாதை. அழுத்தமாக பதில் பேச அச்சம்.

''பெரியப்பா என்னை வளர்த்து - படிக்க வச்சு ஆளாக் கினவர். கொஞ்சம் முன்கோபி- எப்பவாவது கடுமையாகப் பேசி விடுவார். ஆனால் நீ அதைக் கண்டுகொள்ளக்கூடாது'' ஊருக்குப் புறப்படுமுன் பன்னிப் பன்னி அவள் கணவன் சபேசன் அவளிடம் சொல்லிவிட்டுப் போயிருந்தான். அதை அவள் மறக்கவேயில்லை. கிழவரின் முணுமுணுப்பையும் முசுட்டுத் தனத்தையும் பொருட்படுத்தியதே இல்லை.

அன்று காலை அவள் தண்ணீர்க் குடத்துடன் கடைத்தெரு பரமசிவத்தின் பெண்களோடு வழக்கம்போலத்தான் புறப்பட்டி ருந்தாள். சிறிது நேரத்தில் காவேரிக் கரையில் பெண்கள் குளிக்கும் பகுதியில் கூட்டம் நிறைந்துவிட்டது. திண்ணங்களில் எண்ணெய், சீயக்காயுடன் காவேரியில் தலை முழுக லதா வந்திருந்தாள். புடவைத் தலைப்பை மார்பின் குறுக்காக இறுக்கிக் கட்டிக்கொண்டு கூந்தலை விரித்துப் போட்டபடி கரை மீது கிடந்த ஒரு கல்மேல் அவள் உட்கார்ந்து கொண்டாள். எண்ணையை தலையில் அப்பிக் கொள்ள அவள் கிண்ணத்தைக் கையில் எடுத்தாள். பார்வதியின் மனம் பரபரத்தது.

''லதா! காவேரியில் ஸ்நானம் பண்ண வந்திருக்கே. எண்ணையை விரல்களால் தொட்டு அஞ்சு தடவை தலையில் வச்சுண்டு... 'அகல்யா, திரௌபதி, சீதா, தாரா மண்டோதரி



ததாபஞ்சகன்ய ஸ்மரே நித்யம் ஸர்வ துக்க விநாசனம்'ம்னு பிரார்த்திச்சுண்டு ஸ்நானம் பண்ணு.''

''எதுக்காக இவர்களையெல்லாம் என்கூட ஸ்நானம் பண்ணக் கூப்பிடச் சொல்றே...?''

லதா உரக்கக் கேட்டுவிட்டுச் சிரித்தாள்.

''இவர்கள் எல்லாம் பதிவிரதைகள்- இவர்களை ஸ்மரித்தால் நமக்கு நல்லது.''

''உன் கணவரின் உபதேசமா!''

''இல்லை, நான் புக்ககத்துக்கு வந்த புதிசில் என் மாமனார்தான் இதைப்பத்தி விரிவா எடுத்துச் சொன்னவர். தினமும் ஸ்நானம் செய்யும்போது இதை நான் சொல்றது பழக்கம்.''

'' இதுவரை உனக்கு இதனால் கிடைச்ச பலன்?''

''சாப்பாட்டுக்கு கஷ்டமில்லாம வாழ்ந்துண்டு இருக்கேன். இவர்கள் எல்லாம் நம்மால் பூஜிக்கப்படவேண்டியவர்கள். அதனால் இவர்களை வணங்குவதில் என்ன தப்பு?''

''இவர்கள் நம்மை விட உயர்ந்தவர்கள்னு யார் சொன்னது? இந்தக் கட்டுக் கதைகளையெல்லாம் நம்பிக்கொண்டு, அர்ச்ச கருக்கு வாழ்க்கைப்பட்டு அடிமையிலும் அடிமையாக வாழத்தான் நீ பி.யூ.சி. வரை படிச்சியாக்கும்.''

''படிப்புக்கும் இந்த நம்பிக்கைக்கும் என்ன சம்பந்தம்?''

''ரொம்ப சம்பந்தம் இருக்கு. படிப்பு அறிவை விசாலப் படுத்துவது. இந்தக் கட்டுக் கதைகளை ஆராஞ்சு தூர எறியச் சொல்றது. நீ உபாசிக்கும் இந்த பஞ்ச கன்னியர்களில்... அகல்யா மறக்க முடியாத ஒரு கதாபாத்திரம். பல கதாசிரியர்களுக்கு

இவள் பெயர் சில தவறுகளை நியாயப்படுத்த உதவும் ஊன்றுகோல்.

''இவள் நம்பியிருந்தால் தன் பெண்மையைப் புத்திசாலித் தனமாகக் காப்பாத்திக் கொண்டிருக்கலாம். தெரிந்தும் கெட்டுப் போனவள்-இவள் ஒரு பதிவிரதை''

''இரண்டாவதாக திரௌபதி... ஐந்து கணவர்களுடன் வாழ்ந்தவள். இவளும் சில கதாசிரியர்களுக்கு உவமையாக விளங்குகிறவள். அடுத்த பெரிய பதிவிரதை தாரா. பிரகஸ்பதி யின் மனைவி. அவர் சீடன் சந்திரன் மேல் ஆசை கொண்டு தன்னை அழித்துக் கொண்டவள். சீதா! பாவம் நல்லவள். ஆனால் கோழை. கணவனது சந்தேகத்தைத் தெளிவிக்க தீக்குளித்த பேதை. மண்டோதரி உத்தமி. ஆனால் பயந்தாங் கொள்ளி. கணவனது துரோகத்தைப் பாராட்டாது, கண்கண்ட தெய்வமாக அடிமையாக வாழ்ந்தவள். இவர்கள் எல்லாம் நமக்கு எந்த வகையில் வழிகாட்டிகள், சொல்லு...''

கொல்லென்று எல்லாப் பெண்களும் சிரித்துவிட்டனர்.

பார்வதி வெட்கத்தில் முகம் சிவந்துபோனாள். அவள் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. அவளது பாட்டியின் பெயர் அகல்யா, அதைத்தான் அவள் தாய் அவளுக்கு வைத்திருந்தாள். மாமியாரின் பெயரைச் சொல்லிக் கூப்பிடக் கூசி பார்வதி என்று வீட்டு வழக்கத்திற்குப் பெயரை மாற்றினாள் அம்மா... லதா சொன்னதைக் கேட்க அவளுக்கு அருவருப்பாகத்தான் இருந்தது....

''கண்ணகியை நினைச்சாவது ஸ்நானம் பண்ணேன்... கற்புக்கு இலக்கணம் அவள்தானே?'' விட்டுக் கொடுக்காது பதிலளித்துவிட்டு குடத்தைத் தேய்க்க ஆரம்பித்தாள்.



''தன் கணவன் கொலை செய்யப்பட்டது அநியாயம் என்ற உண்மையை நிலைநாட்ட நீதி கோரி அவள் கால் சிலம்பைக் கையில் எடுத்துக் கொண்டு காளிபோலப் புறப்பட்டாள். ஒத்துக் கிறேன். ஆனால் அவளும் சுயநலக்காரி. தன் கணவனுக்காக நியாயம் கேட்கப் புறப்பட்டவள்-கால முழுவதும் வஞ்சிக்கப் படும் பல பெண்களுக்காக நியாயம் கேட்டு சிலம்பைக் கையில் தூக்கிக் கொண்டு அரசசபைக்கு விரைந்திருந்தால் நான் பேஷ் சொல்லியிருப்பேன் எனக்கு இந்தக் கதைகளில் எல்லாம் நம்பிக்கை கிடையாது. அர்ச்சகருக்கு வாழ்க்கைப்பட்டு விட்டதால் நீ உன் படிப்பைத் தூரக்கட்டி வைத்து விட்டு சிந்திக்கும் சக்தியையும் இழந்து விட்டிருக்கே'' லதா... வாய்விட்டுச் சிரித்தாள்.

''நீ வேணுமானால் புராணத்தையும் சிலப்பதிகாரத்தையும் உன் மனசுபடி 'மாத்தி எழுதிக்கோ...'' ஆத்திரமாகப் பதிலளிக்கப் பார்வதி துடித்தாள். ஆனால் அவளோடு வம்பு ஏன் என்ற நினைவில் ஏளனமாக முறுவலித்துவிட்டு, குடத்தைக் கழுவி ஆழமான இடத்திலிருந்து நீரை முகந்து கொள்ளத் தண்ணீரில் வேகமாக இறங்கினாள்.

லதா எழுந்து தண்ணீருக்குள் இறங்கி அவள் அருகே வந்தாள். அவளுக்கு மட்டும் கேட்கும் தாழ்ந்த குரலில் பேசினாள்.

''உன் அப்பா பக்கத்து கிராமமான அரசலூர் ஹைஸ்கூலில் ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றுக்கொண்டவர்ன்னு கேள்விப் பட்டேன், உன் மூணு தமக்கைகளையும் நல்ல இடத்தில் தான் கொடுத்திருக்கிறார்னு ஊரில் சொல்லிக்கொண்டார்கள். நீதான் கடைசிப் பெண்ணாம். உன் அம்மா இறந்து போனதும் வீட்டை நிர்வகிச்சு உன் அப்பாவை கவனிச்சுக் கொண்டாயாம்.''

''அப்படி இருந்தும் உன்னை உன் அப்பா நல்ல இடத்தில் கல்யாணம் செய்து கொடுக்காது இந்த சங்கநல்லூர் கிராமத்து சிவன் கோவில் அர்ச்சகருக்குப் பிடிச்சிக் கொடுப்பானேன்?...''

பார்வதிக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

அவளை அவள் தந்தை ஒரு பாழுங்கிணற்றில் தள்ளி விட்டதைப் போலல்லவா லதா பேசுகிறாள். வாயாடி... திமிர் புடிச்சவள், துணிச்சலா கேட்கிறாளே!... உதட்டை அழுத்திக் கடித்துக் கொண்டாள்.

''என் கணவர் படிச்சவர்தான். அவரும் ஒரு கிராஜுவேட் தான். ஆனாலும் குடும்பப் பரம்பரையான அர்ச்சகர் தொழிலை மகிழ்ச்சியோடு எடுத்துக்கொண்டார். பி.ஏ. படிச்சுட்டு எங்கேயோ ஒரு கம்பெனியில்... கணக்கராக குறைஞ்ச சம்பளத்தில் பட்டணத்திலே பற்றாக்குறையில் திண்டாடுவதை விட.... இந்தக் கிராமத்துக் கோவிலுக்கு அர்ச்சகராக இருந்து கொண்டு வயிறார சாப்பிட்டு - சுகமாக வாழ்கிறோம். இதில் என்ன தப்பு? புரட்சிகரமாகப் பேசத் தெரிஞ்ச உனக்கு செய்யும் தொழிலில் மட்டும் ஏன் உயர்வு தாழ்வுன்னு வித்யாச மனப்பான்மை?''

அதற்குமேல் பேசப் பிடிக்காது அவள் குடத்தை எடுத்துக் கொண்டு துணைக்கு வரும் மற்ற பெண்களுக்காகக் காத்திராமல் கோபத்துடன் விடுவிடுவென்று நடந்தாள்.

பின்னால் கேட்ட சிரிப்பொலி அவளது ஆத்திரத்தை அதிகப்படுத்தியது. லதா ஏதோ வேடிக்கையாக அவளைப்பற்றிப் பேசியிருக்கிறாள்... மற்ற பெண்கள் கூடச் சேர்ந்து சிரிக்கிறார்கள். விவேகமில்லாத அறிவிலிகள் போகட்டும். வெகுண்ட படி விரைவாக நடந்தாள்.

வெட்கம் மனத்தை வலித்தது-வேதனை நெஞ்சை இறுக்கியது... கண்களில் நீர் முட்டிக்கொண்டு அவளுக்கு அழுகை



வந்தது... சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். கொஞ்ச தூரம் நடந்ததும் அலுப்புத் தாளாது நின்றாள். லதாவுக்கு பதில் சொல்ல அவளிடம் விஷயமா இல்லை... காலைவேளையில் காவேரிக் கரையில் வீண் சண்டை ஏன் என்று பொறுமையுடன்தான் நகர்ந்து விட்டிருந்தாள்.

சங்கநல்லூருக்கு அருகே சில கிலோ மீட்டர் தொலைவில் தான் அவர்கள் வாழ்ந்த கிராமம் அரசலூர் இருந்தது. சுற்றுப்புற கிராமத்து மாணவர்கள் எல்லோரும் அங்கேதான் வந்து படித்தாக வேண்டும். அந்த வட்டாரத்திற்கே அரசலூரில்தான் ஒரு உயர்நிலைப்பள்ளி இருந்தது. இதில் கணக்கு ஆசிரியராக வேலை பார்த்த அவள் தந்தைக்கு ஊரில் செல்வாக்கு அதிகமுண்டு. ஆனால் தமது நான்கு பெண்களையும் சீரும் சிறப்புமாக வாழ வைக்கவேண்டிய செல்வந்தான் அவரிடம் பூஜ்யமாக இருந்தது.

முதல் மூன்று பெண்களை எப்படியோ பாடுபட்டு... தமது தந்தை விட்டுப் போயிருந்த ஒரே சொத்தான வீட்டின்மீது கழுத்து மட்டும் கடன் வாங்கி மனைவியின் மஞ்சள்காணியை விற்று... கல்யாணத்தை முடித்து விட்டிருந்தார். கடைக்குட்டியான பார்வதியைப் படிக்க வைத்து ஒரு பட்டதாரியாக்கி... தொழில் கல்வியில் தேர்ச்சி பெறச் செய்து தானாகவே வாழக்கூடிய திறமையை அவளுக்குத் தந்துவிட வேண்டுமென்ற அவாவில் தான் திருச்சிக்கு அனுப்பி ஹாஸ்டலில் தங்க வைத்து... பி.யூ.சி வரை அவளைப் படிக்க வைத்திருந்தார். அவள் அந்த ஆண்டு படிப்பை முடித்துக்கொண்டு ஊர் திரும்புவதற்குள் அம்மா நோயாளியாகப் படுத்தவள் எழுந்திருக்கவில்லை. வேலையிலிருந்து அப்பா ஓய்வடையும்வரை வீட்டை நிர்வகித்து அப்பாவைக் கவனிக்கும் பொறுப்பு வந்து சேர்ந்து விடவே அவளது படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது.

அந்த மூன்று வருஷ காலத்தில் அவரும் அவளுக்காக எத்தனை இடங்களில் மாப்பிள்ளை தேடிப் பார்த்தார்!

கணிசமான வரதட்சிணை, சீர், நகை இத்யாதிகள் இல்லாது யாரும் அவளுக்கு மாலையிட முன்வரவில்லை.

பார்க்க அழகான பெண், குடும்பத்தை நிர்வகிப்பதில் கெட்டிக்காரி... பி.யூ.சி. வரை படித்தவள்... இயற்கையாகவே நல்ல சங்கீத ஞானம்... புத்திசாலி... என்னென்னவோ வேப்பிலை அடித்துப் பார்த்தார். பணம் என்பதைத் தவிர மற்றதையெல்லாம் காதில் போட்டுக் கொள்ள பிள்ளையைப் பெற்றுவிட்ட எவனும் தயாராக இருக்கவில்லை. வேலையில் இருந்து ஓய்வடைந்த பின்னர் பள்ளிக்கூடத்தில் அவரைப் பார்த்ததும் கும்பிடுபோடும் பியூன்கூட அவரை தூசியாக மதிக்கும் அளவு அந்தஸ்து சரிந்து போனதும் அவர் கலங்கிப் போய்விட்டார். இந்தப் பார்வதியை எப்படி ஒப்பேத்தப் போகிறார்?... அந்தஸ்தும் பணமும் அதல பாதாளத்துக்குப் போய்விட்டனவே? கடவுளே!

அவர் சதா தம் மகளைப் பற்றி விசாரப்பட்டுக் கொண்டிருந்த அந்தச் சமயம்தான் சங்கநல்லூர் கிராமத்தில் வசித்த நண்பர் வேதாசலம் தமது ஐம்பதாவது திருமண ஆண்டை பெரிய விழாவாக நடத்த உத்தேசித்து கலந்து கொள்ள அழைப்பு விடுத்திருந்தார். வீட்டைப் பூட்டிக் கொண்டு மகளுடன் காலைப் பொழுதே அவர் கிளம்பிவிட்டிருந்தார்.

விழா ஆரம்பிக்கும் முன்னர் ஊரில் மிகவும் சக்திவாய்ந்த கடவுளாக மக்கள் வழிபடும் சங்கமேசன், வேதவதி இருவருக்கும் அபிஷேக ஆராதனைக்கு வேதாசலம் ஏற்பாடு செய்திருந்தார். வெகு அருகிலிருந்த அரசலூரில் அவர்கள் வசித்த போதிலும் சங்கநல்லூர் சிவன் கோவிலுக்குப் பார்வதி



போவது அதுதான் முதல் தடவை. வேதாசலம் ஊரில் பெரிய புள்ளி. கோவிலில் பெரிய கூட்டம் சேர்ந்து விட்டிருந்தது. பெண்கள் நின்ற பகுதியில் ஒரு தூண் ஓரமாக நின்று கொண்டிருந்த பார்வதி திரும்பினாள். வியப்பில் ஒரு கணம் தன்னை மறந்து போனாள்.

எதிர்ப்பக்கம்... கிழ அர்ச்சகர் பக்கத்திலே ரோஜா வண்ண டெரிகாட் சட்டையில் கிராப்புத்தலைமுடிச்சுருள் நெற்றிமீது வருட... வாட்டசாட்டமாக நின்ற வாலிபன் தன்னை ஊன்றிப் பார்ப்பதைக் கவனித்துவிட்டாள்.

முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டிருந்த போதிலும் மனம் ஏனோ இனம் விளங்கா ஒரு புதுமையில் படபடவென்று அடித்துக் கொண்டது. பூஜை நெருங்கும் சமயம், கூட்டம் இன்னமும் அதிகரித்துவிடவே... மறுபடி திரும்பிய போது அந்த வாலிபனைக் காணவில்லை.

எங்கே போயிருப்பான்? கண்களால் துழாவினாள் பார்வதி.

ஆராதனை ஆரம்பிப்பதற்கு அறிகுறியாக நாதஸ்வர இசை முழங்கியது. கூட்டத்தின் நடுவிலிருந்த பாதை வழியே அந்த அர்ச்சகர் கம்பீரமாக நடந்து உள்ளே போய்க் கொண்டிருந்தார். அவர் பின்னால் அவன் மெல்லப் போய்க்கொண்டிருந்தான். ஆனால் தோற்றத்தில் எத்தனை வித்தியாசம்?

இப்போது அவன் தன் சட்டையைக் கழற்றிவிட்டு வேஷ்டியை அணிந்து உத்தரியத்தை இடுப்பில் இறுக்கிக் கட்டிக் கொண்டிருந்தான். நெற்றியில் பட்டையாக விபூதி, திறந்த மார்பிலே மெல்லிய தங்கச் சங்கிலியுடன் ஒரு ருத்திராக்ஷமாலை, பூணூல் இடையே ஆடிக் கொண்டிருந்தது. சந்தனக் கட்டைகள் போன்ற நிமிர்ந்த புடைத்த தோள்கள்- பரந்த மார்பு-எடுப்பான மூக்கு - தீர்க்கமான கண்கள்...ஓங்கி உயரமாக... அவனது

நடையில் எத்தனை மிடுக்கு. பார்வையில்தான் என்ன கம்பீரம்! முகத்திலே அசாத்தியமான ஒரு ஒளி- மெய்மறந்து போய்விட்டாள். பார்வதி...பின்னர்தான் அவள் புரிந்து கொண்டாள், கோயிலில் அர்ச்சகராகப் பணி புரியும் கிழவருக்கு அவன் மகன் உறவுபோல.

அபிஷேகம் முடிந்து அர்ச்சனையின்போது கிழவருடன் சேர்ந்து கம்பீரக் குரலில் அவன் மந்திரங்களை உச்சரித்தபோது அபூர்வமானதொரு சங்கீதத்தைக் கேட்பதுபோல மெய் சிலிர்த்துப் போனாள். வீட்டுக்குத் திரும்பியதும் அவள் தன் தந்தையிடம் தைரியமாகச் சொன்னாள்.

''அப்பா! அந்த இளம் அர்ச்சகரைப் பார்த்தால் ஒரு பெரிய அலுவலகத்து ஆபீசரைப்போல கனகம்பீரமாக இருக்கார்... என்னால் நம்பவே முடியலை...''

''வாஸ்தவம்தான் அம்மா... அந்தப் பையனின் பெரியப்பா அவனைச் சென்னைக்கு அனுப்பி படிக்க வைத்தார்! பையனாவது பட்டங்கள் பல பெற்று பெரிய வேலை தேடிக் கொண்டு காலந்தொட்டு அவர்கள் பார்த்து வந்த அர்ச்சகர் பணியிலிருந்து விலகி வாழட்டும் என்று ஆசைப்பட்டார். பையன் சோடை போகவில்லை. உபகார சம்பளத்திலேயே நன்றாகப் படித்தான். பி.ஏ. முடித்ததும் ஒரு கம்பெனியில் வேலை கூடக் கிடைத்தது. எம்.பி.ஏ.க்கு படிக்கும் வாய்ப்புக் கூட இருந்தது... சில மாதங்கள் வேலை பார்த்துவிட்டு அதை உதறி விட்டு ஊருக்குத் திரும்பி விட்டான். பெரியம்மா இல்லாத பெரியப்பா கிழவயதில் தன்னந்தனியாக கிராமத்தில் தவிக்கும் போது... பிள்ளைக்கு அமோக நேசமும் பாசமுமாக வளர்த்து ஆளாக்கிய வரை விட்டு பட்டம் பதவிகளைத் தேடிக் கொண்டு அலைய அவனுக்கு ஆசையிருக்கவில்லை, மேலும் பரம்பரையாகக் குடும்பத் தொழிலாக அமைந்த அர்ச்சகர்



பணியை அலட்சியப்படுத்த விருப்பமிருக்கவில்லை. சாதாரணமாக மற்ற மதத்தினர் தங்கள் குருமார்மீது காட்டும் பணிவையும் மரியாதையையும் நமது அர்ச்சகர்களுக்கு நாம் தருவதில்லை என்ற மனக்குறை வேறு. கோவிலில் அர்ச்சகராக இருப்பது என்பது ஒரு அசாதாரணமான பணி போன்ற நினைப்பை பக்தர்கள் தங்கள் மனத்தினின்றும் நீக்க வேண்டும்.

''கோவில் பூஜா விதி முறைகள் என்ற கல்வி முறையையும் கல்லூரிப் படிப்பில் ஒரு பகுதியாகப் புகுத்த வேண்டும், டாக்டர் ஆஃப்டிவினிடி என்று மற்ற மதத்தில் உள்ளது போன்று படித்து உயர்ந்த பட்டம் பெறும் அளவில் நமது கோவிலில் பூஜா விதிமுறைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். அர்ச்சகர் பதவி என்பது ஒரு ஆபீசர் பதவி போன்ற உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்றெல்லாம் அவனுக்குப் பல கொள்கைகள். மேற்படிப்புத் திட்டத்தை உதறிவிட்டு ஊர் வந்து சேர்ந்தான். பூஜா விதிமுறைகளைப் பெரியப்பாவிடம் இரண்டு வருஷம் சிரத்தையுடன் கற்றுக் கொண்டான். பையன் ரொம்பக் கெட்டிக்காரன். இங்கிலீஷ், பிரெஞ்சு, சமஸ்கிருதம், தமிழ் எல்லா மொழிகளிலும் நல்ல பாண்டித்தியம். பெரியப்பாவுக்குப்பின் அந்தக் கோவிலின் அர்ச்சகராக வாழத் தீர்மானித்துவிட்டான்.''

''இத்தனையும் உங்களுக்கு எப்படியப்பா தெரியும்?''

''நீ என்ன சொல்வாயோன்னு நான் இதுவரை பேசலை. பாங்கில் கிளார்க் வேலை பார்க்கும் வரன் ஒண்ணு வந்ததே. அவனுக்கு கையில் அஞ்சு ஆயிரம் வைக்கணுமாம்... நகைகள் சீர்... இத்யாதிகளுக்கு வேறு ஒரு பெரிய லிஸ்ட் கொடுத்துட்டுப் போனார்கள். நம்மால் சமாளிக்க முடியாதுன்னு அந்த வரனைத் தூக்கிப் போட்டுவிட்டேன்.''

''போகட்டும் அப்பா... ஏன் கவலைப்படறேள்?''

''கவலைப்படாதிருக்க முடியுமா, எனக்கு கடமைன்னு ஒண்ணு இருக்கே. உனக்குத் தொழில் கல்வி ஏதாவது கொடுத்திருந்தால் நீயே சமாளிச்சுப்பேன்னு அமைதியாயிருப்பேன். பி.யூ.சி. யோட நிறுத்திட்டேன். திடீர்னு எனக்கு ஏதாவது நேர்ந்துட்டால்...''

''என்ன பேச்சப்பா இது?''

''ஒரு வாரத்துக்கு முன் நான் சங்கநல்லூர் போன போது இந்த சபேசனை சந்திச்சேன். பல விஷயங்களைப் பத்திப் பேசினேன்.''

''நான் இன்னும் அர்ச்சகர் பதவிக்கு வரலை. பெரியப்பாவிற்கு அப்ரெண்டிசாக இருக்கேன்... நான் இன்னமும் பிரம்மச்சாரி. கிரகஸ்தனுக்குத்தான் இந்தப் பதவி கிடைக்கும்'னு சொல்லிட்டு சிரித்தான்.''

''ஒரு பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்து கொண்டால் இந்தச் சிக்கல் தீர்ந்துவிடும்'' என்று சொல்லிவிட்டு வந்தேன். இன்று பூஜை முடிந்ததும் பிரசாதம் வாங்கிக் கொள்ளப் போனபோது அவன் தாழ்ந்த குரலில் என்னிடம் கிசுகிசுத்தான்.

''ஒரு பெண்ணைப் பார்த்து நான் மனதில் இப்பவே முடிவு செய்து வச்சுண்டுட்டேன். அவள் யார்னு தெரியாது. விசாரிக்க வேண்டும். எல்லாம் சரியாக அமைஞ்சுட்டா பெரியப்பா குறுக்கே ஒண்ணும் சொல்லமாட்டார்.''

''அப்படியா? அவள் யார்னு எப்படிக் கண்டு பிடிப்பதாக உத்தேசம்?''

''எங்கே பார்த்தாலும் கண்டு பிடிச்சுடுவேன். அவள் இந்த ஊர்க்காரியில்லைன்னு உத்தேசம். மெதுவாகத் திரும்பிப் பாருங்கோ... அந்தத் தூண்கிட்ட நீலப்புடவை கட்டிண்டு பார்த்தா பளிச்சினு இருக்காளே அவள்தான். முகத்தில் முகவாய்



கிட்டே ஒரு மச்சம் கூடத் தெரியும். கூர்ந்து பார்த்தால் அவள் முகத்திற்கு இன்னும் அழகைக் கொடுக்கிறது.''

''தூக்கி வாரிப்போட்டது எனக்கு. அவனுக்குப் பிடிச்ச பெண் நீ.''

''அப்பா!'' தன்னையுமறியாது அவள் மெல்லக் கத்தி விட்டாள்.

''என்னம்மா? என்ன விஷயம்?''

''அவர் சொல்கிற பெண் நானாக இருந்தால்... மேற்கொண்டு நீங்க ஆகவேண்டியதைப் பாருங்க அப்பா...?'' முகம் சிவக்க மெல்லிய குரலில் சொன்னாள்.

''அப்படியா, பையன் ரொம்ப நல்லவனாகப்படறான். வரதட்சிணை, சீர் இதுகளிலெல்லாம் நம்பிக்கையில்லைன்னு முதல் தடவை பேசியபோதே தெரிஞ்சு கொண்டேன். அர்ச்சகர் பணியில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தாலும், தற்காலத்தை ஒட்டி வாழ்க்கையை அமைத்துக் கொள்ள விரும்புகிற ஒரு வித்தியாசமான இளைஞன், எனக்கு அவனை ரொம்பப் பிடிச்சுப் போச்சு. உனக்கு?''

''அப்பா! எனக்கும் அவரை ரொம்பப் பிடிச்சிருக்கு. உங்கள் மதிப்பு பாதிக்கப்படாதுன்னு நினைச்சா அவருடைய பெரியப்பாவைக் கலந்து எல்லாத்தையும் பேசி முடியுங்கோ.''

சொல்லி முடிப்பதற்குள் வெட்கத்தில் அவள் கூசிப்போனாள். அம்மா இல்லாத குறை. அப்பாவிடம் இப்படிப் பேச நேர்ந்ததே என்ற சங்கோஜம்.

அவர்களது திருமணம் அத்தனை விரைவாக அதே கோயில் முன் மண்டபத்தில் எளிமையாக இனிமையாக நடந்தேறியது!

கல்யாணமானவுடனேயே அர்ச்சகர் பொறுப்பை ஏற்குமுன் இரண்டு மாதங்கள் கோயிலுக்கு அருகேயிருந்த அநத சிறு ஓட்டு வீட்டில் அவர்கள் இருவரும் சிறகடித்து வானில் பறந்து சிட்டுக் குருவிகளைப் போல ஆனந்தமாக இருந்தார்களே... அதற்குப் பின்னர்தான் அந்தப் பிரிவு வந்தது.

மூன்று ஆண்டு காலம் கணவனைப் பிரிந்து வாழவேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டது. அதுவும் பெரியப்பாவின் யோசனை தான். அவர் வார்த்தையை மீற முடியாது. விட்டுப் பிரிய மனம் இன்றி, அவள் கணவன் தவியாகத் தவித்ததை நினைத்துக் கொண்டாள். கண்களிலிருந்து பொல பொலவென்று கண்ணீர் கன்னங்களில் உதிர்ந்தது.

## 2

லதாவுக்கு பொறாமையோ? அர்ச்சகர் மனைவிக்கு இப்படி ஒரு வாழ்வா என்ற ஆத்திரமோ? கிடக்கிறாள் கர்வக்காரி.

கடைத்தெருவிலிருந்த அத்தனை கடைகளும் திறக்கப்பட்டு விட்டன. காலை வேளையில் வியாபாரம் அதிகமில்லாததால் தெருவில் கூட்டம் இருக்கவில்லை. ஆனால் ஆள் நடமாட்டத்திற்கு குறைவிருக்கவில்லை. கடைத்தெருவைத் தாண்டியதுந்தான் அந்தப் பழைய சாவடிக் கட்டிடம் இருந்தது. அதன் முன்புறத்தில் திண்ணைபோன்ற அமைப்பில் எப்பொழுதும் சில சோம்பேறி கள் உட்கார்ந்து ஊர் வம்பை அலசிக் கொண்டிருப்பது வழக்கம். அந்தச் சாவடி கட்டிடம் வரை ஊர்ப்பெண்கள் சிலர் தண்ணீர் குடத்துடன் துணையாக வருவார்கள்-அதற்குப் பின்னர் கொஞ்ச தூரந்தான் தனியே நெடுஞ்சாலைக்குப் போகும் பாதையில் அவள் நடக்க வேண்டி யிருக்கும்.

மழைக்காலத்திலே சேறும் சகதியுமாக இருக்கும் வண்டிப்பாதை- கோடை காலத்திலே கல்லும் குழியுமாகக்



காலை இடறும். இரு ஓரத்திலும் கோவிலுக்குச் சொந்தமான நஞ்சை நிலங்கள் இருந்தன. யாராவது வரப்பு மேட்டில் வேலையாக எப்போதும் இருப்பார்கள். அதனால் அவள் அந்தத் தனிவழியைக் கண்டு பயப்படவேண்டியிருக்கவில்லை. மேலும் நிலத்தில் வேலை பார்க்கும் தொழிலாளிகளுக்கு அவள் யார் என்று தெரியும். அதற்கு உரிய வணக்கத்தோடு எதிர்ப்பட்ட போதெல்லாம் அவர்கள் புன்னகைத்துவிட்டுப் போவார்கள். பாதை முழுவதிலும் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள் என்ற தெம்பிலே அவள் தனியேதான் நீர்க்குடத்துடன் நடந்து கொஞ்ச தூரமிருந்த தங்கள் வீட்டை விரைவில் அடைந்து விடுவது வழக்கம். இப்போது அவர்கள் புதியதாகக் கட்டியதொரு சிறு மாடி வீட்டில் வசித்துக்கொண்டிருந்தனர். அவள் கணவன் மூன்று வருஷகால ஒப்பந்தத்தில் ஆப்பிரிக்காவில் இருந்த கோயில் ஒன்றில் அர்ச்சகராகப் பணிபுரிந்து ஆயிரக்கணக்கில் சம்பாதித்த பணத்தை அனுப்பி- மாமனாரை விட்டு கோவில் அருகே வெறுமையாகக் கிடந்த ஒரு இடத்தை வாங்கி அதில் ஒரு மச்ச வீடு கட்டி முடிக்க ஏற்பாடு செய்திருந்தான். மகளுக்கு வீடு கட்டிக் கொடுத்து - அவளை மேன்மையாக வாழவைக்க வேண்டும் என்ற ஆவலால் அவள் அப்பா நடேசன் அரசலூரை விட்டு அந்தச் சிறு ஓட்டுவீட்டில் அவளுக்கு துணையாக இருந்து அருகில் வாங்கிப் போட்ட மனையில் மாப்பிள்ளை அப்போதைக்கப்போது கடிதத்தில் எழுதியபடி வீட்டை அழகாகவே - வசதியாகவே அவர்கள் அந்தஸ்துக்கு தக்கபடி கட்டி முடித்துவிட்டிருந்தார்.

வெளிநாட்டில் போய் கோவில் அர்ச்சகராக வேலை பார்த்த படியே ஒரு மாடி வீட்டை சபேசன் கட்டி விட்டானே?ஊரார் கிசு கிசுத்தனர்.

கீழே இரண்டு படுக்கை அறைகள்-நடுவில் ஹால்- அவன் உட்கார்ந்து ஆட ஆசைப்பட்டபடி நல்ல தேக்குமரத்தில் வழவழ வென்று மின்னிய ஊஞ்சல். வாயிலில் பெரிய வராந்தா- பூச்செடிகள் கொண்ட சின்ன தோட்டம். சுற்றுச்சுவர் கம்பி போட்ட கேட்... பின்பக்கம் வாழை, கொய்யா, கறிவேப்பிலை செழுமையாக வளர்ந்து கொண்டிருந்த தோட்டம்-சுவரை ஒட்டிய- கிணறு- தோய்க்கும் கல்- கிணற்றைச் சுற்றி சிமெண்ட் மேடை இத்யாதியுடன் விருந்தாளிகள் வந்தால் தங்க மாடியில் ஒரு தனி அறையும் போட்டு ஜமாய்த்து விட்டிருந்தார். அவளுக்கு வீட்டின் முன் பகுதி முழுவதும் மொசாய்க்-பின்பகுதி தரையில் சிவப்பு சிமெண்டு.

அப்பப்பா என்ன அழகான வீடு! பூரித்துப் போனாள். வீட்டை ஒரு போட்டோ எடுத்துத் தன் கணவருக்கு அனுப்பச் சொல்லி வற்புறுத்தினாள் அப்பாவை.

''உங்க பெரியப்பாதான் வீட்டிற்கு குடிபுகுமுன் செய்ய வேண்டியதை சாஸ்திரோக்தமாக செய்து முடித்தார். நீங்கள் இல்லாமல் நாங்கள் மட்டும் போய், பால்காய்ச்சி சாப்பிட்ட போது மனசு மிகவும் கஷ்டப்பட்டது. நீங்கள் நெற்றி வியர்வை வடிய சம்பாதித்ததில் கட்டிய வீடு. அனுபவிக்காமல் எங்கேயோ தொலைதூரம் இருக்கிறீர்களே என்று சங்கடப்பட்டேன். புது வீட்டில் காலை வைக்கும்போது கண்ணீருடன் நுழையக்கூடாது என்று மனதைத் தேற்றிக்கொண்டு நீங்கள் பக்கத்தில் இருப்பதாக நினைத்துத்தான் குடிவந்தேன். நமது படுக்கை அறையை அப்படியே சுத்தமாகப் பெருக்கி - கட்டிலின் மேலே கிடக்கும் மெத்தையைத் தட்டி, பத்திரமாக சுருட்டி வைத்திருக்கேன். நான் தரையில்தான் பாயை விரித்துப் படுத்துக் கொள்கிறேன். இது என்ன விரதம்னு கேட்காதீங்கோ! நம்மைப்பிரித்துவைத்திருக்கிற இந்த இடைவெளி சீக்கிரமே மறைந்து விடனும் என்ற விரதம்



இருக்கிறேன். சம்பாதித்தது போதும். சீக்கிரம் ஊர் வந்து சேரவும்.''

அந்தக் கடிதத்தை எழுதும்போது அவளுக்கு அழுகை பீறிட்டது.

ஆசைக் கணவனின் பிரிவு, அவள் நெஞ்சை மிக்க வேதனைக் குள்ளாக்கியது. அப்பாவிடம் கூடச் சொல்லிக் கொள்ளாது தன் உணர்ச்சிகளை அழுத்தமாக மூடி மறைத்துக் கொண்டு பொறுமை யாகக் காத்திருந்தாள். அவள் மிகப் பொறுமைசாலிதான். அதற்காக சபேசன் அவளை எத்தனையோ முறை பாராட்டி யிருக்கிறான்!

ஒரு முறை அவசரமாக அடுப்பிலிருந்த பாத்திரத்தை இறக்கும் போது, கையில் துளி பொங்கிய குழம்பு பட்டுவிட்டது. சுரீலென்று சுட்டு, நெருப்பாக காயம் தகித்தது. ஆனாலும் மாமனாரை இலையில் சாப்பிட உட்கார வைத்து விட்டோமே காத்துக் கொண்டிருப்பாரே என்று பற்களைக் கடித்துக்கொண்டு சகித்துக் கொண்டிருந்துவிட்டாள்.

முழங்கையின் உட்புறத்திலே உருளைக்கிழங்கை உரித்த மாதிரி காசளவு ஒரு காயம்.

''என்ன இது?''பதறிப்போனான், அவள் நடந்ததைக் கேட்ட அவனுக்குத் தாளமுடியாத வியப்பு.

''நானாக இருந்தால், துடிச்சுப்போயிருப்பேனே! எனக்கு வலியே தாங்காது, நீ எப்படி இத்தனை பொறுமையா அந்த சீதாதேவிபோல இருந்தே!'' புகழ்ந்தான்.

அவன் உதாரணமாகக் காட்டிப் புகழ்ந்த சீதையை, தோழி லதா எத்தனை மட்டமாக வேடிக்கையாகப் பேசிவிட்டாள்!

மீண்டும் கண்களில் முட்டிய நீரை சமாளித்தபடி வேகமாக நடந்தாள்.

''பூஜா விதிகள் தெரிந்த, ஆங்கில அறிவு தமிழ் படிப்பும் தெரிந்த ஒரு அர்ச்சகர் தென் ஆப்பிரிக்கா டர்பன் நகரில் புதிதாகக் கட்டியுள்ள இந்த ஆலயத்திற்குத் தேவை. கும்பாபி ஷேகம் செய்து மூன்று வருஷ ஒப்பந்தத்தில் தங்கி இருந்து உள்ளூர் வாசிகளில் சிலருக்கு அர்ச்சகப் பணிப்பயிற்சி அளிக்க வேண்டும். இருக்க இடம், வைத்திய உதவி, கணிசமான சம்பளம் உண்டு'' பத்திரிகையில் படித்த விளம்பரத்தைக் கண்டதும் பெரியப்பா அவன் சார்பில் ஒரு கடிதம் எழுதிப்போட்டுவிட்டிருந்தார்.

இரண்டாவது வாரத்திலேயே பதில் வந்துவிட்டது. அர்ச்சகரைத் தேர்ந்தெடுக்க வந்த டர்பன் நகர சைவ சிந்தாந்த திருக்கூட்டத்தைச் சேர்ந்த பூபேந்திரனை சந்திக்க, திருச்சி ஹோட்டலுக்கு வரவேண்டும், என்று கண்டிருந்தது.

பூபேந்திரனை பெரியப்பாவுடன் சென்று பேட்டி கண்டான் சபேசன். அவனுக்கு அவரைப் பிடித்துவிட்டிருந்தது. அவருக்கும் சபேசனைப் பார்த்த அளவிலேயே பிடித்துப் போயிற்று. ''நூற்றுக்கணக்கில் விண்ணப்பங்கள் வந்தன. உங்களைத்தான் பிடிக்கிறது. கட்டாயம் நீங்கள் தடை சொல்லாமல் எங்கள் நாட்டிற்கு வந்து ஆன்மநேயத்தில் ஈடுபாடுள்ள மக்களுக்கு உதவ வேண்டும்'' பணிவுடன் கேட்டுக் கொண்டார் அவர்.

வீட்டிற்கு வந்து அவர்கள் வீட்டில் விருந்து சாப்பிட்டார். முன் பணமாக வெளியூருக்குத் தேவைப்படும் கம்பளிச்சட்டை வாங்கிக் கொள்ள இன்னும் பல என இரண்டாயிரம் ரூபாய்களைக் கொடுத்தார்.

''பாஸ் போர்ட்டைத் தயார் செய்யுங்கள். போனதும் நொடியில் 'விஸா' விமான டிக்கட் எல்லாம் அனுப்பி வைக்கிறோம். நாங்கள் மிக நன்றாகவே கவனித்துக் கொள்வோம்''



என்று உறுதி தெரிவித்துவிட்டு கூடத்தில் ஓரமாக நின்ற பார்வதி பக்கம் பார்த்தார்.

''கவலைப்படாதீங்க அம்மா. என் மகனைப் போல இவரைப் பார்த்துக் கொள்கிறேன். கைநிறைய பணத்தோடயும் அனுப்பி வைக்கிறேன்'' என்று உறுதி மொழிந்தார்.

அத்தனையும் உண்மை. பூபேந்திரன் தன் சொந்த மகனை விட அருமையுடன் கவனித்துக்கொண்டாராம். முதல் ஒரு வருடம் நாட்கள் நரக வேதனையில் மெல்ல ஊர்ந்தது. மாதா மாதம் பணம் டக்டக்கென்று மாமனார் நடேசன் பெயரில் வந்து சேரும்.

அர்ச்சகருக்கு இரண்டாயிரம் ரூபாய் சம்பளம், வீடு, உணவு மற்றவைகளை கோவில் ஸ்தாபனத்தார் பொறுப்பில் இருந்த வர்கள் கவனித்துக் கொண்டார்கள். செலவு என்று எதுவும் இல்லை. அத்தோடு பூஜை வேளையில் தட்டில் வந்து விழுந்த காணிக்கைகள் வேறு எக்கச்சக்கம். எல்லாவற்றையும் அவன் ஒன்று விடாமல் ஊருக்கு அனுப்பிக் கொண்டே இருந்தான்.

சில நாட்களுக்கு முன்னர் தென் ஆப்பிரிக்காவிலிருந்து வந்த ஒரு இந்திய தம்பதிகள் அவர்கள் வீட்டைத் தேடி வந்தனர்.

''உங்க மகன் அனுப்பி வைத்தார்''என்று அந்தம்மாள் தான் அணிந்திருந்த வைரத்தோட்டைக் கழற்றிப் பெரியவரிடம் கொடுத்தாள்.

கைகளில் போட்டிருந்த வளையல், கழுத்து சங்கிலி எல்லாவற்றையும் எடுத்து அவர் முன் வைத்தாள்.

கிழவர் அதிர்ந்து போனார்.

''உங்கள் மகன் ஸ்டாங்கர் எனும் ஊரில் கட்டிக்கொண்டு இருந்த கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்து வைத்து எங்களை

யெல்லாம் மகிழ்வித்தார். பக்தர்கள் ஒன்று கூடி ஒரு பணமுடிப்பு எடுத்து அவருக்குக் கொடுத்து மாலை மரியாதை செய்தோம். அந்தப் பணத்தில் டர்பன் நகைக் கடையில் தம் மனைவிக்கு என்று இந்த வைரத்தோடு, வளையல்கள், சங்கிலி, கொஞ்சம் பவுடர், புடவையெல்லாம் வாங்கினார். நாங்கள் இந்தியாவைச் சுற்றிப் பார்க்க வருகிறோம் என்று தெரிந்ததும் எங்களிடம் கொடுத்தனுப்பினார். இதற்கான 'டூட்டி' நாங்கள் கட்டிவிட்டோம். கவலைப்படவேண்டாம்.''

எத்தனை நல்ல மனிதர்கள் அவர்கள்! காப்பி, டிபன் கொடுத்து உபசரித்தவளை அந்தம்மாள் ஏற இறங்கப்பார்த்தாள்.

''பச்சைக்கிளி போல இங்கே உங்களை விட்டுட்டு அங்கே இருக்க அவருக்கும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. இன்னும் ஆறு மாசந்தான் இருக்கிறது. திரும்பி வந்து விடுவார். கவலைப் படாமல் இருக்கச் சொன்னார். இந்தக் கடிதத்தைக் கொடுத்தார்.''

கையிலிருந்த கடித உறையை நீட்டினாள். தான் கொண்டு வந்திருந்த ஒரு அமெரிக்கன் ஜார்ஜெட்டைப் பரிசாகக் கொடுத்தாள்.

கணவனைக் கண்டுவிட்டது போன்ற ஆனந்தப் பிரமையுடன் கடிதத்தைப் பிரித்தாள்.

அதனுள் பெரியப்பாவிற்கு, அப்பாவிற்கு, அவளுக்கு என்று மூன்று தனிக் கடிதங்கள் இருந்தன. அவைகளை அவர்களிடம் அவள் கொடுத்து விட்டுத் தனது கடிதத்தைப் பரபரப்புடன் வாசித்தாள்.

''ஆறு மாத காலம் எப்போது முடியும்னு துடிச்சுக் கொண்டு இருக்கிறேன். இத்தனை காலம் பொறுமையாக இருந்தே. இன்னும் சில நாட்கள் பொறுத்துக் கொள். இம்மாதிரி தம்பதியரிடையே பிரிவு ஏற்படுவது அவர்களது அன்பை



அதிகப்படுத்தத்தான். இதை காளிதாசனின் சாகுந்தலத்திலே காணலாம். இன்னும் பல தமிழ் இலக்கியங்களிலும் காணலாம். நமது வாழ்விலும் காணப்போகும் புதுமை இந்தப் பிரிவு. கவலைப்படாதே. ஒவ்வொரு நிமிஷமும் உன் நினைவில்தான் வாழ்கிறேன். நான் அனுப்பிய நகைகளை உடனே அணிந்து கொண்'டு பெரியப்பா, உன் அப்பா இருவரிடமும் நமஸ்கரித்து ஆசீர்வாதம் வாங்கிக் கொள். அந்தம்மாள் கொடுக்கும் நைலான் புடவையை நீ உடுத்திக் கொள்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. நம் வீட்டில் நல்ல காரியங்களின் போதும் சிரார்த்தம் போன்ற சமயங்களிலும் நீ பதினெட்டு முழப்புடவை உடுத்திக் கொண்டால் போதுமானது.

''அர்ச்சகர் மனைவி என்பதால், இப்படித்தான் உடை அ'ணியவேண்டும் என்ற நிர்ப்பந்தமோ விதியோ இல்லை; ்ப்படி யாரும் விதிக்கமுடியாது. நான் இந்த' காலத்து மனிதன். நீயும் அவ்வாறே. ஊரில் யாரும் எதுவும் பேசமாட்டார்கள். கவலையை விடு. உன்னையும் என்னையும் பற்றி அவர்களுக்குத் தெரியும். பெரியப்பாவே உனக்கு உத்தரவு அளித்து விட்டிருக்கும்போது ஆடை அலங்கார விஷயத்தில் பழைய முறைகளை அனுசரிக்கத் தேவையில்லை. இங்கே நான் அர்ச்சகராக எல்லா மக்களுடனும் வாழ்கிறேன். பழகி வருகிறேன். ஜாதிபேதமே இல்லாத ஒரு வளமான சமுதாயத்தில் சந்தோசமாகப் பணிபுரிகிறேன். செய்யும் தொழிலே தெய்வம் என நினைக்கும் மக்களிடையே மன நிறைவோடு இருக்கிறேன்.

மற்றவை பின்னர்.

அவளது உத்தரவின்படி, மாமனார் ஆசீர்வதித்துக் கையில் கொடுத்த அந்த நகைகளைப் பூட்டிக்கொண்டு பெரியவர்களை வணங்கினாள். அமெரிக்கன் ஜார்ஜெட் உடுத்திக்கொண்டு கண்ணாடியில் தன்னைப் பார்த்து பூரித்துப் போனாள்.

என்னென்னவெல்லாமோ நினைவுகள்...

கண்களை மறைத்த நீரைச் சமாளித்துக்கொண்டு காலை இடறிய சில கல்லைக் காலால் ஒரு பக்கம் உதைத்து விட்டு மேலே நடந்தாள்

ஒரு சமயம் அவள் காதுகளில் ஜ்வலித்த வைரக்கம்மலைக் கண்டு லதா பொறாமையால் அப்படி மட்டம் தட்டிப் பேசினாளோ?

அர்ச்சகர் மனைவிக்கு இப்படி ஒரு வாழ்வா என்ற ஆத்திரமோ? கிடக்கிறாள் கர்வக்காரி, தன்னையே சமாதானப் படுத்திக் கொண்டு நடந்தாள். சாவடியருகே ஓங்கி ஒலித்த குரலைக் கேட்டவள் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தாள்.

நெஞ்சம் மார்பும் படபடவென அடித்துக்கொண்டது. சில தினங்களாக அவள் கடைத் தெருவில் ஒரு பெட்டிக் கடை யருகில், மாந்தோப்புக்கு முன்னால் உயரமாக வளர்ந்திருக்கும் ஒரு பெரிய பாறைமேல் என்று பல இடங்களில் அந்தக் கும்பலைப் பார்த்திருக்கிறாள். இன்று அவர்கள் அந்த சாவடித் திண்ணையருகே நின்று கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

மூன்று ஆண்டுகளுக்கு மேல் அவள் அந்த ஊரில் வாழ்ந்து கொண்டிருந்த போதிலும் வீட்டைவிட்டுத் தனியாக எங்குமே போன பழக்கம் இல்லை. கடைத்தெருவுக்குக் கூட சாமான்களை வாங்குவதற்கு நடேசன்தான் போய் வருவார். மாலை வேளையில் கோவிலுக்கு அப்பா துணையுடன் சென்று வருவாள். காவேரியில் நீர் எடுத்து வரக்கூட அவள் மருந்துக் கடைக்காரர் பெண்களின் துணையுடன்தான் போவதுண்டு. தண்ணீர் எடுத்துக் கொண்டு திரும்புகையில் பெண்கள் பட்டாளம் சேர்ந்துவிடும்.

எல்லோரும் கும்பலாகக் கடைத் தெருவுக்குள் புகும்போது வேலையற்ற வாலிபர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டு அங்குமிங்கும் நின்ற போதிலும், தைரியமா அவர்களைக் கேலி



செய்யவோ, ஜாடை பேசவோ மாட்டார்கள். அந்தக் கூட்டத்தில் சில பெண்களுக்கு வாய் அதிகம். தைரியமும் அதிகம். எவனாவது இரண்டே வார்த்தை கேலியாகப் பேசினாலும் போதும், தண்ணீர் குடத்தாலேயே தலையை மொத்திவிடும் துணிச்சல்காரிகள்.

பார்வதி கொஞ்சம் பயந்த சுபாவம். தாயாருக்குப்பின் வீட்டிற்குள்ளேயே முடங்கி விட்டவள். படித்த காலத்தில் ஹாஸ்டலில் அடைபட்டுக் கிடந்தவள். ஓங்கிப் பேசவோ, சண்டை போடவோ தெரியாதவள். கணவனுடன் வாழ்ந்த அந்தச் சில மாதங்களில் கூட அவர்களிடையே ஏற்பட்ட சின்னஞ்சிறு மனஸ்தாபங்களின் போது அவள் மௌனமாக, இரக்கமாக, கண்கலங்க அவனைப் பார்ப்பாள்.

ஒரு சமயம் அவள் மாமனாருக்கு உணவைப் பரிமாறும் போது சூடான சாம்பாரைத் தவறிப்போய் அவர் கைமீது வார்த்துவிட்டாள்.

''ஈஸ்வரா!''வேதனை பொறுக்க மாட்டாது கிழவர் அரற்றினார். அருகில் சாப்பிட அமர்ந்து கொண்டிருந்த கணவன் அவளைக் கண்களாலேயே சாடினான். பின்னர் தனியே அவளைப் பின்பக்கம் சந்தித்தபோது, ''காரியங்களைக் கொஞ்சம் கவனமா செய்யக் கூடாது? பாவம் பெரியப்பா, பூஜை பண்றவர். நல்லவேளை கொஞ்சம் சிவந்து போனதோட விட்டது. காயம் பட்டிருந்தா ரொம்ப திண்டாடிப் போயிருப்பார். வேற ஒருத்தராக இருந்தால் மாட்டுப் பெண் வேணும்னே செய்தாள்னு கோவிச்சுக் கொண்டு எழுந்து போயிருப்பார்.''

கண்களில் முத்து முத்தாக நீர் வடிய அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள் அவள்.

அவளது மௌனம் அவனுக்கு எரிச்சலைத் தந்தது. ''ஏதாவது

பதில் சொல்லேன். நீ பொறுமைசாலி. என்மேல் கொள்ளை ஆசை வச்சிண்டு இருக்கே. மாமனாரை ரொம்ப நன்றாகக் கவனிக்கறே. அவசரத்திலே தவறிவிட்டதுன்னு வாயால ரெண்டு வார்த்தை சொல்லேன். பொறுமை அவசியம்தான். ஆனா அதுக்கும் ஒரு எல்லைவரைதான் மதிப்பு. நீதியும் நேர்மையும் தவறும்போது யாரும் பொறுமையாக இருக்கக்கூடாது. சீறி எழுந்து அதை ஒடுக்கணும். பகவான் கூட அதர்மம் ஓங்கி ஒரு எல்லை வரும் வரை பொறுமையா இருக்கார். எல்லை மீறினால் .... சீறி எழுந்து அழிக்கப் புறப்பட்டு விடுகிறார். மனித ரூபத்திலே பல அவதாரங்கள் அவர் எடுத்ததும் அப்படித்தான். இதெல்லாம் உனக்கும் தெரியுமே. நீ வேணுமின்னு செய்யலே. கை தவறிப் போச்சு... ஆனால் எந்த ஒரு காரியத்தின் போதும் நீ இப்படி இருக்கக்கூடாது. நான் இப்படி அதட்டினதும் பயந்துண்டு வாயை மூடிண்டு கலங்கற பாரு. இது மகா தப்பு. உன் மனசை விட்டு நீ பேசத் தெரிஞ்சிக்கணும். உன்ன நான் அனாவசியமா கோவிச்சுண்டா, 'மடையா! நீ சொன்னது தப்புன்னு' அடித்துப் பேசற தைரியம் வேணும். அப்பத்தான் நாம் ஒருத்தருக் கொருத்தர் துணையானவர்கள். வழியிலே கல்லும் முல்லும் கிடந்தா பார்த்துவிட்டு நடந்துபோகத்தான் இரண்டுக்கு நாலு கண்களாகத் துணையோடு வழிநடன்னு பெரியவா சொல்லி யிருக்கா. வாழ்க்கைப் பாதை கூட அப்படித்தான். அப்போ தைக்கப்போது ஏற்படற சிக்கலை மனம் விட்டுப்பேசி தெளிஞ்சுக்கணும்.''

அதற்குப் பின்னர் அவள் சற்றுத் துணிவுடன் இருக்க... தன் உணர்வுகளுக்குத் தானே பயிற்சி கொடுத்துக்கொண்டு வந்தாள்.

இந்தக் கும்பலைக் கண்டு ஏன் பயப்படணும்? நாணமும் அச்சமும் நாய்களுக்குத்தான் வேண்டும் என்று அவர் அடிக்கடி சொல்வாரே! வீணாக நாணிக் கோணிக்கொண்டு நடப்பானேன்?



''யாருடா இது? புதுசா இருக்கு?'' கூட்டத்தில் ஒருத்தன் கத்தியபோது கோபமாக அவள் திரும்பிப் பார்த்தாள்.

''முறைக்கிறாடா. கண்களாலேயே எரிச்சுடுவா போல இருக்கு'' பலத்த சிரிப்பு.

அவர்களை உறுத்துப் பார்த்தாள் அவள். மழிக்கப் படாத மீசை தாடியுடன் நாலைந்து வாலிபர்கள். அழுக்குப் படிந்த சட்டையும் பாண்டுமாக... அவர்கள் வீண்பொழுது போக்கும் வெட்டிகள், வேலையற்ற வம்பர்கள் என விளம்பரப் படுத்தின.

ஜோல்னாபையும், அழுக்குவேட்டி, குறுந்தாடியுமாக நாலைந்து பேர்-

''இது என்ன கலைவைக் கும்பலோ... இந்த மாதிரிக் கூட்டங்களைத் தொகுத்து இவர்களது நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்த இந்த ஊரில் யாருமே ஏன் முன் வரவில்லை.''

''சோம்பேறியின் மூளைதான் சாத்தானின் பட்டறை'' அவள் கணவன் சொல்லும் ஒரு பழமொழி நினைவிற்கு வந்தது.

ஊரில் குற்றங்கள் அதிகம் ஏற்படுவதற்குக் காரணம் பற்றாக் குறை மட்டுமல்ல. உடலால் உழைக்க மனமில்லாத ஒரு அலட்சியமான மனப்போக்குக் கொண்ட விஷமக்காரர்களும் ஒரு காரணம். யாருமே திருடனாகவோ, கொலைகாரனாகவோ, அயோக்கியனாகவோ பிறப்பதில்லை. குழந்தைப் பருவத்தில் எல்லோருமே தெய்வத்திற்குச் சமமான கபடமற்ற மனதுடன் தான் வளர்கிறார்கள். சூழ்நிலையும், வாழ்கின்ற விதமும்-சமுதாயத்திலே காணப்படும் குறைபாடுகளுந்தான் இவர்களை இப்படி உதவாக்கரைகளாக்கி விடுகின்றன. அவள் கணவன் ஒரு முறை சொன்னதும் சட்டென்று ஞாபகத்தில் நின்றது.

''ஹலோ! உங்க பேர் என்ன? '' கூட்டத்திலிருந்த ஒரு முரட்டுக் குரல் கூவியபோது வழக்கமான திகில் தலையெடுத்தது. நெஞ்சு படபடத்தது. அச்சத்தை விழுங்கிக் கொண்டாள். கவனிக்காதவளைப் போல மேலே நடந்தாள்.

''ஷோக்கா இருக்காடா. இதுவரையில் நான் பார்த்ததே இல்லை'' பின்னால் அவளது காதுகளை ஊடுருவியது அந்தக் குரல். ''நான் பார்த்ததிலே இவள் ஒருத்தியைத்தான் நல்ல அழகி என்பேன்- நல்ல அழகி என்பேன்'' சினிமாப் பாட்டை சீட்டியடித்தது.

பார்வதி உடல் வெடவெடத்துப் போனாள். முகத்திலே முத்து முத்தாக வியர்த்துக் கொட்டியது. மூச்சே நின்றுவிடும் போலிருந்தது.

''சங்கமேஸ்வரா! வேதநாயகி!'' கோவிலில் குடிகொண்ட தெய்வங்களைத் துணைக்கு மனதிற்குள் கூப்பிட்டுக்கொண்டாள்.

தென்னந்தோப்பினின்று வெட்டரிவாளுடனும் தேங்காய்க் குலையொன்றுடனும் வெளிப்பட்டான் ஒரு உழைப்பாளி.

அவனை தூரத்திலே அடையாளம் கண்டவள் புன்னகைத்தாள்.

''உங்க வீட்டுக்குத்தான் எடுத்துக்கிட்டுப் போறேனம்மா! கீழத்தெரு கந்தசாமி ஐயாவோட தோப்பு செவ்விளநீர், நம்ப அர்ச்சகர் ஐயாவுக்குச் சாப்பிடக் கொடுத்தனுப்பி இருக்கார்.''

சற்றுமுன் சாவடியில் கலகலத்துக் கொண்டிருந்த கூட்டத்தின் சலசலப்பு சட்டென அடங்கிப்போயிற்று.

ஒரு வெட்டரிவாளைக் கண்டு இவர்களுக்கு இவ்வளவு பயமா? ஆனால் வழியோடு தன்பாட்டில் போகும் ஒரு பெண்ணைப் பார்த்தால் நாக்கு எப்படிப் புரள்கிறது? என்ன பேச்சு! என்ன சிரிப்பு! எத்தனை பயமுறுத்தல்!



வருங்கால சமுதாயம் வன்முறைகளுக்குத்தான் அடங்கி ஒடுங்கி வாழப்போகிறதா? அல்லது அப்பா சொல்கிறபடி அகிம்சைத் தத்துவத்திற்கு அடங்கி அண்ணல் காந்தி காட்டிய வழியில் மேலோங்கி நிற்கப் போகிறதா?

அப்பா நடேசன் நாள் முழுவதும் வாசலில் உட்கார்ந்து புத்தகங்களையும், பத்திரிகைகளையும் படித்துவிட்டு, வானொலியில் ஒன்றுவிடாமல் கேட்டு அத்தனையையும் மகளிடம் கொட்டி அளந்து கொண்டிருப்பார்.

பாவம்! குழந்தை. கணவனைப் பிரிந்து தனியே வாழ்கிறாளே என்ற தவிப்பில் அவளது மனத்திற்கு இதமாக எதையாவது சொல்லிக் கொண்டிருப்போம் என்று அவளுடன் பேசிக் கொண்டே இருப்பார்.

வீட்டையடைந்ததும் அவள் வேகமாக உள்ளே சென்றாள். இளநீர்க் குலையைச் சுமந்துவந்த ஆளிடம் அப்பா அன்பாகப் பேசி விடைகொடுத்தவர், அதைக் கொண்டு வந்து சாமான் அறையில் வைத்தார்.

''ஏம்மா, எப்படியோ இருக்கிறாயே?'' மகளின் முகத்தை நிமிர்ந்து பார்த்தவர் பதறிப்போனார்.

அப்பாவைக் கண்டதுமே துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. அவர் அனுதாபமாகக் கேட்டதும் படபடவெனக் கொட்டிவிட வேண்டும் போன்ற ஆவேசம்!

''என்னால் இனி தனியே காவேரியில் ஜலம் எடுத்துக் கொண்டு வரமுடியாது. சில முரடர்கள் வழியில் நின்று பெண்களைப் பார்த்து கலாட்டா செய்யறது எனக்குப் புடிக்கலை, பயம்மா இருக்குப்பா'' சொல்லிவிட உதடுகள் துடித்தன.

அவள் வாயைத் திறக்குமுன், வாயிற்பக்கம் 'போஸ்ட்' என்ற குரல் கேட்டது. வராந்தாவில் தெரிந்த தபால்காரன் கையில்

அயல் நாட்டுத் தபால் உறையைப் பார்த்ததும் அவளுக்கு எல்லாமே மறந்து போய்விட்டது.

''அப்பா! அவர்கிட்ட இருந்து கடுதாசி வந்திருக்கு போல இருக்கு...'' மகிழ்ச்சியில் கூவினாள் அவள்.

நடேசன் வெளியே சென்று கடிதத்துடன் திரும்பினார். அவர் முகத்தில் சிரிப்பு படர்ந்து கொண்டிருந்தது.

''உனக்குத்தான் எழுதியிருக்கார். இது டொராண்டோ அதாவது கனடாவிலிருந்து வந்திருக்கு. இவர் எப்போ ஆப்பிரிக்காவிலிருந்து கனடாவுக்குப் போனார்?'' வியப்பும் ஆவலுமாகக் கடிதத்தைக் கொடுத்தார்.

பார்வதி அவசரமாகக் கடிதத்தைப் பிரித்துப் படித்தாள்.

என் அருமை பார்வதிக்கு அநேக ஆசிகள்.

இந்தக் கடிதத்தை நான் கனடா தேசம் டொராண்டோ என்ற ஊரிலிருந்து எழுதுகிறேன் (தெரியாவிட்டால் உங்கப்பாவிடமிருந்து பள்ளிக்கூட வரைபடத்தை வாங்கிப்பார்). இங்கே எப்படி வந்தேன் என்பது உனக்கு அதிசயமாக இருக்கலாம்.

தென் ஆப்ரிக்காவில் என் ஒப்பந்த காலம் முடியும் சமயம் என்னை அழைத்துப்போன பூபேந்திரன் போன்ற பல இந்தியர்கள் உதவியால் இங்கே வந்திருக்கிறேன். பூபேந்திரனும் என்னோடு வந்திருக்கிறார்.

தென் ஆப்பிரிகாவிலிருந்து கனடாவிற்குப் பல இந்தியர்கள் சமீப காலமாகக் குடி வந்திருக்கிறார்கள். டொராண்டோவில் பலர் தென் ஆப்பிரிக்க இந்தியர்கள், அதிலும் தமிழர்கள் பலர் சேர்ந்துவிட்டிருக்கின்றனர். இவர்கள் கூடி அமைத்துள்ள ஒரு சிவன் கோவிலுக்குக் கும்பாபிஷேகம் செய்து அர்ச்சகரை நியமிக்க ஏற்பாடுகள் செய்ய பூபேந்திரனை உதவிக்குக்



கூப்பிட்டார்கள். இந்தப் பூபேந்திரனுக்கு என்மேல் அளவு கடந்த பிரியம். உலக முழுவதும் இந்தியர் வசிக்கும் இடமெல்லாம் சிவாலயங்களைக் கட்டி என்னைக் கொண்டு கும்பாபிஷேகம் செய்விக்க வேண்டும் என்ற பேராசை அவருக்கு! விசா முதலியதெல்லாம் அவர் கவனித்துக் கொண்டார். கனடா தூதுவர் அலுவலகத்திற்கு நடையாய் நடந்து வெற்றி பெற்றவர் அவர். பயணச் செலவும் அவருடைய டொராண்டோ அன்பர்கள் உபயம். ஒரு கணிசமான தொகையைக் கொடுத்து என்னைக் கௌரவிக்கவும் போகிறார்களாம். சில தினங்களில் கும்பாபிஷேகம் முடிந்து விடும். பிறகு நான் நேராக இந்தியாவிற்குப் பறந்து வந்துவிட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஏற்கனவே கணிசமான தொகையை டிராப்டாக உன் பெயருக்கு ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பி இருக்கிறேன். பாங்கில் கட்டிக்கொள்.

நம்மிடையே ஏற்பட்ட இந்தப் பிரிவு காலம் இதையெல்லாம் காசினால் நிரப்ப முடியாது. ஒப்புக் கொள்கிறேன். பார்வதி! அதற்கு ஈடு செய்வதுபோல உன்னை என்னால் முடிந்தவரை வசதிகள் எல்லாம் தந்து வாழ வைக்கத் துடிக்கிறேன். இந்த ஊர்களையெல்லாம் நீ இல்லாமல் தனியாகப் பார்க்கிறோமே என்று என் மனம் அடித்துக் கொள்கிறது.

பெரியப்பாவைக் கவனித்துக் கொள். அவரிடம் இந்த நல்ல செய்தியைச் சொல். உன் அப்பாவிற்கு என் நமஸ்காரத்தைத் தெரிவி. வெகு விரைவில் உன்னோடு வந்து வாழப்போகும் அன்பான கணவன் சபேசன்.

''அப்பா! அவர் ஆப்ரிக்காவிலிருந்து அந்த பெரிய மனுஷரோட கூட கனடாவிற்குப் போயிருக்கார். அங்கே டொராண்டோவில், ஒரு சிவன் கோவில் கட்டி கும்பாபிஷேகம் முடிச்சிட்டு நேரா இங்கே வந்து விடுவாராம். இன்னும் கொஞ்சம் நாள்...''வார்த்தைகள் மகிழ்ச்சியினால் குழறின. கண்களில் நீர் பனிக்க அவள் கடிதத்துடன் உட்புறம் ஓடினாள்.

இன்னொரு தடவை அதை மெல்லப் படித்து வார்த்தைகளின் இடையே அவளுக்காகத் தனியாகப் புரியப் போகிற அந்தப் பொருளை உணர்ந்து சுவைத்து அனுபவிக்க... மறுபடியும் படிக்க துடிப்போடு கடிதத்தைப் பிரித்தாள்.

*　　　　*　　　　*

அன்று பார்வதிக்கு ஒரே பரபரப்பு. கனடாவிலிருந்து கிளம்பிவிட்ட அவளது கணவன் பம்பாயிலிருந்து தந்தி கொடுத்திருந்தான். இரவில் வந்து கதவைத் தட்டிய சேவகனைக் கண்டு கிழவர் அரண்டு போனார். தந்தி என்றாலே கைகால்கள் பதறிப்போகும் பழங்காலத்து மனிதர் அவர்.

நடேசன் துணிவாக அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தார்.

''மாப்பிள்ளை நாளை காலையில் இங்கே வந்து சேரப் போகிறாராம். தந்தி கொடுத்திருக்கிறார். பம்பாய்க்கு வந்து விட்டார்'' மகிழ்ச்சியும் உற்சாகமுமாக உரத்த குரலில் சொன்னார்.

பெரியவர் தமது இரு கரங்களையும் உயர்த்தி ஆண்டவனுக்கு நன்றி சொல்லியபடி ஆனந்தத்துடன் கண்களை மூடிப் பிரார்த்தித்துக் கொண்டார். அப்படியா...என்று ஆர்ப்பரித்த பார்வதிக்கு மகிழ்ச்சி கட்டுகொள்ளவில்லை...என்ன செய்வது என்றே புரியாத குழப்பமான ஆனந்தத்தில் திளைத்தாள்.

மறுநாள் காலை விடிவதற்கு முன்னால் ஸ்நானம் செய்துவிட்டு அப்பாவைத் துணையாக அழைத்துக் கொண்டு காவேரியிலிருந்து ஜலம் எடுத்து வந்தாள். வீட்டைப் பெருக்கி சுத்தமாக்கினாள். வாசலில் மாக்கோலம் போட்டாள். பூஜையறை விளக்கை பொன்னாகத் தேய்த்து ஏற்றி வைத்தாள். தோட்டத்தில் பூத்த மலர்களை மாலையாகக் கட்டி படங்களுக்கு சாத்தினாள். கணவனுக்குப் பிடித்தமான சமையலை துரிதமாக செய்ய முயன்றாள். அடுப்பிலே குழம்பு கொதித்துக் கொண்டிருக்கும்



போதே... முகத்தைக் கழுவி பொட்டிட்டுக் கொண்டு... கூந்தலை வாரி முடித்துக் கொண்டாள். அப்பா கடைத்தெருவிலிருந்து வாங்கி வந்த கதம்ப மலர் சரத்தைக் கொண்டையில் சுற்றிக் கொண்டாள். அதிலே இணைந்திருந்த தாழம்பூவின் சிறு தண்டின் மணம் மூக்கில் மோதியபோது அவள் கணவன் நினைப்பு நெஞ்சை அடைத்துக் கொண்டது.

''தாழம்பூவை... சிவன் ஏற்பதில்லை. ஆனால் வேதவதி அம்மை ஏற்பாள்...எனக்குத் தாழம்பூ மணம் ரொம்பப் பிடிக்கும்'' அவள் கூந்தலில் தான் வாங்கி வந்த கதம்பத்தைச் சூட்டிவிட்டு ஆசையுடன் அவளை இறுக்க அணைத்துக் கொண்ட அந்த ஒரு நாளின் நினைவு உடலைப் புல்லரிக்கச் செய்தது.

இதோ...இன்னும் கொஞ்ச நாழியில்...மூன்று ஆண்டுகளாகப் பிரிந்து இருந்தவர்கள் கூடிப் பேசி மகிழப் போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பில் உள்ளம் பூரிக்க- அவசரமாக அலமாரியைத் திறந்து அவனுக்குப் பிடித்தமான ஊதாவண்ண காஞ்சிபுரப் பட்டுச் சேலையைக் கட்டிக் கொண்டாள். பவுடரை மெல்ல முகத்தில் பூசிக்கொண்டு கண்ணாடியில் ஒருமுறை பார்ப்பதற்குள் வாசலில்...கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

புழுதியைக் கிளப்பிக் கொண்டு நின்ற டாக்ஸியிலிருந்து அவள் கணவன் முன்னைவிட சற்றுப் பருமன், செவேலென்று இறங்குவதைக் கவனித்துவிட்டாள். ஓடிப்போய் முன்னே நின்று வரவேற்க ஆசையாய்த்தானிருந்தது. அதற்குள் மாமனாரும், அப்பாவும் முன்னே விரைந்துவிடவே உள்வாயிற்படி அருகே தயங்கிக்கொண்டு நின்றாள். ஆனால் சபேசன் பார்வை அவர்களையெல்லாம் தாண்டி...அவளது முகத்தைத்தான் ஆசையுடன் முதலில் ஓடிவந்து தழுவியது.

குளித்து முடித்து...சாப்பிட்டு...கொஞ்ச நேரம் பேசிய பின்னர் அலுப்புடன் அப்பா வாயில் வராந்தாவிற்கு பத்திரிகையுடன்

சாய்வு நாறகாலியில் தூக்கம் போடப் போய்விட்டார். மகன் வந்துவிட்டான். இனிமேல் அர்ச்சகர் பதவியை அவனிடம் ஒப்படைத்துவிட்டு வெகுகாலமாகக் கொண்டிருந்த அவரது ஆசையைத் தீர்த்துக்கொள்ள காலம் வந்துவிட்டது. ரிஷிகேசத்திற்கு போய் ...சுவாமி சிவானந்தர் உருவாக்கிய ஆசிரமத்தில் தங்கியிருந்து பஜனைகளில் கலந்து கொண்டு... ஆனந்தமாக கங்கையில் நீராடிவிட்டு...புண்ணிய க்ஷேத்திரங்களையெல்லாம் பார்த்துவிட்டு மெல்ல வீடு திரும்ப வேண்டும், பொறுப்பு முடிந்தது என்ற அமைதி அவருக்கு.

தனியே அவளுடன் அவன் அறையில் இருந்தான். வெற்றிலைக்கு சுண்ணாம்பு தடவி மடித்து கொடுத்த அவளது கையை மெல்ல பற்களால் கடித்தான்.

''சே! என்ன விளையாட்டு. எச்சல் துப்பல்...ஏதும் கிடையாதா? ரொம்ப மாறிப் போய்விட்டேள். உங்க பெரியப்பா பார்த்தால்!'' என்று சிரித்தாள் மகிழ்ச்சியுடன்.

''உண்மைதான்; ரொம்ப மாறிப் போயிட்டேன். ஜாதி, சமயம் என்று வேற்றுமை ஏற்படாது ஒருங்கிணைந்து வாழும் ஒரு இந்திய சமுதாயத்தினரிடம் பழகினதிலே மனதுக்கு இதமாக இருந்தது. பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். தீட்டு-எச்சில்-விழுப்பு என்பதற்கெல்லாம் அப்பாற்பட்டது தூய்மையான அன்பு, பக்தி என்பது அந்த மக்களிடம் தெரிந்து கொண்டேன்.''

''ரொம்ப பேசத் தெரிந்து கொண்டிருக்கேள்.'' சிணுங்கியபடி அவனது தோள்மீது சாய்ந்து கொண்டாள்.

''பாடவும் தெரிஞ்சுண்டு வந்திருக்கேன். உனக்கு சங்கீத ஞானம் உண்டுன்னு சமையலறையில் நீயே 'நன்னு பாலிம்ப நடச்சி வச்சித்திவோ...!' என்று பாடிப்பியே, ஞாபகம் இருக்கா. ' எனக்கும் இப்போ பாடத் தெரியும்! என் பிரிவு உபசாரத்துக்கு



அந்த ஊரில் கொடுத்த விருந்தின்போது என்னைப் பாடச் சொல்லி வற்புறுத்தினா.''

''பாடினேளா?...'' ஆச்சரித்துடன் கேட்டாள்.

''உனக்குத்தான் பாடத் தெரியும்னு உனக்கு கொஞ்சங் கர்வம் எப்போதும் உண்டு... இதோ கேள் நான் பாடியிருக்கிறதை'' விளையாட்டாக அவள் கன்னத்தைக் கிள்ளியபடி பெட்டியில் இருந்த டேப்ரிகார்டரை எடுத்து காசட் ஒன்றைப் பொருத்தி பட்டனை அழுத்தினான்.

''மற்று பற்ற எனக்கின்று நின்திருப்பாதமே மனம் பாவித்தேன்... பெற்றலும் பிறந்தேனிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன்.''

''சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய தேவாரம். இதை நீங்க இதுக்கு முன்னாடி?...''

அவள் வியப்புடன் கூறுமுன் அவன் குறுக்கிட்டான்.

''அதுக்கு முன்னாடி எனக்கு தேவாரத்தில் பாடம் இருந்ததில்லை. அங்கே போனதும் அந்த ஊர் பக்தர்களுக்கு தேவாரம் திருவாசகத்தில் இருந்த ஈடுபாட்டை கவனிச்சு.... அவர்களிடமே ஒரு புத்தகத்தை வாங்கி மனப்பாடம் பண்ணிட்டேன். அவா கோவில்லே பாடற அதே பாணியில் பாடவும் தெரிஞ்சு கொண்டுட்டேன். நான் பாடிய தேவார திருவாசகத்தை பக்தர்கள் கேட்டு ரொம்ப சந்தோஷப்பட்டா... அத்தோடையா, இன்னும் இதைக் கேளு.'' சொல்லிக் கொண்டே காசட்டை மேலே ஓடவிட்டு பட்டனை மறுபடி அழுத்தினான்.

''மையா மோரி மை நஹீப் மாக்கன காயோ'' இனிமையாக இந்தியில் கரகரத்த கணவனது குரலைக் கேட்டு தாங்க முடியாத ஆச்சரியம் அவளுக்கு.

''சூர்தாஸின் பஜனை- வெண்ணெய் வைத்திருந்த கண்ணனைப் பாடுவது. இது எப்படி உங்களுக்குத் தெரியும்?''

''அந்த நாட்டில் இந்தி மொழி பேசும் மக்களும் அதிகம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் வீட்டுக்கு விருந்துக்கு அழைத்தார்கள். பஜனையில் கலந்து கொள்ள வற்புறுத்தினார்கள். நல்லவேளை இங்கிருந்து போகும் முன்பே கொஞ்சம் இந்தி பஜனை பாடல்களை பதிவு செய்த காசட்டைக் கையோடு கொண்டு போயிருந்தேன். நானே போட்டுக் கேட்டு கத்துண்டு பாடி அவர்களை சந்தோஷப் படுத்திவிட்டு வந்திருக்கேன்.''

''ரொம்பத்தான் தெரிஞ்சுண்டு வந்திருக்கேள்.''

''இன்னும் ஒண்ணு. உன்னை ரொம்ப நேசிக்கத் தெரிஞ்சுண்டு உன் மேலே அன்பை வளர்த்துண்டு வந்திருக்கேன்...'' கொஞ்சிக் கொண்டே அவளைத் தன் நெஞ்சோடு சேர்த்துக் கொண்டான்.

பெருமையிலே பூரித்தாள் பார்வதி.

அவளைப் போன்றதொரு அதிருஷ்டம் ஆபீசரை மணந்து கொண்டிருக்கும் லதாவுக்கு ஏற்பட்டிருக்குமா? லதாவுக்கு இத்தனை அன்பான கணவர் கிட்டியிருப்பாரா?... லதா வாயாடி. எப்படிப் பேசிவிட்டாள் அன்று?... கிடக்கிறாள் போகட்டும்... என்ற சிந்தனை நெஞ்சிலே இழையோடியது.

''உன் அப்பா இன்னும் நாலைந்து நாளில் இங்கிருந்து புறப்பட்டு விடுவாராம். சாப்பிடும்போது சொன்னார்.''

''நான் நாளை மறுநாளையிலிருந்து சங்கமேஸ்வரன் ஆலயத்தின் அர்ச்சகனாக பொறுப்பேத்துக்கப் போறேன். அதுக்குப்பின் ரெண்டு நாளில் பெரியப்பா யாரோ சிநேகிதர்களோட ரிஷிகேசம் புறப்படப் போகிறாராம்.''

''அதுக்குப்பிறகு?...''



''அதுக்குப்பிறகு இந்த வீட்டில் நீயும் நானும்தான்... போதுமா?'' அவள் முகத்தை ஆசையுடன் நிமிர்த்தி அந்த அழகிய கண்களைப் பார்த்தான் மகிழ்ச்சியுடன்.

அவள் நெஞ்சில் திடீரென்று அந்த பயம் ஏற்பட்டது. ''கணவனிடம் சொல்லிவிட்டால் என்ன? யாரோ...சில கயவர்கள்... வேலை வெட்டியில்லாத போக்கிரிகள் மூலைக்குப் பலராக நின்று ஜாடைமாடையாக அசிங்கமாக... பேசுகிறார்கள்... எனக்குத் தனியாக இருக்கப் பயமாக இருக்கும்னு சொல்விட்டா?''

''ரொம்ப நாள் நாம் தனியாக இருக்கப் போவதில்லை. விரைவில் நமது அன்பைப் பங்கிட்டுக் கொள்ள ஒரு குழந்தை பிறந்துடுவான். அப்புறம் என்னைக் கவனிக்கவே நேரம் இருக்காது''... கொஞ்சலாகப் பேசிய கணவன் அணைப்பில்... அந்த கலவரமான செய்தியைச் சொல்ல மனம் இல்லை. அவள் சிநேகமாக முறுவலித்தாள். சே!... இவர் இருக்கும்போது என்ன வீண் பயம்?.. தனக்குள் சமாதானப்படுத்திக் கொண்டாள்.

## 3

பிரார்த்தனை மூலம் அற்புதங்களை நிகழ்த்த முடியும் என்று நான் நம்புகிறேன். அந்த நம்பிக்கையோடு நாம் வாழ்க்கையைத் தொடங்குவோம்.

-சில நாட்கள் சென்றன. அடிக்கடி வந்து பார்த்துக் கொள்ளப் போவதாக மகளிடம் வாக்குக் கொடுத்துவிட்டு நடேசன் மாப்பிள்ளையிடம் விடைபெற்றுக்கொண்டு ஊருக்குக் கிளம்பி விட்டார்.

அர்ச்சகராகப் பணி ஏற்று தன்காரியங்களைக் கருத்துடன் சபேசன் செய்வதைக் கண்டு திருப்தி அடைந்த பெரியப்பாவும் ரிஷிகேசத்திற்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

கணவனும், மனைவியும் என்ற தனிக் குடித்தனம் ஆரம்பமாகியது. பெரியப்பாவுக்காகக் காவேரிக்குப் போக வேண்டியதில்லை. அந்தத் தொல்லை அவளுக்கிருக்கவில்லை. சபேசன், வீட்டு கிணற்று நீரைக் குடிப்பதற்கு உபயோகிக்க ஆட்சேபணை தெரிவிக்கவில்லை.

அப்பா நடேசன் வாரத்திற்கு ஒரு முறையாகிலும் வந்து க்ஷேமம் விசாரித்து விட்டுப்போய்க் கொண்டிருந்தார். வீட்டையும் கணவனையும் கவனிப்பதில் பார்வதியின் நாளின் பொழுது வேகமாகக் கழிந்தது. கோவிலில் கடைசிகால பூஜையை முடித்துக் கொண்டு வீட்டிற்குத் திரும்பிய சபேசன் இரவு உணவுக்குப்பின் அவளுடன் ஊஞ்சலில் அமர்ந்தபடி வெளிநாடுகளில் தான் பார்த்து அறிந்த விசேஷங்களைக் கதை கதையாய்ச் சொல்லி மகிழ்ந்தான்.

நாள் போவதே தெரியாமல் மாதங்கள் சில மறைந்தோடின. அவள் மனதை நெருடிய அந்தப் பயமும் அத்துடன் மறைந்து போயிற்று. உடம்புக்கு அசதி ஏற்பட்டிருக்கிறது என்று அப்பாவுடன் ஒருநாள் அவள் பிறந்த கிராமத்தில் இருந்த பெண் வைத்தியரிடம் சென்றாள். அவர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியளித்த அந்த உண்மையைத் தெரிந்து கொண்டாள். விரைவில் அவள் தாயாகப் போகிறாள். தற்சமயம் மூன்றுமாத கர்ப்பம் என்பதை டாக்டர் அம்மாள் சொன்னதும் ஓடிச் சென்று கணவனிடம் அந்தச் செய்தியைச் சொல்லி மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள அவள் மனம் துடியாய்த் துடித்தது.

சபேசனுக்கு ஆனந்தம் பிடிபடவில்லை. அன்றிலிருந்து அவளிடம் இன்னும் அதிகப் பிரியமாக நடந்து கொள்ளத் தொடங்கினான். பூஜை முடிந்ததும் இடையே கோவிலில் இருந்து இரண்டு முறைகளாவது வீட்டிற்கு வந்து அவள் சுகமாக இருக்கிறாளா என்று பார்த்துவிட்டுப் போனான். தாய் இருந்தால் அவன் மனம் சமாதானமடையும். இந்த நிலையில் பெண்களுக்கு



அன்புகாட்ட அருகில் தாய் இருக்க வேண்டியது அவசியமாயிற்றே என்று மனம் இரங்கினான். அதிகப்படியாக அவள் எந்த வேலை செய்தாலும் பார்க்க சகிக்காது தடுத்தான். அப்படி அவனுள் ஒரு அன்புப் பாசம் பெருகி ஓடியது. அன்று மாலை பூஜைக்குப் புறப்படுமுன் ஏன் மனதில் ஒரு தடுமாற்றம்?''

''உடம்புக்கு உனக்கு ஒண்ணுமில்லையே'' பன்னிப் பலமுறை கேட்டான் கவலையுடன். இளைத்துவிட்டிருந்த அவள் முகத்தைப் பார்த்து மனம் கரைந்து போனான்.

''பார்வதி! நேத்திக்கு உன்னைப் பார்க்க வந்த உன் அப்பா என்னிடம் சொல்லிண்டு போக கோவிலுக்கு வந்திருந்தார்... அப்போ நான் சொன்னேன். பார்வதிக்கு உடம்பு வரவர தள்ளலை. என் பெரியம்மா உயிரோடு இருந்தா இப்ப அவளுக்குப் பெரும் உதவியா இருந்திருப்பா. உங்கப் பக்கத்திலும் பெரியவாள்னு யாரும் கிடையாது. அதனாலே நீங்க மறுபடியும் வந்து எங்களோடயே என் பெரியப்பா க்ஷேத்திராடனத்திலிருந்து திரும்பும்வரை துணையாக இருக்கணும். பார்வதி இந்த நிலையில் தனியாக இருக்கிறது என் மனதுக்கு கஷ்டமாக இருக்குன்னேன். உங்கப்பா உரக்க சிரிச்சுட்டார். மாப்பிள்ளை தாய்மைங்கிறது ஒரு வியாதியில்லே. இயற்கையின் நியதி. பார்வதிக்கு ஒண்ணும் நேராது. சுகப்பிரசவம் நடக்கும். அடிக்கடி டாக்டரிடம் கொண்டு போய்க் காட்டினால் போச்சு. எதுக்கும் நாளைக்கு திருச்சிக்குப் போய் என் ஒண்ணுவிட்ட அக்காவைக் கூட்டிண்டு வரேன். அவளும் நானும் கொஞ்ச நாள் நீங்க சொல்றபடி உங்க வீட்டிலேயே பார்வதிக்கு துணையாக இருக்கோம். கவலைப்படாதீங்கோ'' என்றார்.

''இன்னும் இரண்டு நாள் பொறுத்துக்கோ பார்வதி. சமையலில் உதவ உன் அத்தையும் - கூட துணையாக இருக்க உன் அப்பாவும் வந்து சேர்ந்துடுவா... நானும் நிம்மதியா பூஜா காரியங்களைக்

கவனிப்பேன் - வரட்டுமா?'' வாயில்வரை கேட்டுக்கொண்டே பிரிய மனமில்லாது புறப்பட்டுப்போனான் சபேசன்.

வீட்டு வேலைகளைப் பார்வதி செய்து முடிக்குமுன் பொழுது சாய்ந்துவிட்டது. லேசாக இருள் பரவிக் கொண்டு வருவதைக் கவனித்த பார்வதி...சமையலை ஆரம்பிக்க ஒரு குடம் கிணற்றிலிருந்து நீர் எடுக்கப் பின் கதவைத்திறந்து கொண்டு தோட்டத்திற்கு வந்தாள்.

வராந்தாவிலிருந்து விளக்கை ஏற்ற மறந்து போனாள். அவசரமாக வாளியைக் கிணற்றில் விட்டு நீரைச் சேந்தி சகடையில் இழுத்தபோது திம்மென்றதொரு சப்தம். யாரோ தோட்டத்தில் குதிப்பதுபோல கேட்கவே அதிர்ந்து போனாள். நெஞ்சும் மார்பும் துடிக்கப் பார்த்தாள். ஓங்கி வளர்ந்திருந்த வேப்ப மரத்தின் அருகே கறுப்பாக ஒரு நிழல். யாரது! அதட்டிக் கொண்டே திரும்பியவள் மேலே பேசமுடியாது யாரோ பின்னாலிருந்து தன் வாயை அழுத்தி மூடுவதை உணர்ந்தாள். கையில் பிடித்திருந்த வாளியின் கயிற்றை விட்டு விட்டு வாயைப் பொத்திய கரத்தை விளக்கித் தள்ளப் போராடினாள். திமிறினாள்- கத்த முயன்றாள்...கால்கள் தொய்ந்து மூச்சடைக்க கீழே சரிந்து விழுந்தாள்.

* * *

பூஜை முடிந்ததும் சபேசன் மனைவி ஆசையுடன் கேட்டதை மறக்காது.. வேதநாயகிக்கு நைவேத்தியம் செய்த சர்க்கரைப் பொங்கலில் கொஞ்சமெடுத்து ஒரு தொன்னையில் நிரப்பி... விபூதி குங்கும பிரசாதத்துடன் வேகமாக வீட்டிற்கு வந்து கொண்டிருந்தான்.

வாயிலை நெருங்கியவுடன் அதிர்ந்து போனான். வீடு முழுவதும் இருளில் மூழ்கிக் கிடந்தது. பார்வதி ஏன் விளக்குகளை அணைத்துவிட்டாள்? அவனுக்கு ஒரே திகைப்பு.



கேட்டைத்திறந்து கொண்டு வராந்தாவிலே ஒரு பக்கம் பிரசாதங்களை வைத்துவிட்டு...கதவைத் தட்டினான். பதில் இல்லை - பலமாகத் தட்டிவிட்டு பார்வதி என்று குரல் கொடுத்தான். அப்பொழுதும் பதில் இல்லை... நடுநடுங்கிப் போய்விட்டான் அவன்.

அவளுக்கு என்ன நேர்ந்துவிட்டது?

சட்டென்று புழக்கடைப்பக்கம் சென்று பின் வராந்தாவின் விளக்கைப் போட்டான். திடுக்கிட்டுப் போனான். பார்வதி கிணற்று மேடைமீது குப்புறப் படுத்துக்கிடந்தாள். குடம் கவிழ்ந்து மூலையில் தூரக்கிடந்தது. மெல்ல அருகில் வந்து குனிந்து பார்த்தபோது மீண்டும் அதிர்ந்து போனான். கூந்தல் அவிழ்ந்து தரையில் புரண்டு கிடக்க - பின் முதுகு ரவிக்கை கிழிந்துதொங்க, அலங்கோலமாக பார்வதி குப்புறப்படுத்தபடி விசும்பிக் கொண்டிருந்தாள். சில நாட்களுக்கு முன் அவன் ஆசையுடன் வாங்கிக் கைகளில் அடுக்கிக் கொண்டிருந்த வண்ணக் கண்ணாடி வளையல்கள் உடைந்து சிதறி... அவளது கைகளில் எத்தனைக் கீறல்கள்? ரத்தக்கறை, ஐயோ இதென்ன கோரம் - அரண்டுபோய் விட்டான் அவன்.

'பார்வதி! என்னம்மா உனக்கு?' சபேசன் பதறினான். அவனது கண்களில் நீர் பொங்கியது. நெஞ்சு படபடக்க அவளைத் தூக்கக் கையை நீட்டினான்.

''கிட்ட வராதீங்கோ... அப்படியே நில்லுங்கோ... இனி மேலே நான் உங்க பார்வதியில்லை... அழிஞ்சு போயிட்டேன்... ஐயோ...!'' அழுகையில் குலுங்கினாள் அவள்.

''என்ன நடந்தது - பார்வதி விவரமாகச் சொல்லேன், எனக்குக் கையும் ஓடலை காலும் ஓடலையே'' - பதறித் துடித்தான் சபேசன்.

கிணற்றருகே கிடந்த தோய்க்கும் கல்மேல் உட்கார்ந்துகொண்டு சுவரை ஆதரவாகப் பிடித்துக் கொண்டாள்.

''என்னைத் தொடாதீங்கோ...நான் கெஞ்சிக் கேட்கிறேன். நீங்க வராட்டா நான் செத்தே போயிடுவேன் போலிருக்கு - என்னால தாங்க முடியலையே.... இந்த அவமானத்தை... ஜலம் எடுக்க பின் பக்கம் வந்தேன்... சத்தம் கேட்டது... திரும்பிப் பார்க்கறதுக்குள்ளே ஒரு பாவி என் வாயை அடைச்சு கீழே தள்ளி என்னை அழிச்சுட்டான். அம்மா வேதநாயகி, என்னை சீக்கிரம் உன்கிட்ட அழைச்சிக்கோ...எனக்கு வாழ இனி ஆசை இல்லை...'' குமுறி அழுதாள். துண்டு துண்டாக நடந்ததைச் சொன்னாள்.

குபீரென்று ரத்தம் தலைக்கேற உடல் எல்லாம் நெருப்பாக தகிக்க, தாங்க முடியாத சினத்திலே பொங்கிப்போனான் சபேசன்.

காலில் மிதிக்கப்பட்டு சுரங்கிவிட்ட மல்லிகை மலர்ச்சரம் போல துவண்டு கிடந்த மனைவியைக் காண அவன் நெஞ்சு கொதித்தது.

வீட்டு வாசலைத் தாண்டாத ஒரு அபலைப் பெண்ணை - தனியே இருப்பதை வேவு பார்த்துக் கொண்டிருந்துவிட்டு துணிவாக வீட்டுக்குள் புகுந்து இந்த அநியாயத்தைச் செய்துவிட்ட பாவி யார், யார்...யார்?.. என்று ஆத்திர ஆவேசத்திலே அவன் உடல் முழுவதும் ஆடியது.

''பார்வதி சொல்லு... இந்த அக்கிரமத்தைச் செஞ்ச பாவி யாருன்னு சொல்லு, அடையாளம் காட்டு, சாமான் உள்ளே சாத்தி வச்சிருக்கிற கோடாலியைத் தூக்கிண்டுபோய் அவனை ஒரே போடாப் போட்டு வெட்டி சாச்சுடறேன். கல்லைக் கழுவிக் கொண்டு பூஜை பண்ணுகிற தொழிலைச் செய்கிறவன் நான். ஒரு கோழை தைரியமில்லாதவன்னு அவன் நினைக்க வேண்டாம். நான் பரசுராமன் பரம்பரை. அரக்கத்தனமாக நடந்து கொண்டவர்களை ஒழிக்க அன்னிக்கு அவன் ஒரு பரசைத் தூக்கித்



தோளில் சாத்திக் கொண்டானே? அதுபோல இன்னிக்கி நான் கோடாலியைக் கையில் எடுத்துக்கறேன்... பார்வதி நீ சொல்லு... அவனைக் கொன்னு முடிச்சுட்டு வரேன்... ஆத்திரமாகக் கத்தினான்...ஆவேசமாக எழுந்து நின்றான்.

''ஐயோ! அந்த வெட்கக்கேட்டை வேறே நான் சொல்லணுமா! இருட்டிலே வந்தான். யாருன்னு எனக்கே தெரியாது... அந்தப் பாவியின் மூஞ்சியைக் கூட பார்க்கலை... கொஞ்ச நாளா சில முரட்டுப்பசங்கள் ஒரு கும்பலா கடைத்தெரு முனையில் நின்னுண்டு, கலாட்டா பண்ணிக் கொண்டிருந்தா... அவர்களில் ஒருத்தனாத்தான் இருக்கும்''...விக்கி விக்கி அழுதாள்.

''இதை ஏன் எனக்கு முதலிலேயே சொல்லலை?''

''ஊரிலேருந்து வந்ததும் வராததுமா உங்க மனசை கஷ்டப்படுத்துவானேன்னு பேசாம இருந்திட்டேன். அதன் பலனை...'' பேச முடியாது திணறினாள். ''அந்தக் கும்பலைக் காட்டு... ஒட்டு மொத்தமா எல்லாரையும் தீர்த்திட்டு வந்துடறேன். மரணதண்டனைதானே கிடைக்கும். நான் பயப்படலை.''

''ஒருத்தன் செஞ்ச குத்தத்துக்கு எல்லாரையும் கொல்லச் சொன்ன அந்தப் பாவம் வேறே எனக்கு வேணுமா? நான் இத்தனை நாழி செத்துப் போயிருக்க வேண்டியவள். கிணற்றிலே குதிச்சு பிராணனை விட்டுடலாம்னு நினைச்சேன்... உங்ககிட்டே நான் நிரபராதிங்கறதை சொல்லிவிட்டு...உங்க வாயாலே எனக்கு கர்ண மந்திரம் சொல்லக் கேட்டு...உயிரை விடணும்னு காத்திண்டு இருக்கேன்.'' விசும்பி அழுதாள்.

சபேசன் கண்களைத் துடைத்துக் கொண்டு அவள் அருகே தரையில் உட்கார்ந்தாள்.

''பார்வதி! ஏம்மா நீ சாகணும்? என்னை விட்டுட்டுப் போக உனக்கு எப்படியம்மா மனசு வரும்?... மேலும் நம் குழந்தையைக்

சொல்ல உனக்கு உரிமை கிடையாதே. அதை நினைச்சுப் பார்த்தியா?'' துக்கத்தில் தழதழத்தான்... கண்களில் பொங்கிய நீர் கன்னங்களில் ஓடியது.

''லாயக்கில்லாத ஜன்மம்னு புரிஞ்சது. அதனாலே இந்த தீர்மானத்துக்கு வந்திட்டேன். உங்களோடயும் குழந்தையோடவும் வாழக் கொடுத்து வைக்காத பாவி நான்...'' அவள் மீண்டும் விசும்பி அழுதாள்.

''பார்வதி எழுந்திரும்மா... ஈரத் தரையில் படுத்துண்டா உடம்புக்கு ஏதாவது வந்துட்டா...'' கவலையுடன் அவன் நெருங்கினான்.

அவள் புரண்டு அப்பால் நகர்ந்து கொண்டாள்.

''என்னைத் தொடாதீர்கள். அகல்யான்னு எனக்குப் பேர் வச்சா என் அம்மா. பாட்டியோட பேரைச் சொல்லி கூப்பிடக் கூடாதுன்னு பார்வதின்னு மாத்தினா. ஆனால் அந்த அகல்யாவைப் போல நானும் அழிஞ்சு போனவ...''

சபேசன் இன்னும் சற்று அருகில் நெருங்கி உட்கார்ந்தான்.

''பார்வதி - உன் உதாரணம் தப்பு... அந்த அகல்யா தான் செய்கிறது தப்புன்னு தெரிஞ்சும் தன்னை அழிச்சுக் கொண்டா. ஆனால் உனக்கு ஏற்பட்ட இந்தக் கொடுமை ஒரு விபத்து. நீ நிரபராதி. அகல்யாவைப்பற்றி வால்மீகி என்ன சொல்லியிருக்கார் தெரியுமா?''

''காற்றை உணவாகக் கொண்டு சாம்பலில் உறங்கி யார் கண்களிலும் படாதவளாக நீ ஆசிரமத்தில் ஒருபுறம் இருக்கக் கடவாய்...'' என்று கௌதமர் அவளைச் சபித்தார். பின்னர் இரக்கப்பட்டுக் கொண்டு ராமன் காட்டுக்கு வருவான். அப்போது நீ தூய்மையடைவாய்னு விமோசனம் அருளினார்.



''ராமன் அங்கே வந்தபோது... பனியினால் மூடப்பட்ட சந்திரன் போலும் புகையினால் ஒளியிழந்த நெருப்புப் போலும் இருந்த அகல்யை பாவம் நீங்கி அவர்கள் கண்களுக்குப் புலப்பட்டாள்... அதன்பின் கௌதமருக்குப் பத்தினியாக இருந்து விருந்தினர்களை உபசரித்தாள். பின்னர் கணவருடன் சேர்ந்து வாழ்ந்தாள் என்று புராணம் சொல்கிறது.''

''கௌதமர் ஒரு முனிவர்...'' முனகினாள் பார்வதி...

''என்னைவிட சாஸ்திரங்கள் அதிகம் தெரிந்த கௌதமர் ஒரு பெரிய மனிதர். தவறு செய்துவிட்ட மனைவியை அவர் மன்னித்து ஏற்குமளவு அந்தக் காலத்திலேயே சீர்திருத்தக் கொள்கையைக் கொண்டிருந்தார். அப்படியிருக்க... தன்னை அறியாது ஒரு விபத்தில் சிக்கிவிட்ட மனைவியை நான் கைவிட்டால்... நான் மனிதனே இல்லை... மிருகத்துக்கும் இழிவானவன்...'' துண்டில் முகத்தைத் துடைத்துக் கொண்டான். தொண்டையைச் செருமினான்.

''அகல்யாவுக்கு சாப விமோசனம் கிடைத்தது. கணவர் ஏத்துண்டுட்டார். சீதை தன்மேலே வீணாக சந்தேகம் எழக் கூடாதுன்னு அக்னிப் பிரவேசம் பண்ணினாள். அவள் உண்மையில் தூயவள். நெருப்பு அவளைச் சுடப் பயந்தது. ஆனால் நான் தீக்குளித்தால் நெருப்பு என்னைச் சுட்டு பொசுக்கி சாம்பலாக்கிவிடும். நான் பாவப்பட்டவளாச்சே...'' விக்கினாள் பார்வதி.

''இங்கேயும் உன் உதாரணத்துக்கு ஒரு மறுப்பு கருத்து சொல்ல என்னால் முடியும். அசோகவனத்தில் அனுமன் சீதையைக் கண்டதும் என்ன சொன்னான்? ''தாயே! நீங்கள் என் முதுகில் ஏறிக்கொள்ளுங்கள். நான் சீக்கிரமாக ராமனிடம் கொண்டு சேர்த்துடறேன்'' என்றார். ''வாஸ்தவம். ஆனால் நீ ரொம்ப தூரம் போகணும். உருவத்தில் சின்னவன்'' என்று சீதை சொன்னதும்

அனுமன் விஸ்வரூபம் எடுத்துக் காட்டினார். "உன்னால் என்னைத் தூக்கிக் கொண்டு போக முடியும். ஒப்புக்கிறேன். ஆனால் அது ராமனது வீரத்திற்கு இழுக்காச்சே, மேலும் உன் உடம்பு என் மேல் பட்டால் அது தர்மத்திற்கு தவறாச்சே" என்றாள். அனுமன் பேசுமுன், அன்னை தானே தொடர்ந்து சொன்னாள்.

"ராவணன் சிறையெடுக்கும்போது என் கூந்தலைப் பற்றி தூக்கி எடுத்து வந்தானே, அப்போது அவன் கை என் மேலே பட்டதே என்றுதானே யோசிக்கிறாய்? அதற்கும் பதில் சொல்லுகிறேன் கேள். ராவணன் என்னை சிறையெடுத்தபோது நான் சுவாதீனத்தில் இல்லை. என்னைக் காத்துக் கொள்ளத் திறமையற்றவளாக இருந்தேன். எனக்கு உதவி செய்து காப்பாற்ற அருகில் யாருமில்லை. அந்த மாதிரியான சூழ்நிலையில் ராவணன் தொட்டதினால் என் கற்பு பங்கப்படவில்லை... இதை தர்மம் ஏற்கிறது என்கிறாள்."

"உன்னைக் காத்துக் கொள்ளமுடியாத பலவீன நிலையில் இந்த விபத்து நேர்ந்துவிட்டிருக்கிறது. அதற்கு நீ எப்படிப் பொறுப்பாளியாவாய்? உன் மேல் குற்றம் சுமத்த நியாயம் இல்லையே? இதை நான் சொல்லலை. நீ வணங்குகிற சீதை சொல்கிறது பாரதத்தில்."

"இது பாவப்பட்ட ஜன்மம். அழியணும், உயிரோடு இருப்பது தவறு..."

"அப்படிப் பார்த்தாலும் அந்த ஜன்மம் ஏற்கெனவே அழிந்து போயிடுத்து பார்வதி! நீ தாயுமானவர் பாடல்களை நிறையப் படிச்சிருக்கே..."

"எத்தனையூர், எத்தனைவீடு, எத்தனைதாய், பெற்றவர்கள் எத்தனைபேர் இட்டு அழைக்க ஏன் என்றேன்?" என்கிறார் தாயுமானவர். இதிலே அடங்கியிருக்கிற தத்துவம் விஞ்ஞான



ரீதியாகப் பார்த்தாலும் உண்மையேயாகிறது. இந்த உடம்பிலிருந்தே ஆயிரக்கணக்கான அணுக்கள் வேலை செய்து களைத்து ஒவ்வொரு வினாடியும் அழிந்துபோகின்றன. உடனுக்குடன் ஆயிரக்கணக்கான அணுக்கள் தோன்றி வேலையைத் தொடங்குகின்றன. அழிதல் தோன்றுதல் என்பது இவைகளின் பிறப்பு இறப்பு என்ற நிகழ்ச்சி, வினாடியில் பலமுறை இந்த நிகழ்ச்சி நடக்கும்போது மனிதன் பிறக்கிறான். இறக்கிறான் என்பது விஞ்ஞானம். தாயுமானவர் தத்துவமும், அதைத்தான் சொல்கிறது. அப்படிப் பார்த்தால் அந்த விபத்து நேர்ந்த சமயத்தில் இருந்த பார்வதி இறந்து - பிறந்து, இறந்து இப்போ என் முன்னாலே இருப்பவள் வேறு ஒரு பார்வதி..."

"இன்னிக்கி மத்தியானம்வரை என் மேல் உங்களுக்கு இருந்த பிரியம் இந்த விபத்தினால் இப்போ களங்கப்பட்டுப் போச்சே. இனியும் நான் வாழ்ந்து என்ன பிரயோஜனம்?"

"பார்வதி! என் அன்பு களங்கப்பட்டுப் போச்சுன்னு யார் சொன்னா? நம் கல்யாணத்தின்போது அக்கினிக்கு வடக்கே வலது காலால் கிழக்கு திக்கை நோக்கி நீ நடக்கணும்னு ஒரு சடங்கு செய்யப்பட்டதே ஞாபகம் இருக்கா... உன் வலது காலைப் பிடித்துத்தான் ஏழு அடிகள் எடுத்து வைக்கச் சொன்னேனே அதற்குப் பேர்தான் சப்தபதி. "ஏக மிஷே விஷ்ணுத்வான் வேதுத்வே ஊர்ஜேன்னு, மந்திரம் ஆரம்பிக்க ஏழு அடிகள் முடிச்சதும்...

"ஸகா ஸ்பதவாக ஸகாயென ஏகி ஸுரன்ருதே, ன்னு மந்திரம் சொன்னேனே!"

"எனக்குத்தான் சமஸ்கிருதம் தெரியாதே..." கண்ணீருடன் முனகினாள் அவள்.

''நான் விளக்கம் சொல்றேன்! ஏழு அடிகளைத் தாண்டிய நீ எனக்குத் தோழியாகிவிட்டாய். நாம் இப்போது சிநேகிதர்களாகி விட்டோம். இனி எல்லாவற்றையும் சேர்ந்தே அனுபவிப்போம். நான் மனம், நீ சொல். ஆகவே நீ என்னோடு வருவாயாக.''

''இதன் கருத்து இணைபிரியாத நண்பர்களாக வாழ்வின் இன்பம் துன்பம் இரண்டையும் இருவரும் சேர்ந்தே அனுபவிப்போமாக என்பதாகும். இப்போ உனக்கு ஏற்பட்ட அவமானம் துன்பம் எல்லாம் எனக்கும் ஏற்பட்டதற்கு சமம். எல்லாவற்றிற்கும் எனக்கும் பாதி பங்குண்டு. நீ சாக விரும்பினால் நானும்கூட சாகக் கடமைப்பட்டவன். ஆனால் நாமிருவரும் சாகக்கூடாது. வாழவேண்டும். நம் குழந்தைக்காக துணிவாக வாழ வேண்டும். அந்தக் குழந்தையைக் கொல்வதற்கு நமக்கு உரிமை கிடையாது.''

''பார்வதி நீயும் வாழவேண்டும். எனக்காகவும் நம் குழந்தைக்காகவும் நமது வருங்காலத்திற்காகவும் வாழ வேண்டும். தெருவில் நடந்துகொண்டு போகும்போது ஒரு வண்டி உன் மேல் இடிச்சு காயம் பண்ணிவிட்டால் உன்னை சாகும்படி விட்டுவிட்டு நான் போய்விடுவேனா? அப்படிப்பட்ட கிராதகனா இந்த சபேசன்!''

''அதைப்போலவே இது ஒரு விபத்து- உன்னைச் சாக விடமாட்டேன். என்னோடு வாழத்தான் உன்னை அழைச்சுண்டு போகப்போறேன். எழுந்திரு பார்வதி.''

அருகில் நெருங்கி அவள் கையைப் பற்றி அவளைத் தூக்கி நிறுத்தினான். பார்வதி அவன் மார்பில் முகத்தைப் பதித்துக் கொண்டு குமுறி அழுதாள்.

தன் கண்களில் கொப்பளித்த கண்ணீரை மேல் துண்டால் துடைத்துக் கொண்டான் சபேசன். புரண்டு கிடந்த அவளது கூந்தலைக் கோதிவிட்டான்.



''பார்வதி உள்ளே வா! சூடா காபி போட்டுத் தரேன், சாப்பிடு. உன்னை இப்பவே ஒரு டாக்டர் வீட்டுக்கு அழைச்சிண்டு போறேன். இந்த அதிர்ச்சிக்கு டாக்டர் உனக்கு ஏதாவது வைத்தியம் செய்ய ஏற்பாடு பண்றேன்.''

''நாளைக் காத்தாலே நீயும் என்னாட்டமா சீக்கிரம் ஸ்நானம் பண்ணிட்டு புதுப்புடவை கட்டிண்டு பொட்டு வைச்சு பூச்சூடிக் கொண்டு கோயிலுக்கு வரணும். வேதநாயகிக்கு விசேஷ ஆராதனை செய்யப்போகிறேன்.''

''பாவம் ஓங்கிவிட்டபோது அதைத் தடுக்க புரட்சி என்கிற உருவிலே வந்து பராசக்தி அழிக்கிறாள் என்கிறார் பாரதி. பெண்களுக்கு நேர்கிற இந்த துயரத்தைப் பார்த்து இன்னமும் நீ கல்லாக நிற்கக்கூடாது. தாயே வேதநாயகி நீதியின் கைகளை உயர்த்து. இந்தப் பாவிகளைப் பிடித்துக் கசக்கி எறி. இந்த அக்கிரமத்தை பூமியிலிருந்து அகற்று. என் மனம் மூலம் உன்னைப் பிரார்த்தித்துக் கொள்ளப் போகிறேன். பிரார்த்தனை மூலம் அற்புதங்களை நிகழ்த்த முடியும் என்று நான் நம்புகிறேன். அந்த நம்பிக்கையோட நாம் வாழ்க்கையைத் துவங்குவோம்! ரொம்ப நாழி குளிரிலேயே நின்னுட்டிருக்கியே வா உள்ளே பார்வதி... அழுதது போதும்...வா'' என்று அன்போடு கைத்தாங்கலாக அவளை அணைத்துக் கொண்டு வீட்டிற்குள் நடத்திச் சென்றான் சபேசன்.

''சற்றுமுன்... ''இவனும் ஒரு பரசுராமன்'' என்பது போல எரிமலையாகக் கோபத்திலே கொந்தளித்த... அவள் கணவன் மனது.... இத்தனை மென்மையானதா? கருணையுடையதா? அவளைவிடக் கொடுத்து வைத்தவள் உலகில் யாரேனும் உண்டா?.. வேதநாயகி?... நன்றி...நன்றி''தனக்குள்ளே பரபரப்புடன் எண்ணிய பார்வதி அவனது கரத்தை ஆதரவுடன் பற்றிக்கொண்டு மெல்ல உள்ளே சென்றாள்.

39795

# ஊன்றுகோல்

## 1

கணவன் அலுவலகத்திற்குக் கிளம்பும்வரை அவளுக்கு நேரம் இருக்கவில்லை. சமையலை முடித்த பின்னர் குழந்தையைக் குளிப்பாட்டி சோறு ஊட்டி தொட்டிலில் தூங்க வைத்துவிட்டு, பின்னர் நிதானமாகத் தலையை வாரி முடித்துக் கொள்ள கண்ணாடி முன் வந்து நின்றாள். அவிழ்த்துவிட்டால் இன்னமும் இடைவரை மயில் தோகையாக விரிந்து விழும் அடர்த்தியான கூந்தல். பிள்ளை பேற்றுக்குப் பின்னர் கூந்தல் கொட்டி விடும் சிலருக்கு என்பார்கள். மேனி நிறம் கருத்துவிடும் என்று கூடச் சொல்வார்கள். ஆனால் அதற்கு எதிர்மாறாக அவள் மேனி முன்னைவிட மெருகு கூட்டிய தங்கமாகப் பளபளத்தது. கூந்தல் செழுமையாகவும் பூசினாற் போன்ற சதைப்பிடிப்பும் வாளிப்பாகிவிட்ட உடலமைப்புமாக அவளது அழகு முன்னைவிடக் கூடி விட்டிருந்தது.

''கௌசல்யா!'' என்று அப்பா வாய் நிறைய வைத்த பெயரை அவள் கணவன் கௌசி என்று வெட்டி அழைத்தது போன்று அவளது உணர்வுகளையும் வெட்டிச் சிறுமைப் படுத்திக் கொண்டிருந்தான்.

''கிராமத்திலே தட்டாம்பூச்சியாகக் கிடந்தவ. பாலையும் தயிரையும் உண்டதும் உன் உடம்பே ஊதிப் போச்சு. மெலிசா ஒடிந்து போற மாதிரி வந்தே! இப்போ எப்படி இருக்கே தெரியுமா?''



இதை அன்பாகச் சொன்னால் அவள் ஆனந்தத்தில் திளைத்துப் போயிருப்பாள்.

ஆங்காரமாகவும் ஏளனமாகவும் மனதைப் புண்படுத்தும் வகையில் அடிக்கடி சொல்லிக் காட்டிக் கொண்டிருந்தான் ஜயந்தன்.

உண்மைதான்! அவள் திட்டக்குடி கிராமத்து ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியரின் மகள். அரை டஜன் குழந்தைகளைப் பெற்றுப்போட்டுவிட்டு அவளது அம்மா கண்களை மூடி விட்டாள். தாயில்லாத குழந்தைகளுக்குத் தாயாக நின்று கட்டிக் காக்க வேண்டிய பொறுப்பு. வீட்டுக்கு மூத்தபெண்; எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்துவிட்டு ஆசிரியர் பயிற்சி பெற்றவள். ஆயிரம் சிபாரிசுகளுக்குப்புறம் அதே பள்ளியில் ஆசிரியை வேலை பார்த்தாள்.

இவைகள் எல்லாம் கலப்படமே இல்லாத சுத்தமான உண்மைகள். அதற்காக அவளது ஏழ்மையை இடித்து சொல்லுக்குச் சொல் சுட்டிக்காட்டி அவளது மனதை நோகச் செய்ய அவள் செய்துவிட்ட குற்றம் என்ன?

அவள் கணவனுக்கு இப்படிப்பட்ட துர்குணம் ஏன்? என்ன காரணம்? கல்யாணமானவுடனே கிராமத்திலே ஒரு மணிநேரம் கூட தங்கவிடவில்லை; கூடப் பிறந்தவர்களையும் வயதான அப்பாவையும்... வளர்ந்த கிராமத்தையும் உதறிவிட்டு ஒரு சில மணி நேரத்திலே உறவாகி விட்டவனுடன் புறப்படத் துணிய மனம் எப்படிப் போராடியது?

''அக்கா?'' என்று வாசலில் கார் அருகே வந்து கண்ணீருடன் தேம்பி அழுத கடைக்குட்டி தம்பி கணேசனின் முகம்... எத்தனை நாள் கனவிலும் நினைவிலும் வந்து வந்து மனதை வாட்டியது.

தங்கை பத்மாவுக்கு வயதாகிக் கொண்டு வருகிறதே! குழந்தை சுபாவம். அவளை ஆதரவுடன் பார்த்துக் கொள்ள, அறிவுரைகள் வழங்க அருகில் யாருமில்லையே என்று கவலைப்படுவதில் காரியம் இல்லை.

அம்மா போய்விட்டாள். அத்தோடு குடும்பம் அழிந்து விடவில்லையே. தாய் பொறுப்பை ஏற்று குழந்தைகளை அக்காவான அவள் கவனித்துக் காப்பாற்றி வரவில்லையா? இப்போது அவள் கல்யாணமாகி புக்ககம் வந்துவிட்டாள், குழந்தைகள் அனாதையாகி விடப் போவதில்லை. அடுத்தவள் பத்மா. குழந்தை எப்படியோ புத்திசாலியாகி குடும்பப் பொறுப்பை ஏத்துக்கொண்டு அவர்களைக் கவனித்துக் கொள்வாள். கோபுரத்தை பொம்மைகளா தாங்குகின்றன? அவரவர்கள் தலையெடுத்துத் தம்மை தாமே காப்பாத்திக்க தெரிஞ்சு கொள்வாங்க. பெண் என்று பிறந்துவிட்டால் இப்படிப்பட்ட பிரிவு ஏற்படத்தானே செய்யும். தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டு வாழ முயன்றாள். அதில்கூட அவளுக்கு கணவனின் ஆதரவு இருந்ததா? இல்லை. அதற்குப்பதில் குண்டூசியாக அவளைச் சொற்களால் குத்தி இம்சித்தான்.

''என்ன முஞ்சியை அப்படி தூக்கி வச்சுக் கொண்டிருக்கே? பிறந்தவீட்டு ஞாபகமோ! கடுதாசி வரலையா? அவங்க எதுக்காக எழுதப் போறாங்க. பணம் தேவைன்னா எழுதுவாங்க. நான் பேசிக்கொண்டே போறேன். மௌனமா இருந்தாக்க என்ன அர்த்தம்'' அனாவசியமாகச் சீறி விழுவான்.

''குளிக்கும்போது கண்ணுலே சோப்பு விழுந்துடுச்சு... அப்படிச் சொல்லி என் கண்ணுலே மிளகாய்ப் பொடியைத் தூவலாம்னு நினைக்காதே...இந்த வீட்டு வாசப்படியை மிதிச்ச அன்னிக்கு என்ன சொன்னேன்?''



இவன் சொன்னதை அவள் மறக்கவா முடியும்? அந்த அஸ்திவாரத்திலேதான் அவர்களது வாழ்க்கை துவங்கியது.

தன் காரிலேயேதான் அவளை கிராமத்திலிருந்து சென்னைக்கு அவன் அழைத்து வந்திருந்தான். அந்தப் பெரிய வீட்டின் முன் அவன் காரை நிறுத்தியபோது அவள் ஒரு நிமிஷம் பூரித்துப் போய்விட்டாள்.

கிராமத்திலே அவள் வாழ்ந்தது ஒரு சின்னஞ்சிறு ஓட்டுவீடு. செங்கல் பாவிய தரை- பொள்ளும் பொக்கலுமான முற்றம்... புதரும் புழுதியும் மண்டிக்கிடந்த புழக்கடை, உப்புகரித்த கிணற்றுநீர்... என்று கிராம வாழ்க்கையில் ஊறிப் போய் வளர்ந்தவள்.

உள்ளடக்கிய குளியலறை, ஷவர்பாத், நுரைமெத்தை படுக்கை கொண்ட அலங்காரக் கட்டில்கள், ஜன்னலை மறைத்த வண்ண வண்ணத்திரைகள், சோபா செட்டுகளுடன் கூடிய முன்னறை, விஸ்தாரமான சமையலறை. சுற்றிலும் சிறு தோட்டம். போகவர கார்... இந்த சுகபோக வாழ்க்கை அவளுக்குக் கிட்டியது உண்மையா? கனவா?.. பிரமித்துப்போய்விட்டாள்.

வீட்டுத்தலைவி என்று முதல் முதலாக விளக்கை ஏற்றிவிட்டு பாலைக் காய்ச்ச அடுப்பருகில் வந்தவளிடம் அவன் பேசிய தோரணை அவளது கற்பனைக் கோட்டைகளை-

இடித்துத் தவிடு பொடியாக்கி விட்டது.

''திட்டக்குடி போன்றதொரு பட்டிக்காட்டில் வந்து நான் பெண் எடுக்கவேண்டிய அவசியமில்லை. உன் படிப்பைப் பத்தியோ உன் குடும்பத்து நிலையைப் பத்தியோ நான் கவலைப்படலை. உன்னை எனக்குப் பிடிச்சுப்போனது. அதனாலே கல்யாணம் பண்ணிக் கொண்டேன். ஒரு பைசா செலவு உன் அப்பனுக்கு வைக்காம எல்லாத்தையும் நானே செய்து கொண்டேன்.''

''உங்களுக்கு ரொம்பப் பரந்த மனசு... நான் கொடுத்து வச்சவ.''

''இந்தப் புகழ்ச்சியெல்லாம் எனக்குத் தேவையில்லை... கல்யாணம் என்கிறதைப்பத்தி எனக்குன்னு சில கொள்கைகள் உண்டு. இந்த வீட்டுக்கு நான்தான் எஜமானன்... அந்த நிலை உனக்கு முதல்லே தெரிஞ்சாகணும்.''

''இதைச் சொல்ல வேண்டுமா... நீங்கள் என் கணவர்... இந்த வீட்டின் தலைவர்'' மெல்லியதாகச் சிரித்தாள் அவள்.

''இது சிரிக்க வேண்டிய விஷயமல்ல. உன் சிந்தனைக்குள்ளே தெளிவா பதிச்சு வச்சுக்க வேண்டியது. என் உத்தரவை மீறி நீ எதுவும் செய்யக் கூடாதுங்கறதுக்கு உன்னை முதலிலேயே எச்சரிக்க விரும்பறேன். உன் குடும்பம் ஒரு அன்னக்காவடிகள் கூட்டம்னு தெரியும். அங்கிருந்து அவர்கள் யாராவது உன்னைப் பார்க்க இங்கே அடிக்கடி வரக்கூடாது. நீயும் பிறந்த வீடுன்னு காலில் சக்கரம் கட்டிக்கிட்டு கிளம்பிடக்கூடாது.''

''உங்கள் உத்திரவை மீறி நான் எதுவும் செய்யமாட்டேன். ஏன் உங்களுக்கு இந்த சந்தேகம்?''

''எனக்கு எப்பவும் யார் மீதும் சந்தேகம்னு வச்சுக்கோயேன்- உனக்கு அழகு இருக்கு. அழகான மனைவின்னு பெருமைப்பட வேண்டியதுதான். ஆனால் அழகான மனைவி ஆபத்தானவள் என்கிறதை நினைக்கும்போது...''

''பாலைச்சாப்பிடுங்க. பசியா இருக்கிறீங்க. அதனாலே என்னென்னவோ பேசத் தோணுது போலிருக்கு...''மறுபடி மெல்லச் சிரித்தாள்.

''இப்படி சிரித்துப்பேசறது எனக்குப் பிடிக்காத விஷயம். எதுக்கும் கண்ணீர்விட்டு அழறதும் எனக்குப் பிடிக்காத காரியம். 



கண்டபடி செலவு செய்கிறது. நினைச்சபோது சொல்லாமக் கொள்ளாம கடைத்தெருவுக்குப் போவது... சினிமா பார்க்கணும்னு தொந்திரவு செய்கிறது... இதெல்லாம் பிடிக்கவே பிடிக்காது...''

''உங்களுக்குப் பிடிக்கிற காரியங்களைப்பத்தி முதலிலே சொல்லக்கூடாதா?...''

''பச்சைச் சிரிப்பு சிரிச்சு இப்படி எதிர்த்து வாயாடறதை மூட்டை கட்டி வச்சுடு... எனக்கு இது பிடிக்கவே பிடிக்காது'' ஓங்கிய குரலில் அதட்டினான்.

ஒருகணம் அவள் அயர்ந்து போய்விட்டாள். முதல் முதலாக புதுமனைவியுடன் வீட்டுக்குள் வந்த மனிதன் இப்படியா பேச ஆரம்பிப்பது? என்னென்னவோ இன்ப எதிர்பார்ப்புகளுடன் பந்தலில் அவனது கரத்தைப் பற்றி அக்னியை வலம் வந்தவள் இப்போது அவனது பேச்சுக்கள் நெருப்பாக நெஞ்சைச் சுடுவதை உணர்ந்து அதிர்ந்து போனாள். பட்டணத்துவாசியாயிற்றே. அதுவும் பெரிய வேலையில் இருக்கும் ஆசாமியாயிற்றே.... குடித்துவிட்டுப் பேசுகிறாரா? அது எப்படி சாத்யமாகும். வழிநெடுகிலும் அவள் காரில் கூடவேதான் இருந்தானே, பயணத்தின் போது பரிவுடன்தானே வழியில் காரை நிறுத்தி சாப்பிட காப்பி பலகாரம் வாங்கித் தந்து உபசரித்தார். விக்கிரமாதித்தன் சிம்மாசனத்தைப்போல வீட்டையடைந்ததும் குணம் மாறிப் போவானேன்?

கல்யாணம் என்பது ஒரு பெரிய சூதாட்டம். அதில் வெற்றி தோல்வி என்பது கணவன் மனைவி இரண்டுபேர் கையில்தான் இருக்கு. அப்பா அடிக்கடி சொல்லும் பொன்மொழிகளில் ஒன்று நினைவுக்கு வந்தது.

இந்த சூதாட்டத்தில் அவள் வெற்றி கண்டாக வேண்டும். ஆள் அழகன், அந்தஸ்திலிருக்கிறான் என்று பார்த்த அளவிலே

மயங்கி ஒப்புக்கொண்டு விட்டிருந்தாள். கல்யாணம் ஆன பின்பு ஒரு பெண் தன் வாழ்க்கையைத் துவக்க நினைக்கும்போது எப்படிப்பட்ட ஒரு பொறுப்பை சுமக்கப் போகிறாள் என்பது தெரிய வைக்கத்தானோ என்னவோ...திருமண தினத்தன்று தலை அலங்காரம் செய்து சுமையாய் பூவைத்து, கழுத்து நிறைய நகையைப் போட்டு... பெரியவங்க, சொல்லாம... இந்த ரகசியத்தை சொல்லி விடுகிறாங்க போலிருக்கு... தனக்குள்ளே புன்னகைத்துக் கொண்டாள்.

வெளியே பார்வைக்கு கம்பீரமானதொரு ஆண் அழகனாகத் தெரிந்த அவள் கணவன் ஜயந்தனுக்குள்ளே ஒரு முரட்டு மனிதன்.... பிடிவாதக்காரன்... ஒளிந்து கொண்டிருக்கிறான் என்பதை உடனடியாகப் புரிந்துகொண்டு விட்டாள்.

பேய்க்கு வாழ்க்கைப்பட்ட பின்னர்...புளிய மரத்தில் ஏறு என்றால் ஏறித்தானாக வேண்டும்?

ஒவ்வொன்றும் எத்தனை அழகான பழமொழிகளைப் பெரியவங்க சேகரிச்சு வச்சிருக்காங்க... எண்ணிக் கொண்ட மாத்திரத்தில் அவளுக்கு சிரிப்பு வந்துவிட்டது.

''என்ன சிரிக்கிறே இப்படி பகட்டுத்தனமா சிரிக்கிறது பிடிக்காதுன்னு சொன்னதும்...சவால் விடறாப்பல சிரிக்கிறியா... எனக்கு கோபம் வந்தா மகா பொல்லாதவன்னு தெரிஞ்சுப்பே'' உறுமினான்.

இது ஏது வம்பா இருக்கே... இந்த மனிதனை எப்படி சமாளித்து இவருடன் சந்தோஷமாக வாழத் தெரிஞ்சு கொள்வது? எடுத்த எடுப்பிலேயே கவலையில் மலைத்துப் போனாள். எப்பவோ பள்ளிக்கூட நாட்களில் அவள் படித்திருந்த நினைவு. டாக்டர் ஜேக்கில் அண்ட் மிஸ்டர் ஹைட்...மனிதனும்-மிருகமும்-ஒன்றாகத் தன்னுள்ளே கொண்டிருந்த ஒருத்தனின் கதை...



அவளது வாழ்க்கையில் அப்படிப்பட்டதொரு கதைதான் ஆரம்பமாகிவிட்டிருந்தது. ஜயந்தன் சில சமயங்களில் மனிதனாக அவளிடம் ஆசையுடன் அணுகினான். சில சமயங்களில் மிருகமாகி அவளை வதைத்து மகிழ்ந்தான்.

பிறந்த வீட்டிலிருந்து எத்தனையோ கடிதங்கள் வந்தன. ''சௌக்கியமா இருக்கிறியா அம்மா'' அப்பா மாதத்திற்கு இரண்டு கார்டுகள் போடத் தவறியதில்லை.

''ரொம்ப சந்தோஷமா இருக்கேன் அப்பா! எனக்கு ஒரு குறையும் இல்லை; உங்களையெல்லாம் விட்டுவெகு தொலைவில் இருக்கிற ஒரே குறைதான்'' பதில் கடிதம் போடுவாள். அவ்வளவே.

''நேற்று என் கணவர் அலுவலகத்திலிருந்து வந்தபோதே கோபாவேசமாக இருந்தார். நான் அப்படி பிரமாதமான குற்றம் ஏதும் செய்துவிடவில்லை. காப்பியைக் கலந்து கொண்டுவந்து மேஜைமேல் வைத்தேன். சூடு அதிகம் இருக்கவில்லை. அதுதான் பெரிய தவறு. அப்படியே காப்பி டம்ளரை ஓங்கி என் முன் விட்டெறிய, அது தவறிப்போய் என் முகவாயில் பட்டு - ஒரு சின்ன காயந்தான். குபுகுபுவென்று ரத்தம் கொட்ட தாய்மையடைந்த பலவீன நிலையிலிருந்ததால்... நான் அப்படியே மயங்கி விழுந்துட்டேன். கண்விழித்தபோது படுக்கையில் கிடந்தேன். காயம் பட்டது எனக்குப் பெரியதாகத் தோணலை. தெரியாம செஞ்சுட்டேன்னு ஒரு வார்த்தை என் கணவர் சொல்லாதது பெரிய குறையா மனசை ரொம்ப வேதனைப்படுத்திச்சு. நானும் எத்தனையோ பாடு படுகிறேன். இவரைத் திருத்தவே முடியலை. கை பட்டால் குத்தம் கால்பட்டால் குத்தம் என்கிற கணவருடன் வாழ்வது ரொம்ப கஷ்டமான காரியம்...ஒரு சமயம் குழந்தை பிறந்த பின்னர் இவர் குணம் மாறுமோ என்னவோ? கல்யாணம் என்கிறது சூதாட்டம்

என்று சொன்னீர்களே! நிஜம் ஒப்புக்கிறேன். பொறுமையாகத்தான் இருக்கேன். பூமியை ஆளவேண்டாம். எனக்கு அத்தனை ஆசையில்லை. என் கணவர் மனதில் ஒரு சிறு இடம், அவரது நம்பிக்கையில் ஒரு சிறு பிடிப்பு எனக்கு கிடைத்தாற் போதும்...''

தன் உணர்வுகளைக் கொட்டி தன் இல்வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு சிறு சம்பவத்தைக் குறிப்பிட்டு அப்பாவுக்கு எழுத வேண்டும் என்றுதான் அவள் துடியாகத் துடித்தாள்.

ஆனால் எழுதவில்லை. அப்படி எதுவும் எழுதினதே இல்லை. பற்றாக்குறையில் பாடுபட்டுக் கொண்டிருக்கும் அவளது ஏழைத் தந்தையை அவள் ஏன் திகிலுறச் செய்ய வேண்டும். ''பிறந்த வீட்டுக்கு வர விரும்பாத... கணவனே கண் கண்ட தெய்வம்...அவனது வீடே சுவர்க்கம் என்று மயங்கிக் கிடக்கிறாள் மகள். சந்தோஷ வாழ்க்கையில்... பிறந்த வீட்டை மறந்து போய்விட்டாள். பிள்ளைபேற்றுக்குக்கூட வர பிரியப்படவில்லை... என்றெல்லாம் அப்பா எண்ணிக் கொள்ளட்டும். ஆகையால் உண்மை நிலை அவருக்குத் தெரியவே வேண்டாம்...''

நான் ரொம்ப சந்தோஷமாக இருக்கிறேன். என்னைப் பற்றி கவலை வேண்டாம். பிள்ளை பேற்றுக்கு கிராமம் உகந்ததல்ல. பட்டணத்தில் ஆஸ்பத்திரி வசதி இருக்கு என்கிறார் என் கணவர். உதவிக்கு யாராவது?... ஊகும்... தேவையில்லை. இவரது ஒன்று விட்ட அத்தை வந்து உதவப் போகிறாங்க. உங்களுக்கு சிரமம் வேண்டாம்னு எழுதச் சொன்னார்...''

இந்த ரீதியில்தான் கடிதத்திற்கு பதில் போட்டுக் கொண்டிருந்தாள்.

திருமணமாகி தாய்மையடைந்து, குழந்தை பெற்று...



குழந்தைக்கு மூன்று மாதம் ஆன பின்புதான் ஒரே ஒரு தடவை அவள் அப்பா... குழந்தையைப் பார்க்க பட்டணத்திற்கு வந்திருந்தார். இரவு ரயிலில் வந்து... காலையில் இறங்கினார். குழந்தையைப் பார்த்துவிட்டு மகள், மருமகன் இருவரையும் விசாரித்துவிட்டு தனது வருகை மருமகனுக்குப் பிடிக்கவில்லை என்பதைப் புரிந்துகொண்டு பகல் சாப்பாட்டிற்குக்கூட காத்திராமல்... ஊருக்குத் திரும்பி விட்டார்.

இருபத்து மூன்று வயதுவரை சோறு போட்டு வளர்த்த தந்தைக்கு ஒருவேளை சாப்பாடு தர தனக்கு உரிமையில்லாது போனது அவள் நெஞ்சை அறுத்தது. வேதனையாக இருந்தது. கார் வைத்துக் கொண்டிருந்த மாப்பிள்ளை - மாமனார் கடும் வெய்யிலில் கால்நடையாக வெளியேறுவதைப் பார்த்துவிட்டு கம் என்று உட்கார்ந்திருந்தான். உபசாரத்திற்குக் கூட ரயில் நிலையம் வரை காரில் கொண்டுவிடுகிறேன் என்று கூறவில்லை. அத்தனை ஒரு அழுத்தமான வெறுப்பு அவனுக்கு அவளது ஏழைக் குடும்பத்தின் மீது. அப்படிப்பட்ட ஒரு விநோதமான கணவன் அவளுக்கு.

குழந்தை பிறந்த பின்பு நிலைமை மாறியதா?... ஊகும்... அதற்குப் பதில் அவனது கோபமும் - சிடுமூஞ்சித்தனமும் அதிகமாயின. ''மனுஷன் நாள் பூரா வேலை செஞ்சிட்டு வரேன்னு நினைப்பு இருக்கா? அந்த சனியன் குழந்தையை ஏன் இப்படி அழவிடறே... நான் நிம்மதியா தூங்க வேண்டாமா?''

''குழந்தை வேணும்னா அழுகிறான்? பசிக்கிறது போலிருக்கு. அழுகிறான். இல்லை...வயிற்றை வலிக்கிறது போலிருக்கு... குழந்தைக்குப் பேச முடியுமா என்ன? தனக்கு ஏற்படும் தொல்லைகளை அழுதுதானே தெரிவித்துக் கொள்ள முடியும்...''

அப்படி சொன்னதற்கு அவளுக்குக் கிடைத்த பரிசு... ஒரு அறை ஓங்கி... பலமாக... கன்னம் வலிக்க...

இப்பொழுதெல்லாம் அவன் குடிக்க ஆரம்பித்துவிட்டிருந்தான். அதனால் கைநீட்டி அடிக்கவும் ஆரம்பித்து விட்டான். முதல்முதலாக அவன் கையை ஓங்கியபோது அவள் அதிர்ந்து போனாள். பெண்களை கைநீட்டி அடிக்கும் பழக்கம் அவர்கள் குடும்பத்திலேயே கேட்டறியாத சங்கதி. ஏழ்மையிலும் இல்லாமையாலும் தவித்த குடும்பம்... பற்றாக்குறை அவளது ஆசைகளை அடித்ததே தவிர அப்பா கைதொட்டு அவளை அடித்ததே இல்லை.

இது ஒரு புது அனுபவம்... என்றுதான் அவள் பொறுமையுடன் அந்தச் சிறுமையை ஏற்றுக் கொண்டிருந்தாள். அடிக்கட்டும் - உதைக்கட்டும் ...பொறுத்துக் கொள்வோம். ஆனால் இந்தக் குடிப்பழக்கம் எதற்கு? எண்ணி எண்ணி குமைந்தாள். ஆனால் வாயைத் திறக்க முடியவில்லை. அன்புக்கு பதில் ஜயந்தனிடம் அவளுக்கு அச்சந்தான் அதிகம் வளர்ந்து விட்டிருந்தது.

எத்தனையோ தடவை அவள் தன் குழந்தையைத் தூக்கிக் கொண்டு சொல்லாமல் கொள்ளாமல் வெளியே போய்விட வேண்டும் என்று நினைத்ததுண்டு.

கோபத்திலும் வெறுப்பிலும் அப்படி ஒரு விபரீதமான எண்ணம் ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் அது சாத்யப்படாத காரியம் என்பது அவளுக்குத் தெரியும்.

ஒரு பெண் - வீட்டைவிட்டு கிளம்புவதென்றால் லேசான காரியமா? அவள் எங்கே போவாள்? பிறந்த வீடு செல்வ சக்தி படைத்ததாக இருந்தால் நான் எங்க வீட்டுக்குப் போறேன் என்று வீம்பு பிடிக்கலாம். இதுக்காகவா உன்னைக் கட்டிக் கொடுத்தேன். கணவனை விட்டு வந்துட்டியே... ஊராருக்கு



என்ன பதில் சொல்வேன் என்று அப்பா அலறித் துடிப்பார். கிராமமே கிசுகிசுக்கும்.

பிறகு அவள் வெளியே எங்கே போவாள்? என்ன செய்வாள்? ஆத்திரத்துடன் ஜயந்தன் அவளைத் துரத்திக் கொண்டு வந்துவிட மாட்டானா? கணவன் என்ற உரிமையை அழுத்தமாகப் பற்றிக் கொண்டிருக்கும் ஆசாமியாச்சே.

'வீல்' என்று குழந்தை அழும் சப்தம்கேட்டு திடுக்கிட்டு சிந்தனையிலிருந்து விழித்துக் கொண்டாள். கன்னத்தில் கோடிட்டிருந்த கண்ணீரை அவசரமாகத் துடைத்துக் கொண்டாள். தலைமுடியை வேகமாக சுருட்டி முடிந்து கொண்டை ஊசிகளை பரபரப்பாகக் குத்தி சரி செய்து கொண்டாள்.

''வந்துட்டேன்... ராமா... அழாதேடா கண்ணா''... கூறியபடியே உள்ளே விரைந்தாள்.

வாரிக் குழந்தையை எடுத்து அணைத்துக் கொண்டு சமாதானப்படுத்தி முடிப்பதற்குள் வாயில் அழைப்பு மணி ஒலிப்பது கேட்டது.

மார்போடு மகனை அணைத்துக் கொண்டு கதவருகில் வந்து கண்ணாடி துவாரம் வழியே பார்த்தாள்.

கிருதாவும் - தொங்கு மீசையுமாக ஜயந்தன் வயதிருக்கும்.. அந்த மனிதன் முகத்தை எங்கோ பார்த்த நினைவு... யார் அவன்?

''யார் அது?'' கதவைத் திறக்காமலேயே கேட்டாள்.

''நான்தான் ராஜன்...ஜயந்தனைப் பார்த்துட்டு போக வந்தேன்.''

வெளியில் நின்ற ஆண் பதில் கொடுத்தான்.

''அவர் இப்போ ஆபீசிலேதான் இருப்பார். அங்கே போனாக்க...''

''அங்கே போயிருந்தேன். வீட்டுக்கு கிளம்பிட்டதாகச் சொன்னாங்க. அதனாலே வந்தேன்.''

அப்பவும் அவள் கதவைத் திறக்க முற்படவில்லை. யாருக்கும் கதவைத் திறக்கக்கூடாது என்பது அவள் கணவனின் கடும் உத்திரவு. ''சித்த பொறுத்து வேணா - நீங்க மறுபடி வந்து பாருங்க...'' பதிலுக்குக் காத்திராமல் உள்ளே சென்று விட்டாள். ஆனால் மனதில் அமைதியில்லை. நெஞ்சு படபடவென்று பயத்தில் அடித்துக் கொண்டது.

## 2

அந்த ஆண்டு தை மாதத்தில் ஒரு விடுமுறை நாள். காலை வேளையில் அவள் வீட்டு வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். பழுதடைந்த சிறு ஓட்டு வீடு அவர்களுடையது என்றாலும் வாசலை அடைத்துக் கோலம் போட்டு அழகு செய்து பார்ப்பதில் அவளுக்கொரு ஆசை. அந்தக் கலையில் அவளுக்கு ஒரு ஆர்வம் இருந்தது. விஸ்தாரமாகத் தான் போட்ட கோலங்களை சற்று தூர நின்று அழகு பார்த்து மகிழ்வது அவளுக்கொரு இனியபொழுது போக்கு.

விடியற்காலையிலேயே அன்று விரிவானதொரு கோலத்தைப் போட்டு விட்டிருந்தாள். காலை காப்பி பலகாரம் தயார் செய்து விட்டு குளித்து முடித்து வேறு சேலை உடுத்திக் கொண்டு வாசலில் வந்து எட்டிப் பார்த்தாள்.

பொழுது நன்றாக விடிந்து இளஞ்சூரியன் பொன்முலாம் பூசப் புறப்பட்டிருந்தது. இடுப்பிலே கைகளைத் தாங்கிக் கொண்டு



தெருவின் நடுவில் நகர்ந்து நின்றபடி தான் போட்ட கோலத்தை கண் கொட்டாது பார்த்து மகிழ்ந்தாள்.

''புதுக்கருக்கலில் போட்ட கோலம் புள்ளி பிசகாம நல்லாவே அமைஞ்சிடுச்சி...'' கொஞ்சம் உரக்கத்தானே பேசிக் கொண்டு... தெருவில் இன்னும் கொஞ்சம் பின்னால் நகர்ந்தாள். திடுக்கிட்டு விட்டாள். தெருவில் நடமாடிக் கொண்டிருந்த யாரோ ஒருத்தன் மீது டமார் என்று மோதிக் கொண்டு விட்டாள்.

''புள்ளி பிசகாத கோலம். ஆனால் பின்னால் பார்க்காத பிசகு உங்களுடையது'' வரிசையாக பற்கள் தெரிய சிரித்த அவனைப் பார்த்து வியப்பும் திகைப்புமாக நின்றாள். முகமெல்லாம் சிவந்து - நெஞ்சு பதற இன்ப சிலிர்ப்பில் பேசத் தோன்றாது மௌனமானாள்.

''ஸாரி...'' என்றான் அவன் நாசூக்கா...

''யார் இவன்? அந்த கிராமத்துக்குப் புதியவனாகத் தெரிகிறதே!'' அவள் எண்ணங்களைப் புரிந்து கொண்டவன் போல புன்னகைத்தான்.

''நான் இந்த ஊருக்குப் புதிசு. இங்கே வாத்யார் திருவேங்கடம் என்பவரின் வீட்டைத் தேடிக்கிட்டு வந்திருக்கேன் - இந்தத் தெருவில்தான் அவர் குடியிருக்காருன்னு சொன்னாங்க.''

எச்சிலை விழுங்கிக் கொண்டாள். ''இந்த வீடுதான். அவர் எழுந்து பல் விளக்கிட்டு பத்திரிகை படிச்சிட்டு இருக்கார் கூப்பிடறேன், நீங்க?''

''பட்டணத்திலிருந்து வந்திருக்கேன். பார்கவி அண்ட் சன்ஸ் என்கிற உரக் கம்பெனியில் விற்பனை பகுதியின் மேற்பார்வையாளர் வேலை. கிராமங்களுக்குப் போய் நேர்முகமாக

விவசாயிகளுடன் தொடர்பு கொள்ளும் பணியில் வந்திருக்கேன். இது எனது முதல் சுற்றுப்பயணம். இந்த கிராமங்கள் எனக்குப் புதுசு... வாத்தியார் திருவேங்கடத்தைப் பார்த்து உதவி கேட்டா கிடைக்கும்னு சொன்னாங்க.''

''உதவியா?'' திடுக்கிட்டுப் போனாள்.

அந்தப் பொல்லாதவன் அவளது எண்ணங்களை எக்ஸ்ரே கண் கொண்டு பார்த்துவிட்டவன் போல 'டக்' கென்று சொல்லி விட்டான்.

''பண உதவி கேட்க வந்திருக்கேன்னு நினைச்சுட்டீங்களா?''

முகம் சிவந்து போனாள். நெஞ்சு படபடத்தது.

''இல்லை...இல்லை... விவசாய அன்பர்களுக்கு பண்ணைச் செய்திகளை விளக்கி படம் போட்டு காண்பித்து எங்கள் உரம் பற்றிய சில வார்த்தைகள் சொல்லவேண்டும். பள்ளிக்கூடத்து பொது அறையை உபயோகிக்க அனுமதி வாத்யார் அய்யா கிட்ட வாங்கினால் நல்லதுன்னு சொன்னாங்க. கேட்க வந்தேன். அத்தோட...?''

அவள் மீண்டும் திடுக்கிட்டுப் போனாள். உடம்பெல்லாம் புல்லரிக்க அவனை அதிசயமாகப் பார்த்தாள். இவன் பார்வையில் ஏன் இந்த ஆக்கிரமிப்பு,.. வியப்பாக இருந்தது அவளுக்கு!

''இங்கே சாப்பிட வசதியான ஹோட்டல்கள் கிடையாது. சாவடி தங்குமறையில் தங்கிட்டிருக்கேன். நேத்து நான் கையோட கொண்டுவந்த காஞ்ச ரொட்டியைக் கொஞ்சம் பாலுடன் சாப்பிட்டுக் காலத்தை ஓட்டிட்டேன். வாத்யார் அய்யாவைக் கேட்டா தன் வீட்டில் சாப்பாட்டுக்கு ஏற்பாடு பண்ணித் தருவார்னு சொன்னாங்க. பசி வந்திட்டால் பத்தும் பறந்திடுமே...



அதனால் காலைகாப்பி ஏதாவது கிடைக்குமான்னு புறப்பட்டு வந்திருக்கேன்'' மெல்லியதாகச் சிரித்தான்.

அப்பா திருவேங்கடம் பேச்சுக்குரல் கேட்டு வெளியே வந்துவிட்டார். ''பட்டணத்திலிருந்து வந்திருக்கிற தம்பிதானே? பஞ்சாயத்து ரங்கதுரை சொன்னார். எல்லாம் தெரியும் வாங்க உள்ளே'' அன்போடு வரவேற்றார்.

''நான் உன்கிட்டே சொல்ல மறந்துட்டேன் கௌசல்யா? இவர் இந்த கிராமத்திலே மூணுநாள் தங்கியிருக்கப்போறார். நம்ப வீட்டில் சாப்பாட்டை வச்சிக்கலாம்னு கணக்குப்பிள்ளை குமாரவேலு கிட்டக்கூட சொல்லிட்டு வந்திருக்கேன். காப்பி பலகாரத்தை இவருக்கும் சேத்து எடுத்து வை'' மகளிடம் உத்தரவிட்டார்.

திக்கென்று இருந்தது அவளுக்கு. அப்பா கர்ண பரம்பரை வீட்டைத் தேடி யார் வந்து விட்டாலும் உள்ளே சட்டியில் இருக்கிறதா என்று யோசிக்காது சாப்பிட வற்புறுத்தி உபசரித்து விடுவார்.

அவர்கள் குடும்பத்தார் அனைவருக்கும் ஆளுக்கு மூன்று என்ற கணக்கில் எண்ணி இட்லி சுட்டு வைத்திருந்தாள். அளவோடுதான் சாம்பாரும் சட்னியும் தயாரித்திருந்தாள். அவர்களைப் போன்றவர்கள் வீட்டுக்குத் திடீர் விருந்தாளிகள் வந்து சேர்ந்தால் சமாளிக்க முடியாத ஒரு நிலை.

உள்ளே விரைந்து சென்று தங்கை பத்மாவின் காதில் ரகசியமாகச் சொல்லி வைத்தாள்.

''உனக்கும் எனக்கும் இன்னிக்குக் காலையில் பழைய சோறுதான் டிபன். அந்த உரம் விற்கிறவருக்கு நமது பங்கு இட்லி உரமாகப் போகிறது.

வந்தவன் பெரிய சாப்பாட்டு ராமனாகத்தான் இருந்தான்.

அவர்கள் பங்கு இட்லிகளுடன் காப்பியை நிமிசத்தில் காலி பண்ணிவிட்டான்.

கையைக் கழுவ புழைக்கடைக்கு வந்தான். அவள் கீழே வைக்குமுன் துணிவுடன் அவள் கையிலிருந்த செம்பை வாங்கிக் கொண்டான்.

''இது மாதிரி காப்பி பலகாரம் சாப்பிட்டு எத்தனையோ காலமாச்சே!''

அவளது உதடுகள் கேட்கத் துடித்தன. மௌனமாக அவனைப் பார்த்துவிட்டு அப்பால் போகத் திரும்பினாள்.

''உங்க வீட்டிலே யாரும் இப்படி தயாரித்துப் போடறதில்லை யான்னு கேட்க நினைக்கிறீங்க. நான் ஒரு தனிக் கட்டை. ஹோட்டலிலிருந்து எடுப்பு சாப்பாடு. சில வருஷங்களாக அதையே சாப்பிட்டு வாய் ருசி மறந்து மரத்துக் கிடக்கு.''

மெல்லியதாக முறுவலித்துவிட்டு அவள் சட்டென்று உள்ளே சென்றுவிட்டாள். அவள் கேட்பதற்கு முன் தானே வலிய வந்து விவரம் சொன்னது அவளுக்குக் கட்டுக் கொள்ளாத மகிழ்ச்சி.

அப்படியென்றால் அவருக்கு கல்யாணமாகலையோ? அப்பா, அம்மா அண்ணன் தம்பி என்கிற நெருங்கின உறவினர்கள் கிடையாதா?

அன்றும் - மறுநாள் முழுவதும் வீட்டு வேலையின் போதும் பள்ளிக்கூடத்திலும் பலமுறை அவனைப்பற்றி நினைப்பு அவளுள் எழுந்து... மனதை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

அந்த மூன்று நாட்களும்.. காலை இரவு இரண்டு வேளைகளும் அவன் அவர்கள் வீட்டுக்குச் சாப்பிட வந்தான்.



அப்போதெல்லாம் அப்பாவிடம் எத்தனை பணிவாக அன்பாகப் பேசினான்?

சமையலறையிலிருந்த அவள் காதுகளில் படவேண்டு மென்றே சற்று உரத்த குரலில் அன்று அவன் பேசியதைக் கேட்டபோது அவள் எப்படி ஆனந்தப்பட்டாள்?

''தாய்க்குப் பின்னாடி குடும்பப் பொறுப்பு முழுசையும் ஏத்துக் கொண்டு வீட்டையும் நிர்வகிச்சுக் கொண்டு வேலையும் செய்யறதுன்னா ரொம்ப சிரமம். இதை உங்க மகள் சமாளிக்கிறாங்கன்னா அவங்க பெரும் உழைப்பாளிங்கறதிலே சந்தேகமில்லை. இந்த மூன்று நாளும்... நான் நாக்குக்கு ருசியாக நல்லா சாப்பிட்டேன். நன்றியை எப்படி தெரிவிச்சுக்கிறதுன்னே தெரியலை.''

அவன் ஊருக்குப் புறப்படுமுன் சொல்லிக்கொள்ள வந்த போது அப்பா கோவிலுக்குப் போயிருந்தார்.

''மறுபடியும் வந்து சொல்லிக்கொண்டு போக நேரமில்லை. ரயிலைப் பிடிக்கணும். ஆனால் மறுபடியும் ஒரு முறை இங்கே வர்றதாக உத்தேசம்! அப்பாவோட மத்தியானம்.. அவரது வகுப்பறையிலே வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தேன். வரட்டுமா... எல்லாத்துக்கும் ரொம்ப நன்றி..'' வாயிலில் நின்றபடியே மோகனமாக முறுவலித்தான். மூன்று நாட்களாக அவளது வாழ்க்கைக்குள் என்னவோ ஒரு புது மாறுதல் வந்து புகுந்து கொண்டு விட்டது போன்ற திகைப்பில் எதுவும் பேசத்தோணாது மெல்ல தலையை அசைத்தாள். மிக நெருங்கிய உறவினரைப் பிரிவது போன்றதொரு துயரம் மனதை நெருடுவதை உணர்ந்தாள்.

''உங்கள் பெயர் கௌசல்யான்னு எனக்குத் தெரியும். ஆனால் உங்களுக்கு என் பெயர் இன்னமும் தெரியாதுன்னு

நினைக்கிறேன்'' வேடிக்கையாக அவன் கேட்டபோது விக்கித்துப் போய் நின்றாள். ஜயந்தன்னு பேர்... ஆபீசில் ஜெய் என்று சுருக்கிக் கூப்பிடுவாங்க...வரட்டுமா'' விடை பெற்றுக் கொண்டு வேகமாக நடந்து சென்றுவிட்டான்.

மூன்றுநாள் சாப்பிட காலையும் மாலையும் உள்ளே வந்தான் என்பதற்காக உறவினனாகி விட்டானா? சே! யார் இவன் நமக்கு? இவனையே நினைக்கக் கொண்டு... வெட்கம். தன்னைத்தானே பலமுறை கடிந்து கொண்டாள்.

ஆனாலும் அவனது நினைவு ஒரு தொடர் கதையாக மனதிலே நீண்டு கொண்டு நின்றது.

அவனைப்பற்றி அப்பா ஏதாவது பேசக்கூடும் என்று எதிர்பார்த்தாள். ஆனால் பாவம் அவர். எத்தனையோ கவலைகள், வேலைகள், அவனைப்பற்றி அடுத்த நாளே அவர் மறந்து விட்டிருந்தார்.

ஆனால் அவன் அவர்களை மறக்கவிடவில்லை.

அன்று மாலை கௌசல்யா அப்பாவுக்கு முன்னதாகப் பள்ளிக்கூடத்திலிருந்து வந்திருந்தாள். இரவு சமையலுக்கு அரிசியை உலையில் போட்டுவிட்டு வெளியே எட்டிப் பார்த்த போதுதான் அப்பா பள்ளிக்கூடத்திலிருந்து வந்து வீட்டுக்குள் நுழைந்தார்.

''கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் எடுத்திட்டுவா...''

செருப்புகளை நடையில் கழற்றிவிட்டு கால் கழுவிக் கொண்டு களைப்புடன் கூடத்து நாற்காலியில் உட்கார்ந்தார்.

தண்ணீர் டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டு சுற்று முற்றும் பார்த்தார். ''குழந்தைகள் எல்லாரும் விளையாடப் போயிருக் காங்களா?'' கேட்டுக் கொண்டே தண்ணீரை ஒரே வாயாகக் குடித்து முடித்தார்.



''கோயிலுக்கு போயிருக்காங்க. ஏன் கேட்கறீங்க?''

முகத்தைத் துண்டால் அழுத்தித் துடைத்துக் கொண்டார். அவர் குரலில் பரபரப்பு.

''இங்கு வந்து போனானே... உரக் கம்பெனியில் வேலை செய்கிற ஜயந்தன் என்கிற பையன்... அவன் கிட்டேயிருந்து கடுதாசி வந்திருக்கு.''

கௌசல்யா வியப்புடன் விழித்தாள்.

''அவனுக்கு உன்னை ரொம்ப பிடிச்சிருக்காம். தனக்குக் கட்டிக் கொடுக்க முடியுமான்னு என் சம்மதத்தைக் கேட்டு எழுதியிருக்கான்.''

ஆனந்த மிகுதியால் ஆடிப்போய்விட்டாள் கௌசல்யா தாழ்வாரத்துத் தூணை ஆதாரவாகப் பிடித்துக் கொண்டாள்.

''உன்னை ஒரு வார்த்தை கேட்காமல் நான் என்ன பதில் எழுத முடியும்?''

''அப்பா!... நம்ம குடும்பத்து நிலைமையைத் தெரிஞ்சும்...''

''நம்ம குடும்பத்து நிலைமையை நல்லா தெரிஞ்சு கொண்டுதான் உன்கிட்டே பேசிட்டு பதில் எழுதக் காத்துட்டு இருக்கேன். பெண் சம்பாதிக்கப் போட்டு குடும்பத்தைக் காப்பாத்தனும்னு நினைக்கிற மட்டமான புத்தி எனக்குக் கிடையாது. ஏதோ உன்னால் ஆனவரை நம் குடும்பத்தின் நலனுக்கு பாடுபட்டே. சந்தோஷம்... ஆனால் காலா காலத்திலே கொடுத்துட வேண்டியது என் பொறுப்பாச்சே... எங்களைப் பத்தியெல்லாம் கவலைப்படாதே. உனக்கு அவனைப் பிடிச்சிருந்தா சொல்லு... சரின்னு கடுதாசி எழுதிப் போட்டுடறேன்...''

''அப்பா...''

''ஆமாம் அம்மா... இதுபோல ஒரு நல்ல இடம் நமக்குக் கனவிலே கூட கிடைக்காது. ஜயந்தன் எம்.பி.ஏ. படிச்சவன். நல்லா சம்பாதிக்கிறான், சின்ன வயசு. பார்க்கவும் நல்லா இருக்கான். பெற்றோர்கள் சின்ன வயதிலேயே போய்விட்டாங்க. வரதட்சணை - சீர் எதுவும் எதிர்பார்க்கலை... எளிய முறையில் கல்யாணம் செய்து கொடுத்தால் போதும்னு சொல்றான். இந்த வரனை நழுவவிட்டால்...''

அப்பாவுக்கு பேசி முடிப்பதற்குள் மூச்சு வாங்கியது. தனது மகள் எங்கே மறுத்துவிடுவாளோ என்று ஒரு அச்சம்!

''உங்க பிரியம் எதுவோ - அதுவே எனக்குச் சம்மதம் அப்பா...'' சொல்லிவிட்டு உள்ளே நழுவினாள். அன்று அதற்குப் பின்னர் அவளுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. ''அப்பா சொன்னதெல்லாம் நிசமா? ஜயந்தனுக்கு அவளைப் பிடித்து விட்டதா?'' இன்பச்சுமை தாளாது மார்பு வெடித்து விடும்போல துடித்தது- தலையை கிர் என்று சுற்றியது.

இரண்டு வாரங்கள் கழிந்தன. அவன் திரும்ப வந்தான். அப்பாவுக்கும் அவனுக்குமிடையே பேச்சு வார்த்தைகள் முடிந்தேறின. திருவேங்கடம் ஏழை மனிதர்தான். ஆனாலும் பந்திகளை விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. ஊரில் தமக்கு மிகவும் நெருக்கமான நண்பர்கள் சிலரை அழைத்து சிற்றுண்டிகள் தயாரிக்க ஆள் வைத்து நிச்சயதார்த்தத்தை அமர்க்களப்படுத்திவிட்டார்.

ஊரே கலகலத்துப் போய்விட்டது. அவர் வேலை பார்த்த அந்தப் பள்ளிக்கூடத்திலேயும் அதே பேச்சுத்தான்.

''வாத்தியார் திருவேங்கடத்தின் மகளுக்கு இப்படி ஒரு அதிர்ஷ்டமா?''



கல்யாணத்தை அந்தக் கிராமத்திலேயே அவன் செலவில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. அவன் பக்கத்தில் எடுத்துச் செய்ய யாரும் இல்லை என்பதற்காக... திருவேங்கடம் இதற்கு சம்மதித்திருந்தார்.

ஆனால் கல்யாணத்திற்கு முதல் நாள் திரும்ப பட்டணத்திலிருந்து தன் காரை ஓட்டிக் கொண்டு வந்தவன் திடீரென்று முற்றிலும் மாறுபட்டவனாகக் காணப்பட்டான்.

மாப்பிள்ளை மெதப்பு!... ரொம்பக் கெடுபிடியாகக் காட்டிக் கொள்கிறான் என்று அவளும் அப்பாவும் அசட்டையாக இருந்து விட்டனர்.

மூன்று முடிச்சுக்கள் விழுந்த பின்னர்தான்... ஆளே மாறிவிட்டான் என்பது அவளுக்குப் புரிந்தது.

கல்யாணச் சாப்பாடு முடிந்ததும் உடனடியாகப் புறப்பட வேண்டுமென்று பிடிவாதம் செய்தவனிடம் எதுவும் பேசமுடியாது தவித்துப்போனார் திருவேங்கடம்.

''அவருக்கு அங்கே ஆபீசில் எத்தனையோ வேலைகள் இருக்கும். இங்கே சும்மா உட்கார்ந்திருக்க முடியுமா? அனுப்பி வை, பெண்ணைப் பெத்தவனுக்கு இனிமேலே உரிமை கிடையாது...'' நண்பர்கள் ஒத்துப்பாடவே திருவேங்கடம் கண் கலங்கிப் போனார்.

காரில் ஏறிக்கொண்டு அவள் அப்பாவுக்கு கை ஆட்டியபோது பச்சைக் குழந்தையைப் போல குலுங்கி அவர் அழுததை அவள் வருஷம் இரண்டாகியும் மறக்கவே முடியவில்லை.

பிறந்த வீட்டின் உறவை அவன் துண்டித்து விட்டதைப் பற்றிக்கூட அவள் வருந்தவில்லை. அதை சமாளித்துக் கொண்டு வாழக் கடமைப்பட்டவள்.

ஆனால் கல்யாணத்திற்கு முன்பு கனிவாக, இனிமையாக மனதைக் கவரும் வகையில் பேசத் தெரிந்தவன் கல்யாணமான மறுநிமிஷமே இப்படி கடினமாகப் பேச முற்படுவானேன்? அவள் செய்த குற்றம்? புரியாது குழம்பினாள்.

வேதனைப்பட்டாள். அதேசமயம் தன் வருங்காலத்தை எண்ணி மிகவும் பயந்துவிட்டாள்..

③

அழுத குழந்தை அன்னையின் அரவணைப்பில் தூங்கிப் போனான். மெல்ல அவனைத் தொட்டிலில் போட்டுவிட்டு சமையலறைக்குள் சென்றாள். கணவன் பகல் உணவுக்கு அலுவலகத்திலிருந்து திரும்பி வரும் நேரம் நெருங்கி விட்டதை உணர்ந்து பரபரப்படைந்தாள். குழம்பைச் சூடாக்கி இறக்கி வைத்துவிட்டு மேஜைமீது தட்டுகளை வைத்து முடிக்குமுன் காரின் ஹாரன் ஓசை காதைப் பிளந்தது. அவனுக்கு அப்படி ஒரு பொறுமையில்லாத சுபாவம். கதவைத்திறந்து கொண்டு ஓடிவந்து கேட்டுகளை அகலத் திறந்து வைக்கும் முன் எரிச்சலோடு கத்தினான்.

''கார் வரும்னு தெரியுமில்லையா- கேட்டைத் திறந்து வைக்கிறதுக்கென்ன?''

கேட்டைத் திறந்து வைச்சால் ஆட்டுக்குட்டிகள் உள்ளே புகுந்து பூச்செடிகளைத் தின்றுவிடும்- அதுக்கும் கோபிப்பீங்களே..'' சொல்ல வேண்டும் போலத்தான் இருந்தது. அவள்தான் வாயில்லாப் பூச்சியாக வாழத் தெரிந்து கொண்டிருந்தாளே?

காரை ஓட்டி வீட்டின் முன்னால் அவன் நிறுத்துவதற்குள் கேட்டை சாத்திவிட்டு அவள் விரைந்து பின்னால் வந்தாள்.



அவன் தூக்கி வந்த கனமான பிரிப்கேசை கையில் வாங்கிக் கொண்டு உள்ளே ஓடினாள்.

கையைக் கழுவிக் கொண்டு அவன் வந்து உட்காருவதற்குள் சாப்பாட்டைப் பரிமாற தயாராக மேஜை அருகே வந்து நின்றாள்.

வீட்டுக்குள் வந்துவிட்டால் அப்படி ஒரு தர்பார் அட்டகாசம்.

வீட்டுக்கு அவன் எஜமான் - அவள் அடிமை. அதுவும் கொத்தடிமை, என்று ஒவ்வொரு சொல்லிலும் செயலிலும் குத்திக்காட்ட விரும்பும் ஒரு கொடுமையான குணம்.

அதைப் புரிந்து கொண்டு இந்தப் போலியான மண வாழ்க்கையைத் தொடர்ந்து அனுபவிக்க அவள் எத்தனை பாடுபட்டாள் என்பது அவளுக்கும் ஆண்டவனுக்கும் தெரிந்த ரகசியம்.

அவன் விரும்பிய சூட்டில் தயாராக வைத்திருந்த உணவை வேகமாகப் பரிமாறினாள்.

''கடிதாசி ஏதும் வரலையா?...'' கேட்டுக் கொண்டே சாதத்தைப் பிசைந்தாள்.

''வரலை...''

''உன் பிறந்த வீட்டில் உன்னை மறந்து விட்டாங்களா? பெரிய இடத்தில் பெண்ணை கொடுத்திருக்கிறோம். உலுக்கி உலுக்கிப் பணத்தை பொருக்கிக்கலாம்னு நினைச்சதிலே மண் விழுந்ததும் மறந்துட்டாங்க.''

''என் தகப்பனார் அப்படி நினைச்சிருந்தா உங்களுக்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்திருக்க மாட்டார். சம்பாதித்துப் போடும் மகளை... கல்யாணம் செய்து கொடுக்காது வீட்டோ டயே வச்சிருக்கலாம். ஆனால் தமது மகள் கண் கலங்காம

சுகபோகத்திலே வாழணும்னு ஆசைப்பட்டார். அதன் பலனை அனுபவிக்கிறார்.'' சொல்ல வேண்டுமென்று ஆத்திரத்தில் துடித்தாள்.

''உண்மையைக் கண்டு ஊமையாயிட்டே இல்லையா?'' ஏளனமாக சிரித்தபடி... சாதத்தை அள்ளி விழுங்கினான்.

கை கழுவும்போது துவாலையுடன் வாஷ்பேசின் அருகே வந்து நின்றவளை காலோடு தலைவரை ஊன்றி கவனித்தான்.

''நான் வாங்கிக் கொடுத்த அமெரிக்கன் ஜார்ஜெட்டை எப்போ கட்டிக்கப் போறே...பாட்டியான பிறகா? எப்ப பார்த்தாலும் தரித்திரம் புடிச்சாப்பல ஒரு நூல் சேலையைச் சுத்திக்கிட்டு... பட்டிக்காட்டுத்தனம் இன்னமும் உன்னை விட்டுப் போகலை. இந்த ஜன்மத்திலே என்னால் திருத்தி நாகரிகமாக்க முடியாது. லிப்ஸ்டிக் வாங்கித் தந்தேனே, அதை வச்சு பூஜை போட்டுகிட்டிருக்கியா?..'' படபடவென்று பொரிந்து கொட்டினான்.

''வீட்டு வேலைக்கு நூல் புடவைதான் ஏத்ததுன்னு உடுத்திக் கொண்டிருக்கிறேன். உதட்டுச் சாயம் பூசி பழக்கமில்லாததாலே...''

''சுத்தக்காட்டுமிராண்டி... பார்ட்டிகளுக்கு வா... வந்து நாலு பேரோட பழகுன்னு கூப்பிட்டா... குழந்தை வீட்டிலே இருக்குன்னு அடம் பண்ணிப்பே...'' துவாலையை அவள் கையில் வீசிவிட்டு முன்னறைக்குப் போய்விட்டான்.

வெற்றிலை பாக்குத் தட்டை எடுத்துக்கொண்டு அவன் பின்னால் அவசரமாகச் சென்றாள்.

ஒரு தடவை பார்ட்டிக்கு அவளை சந்தோஷப்படுத்தும் நிமித்தம் சென்ற அனுபவம் ஆயுசுபூரா போதும் என்றிருந்தது அவளுக்கு. அலுவலகத்து டைரக்டருக்கு பிறந்த நாள்.



ஊழியர்கள் சேர்ந்து கொடுத்த பார்ட்டி. அலுவலகத்து மாடி டைரக்டர்கள் அறையிலே நடந்தது.

வெளியே எங்கும் போகக்கூடாது - சினிமா - டிராமா என்ற பேச்சே காதில் போடக்கூடாது. அக்கம்பக்கத்தாரோடு பேச்சு வைத்துக்கக் கூடாது என்று தடை உத்திரவு போட்ட அவனே தானாக அவளை பார்ட்டிக்கு வரும்படி வற்புறுத்தினான்.

பாம்பு என்ற தாண்ட முடியாது - பழுது என்று மிதிக்கவும் முடியாத நிலையில் அவள் குழந்தையை வேலைக்காரியிடம் கொடுத்துவிட்டுக் கிளம்பியிருந்தாள்.

வழக்கம்போல வெளியே கோவிலுக்கோ- அல்லது அவன் கூப்பிட்ட கடற்கரைக்கோ போகும்போது உடுத்திக் கொள்ளும் லேசான காஞ்சிபுர சேலையைக் கட்டிக் கொண்டு கிளம்பியிருந்தாள்.

கம்பெனியின் மானேஜர், முதலில் அவளைப் பார்த்ததும் அடக்கமாக வணக்கம் என்று கைகுவித்தவன் தட்டுகளில் பரிமாறப்பட்ட விஷயங்களை தாராளமாக பலதடவை எடுத்துக் குடித்துவிட்டதில்...நிதானம் குறைந்துவிட்டிருந்தான். பார்ட்டி என்றால்... இப்படித்தானா? கிளாஸ் கிளாஸாக - ஆணும் பெண்ணும் கண்டதைப் பருகிக் கொண்டு கோமாளித்தனமாக சிரித்துக் கொண்டு...அவளது உடலும் உள்ளமும் கூசிப் போயின. குளிர்பானம் ஒன்றைக் கையில் பிடித்துக் கொண்டு ஜயந்தன் ஒரு பெண்ணிடம் நெருக்கமாக நின்று பேசுவதை வியப்பும் கோபமுமாக பார்த்தபடி ஒரு மூலையில் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள்.

'ஹலோ!... என்ன இப்படித்தனியா உட்கார்ந்திருக்கீங்க' - சற்றுமுன் கௌரவமாக வணங்கிவிட்டுப் போன மானேஜர் மிகவும் அழுத்தமாக ரொம்ப பழகியவன் போல அருகில் வந்து

உட்கார்ந்து கொண்டான். சிவப்பேறி விட்டிருந்த அவனது விழிகளைச் சந்திக்கப் பயந்து அவள் ..தன் நாற்காலியை மெல்ல சற்று நகர்த்திக் கொண்டாள்.

''காஞ்சிபுரப் பட்டும் குங்குமப் பொட்டும் ஒரு பெண்ணுக்கு எத்தனை அழகு கொடுக்கிறது தெரியுமா!...''

''உங்களைப் பார்த்தால்...கோயில் சிலைபோல...?''

சங்கடத்துடன் நெளிந்தாள்அவள்- இன்னும் மேலே அவன் பிதற்றுமுன்பு எழுந்து அப்பால் போய்விட வேண்டுமென்ற துடிப்பு. அதற்குள் அவள் கணவன் பார்த்துவிட்டான். வேகமாக வெறிபிடித்தவன் போல வந்தான்.

''கௌசி! நீ என் சிநேகிதிகளை சந்திக்கலியே... வா அறிமுகப்படுத்தறேன்'' சொல்லிக் கொண்டே அவள் கரத்தைப் பற்றி தரதரவென்று இழுத்துக் கொண்டு மறுமூலைக்குப் போய்விட்டான். ஆண்களும் பெண்களுமானதொரு சிறு கூட்டத்திலே அவன் தாடிமீசைக்கார வாலிபன் ஒருவனைக் காட்டி ''இவன் என் நண்பன் ராஜன்...'' அறிமுகப்படுத்தினான்.

விதவிதமான அலங்காரத்தில் ஒப்பனைகளில் மின்னிய அந்தப் பெண்களை நிமிர்ந்து பார்க்கவும் அவளுக்கு அச்சமாக இருந்தது. அவர்களுக்கு தான் சமம் இல்லை என்றதொரு தாழ்வு உணர்ச்சியால்...உதடுகள் துடிக்க.. ''வணக்கம்'' என்று பொதுவாகச் சொல்லி வைத்தாள்.

அவர்கள் எல்லோரும் பேசினார்கள் - சிரித்தார்கள். அப்படி சாமர்த்தியமாக வெங்காயத்தின் விலையிலிருந்து வைரக் கடத்தல் வரை அவளுக்குப் பேசவும் தெரிந்திருக்கவில்லை.

புருவங்களை உயர்த்தி உதடுகளைக் குவித்து கொஞ்சிச் சிரிக்கவும் அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை.



இந்த இடத்தில் பொருத்தமற்ற ஒருத்தியாக நான் வந்து நின்றது அபத்தமான சம்பவம் என்று மனதிற்குள் மருகினாள்.

வீட்டிற்கு திரும்பிய கணவன் உடைகளைக் களைந்து விட்டு லுங்கியைச் சுற்றிக் கொண்டு அறைக்குள் வந்ததும் முதலாவதாக அவளிடம் கேட்ட கேள்வி அவளைத் திடுக்குறச் செய்தது.

''அந்த மேனேஜர் பயல், உன்னிடம் என்ன கதை பேசிக் கொண்டிருந்தான். அவன் ஒரு பொம்பளை பொறுக்கி'' அதிர்ந்து போனாள் அவள். 'அவள் என்ன குற்றம் செய்து விட்டாள்?' அப்படி அதட்டிக் கேட்கிறானே கணவன்!

சட்டென்று துணிவுடன் ஒரு பொய்யை சொல்லி விட்டாள். ''அவர் உங்களை ரொம்ப மெச்சிக் கொண்டு போனார். நீங்க வேலையில் ரொம்ப அக்கறை காட்டறதாகப் புகழ்ந்தார். என் மனசுக்குக் கேட்க இதமாக இருந்தது.''

''அயோக்கியன் எத்தனை பெரிய பொய்யை சொல்லியிருக்கிறான். ஆபீசிலே எனக்கு முள்ளா உறுத்திட்டு இருக்கிற ஆசாமி இவன்தான். என்னைக் கண்டால் அவ்வளவா பிடிக்காது. நாம் முன்னேறிக் கொண்டு வருவதைக் காண பொறாமை- அவன் வந்து உன்கிட்ட புகழணும்னா... காரணம் வேறே. அழகா இருக்காளே இவளை தாஜா பண்ணி...''

சிவ்சிவான்னு கத்திக்கொண்டு காதுகளைப் பொத்திக் கொள்ள வேண்டும் போல அருவருப்பாக இருந்தது அவளுக்கு.

''என்னங்க இப்படி எல்லாம் பேசுகிறீங்க - நான் வரணும்னு ஆசைப்படாமல் இருந்தப்போ நீங்கதானே வற்புறுத்தி அழைச்சுட்டுப் போனீங்க.'' தவறிப்போய் கேட்டுவிட்டாள். அடுத்தகணம் தாடையில் படீர் என்று விழுந்ததைத் தாள முடியாது அலறிவிட்டாள். மனைவி அழகாக இருக்கிறாள் என்ற

பெருமை...அதைத் தம்பட்டம் அடித்துக்கொள்ள வேணும் என்றதொரு ஆசை. அதேசமயம் அடுத்தவனிடம் பேசினால் கூட பொறுக்கமாட்டாத பொறாமை.

சே! சே! என்ன மனிதன் இவன். வெறும் வெளித் தோற்றத்தையும் பசப்பாகப் பேசினதையும் கண்டு ஏமாந்து... திருமணம் என்கிற விலங்கிலே நன்றாக மாட்டிக் கொண்டு விட்டாள். இதிலிருந்து விடுதலை ஏது? செத்தால்தான் விடுதலை. குழந்தை ஒருவன் இருக்கிறானே- தாயில்லாமல் அவன் தவித்தது போதாதா. பெத்த குழந்தையை பிஞ்சுப் பருவத்திலே விட்டு அவள் சாக முடியுமா? குழந்தைக்காக- அவளது தந்தையின் கௌரவத்திற்காக உலகத்திற்காக அவள் தொடர்ந்து அவன் மனைவியாக வாழ்ந்துதான் ஆக வேண்டும். பொறுத்துக் கொண்டாள். ஆனால் அவன் அதற்குப் பின்னர் எத்தனை வற்புறுத்தினாலும் பார்ட்டிகளுக்குப் போவதை மறுத்து விட்டிருந்தாள். அதற்குப்பின்னர் அந்த நண்பன் ராஜனை இன்னொரு இடத்தில் கணவனுடன் கூடப்போன சமயம் சந்தித்திருக்கிறாள்.

வணக்கம் என்பதுடன் வார்த்தைகளை நிறுத்திக் கொண்டு விட்டிருந்தாள்... கணவரது சந்தேகத்தையும் பொறாமையையும் கிண்டிவிடுவதில் லாபம் என்ன? இனி அடி உதைகளைத் தாள முடியாது போன்றதொரு பலவீன உணர்வு அவளுள் உருவாகிக் கொண்டிருந்தது.

''யாராவது வந்தாங்களா?'' அடுத்தபடியாக அவன் கேட்ட கேள்வியால் விழித்துக் கொண்டாள்.

சுண்ணாம்பு தடவி நரம்பு கிழித்து வெற்றிலையைச் சுருட்டி அவனிடம் கொடுக்க நீட்டிய அவள் கரம் நடுங்கியது.

சொல்வதா வேண்டாமா!...



''உங்கள் நண்பர் ராஜன் வந்திருந்தார். கதவைத் தட்டினார். பயந்து போய்விட்டேன். அதே சமயம் குழந்தை வேறு அழுதது. ஆபீசிலே போய் பார்த்துட்டுதான் வந்தாராம். அங்கிருந்து கிளம்பி விட்டதாகத் தெரிஞ்சதும் நேரே வீட்டுக்கு வந்தாராம்.''

''வாசலில் நிக்க வச்சா பேசினே!'' ... அவன் குரலில் ஆத்திரம் தொனித்தது.

'நான் தனியே இருக்கேன். யாருக்கும் கதவைத் திறக் காதேன்னு சொல்லியிருக்கீங்களே. அதனாலே நான் கதவைத் திறக்காமலே பேசி அனுப்பிட்டேன்.''

''அவன் என் சிநேகிதன்னு தெரிஞ்சு கூட வாசல்லே வச்சே அனுப்பிட்டியா?''

''நான் தனியா வீட்டிலே இருக்கறச்சே எப்படி அழைக்கிறதுன்னு.''

''பட்டிக்காடுன்னா சரியான பட்டிக்காடு. அவன் என் சிநேகிதன். உன்னை கடிச்சு முழுங்கிட மாட்டான். என் விரோதிகிட்ட அன்னிக்கு பார்ட்டியிலே பல்லைக் காட்டிக்கிட்டு பேசிக்கிட்டிருந்தே.''

''இன்னிக்கு என் சிநேகிதனை தெருவில் நிற்கவச்சி அனுப்பிட்டே. உன்னை சொல்லிக் குத்தமில்லை. திட்டக் குடின்னு கிராமத்துப் பேரைக் கேட்டதுமே மனசிலே ஏற்பட்ட திட்டத்தைத்தான் உதறியிருக்கணும். பள்ளிக்கூட வாத்தியார் வேலை பார்த்தவ என்று நினைச்சேன். இப்படிப் பத்தாம் பசலியா இருப்பேன்னு யார் கண்டா. வாழ்க்கையிலே ஒரு மனிதனுக்கு மனைவி பெரும்துணையா இருக்கணும். என்னைப் போல பெரிய வேலையில இருக்கிறவனுக்கு மனைவி

சாமர்த்தியக்காரியா இருக்கிறது முக்கியம். யார்கிட்ட பேசணும் - யார்கிட்டப் பேசக்கூடாதுன்னு லிஸ்ட் போட்டு தரணுமா? உன் மண்டையிலே என்ன மசாலாவா இருக்கு. ராஜனை உள்ளே கூப்பிட்டு உட்காரவச்சு... ஒரு கப் காப்பி கொடுத்தா குடியா முழுகிடும். அவன் என்னைப் பத்தி என்ன நினைப்பான். ஒரு பட்டிக்காட்டை கட்டிக் கொண்டு வந்திருக்கான், உட்காரக்கூட சொல்லத் தெரியாத மக்குப்பிளாஸ்திரின்னு நினைச்சு சிரிப்பான்.''

''எனக்குப் பெருமை தேடித்தரும் பெரும் வாழ்க்கைத் துணைவியாக நீ இல்லாவிட்டாலும் அக்கறையில்லை. சிறுமை தேடித் தராதிருந்தால் போதும். இடியட்.''

''இரண்டு வருஷமா உங்களோட வாழறேன். உங்கள் சிநேகிதர்கள் யார்னு எனக்கு அதிகம் தெரியாது.''

''அறிமுகப்படுத்தி வச்சால்கூடப் பேசத் தெரியாம முழிச்சிட்டு நிக்கிறேயே. அந்த கேவலத்தைத் தாங்கிக்க முடியலை. அன்னிக்குக் கடைத்தெருவுக்குக் கூட்டி கிட்டுப் போறப்போ... என்ன நடந்தது'' சீறினான் அவன்.

கடைத் தெருவில் வீட்டுக்குத் தேவையான சாமான்களை வாங்கிவர அவளை அவன் கூட அழைத்து சென்றான். இதுவரை தனியாகவே அவள் வெளியில் சென்றதேயில்லை. வீட்டுச் செலவுகளுக்குத் தேவையான பணத்தை மட்டும் மாத முதலில் அவளிடம் விட்டெறிந்து விடுவது வழக்கம்.

இத்தனை கெட்ட பழக்கத்தின் நடுவே ஒரு நல்ல குணம். கொடுத்த பணத்திற்குக் கணக்கு கேட்பதில்லை. வீட்டுச் செலவில் மிச்சம் பிடித்து... குருவியாகச் சேர்த்து வைத்திருக்கும் சிறு தொகையை அவள் அப்போதைக்கப்போது தன் சகோதரி பத்மா பெயருக்கு மணியார்டர் செய்துவிடுவது வழக்கம். அருகிலிருந்த



தபால் நிலையத்திற்கு அவன் வெளியில் போயிருக்கும் சமயத்தில் தனியே சென்று ரகசியமாக அனுப்பிக் கொண்டிருந்தாள்.

கல்யாணம் நிச்சயமானவுடன் அவளுள் ஆயிரம் கனவுகள் உருவாகியிருந்தன. கடைக்குட்டி தம்பியைத் தன் வீட்டில் கொண்டுவந்து படிக்க வைக்க வேண்டும். தங்கைகளுக்கு விசேஷங்களுக்கு துணிகள் பரிசாக வாங்கி அனுப்ப வேண்டும். அப்பாவுக்கு வீட்டு செலவிற்காக மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை அனுப்பும்படி கணவனிடம் கேட்டுக் கொள்ள வேண்டும். அவளது கனவுகள் எல்லாம் கல்யாணத்திற்குப் பின்னர்... மனதோடு நின்று போயின.

ஆனாலும் பாசம் மனதைக் குடைந்து கணவனுக்குத் தெரியாமல்தான் பணத்தை அப்போதைக்கப்போது அனுப்பிக் கொண்டிருந்தாள். அதைப்பற்றி கடிதங்களில் குறிப்பிட வேண்டாம் என்றும் தங்கைக்கு எச்சரித்திருந்தாள்.

அப்பாவுக்கு உண்மை தெரிந்திருந்தால் இந்த ஏற்பாட்டுக்கு ஒத்துக் கொண்டிருக்க மாட்டார். அவர் மானத்தை பெரிதாக எண்ணி வயிற்றைக் காயப்போட்டு... வடக்கிருக்கும் புலவர் கோஷ்டியைச் சேர்ந்தவர். குழந்தைகள்... பட்டினியும் பசியுமாக வாடுமே என்று தாயாக இருந்து அவர்களைக் கட்டிக்காத்த அவள் மனம் பட்டபாடு அவளுக்குத்தான் தெரியும். தான் செய்யும் காரியம் தவறு. கணவனுக்குத் தெரிந்துவிட்டால் சமாதி கட்டிவிடுவான்... இருந்தாலும் பாசம் கண்களை மறைத்தது; புத்தியைக் குழப்பியது... கடைத் தெருவிலே... காரிலிருந்து இறங்கிய ஒரு பெண் அவளது கணவனைப் பார்த்து ''ஹாய்'' என்று கையை அசைத்தாள். ஒடிய உயரமாக அழகாகவே இருந்தாள் அவள். அவளது அழகைப் பன்மடங்காக்கிக் கொண்டிருந்த அந்த நீல ஜார்ஜெட் சேலையையும்... மிதமான

ஒப்பனையில் மினுக்கிட்ட முகத்தையும் பிரமித்துப்போய் பார்த்தாள் கௌசல்யா.

''ஹாய் நளினி!... எங்கே இப்படி?..'' கேட்டபடி ஜயந்தன் சிரித்தான்.

''டெல்லியிலிருந்து முந்தாநாள் தான் வந்தேன். நானும் என் கணவரும் ஸ்டேட்ஸுக்கு போக தயாராகிட்டு இருக்கோம்.. இவங்க...''

''என் மனைவி.. கௌசல்யான்னு பேர்...'' அறிமுகப்படுத்தி வைத்தான்.

''நாட்பாட்'' கலகலவென்று சதங்கை சிரிப்பு சிரித்தாள் அந்த சிங்காரி. மேலும் இருவரும் கண்களில் தன்னை எடை போடுவதைக் கண்டு வெட்கத்திலே முகம் சிவந்து பதறிப் போய்விட்டாள் கௌசல்யா.

''இவங்களை...நான் முந்தா நாள்... போஸ்டாபீஸ்கிட்டே பார்த்த ஞாபகம்.''

படபடவென்று பயத்திலே நெஞ்சு அடித்துக்கொள்ள கௌசல்யா மிரண்டு போய்விட்டாள்.

சுற்றுமுற்றும் கவனித்து விட்டுதானே அவள் தபால் நிலையத்திற்குப் போனாள். யார் இந்த சண்டாளி! கௌசலைக் குற்றத்துக்கு சாட்சி கூண்டுக்கு வந்தவள் போல... இங்கே வந்து...

அவளது உடலும் உள்ளமும் பதறித் துடித்தன.

''என்னைப் பார்த்திருக்க முடியாது. நான் அதிகம் வெளிவாசல்லே தனியா வரதில்லைங்களே...'' சாமர்த்தியமாக அழுத்தமாக ஒரு பொய்யைச் சொன்னாள். ''அப்படியா உங்க ஊர்?''



கணவன் தாடை இறுக கோபத்துடன் முறைப்பதை உணர்ந்தாள்.

''திட்டக்குடிங்கிற கிராமம்; எனக்கு இந்தப் பட்டணம் புதுசு.'' அதற்குப்பின்னர் அவளை அங்கேயே நடைபாதையில் நிறுத்தி விட்டு அந்த நளினியுடன் கடைக்குள் போன அவள் கணவன் திரும்ப சிறிது நேரமாகியது.

வந்தவன் முகமும் கண்களும் சிவந்து கோபாவேசமாகக் காணப்பட்டான். ''நாளைக்கு சாமான்கள் வாங்கிக்கலாம். வீட்டுக்குப் போவோம்'' கரகரவென்ற குரலில் உத்திரவிட்டான்.

வீட்டுக்குள் நுழைந்ததும் நுழையாததுமாக அவளைத் தரதரவென்று பிடித்து இழுத்து தன்முன் நிறுத்திக் கொண்டான். கண்களால் எரித்துவிடுகிறவன் போல உறுத்து விழித்தான்.

''வாயை மூடிக்கொண்டு சும்மா நிக்கறதுக்கு என்ன கொள்ளை. திட்டக்குடியிலிருந்து வந்த பட்டிக்காடு நான்னு விளம்பரம் செய்துக்கணுமா? பேசத் தெரியாட்டா கம்முனு வாயை மூடிக்கொண்டிருக்கணும் சனியன்...'' சீறினான்.

எப்பொழுதும் போல் அவள் எதிர்த்துப் பேச சக்தியின்றி மெதுவாக விழித்தாள்.

''அவள் எத்தனை கேலி செய்கிறாள் தெரியுமா, ரொம்ப பேசுவியே. போயும் போயும் ஒரு பட்டிக்காட்டிலே போய் விழுந்தியான்னு சொல்லாமல் நூறு தினுசில் சொல்லிக் காட்டிட்டா...''

கௌசல்யாவுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

யார் இந்த நளினி! அவள் அபிப்ராயம் எனக்கு எதற்கு?

அவள் படிச்சவளாக இருக்கலாம். இதெல்லாம் எனக்கு தெரிஞ்சு கொள்ள விருப்பமில்லை. இவள் அறிமுகம் எனக்கு என்னத்துக்கு. இவளோட அழகு போட்டிக்கு நான் ஜோடி போட வந்துட்டேனா! ஆத்திரத்தில் பேச நினைத்தாள்.

''சனியனே போய் காப்பி கலந்து எடுத்திட்டு வா... தெரிஞ்சவங்க சினேகிதங்க எல்லார் முன்னாலும் உன்னால நான் ரொம்ப அவமானப்படறேன். அவசரப்பட்டு நான் எடுத்த முடிவு எனக்கே தீமையாய்ப் போச்சு'' எரிச்சலோடு அவன் இரைந்த பொழுது... அவமானத்தில் குன்றிப் போனாள். அழுகை பொத்துக் கொண்டு வந்தது. கையை ஓங்கிவிடக் கூடும் என்ற அச்சத்திலே.. அடக்கிக் கொண்டு உள்ளே மறைந்து விட்டாள்.

மனதிலே ஒரு சிறு நிம்மதி.

நல்லவேளை, தபால் நிலையத்திற்கு அவள் தனியாகப் போனது எதற்கு என்று அவன் ஆரம்பிக்கவில்லையே அதுவரை அவள் பிழைத்தாள்!

''ராஜன் எப்ப வரதாகச் சொன்னான்?''- கேட்டுக் கொண்டே அவன் அலுவலகத்திற்குப் புறப்பட்டான்.

''உங்களை ஒரு சமயம் ஆபீசிலே வந்து பார்ப்பார்..'' பிரிப் கேசைத் தூக்கிக் கொண்டு பின்னால் ஓடினாள்.

கார் வெளியே விரைந்ததும் கேட்டைச் சாத்திக் கொண்டு கதவை அடைத்துவிட்டு...உள்ளே வந்தவளுக்கு பசியிருக்க வில்லை.

சதா சிறுமைபட்டுக் கொண்டு ஜயந்தனுக்கு மனைவியாக அடிமையிலும் அடிமையாக பயந்து கொண்டு வாழ்வதைவிட திட்டக்குடி கிராமத்திலேயே அவர்கள் குடும்பத்திற்கு உழைத்துப் போட்டுக் கொண்டு...கூடப்பிறந்தவர்களுடன் கூடத்துத்



தரையில் உட்கார்ந்து கூழை கலயத்தில் ஊற்றி ஆளுக்கு ஒரு வாய் என்று குடிச்சு மகிழும் வாழ்க்கை எத்தனை மேல்.

அவளது உண்மையான வாழ்க்கை நிலை கிராமத்துக்குத் தெரிந்துவிட்டால்...

கைகொட்டிச் சிரிப்பார்கள். ''வாத்தியார் ஐயா பட்டணத்துக் காரன், டெர்லின் ஷர்ட் அணிந்தவன்- காரையும்- பதவியையும் கண்டு ஏமாந்து போனார்... கல்யாணமாகாத தன் பள்ளிக் கூடத்து வாத்தியார் யோக்கியமான பையன் யாருக்காவது கட்டி வச்சிருந்திருக்கலாம். பெண் என்றால் ஒரு வயது வந்ததும் எங்கேயாவது ஒரு பாழும் கிணற்றில் கொண்டு தள்ள வேண்டுமா என்ன? கல்யாணமாகாவிட்டால் என்ன? பெண் ஊசிப் போய்விடும் பண்டமா?'' மாலை வேளையில் வாய்க்கால் மதகு மேல் உட்கார்ந்து கொண்டு விமரிசிப்பார்கள்.

ஊரில் கொலை கொள்ளை ஏதாவது நடக்கும்வரை... வாத்தியார் திருவேங்கடத்து வீட்டு சங்கதி அவர்களுக்கு அல்வாவாக இருக்கும். வாய் தித்திக்குமளவு பேசித் தீர்ப்பார்கள். பட்டணத்தில் அடுத்த வீட்டுக்காரரைப் பற்றி யாருக்கும் அக்கறையில்லை. ஆனால் கிராமத்து வாழ்க்கை அப்படியல்லவே. அடுத்த வீட்டுக்காரர் வீட்டு சட்டிகளில் எவ்வளவு அரிசி பருப்பு இருக்கிறது என்பதுவரை ஒருவரை ஒருவர் எடை போட்டுக் கொண்டு தெரிந்து வைத்துக் கொள்வார்களே.

தங்கை பத்மாவுக்கு கல்யாணம் ஆகவேண்டுமே? அதுவரை அவள் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு பொறுமையாகக் கணவனுடன் நான் சுகமாக வாழ்வதாகப் பெருமையாய்த் தம்பட்டம் அடித்துக் கொண்டாக வேண்டும். பெருமூச் செறிந்தாள் கௌசல்யா.

சிலநாட்களுக்குப் பின்னர் வானம் கருத்துக் கொண்டு திடீரென்று மழை கொட்டத் தொடங்கிய ஒருநாள் மாலை வாயில் அழைப்பு மணி கிணுகிணுப்பதைக்கேட்டு மெல்ல வந்து கண்ணாடி வழியே எட்டிப்பார்த்தாள். வெளியில் கவிந்து கொண்டிருந்த இருளில் வராந்தாமீது நின்ற உருவத்தை இனம் காண முடியவில்லை. விளக்கைப் போட்டாள். கணவனது நண்பன் ராஜன்...மழைக்கோட்டும் குல்லாயுமாக வராந்தாவில் நின்று கொண்டிருந்தான்.

''நான்தான். ஜயந்தன் இல்லையா.''

துணிவுடன் கதவைத்திறந்தாள். ''உள்ளே வாங்கோ உட்காருங்கோ'' உபசரித்தாள்.

உள்ளே வந்தான் ராஜன். கதவை மூடிவிட்டு விளக்கைப் போட்டாள். முன் அறையில் வந்து நின்றவன் முகம் சிவந்து காணப்பட்டது. ''காலையில் லேசா இருந்த காய்ச்சல் இப்போ ரொம்பக் கடுமையாகி விட்டது.தலைவலி பிளக்கிறது''.

''ஜயந்தன் இருந்தால் காரில் கொண்டு நான் தங்கியிருக்கிற லாட்ஜில் விடச் சொல்லலாம்னு வந்தேன் மழையில் நனைஞ்சுட்டேன்.''

''அடடா! காய்ச்சலோட நனைஞ்சுட்டிங்களே. இருங்கோ வரேன்.''

உள்ளே சென்று அவசரமாகக் கணவனது பீரோவைத் திறந்து துவைத்து காயவைத்து மடித்து வைத்திருந்த வேட்டி சட்டை இரண்டையும் எடுத்து வந்தாள். ''இந்தாங்க உடை மாத்திக் கோங்க.. கொஞ்சம் சூடா சாப்பிட ஏதாச்சும் கொண்டு வரேன். அத்தோட தலைவலிக்கு மாத்திரை ஒண்ணும் கொடுக்கிறேன் சாப்பிட்டுட்டு....''



'கொல் கொல்' என்று பரிதாபமாக இருமினான் ராஜன். ''ரொம்ப நன்றி...''

''அன்னிக்கு...'' பேச முடியாது காய்ச்சலில் திணறினான்.

''பழக்கமில்லாததினாலே... உள்ளே வரச் சொல்ல தயக்கமா இருந்தது. இவர் வந்ததும் கோவிச்சுக் கொண்டார்... ராஜன் என் உயிர் நண்பன் என்றார்... அதனாலே...'' புன்னகைத்தாள்.

இருட்டி வெகு நேரமாகியும்..அவள் கணவன் வீட்டிற்கு வந்த பாடில்லை. ''எனக்கு ரொம்ப தூக்கமயக்கமா வருது... இப்படியே இந்த சோபாவிலே கொஞ்சம் சாய்ஞ்சுகிடட்டுமா'' கெஞ்சாத குறையாகக் கேட்டான் ராஜன்.

''இருங்க... இந்த வீட்டிலே விருந்தாளிகள் வந்து தங்கு கிறதுக்குன்னு ஒரு தனி அறை இருக்கு. அது சும்மாதான் இருக்கு. ஏதாவது கொஞ்சம் நீர் ஆகாரமா சாப்பிட்டுட்டு... அதிலே இப்படி படுத்துக்கோங்கோ... அவர் வந்ததும்... நீங்க உங்க இடத்துக்குப் போவதானாலும் சரி.. இங்கேயே இருக்கிற தானாலும் சரி...''

இரவு பதினோரு மணி அளவில் காரை ஓட்டிக் கொண்டு வந்தான் ஜயந்தன். அதுவரை கொட்டிக் கொண்டிருந்த மழை சற்று ஓய்ந்து விட்டிருந்தது. உள்ளே நுழையுமுன்பே அவன் சுவாதீனத்திலே இல்லை. ஏதோ பார்ட்டி போலிருக்கிறது. நன்றாகக் குடித்து விட்டிருக்கிறான்... ஊகித்துக் கொண்டாள். இந்த மழையில் - இருட்டில் குடிபோதையுடன் காரை ஓட்டிக் கொண்டு வந்திருக்கிறானே பெரிய ஆபத்தாயிற்றே. மனம் பதறியது... சாப்பாடு வேண்டாம் என்று கூறிவிட்டு தன் கோட்டைக் கழற்றி நாற்காலிமீது போட்டவன் கண்களில் நடையில் கிடந்த பாதணிகள் தெரிந்தன.

"யாருடைய ஷூ இது"... குடிவெறியிலும் அந்த கேள்விக்குக் குறைச்சலிருக்கவில்லை.

"உங்க சிநேகிதர் ராஜன் வந்திருக்கார். உட்காரச் சொல்லி உபசரிச்சேன். ஒரே காய்ச்சலும் குளிருமாக மழையில் நனைஞ்சு போய் வந்திருந்தார்."

"எங்கே அவன்?..."

"விருந்தாளி அறையிலே படுக்க வச்சிருக்கேன்."

அதற்குமேல் பேச அவனுக்கு அலுப்பாக இருந்தது. உம் என்று உறுமிவிட்டு அவசரமாக உடைகளைக் களைந்து வீசிவிட்டு லுங்கியைச் சுற்றிக் கொண்டு படுக்கை மீது பொத்தென்று விழுந்துவிட்டான்.

மறுநாள் காலை... ராஜன் எழுந்து... பல்துலக்கிவிட்டு... காப்பி சாப்பிட மேஜையருகே எதிரே வந்து உட்கார்ந்தபோது தான் அவனுக்கு எல்லாம் நினைவுக்கு வந்தது.

"ஜுரம் விட்டுப்போச்சு. உன் மனைவி எனக்கு செய்த உதவியை மறக்க முடியாது. ரொம்ப நன்றி... எனக்கு கார் தேவையில்லை. நான் இப்படியே கிளம்பி ஒரு ஆட்டோ பிடித்து போய்க் கொள்கிறேன். வரட்டுமா.." காப்பி பலகாரத்துக்குப் பின்னர் விடைபெற்றுக் கொண்டு ராஜன் கிளம்பினான்.

ஜயந்தன் கண்களில் கொலை வெறியுடன் மனைவியை உறுத்துப் பார்த்தான்.



## 4

அதற்குப் பின் அங்கே ஒரு பூகம்பம் ஏற்படப் போகிறது என்றுதான் எதிர்பார்த்தாள்.

ஆத்திரத்துடன் வெறித்த அவனது கண்களை எதிர்நோக்கும் சக்தியின்றி சமையலறைக்குள் தஞ்சம் புகுந்து கொண்டாள். கையும் காலும் பதற என்ன நடக்கப் போகிறதோ என்ற நினைவில் பதட்டமாகக் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள். சற்று நேரத்தில் அவன் அலுவலகத்திற்கு கிளம்பி விட்டான். அவளிடம் சொல்லிக் கொள்ளவில்லை - உதவியை எதிர்பார்க்கவும் இல்லை. தானே தன் பிரீப்கேசைத் தூக்கிக் கொண்டு வேகமாக காரில் வைத்தான். கதவை ஓங்கி அறைந்து சாத்தும் சப்தம் கேட்டது. கார் சில விநாடிகளில் வெளியே கிளம்பி சாலையில் மறைந்து போயிற்று.

மெல்ல வெளியே வந்து கேட்டை சாத்திக் கொண்டு வாயில் வராந்தாவிலே யோசனையுடன் வெகு நேரம் நின்று கொண்டிருந்தாள் கௌசல்யா.

அவள் எதைச் செய்தாலும் அவன் கண்களில் அது குற்றமாகப் படுவானேன்? கணவன் மனம் கோணாது நடந்து கொள்ள அவள் இன்னமும் என்னதான் தெரிந்து கொள்ள வேண்டும்? அவளுக்குத் துக்கம் தாங்கமுடியவில்லை. யாரிடமாவது சொல்லி ஓவென்று அழமாட்டோமா என்றதொரு ஆதங்கம். கண்ணீரை அடக்கிக் கொண்டு கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்து விட்டாள்.

பகல் உணவுக்கு வந்தவனிடம் அந்தக் கோபத்தைக் காணவில்லை. அடங்கிவிட்டிருந்தது. அந்த சம்பவத்தை மறந்து விட்டவனாகத் தெரிந்தான். அவளும் மௌனமாகவே உணவைப் பரிமாறிவிட்டு தப்பிக் கொண்டு விட்டாள்.

நாட்கள் பல நகர்ந்தன. சாதாரணமாக அவனிடம் காணப்படும் அந்த பரபரப்பு, சில்லறை சங்கதிக்கெல்லாம் பொங்கி எழும் எரிச்சல், அன்றாடம் அவளுக்குக் கிட்ட வேண்டிய திட்டுகள், வசவுகள் இவைகளைத் தவிர வாழ்க்கை நிதானத்தில் போய்க் கொண்டிருந்தது.

தமது இளைய மகள் பத்மாவுக்கு கல்யாணம் கூடிவிட்டது என்று திருவேங்கடம் மருமகனுக்குக் கடிதம் போட்டிருந்தார்.

சில நாட்களில் கல்யாணப் பத்திரிகையும் வந்தது. இரண்டு ஆண்டுகளாகப் பார்க்காத தன் பிறந்த குடும்பத்தினரைப் பார்க்க வேண்டும். பத்மாவின் கல்யாணத்திற்கு தங்களால் ஆன உதவியை செய்தாக வேண்டும் என்ற துடிப்பு கௌசல்யாவுக்கு. ''கல்யாணப் பத்திரிகையைக் கண்டதும்.. மூட்டையைக் கட்டத் தொடங்கிட்டியோ! உங்க பிறந்த வீட்டு சங்கதி தெரியாதா? உங்களைத்தான் நம்பியிருக்கேன் மாப்பிள்ளைன்னு உன் அப்பா கூடத்தில் துண்டை விரித்துப் போட்டு விடுவார். கல்யாணச் செலவு முழுவதும் என் தலையில் விழும். நாம் என்ன லட்சாதிபதிகளா அள்ளிக் கொடுக்க? நீயும் போகத் தேவையில்லை. கைக்குழந்தையோட கிராமத்துக்குப் போய் சீக்கு ஏதாச்சும் பிடிச்சுட்டு வந்தா நான்தான் வைத்ய செலவுக்கு அழணும்...'' எடுத்தெடுப்பிலேயே சீறி விழுந்தான்.

''ஏதாச்சும் மொய் எழுதவேண்டாமா!' அவள் தயக்கமாகக் கேட்டபோது வெடித்துவிட்டான்.

''பத்து ரூபாய் அனுப்பி வைச்சால் போதும். நானே மணியார்டர் பண்ணிவிடறேன்...இன்னும் உங்க வீட்டிலே அடுத்தடுத்து பெண்கள் கல்யாணத்துக்கு நிக்கிறாங்க... ஒருத்தருக்கு அதிகம்கொடுத்து பழக்கம் காட்டிட்டா என்பாடு திண்டாட்டமாகிவிடும். என்ன அப்படி பார்க்கிறே.. திட்டக்குடி



கிராமத்து பொண்ணுக்கு பத்து ரூபாய் பரிசளிப்பு பத்தாதா?'' ஏளனமாகக் கேட்டுவிட்டு அலுவலகம் கிளம்பிவிட்டான்.

பத்து ரூபாய் பரிசளிப்பு... அவளுக்கு வெட்கமாக இருந்தது. அக்கா பட்டணத்தில் வாழாது வாழ்கிறாள் என்று நினைத்து பெருமைப்பட்டுக் கொண்டிருக்கும் தங்கைக்கு விலைவாசி உயர்ந்திருக்கும் இந்த காலத்தில் பத்து ரூபாயில் ஒரு ரவிக்கை வாங்கி கூலி கொடுத்துத் தைக்க முடியாதே... பந்தலில் இருப்பவர்களுக்கு பேச்சுக்கிடமாகிவிடும். அப்பா மனம் அயர்ந்து போய்விடுவார்... துக்கத்துடன் வெகு நேரம் சிந்தித்தாள்...வீட்டு செலவுக்கு கொடுத்ததில் மீதம் பிடித்து சேர்த்து வைத்திருந்த ஐம்பது ரூபாய் கைகொடுத்து உதவியது. அலுவலக வேலையாக ஐயந்தன் வெளியூருக்கு போயிருந்த சமயம் அவள் துணிவுடன் தபாலாபீசிற்குச் சென்று பணத்தை மணியார்டர் செய்துவிட்டு கூட ஒரு கடிதம் எழுதித் தங்கையை எச்சரித்து விட்டிருந்தாள்.

பத்மாவின் திருமணத்தன்று எத்தனை முயன்றும் அவளுக்கு அழுகையை அடக்க முடியவில்லை.

பிறந்த வீட்டில் கல்யாணம் அமர்க்களப்பட்டுக் கொண்டிருக்கும்போது அவள் தன்னந்தனியே குழந்தையுடன் வீட்டோடு தங்கியிருக்க நேர்ந்த கொடுமையை எண்ணிக் கண்ணீர் உதிர்த்தாள். தாயாக இருந்து உதவின அக்காவை... தங்கை பத்மா தாலி கட்டும் நேரத்திலே நினைச்சு கண் கலங்கிப் போவாளே என்று எண்ணி எண்ணி அழுதாள். இப்படியும் ஒரு வாழ்க்கையா? இல்லை, இது சிறை தண்டனை, நெஞ்சு வலிக்கத் தன் மனப் போராட்டங்களை வீட்டுச் சுவரோடு சொல்லிக் கொண்டு குமைந்து குமுறிக் கொண்டிருந்தாள்.

மூத்த மருமகனின் அசட்டை திருவேங்கடத்தை மிக்க பாதித்திருக்க வேண்டும். பத்மாவின் திருமணத்திற்குப் பின்னர் அவரிடமிருந்து கடிதம் வருவது நின்று போயிற்று. பத்மாவும் புக்ககம் போன பின்னர், பிறந்த வீடு கௌசல்யாவை மறந்துவிட்டது போன்றதொரு மௌனமாகிவிட்டிருந்தது. திட்டக்குடி கிராமம் அமெரிக்காவில் இருக்கவில்லை. ஆனாலும் இரு குடும்பத்தினரிடையே போக்குவரத்தே இல்லாத கொடுமையால் கொஞ்ச நாட்களில் அவளுக்குப் பிறந்த வீட்டின் தொடர்பே முற்றிலும் அற்றுப்போய்விட்டது.

புக்ககத்திலும் ஆதரவு இல்லை- பிறந்த வீடு மறந்து போனது. பிறகு அவள் எங்கே போவாள்?

யாரும் திரும்பி வர முடியாத ஊருக்கு போய்விட்டால்...

மூட்டைப்பூச்சி மருந்து - ஓடும்பஸ் - ரயில் தண்டவாளம் - பின்பக்கமிருந்த கிணறு - நைலான் புடவை - மண்ணெண்ணை எத்தனையோ இருந்தன. அவைகள் எதன் மூலமாவது உயிரை முடித்துக் கொண்டுவிட முடியும்.

ஆனால் குழந்தை முரளியின் கதி?

தகப்பன் என்ற ஒரு தகுதியைத் தவிர ஜயந்தன் குழந்தையைப் பாசமுடனோ பரிவுடனோ நெருங்கி அள்ளி அணைத்துக் கொண்டு ஒருநாளும் கொஞ்சி மகிழ்ந்தவன் இல்லை. மிருகங்களுக்குக்கூட தங்கள் குட்டிகளின் மீது பாசம் இருப்பதுண்டு. கன்றுக்குட்டியை நக்கிக் கொடுக்கும் காளைகளை கிராமத்திலே அவள் பார்த்திருக்கிறாள். கோழிக்குஞ்சுகளுக்குக் காவலாக துணைநின்று அணிவகுத்து ஓடிவரும் சேவலைப் பார்த்து வியந்திருக்கிறாள். தன் குட்டியை மார்பில் கட்டிக் கொண்டு ஓடும் குரங்கு- முதுகில் சுமந்து கொண்டு பாய்ந்தோடும் அணில் - தேடி வந்த இரையை குஞ்சுகளுக்கு ஊட்டும் காகங்கள் எத்தனையோ பார்த்திருக்கிறாள்.



புழு பூச்சிகளுக்குக் கூட தங்கள் வாரிசுகள் மேலிருந்த பாசம்... மனிதனான ஜயந்தனிடம் கடுகளவும் காணவில்லை. தான் தன் சுகம் என்று வாழ்ந்த மிருகத்திலும் கேவலமானதொரு ஜன்மம் அவன். அந்நிலையில் குழந்தை முரளியை அந்தக் கொடுமைக்காரனிடம் விட்டுவிட்டு அவள் சாகமுடியுமா?

தொட்டிலில் தூங்கிக்கொண்டிருக்கும் பால் வடியும் குழந்தை முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் தற்கொலை உணர்ச்சி தவிடு பொடியாகியது.

ஊஹும்! முடியாது... வாழ்ந்துதான் ஆவணும்.. முரளியை வளர்த்து ஆளாக்கிப் படிக்க வைத்து... மேலே சிந்திக்க முடியாது கண்களில் நீர் மல்க துக்கம் நெஞ்சை அடைத்தது. அவள் மருகிக் கொண்டிருந்தாள்.

முரளிக்கு வயது ஐந்தாகிவிட்டது. காலம் அவள் வரை எப்படியோ ஓடிவிட்டது.

முரளி அருகிலிருந்த பள்ளிக்கூடத்தில் எல்.கே.ஜியில் படித்துக் கொண்டிருந்தான். அதுவும் அவளது முயற்சியால்தான். குழந்தையைப் பற்றிய பொறுப்பு எதையும் ஜயந்தன் ஏற்கத் தயாராக இல்லை.

குழந்தைக்கு தந்தையிடம் எந்தவிதமான பிடிப்பும் ஏற்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதில் பேயையோ பிசாசையோ பார்த்துவிட்டது போன்று வீட்டுக்குள் நுழையும் அப்பாவைக் கண்டு அச்சத்திலே குழந்தை அரண்டு நடுங்கிப்போவான்.

வளர்கின்ற குழந்தையின் உள்ளத்தை இந்தப் பயம் மிகவும் பாதிக்கும். பள்ளி ஆசிரியையாக பணி செய்தவளுக்கு தெரிந்துதான் இருந்தது. அவள் எத்தனையோ முயன்றாள்.

''முரளி கார் சத்தம் கேட்கிறது. அப்பா வரார் போலிருக்கு. கேட்டைத் திறந்துவை'' உத்திரவிடுவாள்.

''ஊகும்...மாட்டேன் அம்மா...அப்பா முழிச்சுப் பார்ப்பார். ஏன் வாசலில் வந்து நிக்கறே... தெருவிலே ஓடி விளையாட ஆசையோ. உள்ளே போ கழுதைன்னு கத்துவார்...உகும் அடிப்பார்... நான் மாட்டேன்.''

''இந்த தம்ளர் தண்ணியைக் கொண்டு அப்பாகிட்ட கொடு. முன்னறையிலே பத்திரிகை படிச்சிட்டு இருக்கார்.''

''மாட்டேன் அம்மா... அன்னிக்கு காப்பி தம்ளரை கீழே போட்டதுக்கு அடிச்சு நொறுக்கிட்டார். மாட்டேன்.''

''அப்படி சொல்லக்கூடாது கண்ணு...அவர் உன் அப்பாவாச்சே?''

''சங்கர் அப்பா வந்து காரிலே அவனைப் பள்ளிக்கூடத்திலே விட்டுட்டுப் போறார். பீச்சுக்கு அழைச்சிட்டுப் போறார். கதை சொல்வார். இந்த அப்பா என்ன செய்யறார். உகும், இவர் எனக்கு அப்பா இல்லை.''

''என்னடா சொல்றே? இப்படிப் பேசலாமா?''

''உங்களை ரொம்ப திட்டுகிறார் அம்மா. நேத்திக்கு அடிச்சாரே.''

''எனக்கு இவரைப் பிடிக்கலை அம்மா.. எனக்கு உங்களைத்தான் பிடிச்சிருக்கு.. நான் பெரியவனானப்போ... இந்த அப்பா உன்னை அடிச்சா.. பெரிய கம்பை எடுத்து ஓங்கிப் போட்டு மண்டையை உடைச்சிடுவேன்.''

''ஐய்யய்யோ! இப்படியெல்லாம் பேசக்கூடாது. பள்ளிக் கூடத்திலே சொல்லித் தரலையா? மாதா, பிதா, குரு, தெய்வம்னு படிக்கிறியே.''

''இவர் சாமில்லம்மா... இவர் ஒரு பிசாசு. சங்கர் ஒரு கதைப் புத்தகம் கொடுத்தானே. அதிலே ஒரு பூதம் வரது பாரு... அந்தப் பூதம் இவர்தான்.''



''இப்படி பேசக்கூடாது கண்ணா...''

''அம்மா... வாம்மா நாம வேறே வீட்டுக்குப் போயிடுவோம். இந்த அப்பாவை எனக்கு கொஞ்சங்கூட பிடிக்கலை.''

''இதுதான் நம்ப வீடு.. இங்கேதான் இருக்கணும். நீ பெரியவனா வளர்ந்து படிச்சு...'' பேச முடியாது மகனை தன் மார்போடு அணைத்துக் கொண்டு குலுங்கி அழுதாள்.

முரளி வளர்ந்துகொண்டு வந்தான். அவனுடன் தந்தை மேல் வெறுப்பும் கூட வளர்ந்து வருவதை அவள் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள். இதை அவள் எப்படித் தடுக்க முடியும்?

பிள்ளைக்கும் அப்பனுக்கும் இடையே பிடிப்பே இல்லாத நிலை உருவாவதை எப்படித் தடுப்பது... இயற்கைக்கு விரோத மான இந்த விரோத உணர்வை குழந்தை மனதில் வளரவிடக் கூடாதே. கவலைப்பட்டாள்... ஆனால் காரிய அளவில் தடை செய்யமுடியவே இல்லை...

பகல் முழுவதும் வெய்யில். அந்திப் பொழுதிலும் இரவிலும் மழை... என்ற மழைகாலத்தின் முன் அறிவிப்பான பருவகாலம் துவங்கிவிட்டிருந்தது.

குழந்தை முரளியின் பள்ளியில் அன்று வருஷாந்திர விழா. சிறிது நேரம் அவள் தலையைக்காட்டிவிட்டு வீட்டிற்குப் பொழுதுடன் வந்துவிட்டாள்.

குழந்தை முரளி பள்ளியில் நடந்த நாடகம்- நடனம் எல்லா வற்றையும் பார்த்துவிட்டு மெல்ல வருவதற்குள் இருட்டி விட்டது. மழை பிடித்துக் கொண்டது. நன்றாக மழையில்

நனைந்து வந்திருந்தான். ஏற்கெனவே இருமலும் ஜலதோஷமுமாகத் தவித்த குழந்தைக்கு அடுத்த நாளே காய்ச்சல் வந்து விட்டது.

இரவு முழுவதும் அரற்றிக் கொண்டு கிடந்த மகனை ஏன் என்று கூட ஜயந்தன் கேட்கவில்லை. வீட்டுக்கு திரும்பியிருந்தவன் நல்ல குடிபோதையில் இருந்தான். மருந்து பாட்டிலும் கையுமாக மனைவி வீட்டுக்குள் வளைய வருவது மட்டும் லேசாக போதைக் குழப்பத்திலே சிறிது தெரிந்தது.

''அங்கே என்ன மகனோட கிசுகிசுன்னு பேசிக்கிட்டு... ஒரு சின்ன காய்ச்சலுக்கு டாக்டர் மருந்துன்னு என்ன அட்டகாசம்? நீ சம்பாதிச்சா பணத்துக் கஷ்டம் தெரியும். இங்கே வந்து என் காலைப்பிடிச்சு விடு. ரெண்டு நாளா ஒரே குடைச்சல்.''

''அம்மா!'' காய்ச்சலுடன் முனகித் தன் சிறுகைகளை நீட்டிய மகனைப் படுக்கையிலே விட்டுவிட்டு கணவனுக்குப் பணிவிடை செய்ய ஓடினாள். ''அம்மா என்னை விட்டுட்டு...பயமா இருக்கும்மா'' ஜுரவேகத்தில் திணறிக் கொண்டு அறை வாயிற்படியருகே வந்து நின்ற மகனைக் கண்டதும் சீறி எழுந்து விட்டான் ஜயந்தன்.

''சனியன்! நிம்மதியா இருக்கவிடாது போலிருக்கு.'' பற்களைக் கடித்துக் கொண்டு எழுந்துவிட்டவனை சட்டென்று பிடித்துக் கொண்டாள். ''அடிச்சிடாதீங்க அவனுக்கு காய்ச்சல் வேண்டுமானா என்னை'' அவள் முடிக்குமுன் ஆத்திரத்தை அடக்கமாட்டாதவனாக அவள் கன்னத்தில் ஓங்கி அறைந்து விட்டு படுக்கையில் குப்புற விழுந்து உறங்கத் தொடங்கினான்.

மார்புடன் அணைத்துக் கொண்டு தூக்கி வந்து மகனை மறுபடி படுக்கையில் போட்டாள் கௌசல்யா. அதிர்ச்சி கலந்த மிரட்சியில் கண்கள் பளபளக்கக் குழந்தையை உற்றுப் பார்த்தாள்.



''அம்மா! வலிக்குதாம்மா- அப்பா ஓங்கி அடிச்சுட்டார் இல்லையா?'' கன்னத்தை தொட்டு சின்னஞ்சிறு கையால்... நெருப்பாக 'காய்ச்சலில் சுட்ட விரல்களால் வருடியபோது அவளால் தாங்க முடியவில்லை. குலுங்க குலுங்க அழுது விட்டாள்.

அன்று இரவு முழுவதும் காய்ச்சலடித்துக் கொண்டிருந்தது. மகன் அருகே கவலையோடு கண்விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

காலை வழக்கம்போல வீட்டைத் தூள் பறக்கடித்து விட்டு ஜயந்தன் வேலைக்கு கிளம்பிவிட்டான்.

மருந்துக் கடையிலிருந்து காய்ச்சலுக்கு வாங்கி வந்த மருந்தை வேளை தவறாது கொடுத்துப் பார்த்தாள்.

ஜுரம் இறங்கவில்லை. இருமலும் குறையவில்லை. மூச்சு விட முடியாது குழந்தை திணறினான். வேதனையில் அழுதான். புரண்டான். அவளால் அதற்குமேல் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. ஜயந்தனுக்கு காய்ச்சல் தலைவலி வந்துவிட்டால்போதும் வீட்டை இரண்டுபடுத்தி விடுவான். நோய் - வலி - இவைகளைப் பொறுக்க முடியாத பிறவி. உடனடியாகத் தொலைபேசியில் பல காலம் பழக்கப்பட்ட குடும்ப வைத்தியர் வைத்தியநாதனைக் கூப்பிட்டு விடுவான்.

''இதுக்குத்தானா கூப்பிட்டீங்க... ஜயந்தன். நீங்க ரொம்ப பயங்கொள்ளியா இருக்கீங்க. விட்டமின் 'சி'யை நிறைய சாப்பிட்டுகிட்டு ஏதாவது சூடா குடிக்க சாப்பிட்டுட்டு... இந்த மாத்திரையை விழுங்கிட்டு நல்லா தூங்குங்க... காலைக்குள் சரியாகிவிடும்''என்று சொல்லிவிட்டு போவது வழக்கம்.

''ஜயந்தன்... தலைவலி...சளி... ஜுரம்'' இதுக்கெல்லாம் ராத்திரி வேளையிலே கூப்பிடாதீங்க. குடும்ப டாக்டர்தான்

ஒத்துக்கிறேன். எனக்கு வயசாகிகிட்டு வருது. இருட்டின பிறகு கார் ஓட்ட தடுமாட்டமாக இருக்குது'' ஒரு தடவை கண்டிப்பாகவே பேசிவிட்டு போயிருந்தார்.

மகனுக்குக் காய்ச்சல் என்று தொலைபேசியில் இருட்டும் சமயம் கூப்பிட்டால் ஒருவேளை அவர் வர மறுக்கலாம்.

நேரே சென்று - நிலைமையை விவரித்து- ஒரு டாக்சி பேசி அழைத்து வந்தால்... வர மறுக்கமாட்டார். பல வருஷங்களாக ஜயந்தனுக்கு டாக்டராக இருக்கும் அவர் ஆபத்து சமயத்தில் மறுக்க மாட்டார். அவளைக் கண்டாலே மகள் போல ஒரு பரிவுடன் பேசும் பழக்கமாச்சே.

வானம் கருத்துக் கொண்டு பரவிவந்த இருளை இன்னமும் கடுமையாக்கிக் கொண்டு லேசாகத் தூறத் தொடங்கியதை கவனித்தாள். குழந்தை அயற்சியினால் சிறிது கண்ணயர்ந்து விட்டிருந்தான். குடையை எடுத்துக்கொண்டு வீட்டின் உள்ளேயும் வெளியேயும் விளக்கைப் போட்டு வீட்டுக் கதவைப் பூட்டிக்கொண்டு தோட்டத்திற்குள் இறங்கினாள். கேட்டுத் திறக்கப்படும் ஒலி கேட்டது. திகைப்புடன் திரும்பிப் பார்த்தாள்.

அன்று வந்து போனவன் - அதற்குப்பின் அந்த பக்கமே வராதிருந்த ராஜன்- அவனது பெயரை வீட்டில் உச்சரிக்கக் கூட பயந்து கொண்டிருந்த கணவனது நண்பன் ராஜன் சிரித்த முகத்துடன் தோட்டத்திற்குள் வந்து கொண்டிருந்தான்.

''என்ன மழையிலே கிளம்பிட்டீங்க - அதுவும் தனியாக. ஜயந்தன் வழக்கம்போல இன்னும் வீட்டுக்கு வரலையாக்கும். அன்னிக்குப் போனவன் இப்போ வந்து நிக்கிறேனேன்னு ஆச்சரியப்படாதீங்க. ஜயந்தன் சொல்லியிருப்பானே. அடுத்த நாளே எனக்கு ஹைதராபாத்துக்கு மாற்றலாகிவிட்டிருந்தது. இப்பக்கூட அங்கேதான் வேலை. நாலு நாள் லீவ்லே



பட்டணத்திலே சிநேகிதர்களையெல்லாம் பாத்திட்டு போலாம்னு வந்தேன். நாளைக்கு பகல் கிளம்பரேன். பெசன்ட் நகர் சினேகிதன் ஒருத்தன் வீட்டில்தான் தங்கியிருக்கேன். நீங்க அன்னிக்கு செஞ்ச உதவியை நினைச்சுப் பார்க்காத நேரம் இல்லை... உங்களுக்கு ரொம்ப கைராசி. அன்னிக்கு நீங்க கொடுத்த மாத்திரையை சாப்பிட்டபிறகு... இதுவரை எனக்கு அப்புறம் வெறும் தலைவலிகூட வந்ததில்லை, குழநதை முரளி சுகமா? பெரியவனா வளர்ந்திருப்பானே'' அன்புடன் விசாரித்தான்.

''குழந்தைக்கு காய்ச்சல். டாக்டரைக் கூட்டி வரப் போயிட்டு இருக்கேன். அவர் இன்னமும் வரலை.. அதனாலே''

துக்கமும் பயமும் இணைந்த கம்மிய குரலில் தடுமாறினாள். கணவன் இல்லாத சமயம் மறுபடியும் இவன் வந்திருக்கிறானே? என்ற அச்சம் அவளுக்கு.

''டாக்டரைத்தானே கூட்டிவரணும்? எங்கேனு சொல்லுங்க நான் போய் கூட்டி வரேன். மழை பலக்க ஆரம்பிச்சுடிச்சு. வீட்டிலே காய்ச்சலடிக்கிற குழந்தையை விட்டுட்டு இருட்டிலே நீங்க தனியா . போறது தப்பு...'' கையில் கொண்டு வந்த பார்சல்களை அவளிடம் கொடுத்தான்.

குழந்தையைப்பற்றி குழம்பிப் போயிருந்த அவளுக்கு சட்டென்று மறுப்பு தெரிவிக்க முடியவில்லை. அவள் கூறியதும் சரியென்றுதான் பட்டது. டாக்டர் வைத்தியநாதனின் முகவரியைக் கூறினாள். ''ரொம்பக் காய்ச்சல். கௌசல்யா சொன்னாள்னு சொல்லி எப்படியாவது கையோட அழைச்சிட்டு வாங்க... டாக்சிக்கு நாம் பணம் கட்டிடலாம்.'' பதறினாள்.

சிறிது பொழுதில் டாக்டருடன் அவன் டாக்ஸியில் வந்து இறங்கினான். மழை பலமாகக் கொட்டிக் கொண்டிருந்தது.

குழந்தையை பரிசோதித்துவிட்டு வைத்தியநாதன் ஊசி மருந்தை ஏற்றினார். நல்லவேளை சுவாசக் குழலில் தான் சளி அதிகமாகிவிட்டிருக்கு. சுவாசப் பைகளில் வந்திருந்தால் ரொம்ப ஆபத்தாயிருக்கும். இந்த மழைக் காலத்திலே எங்கே பார்த்தாலும் ஒரே விஷ ஜுரம். முக்கியமா ஓடி விளையாடற குழந்தைகளை பாதிக்கிறது. ராத்திரி இருமல் குறைஞ்சு குழந்தை தூங்குவான். மருந்துகள் எழுதி கொடுக்கிறேன். வாங்கி வேளை தவறாம கொடுங்க. விடியறதுக்குள்ளே காய்ச்சல் இறங்கிடும்... அப்படி இறங்காட்டா மறுபடியும் கூப்பிடுங்கோ வந்து பார்க்கிறேன்.''

படபடவென்று கூறிவிட்டு சுற்றிலும் பார்த்தார். ''ஆமாம் உங்க கணவர் எங்கே?'' தாழ்ந்த குரலில் கேட்டார். கௌசல்யாவுக்கு வெட்கமாகத்தானிருந்தது. கணவன் இன்னும் வீடு வந்து சேரவில்லை என்பதைச் சொல்ல கூச்சமாக இருந்தது. ''அவருக்கு ஆபீசில் இன்னமும் ஏதோ வேலை போலிருக்கு'' டாக்டர் வைத்தியநாதன் மறுபடியும் சுற்றிலும் பார்வையை ஓட்டினார். தன்னை அழைக்க வந்தவன் முன்னறையில் உட்கார்ந்திருப்பதை உணர்ந்து தாழ்ந்த குரலில் சொன்னார்.

''உன் கணவர் இரண்டு நாள் முன்னர் என்னைப் பார்க்க கிளீனிக்குக்கு வந்திருந்தார். ரொம்ப குடி... லிவர் கெட்டுக் கொண்டு வரது. நீதான் கொஞ்சம் முயற்சி பண்ணி குடிப்பதைத் தடுக்க வேண்டும். நல்லா படிச்சவன். நிறைய சம்பாதிக்கிறான். இன்னும் வசதியா வாழமுடியும். யானை தன் தலையிலே மண்ணை அள்ளிப் போட்டுக்கிறாப்பல... ஜயந்தனை எனக்கு ரொம்பப் பிடிக்கும். ரொம்ப அடக்கமா ரொம்ப நாணயமாக இருந்த பையன். இப்ப குணங்கெட்டு ரொம்பவே மாறிப் போயிட்டான். அதுக்கு என்ன காரணம்னு எனக்குத் தெரியும்... என்ன செய்கிறது; சிலருக்கு என்னென்னவோ சோதனைகள்



வாழ்க்கையிலே வந்து அமைந்துடறது. அதுக்காக மனம் ஒடிந்து உணர்வுகள் அழிஞ்சு மனிதன் தன் மனிதாபிமானத்தை காற்றில் பறக்கவிட்டு மிருகமா மாறிடணுமா? பொறுமையையும் சகிப்புத் தன்மையையும் வளர்த்துக்கணும். யாருக்கு வாழ்க்கையில் பிரச்சினை இல்லை? எனக்கு எத்தனையோ இருக்கு. அதுக்குன்னு ஒரு புட்டியை தூக்கிக் கொண்டு விட்டேனா? சே! சே! இந்தக் காலத்துப் பசங்கள் குடிப்பதற்கும் - கெட்டழி வதற்கும் யாரையாவது எதையாவது காரணம் காட்டி தங்கள் செய்கையை நியாயப்படுத்திக்கிறாங்க?''

''எத்தனையோ முயற்சிக்கிறேன். அவர்கிட்டே எதுவும் நடக்கலையே..'' துக்கத்துடன் திணறினாள் கௌசல்யா.

''ஒருநாளைக்கு கொஞ்சம் ஓய்வாக நான் இருக்கும்போது என் கிளினிக்குக்கு நீ வா. விவரமா சொல்றேன். இப்போ ரொம்ப வேலையிருக்கும்மா -வரட்டுமா'' சொல்லிக் கொண்டே கிளம்பிப் போய்விட்டார்.

ஆபத்திற்கு தெய்வமாக உதவிய ராஜனை எப்படிப் போகச் சொல்வது?. கணவர் வரும்வரை காத்திருக்கச் சொல்லவும் பயமாக இருந்தது.

அவசரமாகக் காப்பியைக் கலக்கிக் கொண்டுவந்து அவன் எதிரே வைத்தாள்.

''அவர் வர ரொம்ப நேரமாகும் போலிருக்கு''மென்று விழுங்கினாள்.

''பரவாயில்லை காத்திருக்கேன். அவன்கிட்டே கொஞ்சம் பேசிவிட்டுத்தான் போகணும்னு வந்திருக்கேன். ஜயந்தன் எனக்கு ரொம்ப நெருக்கமான நண்பன். அந்த நாளில் நாங்க ஒண்ணாப் படிச்சவங்க. அவனைப் பத்தி எல்லாமே எனக்குத் தெரியும். கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தவன் - ஒரு நல்ல

மனைவி கிடைச்சபிறகு நிம்மதியா சுகமா வாழாது.. கெட்டழிஞ்சு ரொம்ப மட்டமாகிட்டு போறான்னு கேள்விப்படறேன். வருத்தமா இருக்கு.''

கௌசல்யாவுக்கு என்ன பதில் சொல்வதென்றே புரியவில்லை. ''நீங்க கொடுத்த பார்சல்களை மேஜை மேலே வச்சிருக்கேன். போகும்போது மறக்காம எடுத்திட்டு போங்க.''

''அந்த பார்சல் எல்லாம் உங்களுக்குத்தான். முரளிக்கு பொம்மையும் - பிஸ்கட்டும் வாங்கிட்டு வந்திருக்கேன். அத்தோட ஹைதராபாத்திலிருந்து சோளாப்பூர் ஷால் ஒண்ணு உங்களுக்கு வாங்கிட்டு வந்திருக்கேன். ஜயந்தனுக்கு ஒரு கம்பளி போர்வை...''

''இதெல்லாம் எதுக்கு?''

''அன்னிக்கு நீங்க என்கூடப் பிறந்த தங்கையைப் போல எத்தனை பரிவா உபசரிச்சீங்க. நான் என் தாய்க்கு ஒரே பிள்ளை... அம்மாவுக்குப் பிறகு தனிக்கட்டையாகிட்டேன். ஒரு தங்கையோ அக்காவோ இருந்தா... தனிமை மனசை ரொம்ப பாதிக்காதேன்னு அடிக்கடி நினைச்சுக்கிறதுண்டு... ஒரு அண்ணன் கொடுத்த பரிசுன்னு நினைச்சுட்டு எடுத்து உள்ளே வையுங்கோ.''

முரளி தூக்கத்தினின்று விழித்துக் கொண்டான். அம்மா என்று குரல் கொடுத்துவிட்டு அழத் தொடங்கினான். அவள் விருக்கென்று உள்ளே போய்விட்டாள். அதுசமயம் சாலையில் கார் வரும் ஓசை கேட்டது. கேட்டை அகலமாகத் திறந்து வைத்துவிட்டு கௌசல்யா அழும் மகனை சமாதானப்படுத்த உள்ளே விரைந்தாள்.



## 5

காரை நிறுத்திவிட்டு கையில் ஃபிரிப் கேசுடன் முன்னறைக்குள் வந்த ஜயந்தன் நண்பனைக் கண்டு முகம் சுருங்கிப் போனான்.

''என்ன இப்படி தினம் நேரம் கழிச்சுதான் வீட்டுக்கு வருகிறதோ? இன்னிக்கு உன்னைப் பார்த்து பேசாம ஊருக்குப் போறதில்லைன்னு முடிவோட வந்து கொஞ்ச நாழியா காத்திருக்கேன். உன் குழந்தை முரளிக்கு நல்ல காய்ச்சல்! டாக்டர் வந்துட்டு போனார். என்னப்பா ஜயந்தன்! குடும்பப் பொறுப்பில்லாம... இனியும்.. இப்படி சுத்திக்கிட்டிருக்கிறது... நல்லாவா இருக்கு...''

பொங்கி வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு ஜயந்தன் கள்ளப் புன்னகை செய்தான்!

''ரொம்ப தாங்க்ஸ்... கௌசி! ராஜனுக்கு காப்பி...ஏதாச்சும் கொண்டுவந்து கொடுத்தியா!'' உரத்த குரலில் மனைவியை அழைத்தான்.

''குழந்தையைப் பத்தின கவலையின் நடுவே என்னையும் உன் மனைவி கவனித்துக் கொண்டாங்க. கள்ளிச் சொட்டு போல் காப்பி ஏ ஒன்னாக கலந்து கொடுத்தாங்க...'' ராஜன் மிகவும் உற்சாகமாகச் சொன்னான்.

குளியலறைக்குள் முகம் கழுவிக் கொள்ள சென்ற ஜயந்தன் துவாலையுடன் பின்னால் நின்ற மனைவியை வெறுப்பாக முறைத்துப் பார்த்தான்.

39795

''ராஜன் வந்து எத்தனை நாழியாகிறது? நான் வர நேரமாகும்னு அனுப்பிடறதுக்கு என்ன கொள்ளை?'' அடிக் குரலில் காரமாகக் கேட்டான்.

இரவு உணவிற்கு இருந்துவிட்டு...ராஜன் வெகுநேரம் சென்ற பிறகே விடைபெற்றுக் கொண்டு போனான். அவன் சென்ற சிறிது நேரத்திற்குப் பின்னர் ஓய்வடைந்திருந்த மழை மறுபடியும் சோவென்று கோஷத்துடன் பொழியத் தொடங்கியது.

முன்னறையில் அவன் வைத்துப்போன பார்சல்கள் ஜயந்தனின் கண்களில் பட்டன.

''கௌசி! இங்கே வா! இதெல்லாம் என்ன?'' இதுவரை அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தில் உரத்து கத்தினான். கை வேலையைப் போட்டுவிட்டு கலவரத்துடன் கௌசல்யா முன்னறைக்கு ஓடிவந்தாள்.

பரக்பரக்கென்று பார்சல்களை அவிழ்த்து மேஜைமீது விசிறிப் போட்டான். ''கரடி பொம்மை, பிஸ்கட்டு...ஷால் கம்பளிப் போர்வை... ம்... இன்னும் என்னவெல்லாமோ கொண்டு வந்து ஏமாத்தப் பார்க்கிறான் அயோக்கியன்...''

''பொம்மையும் பிஸ்கட்டும் குழந்தைக்கு வாங்கிட்டு வந்தாராம். கம்பளிப் போர்வை உங்களுக்கு...''

''தலையில் முக்காடு போட்டுக் கொண்டு மூலையில் உட்காருடா மடையா. நான் அதுவரை உன் மனைவியோட குலாவி கொம்மாளம் போடறேன் என்கிறானா?''

''ஐயய்யோ! நீங்க உங்க நண்பனை தப்பா புரிஞ்சுகிட்டு கன்னாபின்னான்னு...''

''எனக்கு இந்த மாதிரி தனிக்கட்டைகளுடைய அயோக்கியத்தனம் எல்லாம் நல்லா துப்புறவா தெரியும். இவனு



களுக்கெல்லாம் மாற்றான் தோட்டத்து மல்லிகைதான் வாசமா இருக்கும் - வசமாகவும் இருக்கும்.''

''ராஜனுக்கு அப்படியெல்லாம் கெட்ட புத்தி கிடையாதுங்க... வீணா நீங்க சந்தேகப்பட்டுகிட்டு..'' கௌசல்யாவுக்கு துக்கம் தொண்டையை அடைத்தது.

'' உன்னைப் பத்தியும் எனக்குத் தெரியும். முன்னே பின்னே பழக்கமில்லாதவனை உள்ளே வச்சு மருந்து கொடுத்து கம்பளி போட்டு போத்தி ரொம்ப சவரட்சணை பண்ணினவளாச்சே... அந்த ருசி, திரும்பவும் பார்க்க வந்திருக்கான். நான் இல்லாதபோது எத்தனை வாட்டி வந்திருக்கானோ...''

''கடவுளே! ஏன் இப்ப என்னை சித்திரவதை செய்கிறீங்க...''

''பெரிய பத்தினி. உன்னை நான் அன்னிக்கே புரிஞ்சு கொண்டு விட்டேன். மறுபடி இதே மாதிரி நடந்தா பேசிக்க லாம்னு அன்னிக்கு கம்னு இருந்தேன். உன் நடத்தைகெட்ட குணத்தை நல்லா காட்டிட்டியே. குழந்தையைப் பெத்தவன் நான் கல்லாட்டம் இருக்கச்சே அவனைக் கூப்பிட்டு டாக்டரை அழைச்சிட்டு வரச் சொன்னியா? வீட்டைக் கவனிக்காம என் புருஷன் குடிச்சு கெட்டழியறான்னு அவங்கிட்ட புலம்பினியா... இந்தமாதிரி சங்கதிகள் எப்போ கேட்போம்னு துடிச்சுட்டு காத்திட்டு இருப்பான்கள் இந்த அயோக்கிய பசங்கள். ஐயோ பாவம்னு அனுதாபமா பேசியிருப்பானே. அப்படித்தானே பேசி... உன் கிட்ட அணுகி...பின்னாடி...''

**''அசிங்கமா பேசாதீங்க...ராஜன் உங்க சிநேகிதர்.''**

**''ஆமாம்... என் சிநேகிதனா இருந்தான். இப்போ உன் சிநேகிதன். உன் காதலன்!''**

**''ஐயய்யோ... என்ன வீண்பழி... இது உங்களுக்கே நல்லா இருக்கா?''**

''உண்மையைச் சொன்னா உடம்பெரிகிறதா? கிராமத்துப் பெண் அடக்க ஒடுக்கமாக இருப்பாள்னு படிப்பு அதிகமில்லாது போனாலும் போகட்டும்னு கட்டிக் கொண்டேன். கிராமமா யிருந்தால் என்ன பட்டணமாயிருந்தா என்ன? ஒழுக்கம் கெட்டவ எங்கிருந்து வந்தவளாக இருந்தாலும் தனது கைவரிசையை சீக்கிரமே காட்டிடுவாங்கிறது இப்பத்தான் புரிகிறது...''

''நாலு வீடு கேட்கறாப்பல... ராத்திரி வேளையிலே ஆபாசமா பேசாதீங்க... உங்களை கையெடுத்துக் கும்பிடறேன்'' என்று அழுதுகொண்டு அருகில் நெருங்கி வந்தவளை ஆத்திரத்துடன் இழுத்தான். அவசரமாக சுருட்டி முடிந்து கொண்டிருந்த கூந்தல் அவிழ்ந்து விடவே அரக்கத்தனமாக அதைப்பற்றிக் கொண்டு குலுக்கினான்.

இப்ப சொல்லு உண்மையை. உனக்கும் அவனுக்கும் எத்தனை காலமா சிநேகிதம்... சொல்லு!'' உறுமினான் ஆங்காரமாக.

''விடுங்கோ.. வலிக்கிறது... விடுங்கோ'' கெஞ்சிக் கொண்டு நகர முயன்றவளை ஆக்ரோஷமாக ஓங்கி கன்னம் - முதுகு- எங்கிலும் கைகளால் மாற்றி மாற்றி அடித்தான். மிருகவெறி கொண்டு அவளை மேலும் மேலும் அடித்து நொறுக்கிக் கொண்டிருந்தான்.

திடுக்கிட்டு விழித்துக் கொண்ட முரளி... மெல்ல எழுந்து முன்னறைக்குள் வந்து எட்டிப் பார்த்தான்.

''அம்மாவை இந்த அப்பா அடிக்கிறாங்களே'' பிஞ்சு உள்ளத்திலே புயலாக கோபம் மூண்டது. சாமான் அறை மூலையில் சாத்தி வைத்திருந்த தடிக்கம்பை எடுத்துக் கொண்டு ஓடி வந்தான் குழந்தை.

''அப்பா! அம்மாவை நீ அடிச்சின்னா உன் மண்டையை



உடைச்சிடுவேன்..'' ஜுர வேகத்தில் பலவீனமடைந்து காலும் கையும் தள்ளாடியபடி குழந்தை கம்பை அசைத்துக் கொண்டு.. வாயிற்படியருகே வந்து நின்று கிரீச்சிட்டபோது... ஜயந்தன் திடுக்கிட்டுப் போனான். அடுத்த நிமிஷம்... கடகடவென்று கோபத்திலே உரத்த குரலில் சிரித்துவிட்டான்.

''பேஷ்! நீ என் மகனை எனக்கு எதிரியா தயார் பண்ணிக் கிட்டிருக்கியா... இனியும் நான் மடையனா இருக்கக் கூடாது'' என்று சீறிவிட்டு...ஒரே பாய்ச்சலாக மகனது கையிலிருந்த கம்பைத் தட்டிவிட்டான்.

''அப்பனையே அடிக்கப் புறப்பட்டு விட்ட சிங்கமடா நீ! பெரிய வீரன். ஒழுக்கங்கெட்ட ஆத்தாளுக்கேத்த உத்தம புத்திரன்... முளைச்சு மூணு இலை விடலை'' ஓங்கி தடார் என்று குழந்தையின் முதுகில் பலமாக அறைந்துவிட்டான்.

''அடிக்காதீங்க. காய்ச்சலா கிடக்கிற பிள்ளை... ஐயோ பாவம். அதை ஏன் உதைக்கிறீங்க. என்னை வேணா கொன்னு போடுங்கோ'' மகனை வாரி தன் மார்போடு அணைத்துக் கொண்டு குமுறி அழுதாள் கௌசல்யா.

''போயிடுங்கோ இரண்டு பேரும். இனி இந்த வீட்டிலே உங்களுக்கு இடமில்லை. ஒழுக்கங்கெட்ட மனைவி. அன்பில்லாத பிள்ளை. சே! இது ஒரு குடும்பமா'' கத்திக் கொண்டே அவளை நெருங்கிய ஜயந்தன் வெறிபிடித்த மிருகம் போன்று உணர்வுகளை அடக்க மாட்டாது தரதரவென்று இழுத்துக் கொண்டு வாசலுக்கு வந்தான். ''கழட்டு கழுத்திலே போட்டுக் கொண்டிருக்கிற சரடு.. காது தோடு... கைவளை எல்லாத்தையும் கழற்றிக் கொடு..'' ஆவேசம் பிடித்தவன் போல கூச்சலிட்டான். பயந்து நடுங்கிப் போன கௌசல்யா... குழந்தையை இறக்கி வராந்தாமீது நிற்க வைத்துவிட்டு நகைகள் அனைத்தையும் கழற்றி தரைமீது வைத்தாள்.

முன்னறைக்குள்ளே சென்றவன் அந்தக் கம்பளி... சால்வை... பொம்மை, பிஸ்கட் டின் எல்லாவற்றையும் வாரிக் கொண்டு வந்து அவள் முன் போட்டான்.

''இதுகளையெல்லாம் மூட்டையாகக் கம்பளியில் வச்சு கட்டு'' உறுமினான்.

''இந்தா எடுத்துக்கோ. உன் காதலன் கொடுத்த பரிசை சுருட்டிக்கிட்டு உன் பிள்ளையைத் தூக்கிட்டு நட... என் மூஞ்சியிலே முழிக்காம போயிடு...'' நெட்டித் தள்ளியபடி அவளை வாயில்கேட் அருகே கொண்டு நிறுத்தினான்.

''என்னங்க இது... காய்ச்சலடிக்கிற குழந்தை... மழையிலே...''

''உதவி செய்ய உனக்காக பாவம் காத்திருக்கான் போயிடு. இந்த இடத்தை விட்டுப் போயிடு... மறுபடியும் உள்ளே நுழைஞ்சே உன் கண் எதிரே உன் மகனை வெட்டி ரெண்டு துண்டா போட்டுடுவேன்.. மானங்கெட்ட மனுஷன்னு நினைச்சியா... வெட்கம் கெட்டவளே... வெளியே போயிடு... இன்னியோட எனக்கு மனைவி... மகன் ரெண்டு பேரும் செத்துட்டாங்க...'' கேட்டைத் திறந்து... அசுரவேகத்தில் அவளை வாசலுக்கு வெளியே தள்ளி மூடினான்.

''என்னங்க... குழந்தைக்கு காய்ச்சல் அதிகமாகிவிடும்... கொஞ்சம் தயவு செய்யுங்க... என்னை என்ன வேணுமானாலும் செய்யுங்க. பாவம் குழந்தை...'' கதறி அழுது கொண்டு கேட்டைத் திறக்க முற்பட்ட கரத்தின்மீது பொத்தென்று ஒரு அடி விழுந்தது.

''உள்ளே வந்தே... உன் குழந்தை முதலில் பலி...பின்னாடி நீயும் செத்துப்போவே... என் ஆத்திரத்தைக் கிளராதே... போயிடு. ஒழுக்கங்கெட்டவளே... போயிடு... உன் முகத்தை நான் இனி பார்க்க விரும்பலை... போயிடு'' கர்ஜித்துவிட்டு



வேகமாக தோட்டத்தைத் தாண்டி... வீட்டிற்கு சென்று கதவை ஓங்கி சாத்திக் கொண்டான். அரண்டுபோன முரளி- குளிருக்கு அண்டிக்கொள்ளும் குருவி போல தாயின் கழுத்தைக் கட்டிக் கொண்டான். அவளது மார்பு கூண்டுக்குள்ளே அந்தச் சின்ன இதயம் பயத்திலே படபடவென்று வேகமாகத் துடிப்பதை அவள் உணர்ந்தாள்.

''அம்மா! இங்க நிக்காதீங்க... நாம எங்கேயாவது போயிடலாம்'' குழந்தை அவளது காதுகளில் ரகசியமாகச் சொன்னான்.

எங்கே போவது? அழுகை நடுவிலே அவளுக்கு சிரிக்கவும் வந்தது. ''எங்கேடா போகிறது?''

''வேற வீட்டுக்கு - ரொம்ப தூரத்திலே அப்பாவுக்குத் தெரியாத ஒரு வீட்டுக்குப் போயிடலாம் அம்மா''... குழந்தை விம்மியபோது துயரத்தில் அவள் நெஞ்சு அடைத்தது.

சிறிதுநேரம் சாலை ஓரத்திலிருந்த ஒரு மரத்தடியில் அவள் ஒண்டிக்கொண்டு நின்றாள்... எத்தனை நேரமோ தெரியாது... சாலையில் போன கார்களும்... லாரிகளும் - எழுப்பிய வெளிச்சம் முகத்தில்பட... அவமானத்திலே உடல் சுருங்கிப் போனவளாக... காய்ச்சலடித்துக் கொண்டிருந்த குழந்தையை மார்போடு அணைத்துக் கொண்டு செய்வது அறியாது நின்று கொண்டிருந்தாள்.

''அம்மா குளிருது'' பற்களைக் கடித்தான் குழந்தை... துணிந்தவர்களுக்கு துக்கமில்லை. துறந்தவர்களுக்கு வெட்க மில்லை - என்று எண்ணியபடி ஷாலுக்குள்ளே சுற்றி கட்டி வைத்திருந்த கம்பளியை எடுத்தாள். முரளி மீது போர்த்தி நன்றாக சுற்றினாள். சால்வையை தன் தலைமீது போட்டுக் கொண்டு... பிஸ்கட் டின்னுடன் பொம்மையையும் மடியில்

கட்டிக்கொண்டு... மிகவும் துணிவுடன் சாலையில் இறங்கி லேசாகத் தூறிக் கொண்டிருந்த மழையில் கால் போன திக்கிலே நடந்தாள்.

நெடுஞ்சாலையில் மனித நடமாட்டமே காணவில்லை. அடிக்கொரு தடவை வேகமாக ஓடிய கார்கள் வாரி வீசிய சேறும் சகதியும் மேலே படாதிருக்க இடது புறமாக ஓடிய ஒரு பெரிய தெருவுக்குள்ளே நுழைந்தாள். இரவு வெகுநேரமாகி விட்டதால்... தெருவிலும் ஆள் நடமாட்டத்தைக் காணவில்லை. மழையினால் ஏற்பட்ட மின்விசை கோளாறு... தெருவின் முன்பகுதி விளக்குகள் எல்லாம் அணைந்து விட்டிருந்தன. கருப்பாக மண்டிக்கிடந்த இருளில்... குழிகளில் விழுந்தடித்துக் கொண்டு... கூடியவரை ஓரமாக நடக்கத் தொடங்கினாள்.

தன்னந்தனியே...ஏதோ ஒரு தெருவிலே...நடந்து கொண்டிருக்கிறோமே... எங்கே போகப் போகிறோம்... யார் வீட்டு வாசலில் போய் ஒண்டிக் கொள்ள முடியும். தனக்கே கேட்டுக் கொண்டே கேள்விகளுக்கு விடை காணாது திகிலுடன் நெஞ்சு படபடக்க நடந்து கொண்டிருந்தாள்.

எதிரே கொஞ்ச நேரத்தில் மின்மினிப் பூச்சியாகத் தெரிந்த விளக்கு... பெரியதாகிக் கொண்டு வருவதைக் கண்டாள். வாயிற்குள் இதயம் வந்துவிட்டது போன்ற பயங்கர உணர்வு. பட்டணத்து சந்து பொந்துகளில் பகலிலேயே என்னென்னவோ நடக்கிறதாக... பத்திரிகையில் படித்திருக்கிறாள்.

கொள்ளிவாய் பிசாசு போல எதிர்நோக்கி வரும் வெளிச்சம் என்னவாக இருக்கும்?

யார் செய்த புண்ணியமோ... சட்டென்று தூறல் நின்றது. பளிச்சென்று விளக்குகள் எரியத் தொடங்கின.

இருட்டிலே அவளுக்கு மருட்சியைக் கொடுத்தது... ஒரு



சைக்கிள் வண்டி... நடுத்தெருவில் ...மோதிக்கொள்ளும் வகையில் நடந்த பெண்ணின் மீது இடிக்காது.. வண்டியை வளைத்துக் கொண்டு போனவன்...சிறிது தூரம் சென்றதும் என்னவோ நினைத்துக்கொண்டவன் போல... திரும்பி வண்டியில் ஏறிக்கொண்டு வந்து அருகில் நிறுத்தினான்.

''நீங்க...வாத்தியார் திருவேங்கடத்து மூத்த மக கௌசல்யா அம்மாதானே?'' சொல்லி வைத்ததுபோல்க் கேட்டான். தூக்கிவாரிப் போட்டது அவளுக்கு. ஆனால் அதே சமயம் யாரோ தெரிந்தவர்கள் விசாரித்தது எத்தனை ஆறுதலாக இருந்தது!

''ஆமாம். நீங்க...'' தடுமாறினாள் கண்ணீரைக் கட்டுப் படுத்திக் கொண்டு. ''தெருவிளக்கு வெளிச்சத்திலே ஒரே நிமிஷந்தான் பார்த்தேன். அடையாளம் கண்டுகிட்டேன்... என்னைத் தெரியலையா... திட்டக்குடி முனிசாமி மகன்... காசிலிங்கம், திருவேங்கடம் ஸார்கிட்டே படிச்ச காசி.. நல்லா யோசிச்சுப் பாருங்கோ... அலமாரிக்கு கதவு போட உங்க வீட்டுக்கு ஒரு தடவை அப்பாவோட நான் வந்திருந்தேனே...''

''முத்துசாமி ஆசாரியோட மகன் காசியா... இங்கே... என்ன செய்துட்டு இருக்கீங்க...''

''இங்கே எங்க பரம்பரை தொழிலை செய்துட்டு இருக்கேன். ஒரு மரச்சாமான் கடையிலே.. பாதி நாள் வேலை - மீதி பாதி நாள் சொந்தமாக டி.வி. ஸ்டாண்ட் செய்கிறேன். அது கிடக்கட்டும், இந்த ராத்திரி வேளையிலே மழையிலே நனைஞ் சுட்டு நீ எங்கே... இப்படி குழந்தையோட புறப்பட்டுட்டே... என்னமோ மனதுக்கு விபரீதமாகப் படறது...''

முகத்தை மூடிக் கொண்டிருந்த கம்பளியை விலக்கிக் கொண்டு முரளி எட்டிப்பார்த்தான்.

"மாமா! அப்பா என்னையும் அம்மாவையும் அடிச்சு வெளியே தள்ளிவிட்டார். வேறே வீட்டைத் தேடிகிட்டு அம்மாவும் நானும் போய்க்கிட்டிருக்கோம்."

"என்னம்மா... குழந்தை சொல்லுது..."

"ஆமாம் மாமா, நான் சத்தியமாக சொல்றேன். வீட்டுக்குள்ளே காலை வச்சா என்னை வெட்டி இரண்டு துண்டாக்கிவிடுவேன்னு அப்பா கோபமா சொல்லி... எங்களை பிடிச்சு கேட்டுக்கப்பால் தள்ளி..." குழந்தை விசும்பி அழத் தொடங்கினான். கூடவே அவளும் விசும்பினாள்.

"இதென்ன கண்ணராவி! ஒரு படிச்ச மனுஷன் செய்கிற காரியமா... தெய்வச் செயலாலே என்னை இங்கே சந்திச்சீங்க... இல்லாட்டி உங்க கதி..."

"தாயும் புள்ளையும் சமுத்திரத்திலே இறங்கிவிட்டிருப்போம்..." தேம்பினாள் கௌசல்யா.

"இவ்வளவு பெரிய பட்டணத்திலே ஒரு தாய்க்கும் பிள்ளைக்கும் இடமில்லையா... நல்ல பேச்சு தங்கச்சி... நான் உன் கூடப் பிறக்கலை. ஆனால் ஒரே ஊரைச் சேர்ந்தவங்க... தெரிஞ்சவங்க. அந்த வகையிலே உனக்கு அண்ணன்... கவலைப்படாதே... வா. இப்படி என்னோட வா...என் வீட்டிலே உனக்கு நிறைய இடம் இருக்கு... எத்தனை கஷ்டம் வந்தாலும் வாழத் தெரிஞ்சுக்கணும். கோழை போல... எதுக்கம்மா சாவணும்...வா சைக்கிளைத் தள்ளிகிட்டு நான் முன்னே நடக்கிறேன். நீ மெல்ல வாம்மா...வீடு தூரத்திலேதான் இருக்கு... ஆனால் பேசிக்கிட்டே போனா கிட்டக்க இருந்தாப்பல தோணும்."

"இதுபோல கஷ்டங்களும் நஷ்டங்களும் எல்லாருக்கும் ஏற்படும் பொதுவான சங்கதிகள். அது நடுவிலே உதவிக்கு... ஒருத்தர் யாராவது இருக்காங்கன்னு தெரிஞ்சா... மலை போன்ற கஷ்டங்கள் எல்லாம்... சின்ன தூசி போல நமக்கு அலட்சியமாகப் போயிடும்... வாம்மா தங்கச்சி. வா..." பரிவுடன்... அன்புடன் அனுதாபத்துடன் அழைத்துக் கொண்டு சென்றான்.



## 6

கோடம்பாக்கம் நெடுஞ்சாலையினின்று உள்ளே பிரிந்து சென்ற பகவதியம்மன் தெருவின் முகப்பில்தான் அவனது வீடு இருந்தது. அவன் தந்தை முத்துச்சாமி மனைவி - மகனுடன் சென்னைக்குக் குடியேறியபோது.. ஊரிலிருந்த நஞ்சை நிலத்தை விற்ற பணத்தைக் கொண்டு அந்த வீட்டை வாங்கிப் போட்டிருந்தார். நெடுஞ்சாலைப் பக்கமிருந்த பகுதியை மட்டும் இடித்து இரண்டு கடைகள் கட்டி வாடகைக்கு விட்டிருந்தார். அம்மாவுக்குப் பின் அப்பா என்ற ரீதியில் பெரியவர்கள் போய்விட்டதும் காசிலிங்கம் தன்னந்தனியே அந்த வீட்டில் வசித்துக் கொண்டிருந்தான். அவன் பங்கிற்கு வீட்டின் முன்புறமிருந்த சிறிய தோட்டத்திற்குள் ஒரு தடுப்பை அமைத்து... அதைத் தனது தச்சுத் தொழிற் கூடமாக்கிக் கொண்டிருந்தான். வாசலில் சின்னதொரு வராந்தா நடை, ஒரு சிறு அறை- கூடம் - தாழ்வாரம் - சமையலறை - பின்பக்கத்து சிறு தோட்டத்திலே ராட்டினம் போட்ட கிணறு, வீடு... நாட்டு ஓடுகள் வேய்ந்த கூரை கொண்ட பழங்காலத்து வீடு.

வாடகைக்கு விட்டிருந்த கடைகளில் ஒன்றில் உள்ளூர்வாசி டீக்கடை நடத்திக்கொண்டிருந்தார். அடுத்ததாக இருந்த கடையில் பலசரக்கு வியாபாரம் நடந்து கொண்டிருந்தது.

காசிலிங்கத்திற்குக் கல்யாணம் என்ற பந்தம் தேவையில்லாத சங்கதியாக இருந்தது.

காலையில் டீக்கடையில் காப்பியையும் டிபனையும் முடித்துக் கொண்டான். பகல் வேளையில் நகரத்தில் வேலை பார்த்த மரச்சாமான் கடை அருகிலிருந்த ஹோட்டலில் சாப்பாட்டை முடித்துக் கொண்டான். பகல் பொழுது முழுவதும் தனது தச்சுக் கூடத்திலே டி.வி. ஸ்டாண்டுகள் செய்து கொண்டிருந்துவிட்டு... இரவு சாப்பாட்டை நெடுஞ்சாலையிலிருந்த ஹோட்டலில் முடித்துக் கொண்டான்.

இரவில் அருகிலிருந்த சினிமா கொட்டகையில் படம் பார்த்துவிட்டு நினைத்த நேரத்தில் கூடத்தில் கிடந்த கட்டிலில் முடங்கிக் கொள்வான். தனிக்காட்டு ராஜாவாக வாழ்ந்து கொண்டிருந்தவனுக்குத் திடீரென்று வீட்டை நடத்திக் கொடுக்கும் பெரும் பொறுப்பு வந்து சேர்ந்துவிட்டது.

அன்று இரவு... குழந்தையைத் தூக்கிக்கொண்டு அவனுடன் பின்னால் நடந்தாள்... வெகு நேரம் நடந்தாள். மனதில் துயரச் சுமையும், குழந்தையின் சுமையும் கொஞ்ச நேரத்தில் கனக்கத் தொடங்கின.

''வீடு ரொம்ப தொலைவிலிருக்கோ அண்ணா'' கவலையுடன் கேட்டுவிட்டாள்.

நகரத்தின் ஒரு கோடியிலிருந்து மறுகோடிக்கு அவளை நடத்தி அழைத்துச் செல்லும் நோக்கம் காசிலிங்கத்திற்கு இருக்க வில்லை. சற்று தொலைவிலிருந்த லாட்ஜின் வாசலில் நின்று கொண்டிருந்த பல பல ஆட்டோ ரிக்ஷாக்களில் அவனுக்குத் தெரிந்தவனைத் தேடிக் கண்டுபிடிக்கத்தான் சென்று கொண்டிருந்தான். நல்லவேளை அந்த நண்பன் மறுப்புத் தெரிவிக்கவில்லை.



''ஊரிலிருந்து தங்கச்சி வந்திருக்கு. குழந்தைக்கு காய்ச்சல். டாக்டர்கிட்டே காட்டிட்டு திரும்ப நேரமாயிடுச்சு... பத்திரமா இவங்களை ஏத்திக்கிட்டு கோடம்பாக்கம் வரை வரணும். என்ன சொல்றே... நான் பின்னாலே சைக்கிளை ஓட்டிகிட்டுவரேன்...'' ஏற்பாடு செய்தான்.

நட்டநடு இரவில் பகவதியம்மன் தெருவிலிருந்த அந்த வீட்டில் குழந்தையுடன் குடியேறினாள் கௌசல்யா.

''தங்கச்சி, நீயும் குழந்தையும் வீட்டுக்குள்ளேயே தூங்கிக் கோங்க. நான் வாசலில் போட்டிருக்கிற தச்சுக் கூடத்திலே படுத்துக்கிறேன்'' கூறிக் கொண்டே கயிற்றுக் கட்டிலையும் படுக்கையையும் தூக்கிக்கொண்டு வெளியேறி விட்டான்.

பகவதியம்மன் தெரு மிகவும் குறுகியதொரு சந்து. வீட்டு ஜன்னலிலிருந்து பார்த்தால்...எதிர்வீட்டு முற்றத்தில் காயப் போட்டிருக்கும் அப்பளங்களை எண்ணிவிடலாம்- அத்தனை நெருக்கம். அதைப்போலவே அக்கம் பக்கத்தவர்களின் அறியும் ஆவலும் மிகவும் அதிகமாகவேயிருந்தது.

காசிலிங்கம் சமாளித்துவிட்டான். ''கிராமத்திலிருந்து தங்கச்சி யும் - குழந்தையும் என்னோட இருக்க வந்திருக்காங்க. தங்கச்சி புருஷன் துபாய்க்கு வேலைக்கு போயிருக்கார். வர இரண்டு வருஷம் பிடிக்கும்...'' ஒரு கதையைப் பரப்பி விட்டிருந்தான்.

கௌசல்யாவுக்குப் பொய் பேசுவதில் விருப்பம் கிடையாது. ஆனால் ஆபத்து சமயங்களில் அதன் உதவியும் தேவையா யிற்றே? அக்கம் பக்கத்தவர்கள் ஆரம்பத்தில் அலுக்காது அவளிடம் விவரம் கேட்டுக் கொண்டிருந்தனர்.

கிளிப்பிள்ளையாக அவளும் காசிலிங்கம் சொன்ன கதையையே திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

குழந்தை முரளியையும் எச்சரித்து விட்டிருந்தாள். முரளி அதிபுத்திசாலியாக இருந்தான்.

''ஏண்டா குழந்தை! உன் அப்பா துபாய்க்கா வேலைக்கு போயிருக்கார்?'' வம்புக்கார அடுத்து வீட்டு அம்மா வாயைக் கிளறினால் பட்டென்று பதிலளித்தான்.

''பாட்டியம்மா! நான் ரொம்ப சின்னவன். என்னைக் கேக்கறீங்களே, அம்மாவைக் கேளுங்க... விபரமா சொல்லு.. வாங்க.''

''அடப்பாவிப் பய மகனே! இத்தனை சின்ன வயசிலே வெடுக்கு வெடுக்குன்னு பேசறானே...'' முகவாயில் கையை வைத்து அதிசயப்படுவதைத் தவிர அந்தம்மாளுக்கு வேறு வம்புகள் கிடைத்ததில்லை.

சில நாட்கள் வரைதான் அக்கம் பக்கத்துப் பெண்களிடையே கசமுசவென்ற பேச்சு இருந்தது. புதிதாக அங்கே வந்து குடியேறியிருக்கும் கௌசல்யாவைப் பற்றிக் கவலைப் பட்டார்கள். அறிய ஆவல் பட்டார்கள். பிறகு அடங்கிப் போனார்கள்.

காசிலிங்கம் பெருமுயற்சி செய்து- அருகிலிருந்த பள்ளிக் கூடத்திலே முரளியைச் சேர்த்து விட்டிருந்தான். ஆனாலும் கௌசல்யா நம்பிக்கையை இழக்கவில்லை. சில நாட்கள் செல்லட்டும்... அதற்குள் ஜயந்தனது கோபம் ஆறிப்போய் விடும். பின்னர் குழந்தையுடன் வீட்டுக்குத் திரும்பிவிடலாம் என்று தீவிரமாக நம்பிக் கொண்டிருந்தாள். அதுவரை... அங்கே ஹோட்டலில் எடுப்பு சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டிருக்கப் பிடிக்காது... காசிலிங்கத்தின் தாய்போன பின்பு, பரண்மீது கட்டிப் போடப்பட்டிருந்த சமையல் பாத்திரங்களை எடுத்துக் கொடுக்கச் சொல்லி... வீட்டையும் சமையலையும் நிர்வகிக்கத்



தொடங்கினாள்.

மாலையாகத் தொங்கிக் கொண்டிருந்த ஒட்டடைகளை அடித்து வீட்டைப் பெருக்கி, சாமான்களைத் துலக்கி - தரையைக் கழுவித் துடைத்து... தோட்டத்திலே குவிந்து கிடந்த குப்பைகளைக் கட்டி அப்புறப்படுத்தி... ஒரு வழியாக வீட்டைச் சீராக்கினாள்.

காசிலிங்கம் சாமான்களை வாங்கிப்போட வாய்க்கு ருசியாக வேளைக்குத் தேவையானதை சமைத்துப்போட்டு...சிக்கனமாக வீட்டுச் செலவை நடத்திக்கொண்டு போனாள்.

காசிலிங்கத்திற்கு இது ஒரு புது அனுபவமாக இருந்தது. இத்தனை நாளும் வாழ்க்கையில் இல்லாததொரு பிடிப்பு திடீரென்று ஏற்பட்டிருப்பதை எண்ணி மகிழ்ந்து போனான். காலையில் எழுந்து குளித்து - சுத்தமாக உடுத்திக் கொண்டு... காப்பி பலகாரம் சாப்பிட்டதும் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு கிளம்புவான். பள்ளிக்கூடம் செல்லப் புறப்படும் முரளியுடன் தெரு ஓரமாக நடந்தபடியே பேசிக்கொண்டு செல்வான். பள்ளிக்கூடத்தில் அவனை விட்டுட்டு... சைக்கிளில் டவுனில் தான் வேலை செய்யும் கடைக்குப் போய் விடுவான். பகல்பொழுது வீடு திரும்பியதும்...முரளியும் பள்ளியிலிருந்து வரும்வரை காத்திருந்து அவனுடன் கூட உட்கார்ந்து வேடிக்கையாகப் பேசிக்கொண்டே சாப்பிடுவான். பின்னர் குழந்தையை அழைத்துக் கொண்டு தனது தச்சுக் கூடத்திலே அருகே வைத்துக்கொண்டு வேலை செய்துகொண்டே கதை பேசி அவனைச் சிரிக்கச் செய்வான். முரளிக்கு காசிலிங்கத்தை மிகவும் பிடித்துவிட்டது. தந்தையிடம் காணாத ஒரு பரிவை - பாசத்தை அவனிடம் அனுபவித்த குழந்தை... மாமா என்ற உறவுடன் அவனிடம் மிகவும் ஒட்டிக் கொண்டு விட்டான்.

நாட்கள் பல சென்றன. கௌசல்யாவின் மனம் அமைதியில்லாது தவித்தது. குழந்தையின் வருங்காலத்தை உத்தேசித்து குடும்பகௌரவத்தையும் நினைத்துப் பார்த்து அவள் மறுபடியும் அந்த நரக வாழ்க்கைக்கு திரும்பிவிட மிகவும் விரும்பினாள்.

இரவும் பகலும் அதே சிந்தனையால் மனம் சங்கடப்பட்டாள்.

முடிவில் ஒருநாள் காலை அவள் காசிலிங்கத்திடம் வெளிப்படையாகச் சொல்லிவிட்டாள்.

''கணவன் மனைவின்னா ஆயிரம் இருக்கும். அதையெல்லாம் பாராட்ட முடியாது. குற்றங்களை மறந்து விட்டுக் கொடுத்தாத்தான் இரண்டு பேருக்கும் நல்லது. நான் திரும்பி எங்க வீட்டுக்கே போயிடணும்னு முடிவு எடுத்துட்டேன். அவர் மனம் இத்தனை நாளில் கொஞ்சம் மாறியிருக்காதா? அதனாலே அண்ணா நான் ஒரு கடிதம் எழுதிக் கொடுக்கிறேன். அவர் வேலை செய்கிற அலுவலகத்துக்குப் போய் அவர்கிட்டே கொடுத்துட்டு என்ன சொல்றார்னு பதில் கேட்டுகிட்டு வாங்க..'' என்றாள். எப்படியாவது கணவனுடன் சமாதானமாகி மறுபடியும் தன் வீட்டிற்குப் போய்விட வேண்டுமென்றதொரு ஆசை அவளுக்கு!

''அன்று இரவு கோபத்திலும் வீண் சந்தேகத்திலும் நீங்கள் கடுமையாகப் பேசி என்னையும், குழந்தையையும் வெளியே அனுப்பி விட்டீர்கள். நானும் வேறுவழியின்றி வெளியே வந்துவிட்டேன். இப்போது சிந்தித்துப் பார்க்கும்போது தவறு என்னுடையது என்றுதான் ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கிறது. நீங்கள் சந்தேகிக்கும்படி நான் சந்தர்ப்பங்களை உருவாக்கியிருக்கக் கூடாது. ஆனால் நீங்கள் என்னை நம்ப வேண்டும் என்று மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். நான் எந்தவிதமான குற்றமும் செய்யவில்லை. என்னையும் மீறி ஏற்பட்ட குழப்பங்களுக்காக... மன்னிக்க வேண்டுகிறேன். குழந்தை உங்கள்



அன்புக்கு ஏங்கிக் கொண்டிருக்கிறான். தற்சமயம் நான் பாதுகாப்பானதொரு இடத்தில்தான் இருந்து கொண்டிருக்கிறேன். மீண்டும் நானும் குழந்தையும் வீட்டுக்குத் திரும்ப மிகவும் ஆவலாகக் காத்துக் கொண்டிருக்கிறோம். அன்புள்ள கௌசல்யா.''

'கடிதத்தை உறையிலிட்டு காசிலிங்கத்தின் கையில் கொடுத்தாள். கட்டாயம் ஜயந்தனது மனம் மாறிவிட்டிருக்கும். குழந்தையுடன் வீட்டுக்கு வந்து சேரட்டும் என்று உத்தரவு கொடுப்பான் என்ற நம்பிக்கையுடன் அவள்... காத்திருந்தாள்.

மாலை வீடு திரும்பிய காசிலிங்கத்தின் முகத்தைப் பார்த்ததுமே அவளது உற்சாகம் வற்றிப் போய்விட்டது.

''என்ன அண்ணா சொன்னார்?'' ஆவலும் கவலையுமாகக் கேட்டாள்.

''உன் ஆசையைத் தடுப்பானேனுட்டுதான் நான் அவரைத் தேடிகிட்டு ஆபீசுக்குப் போனேன். இத்தனை வருஷம் அவரோட வாழ்ந்திருக்கே; ஆனால் அவரை நீ புரிஞ்சுக்கலை. முன்னே பின்னே பார்த்ததில்லை. கேள்விப்பட்டிருக்கேன். அன்னிக்கு உன்னையும்... குழந்தையையும் அந்த வேளையிலே வீட்டைவிட்டு விரட்டியடிச்சிருந்தாரே அப்பவே அவரை நான் புரிஞ்சுக்கிட்டேன். மனுஷன் நெஞ்சைப் பஞ்சுவடைச்சுக்கிட்டு இருக்கிற ஒரு இரக்கமத்தவன்னு நல்லா விளங்கிச்சு. உனக்காக நான் காகிதத்தை எடுத்துட்டு போனேன். அரை மணிக்கு மேலே வெளியிலே காக்க வச்சுட்டார். பரவாயில்லைன்னு காத்திருந்தேன். கடிதாசியை வாங்கிப் பார்த்தார். நீ யார்... உனக்கும் இந்த கடிதத்துக்கும் என்ன சம்பந்தம்னுகூட ஒரு கேள்வி கேட்கலை. அலட்சியமா கடிதத்தை சுக்கலாகக் கிழிச்சு குப்பைக் கூடையிலே போட்டுட்டு... நீங்க போகலாம்னார்.''

''பதில் வாங்கிட்டு வரச்சொன்னாங்க'' அப்படின்னுட்டு நின்னேன்.

''பதிலா! வீட்டை விட்டு ஓடினவளுக்கு பதில் என்ன சொல்றது? போய் சொல்லுங்க. ராத்திரி வேளையிலே பிள்ளையைத் தூக்கிட்டு.. நெஞ்சழுத்தமா வீட்டைவிட்டு புறப்பட்டுப்போன பெண் ஜாதி.. இப்போ திசைமாறி... எப்படி யெல்லாமோ வாழ்ந்திட்டு இருக்கிறவளை மறுபடி வீட்டுக் குள்ளே சேத்துக்கிறதுக்கு ஜயந்தன் மானம்கெட்டு மதிப்புகெட்டு போயிருக்கலைன்னு சொல்லுங்க, அப்படின்னு சத்தமா கத்திப்பேசி அனுப்பிவிட்டார். அறைக்கு வெளியே நின்ன ஆபீஸ் பையன் காதிலே பட்டுடப் போகிறதேன்னு எனக்கு வெட்கமா இருந்ததும்மா.''

''அப்படியா சொன்னார்.. நீங்க அவர் சொல்வதை நம்பறீங்களா அண்ணா?'' துக்கம் பீறிட்டு அழ... தடுமாறிக் கொண்டு கேட்டாள். பொலபொலவென்று கண்ணீர்த் துளிகள்... கண்களில் உதிர்ந்து உருண்டோடின.

''எப்படியம்மா நம்புவேன். ஆளைப் பார்த்ததுமே நல்லா புரிஞ்சு கொண்டேன். இந்த முரட்டு மனிதனோட இந்தச் தங்கச்சி எப்படித்தான் குடித்தனம் பண்ணிச்சோன்னு நினைச்சு ரொம்ப வருத்தப்பட்டேன். அம்மா!...ஒண்ணு சொல்றேன் கேட்பியா அம்மா...''

''என்ன அண்ணா?''

''இனி நீ அவரோட வாழணும்னு ஆசைப்படறதை விட்டுடு... ஒரு அண்ணன் தங்கச்சிக்கு சொல்ற புத்திமதியான்னு கேட்காதே. கல்லானாலும் கணவன் - புல்லானாலும் புருஷன் என்கிற காலமெல்லாம் மாறிப்போச்சு. உன்னைப்போல படிச்ச பெண்கள் இப்படிப்பட்ட முரட்டுத்தனமான ஆம்பிளைகிட்ட...அடி உதைப்



பட்டுக் கொண்டு வாழணும்னு அவசியமில்லை. இந்த மாதிரி ஆண்களை நம்பி வாழறதைவிட தங்களுக்கு தெரிஞ்ச படிப்பை நம்பி வாழறது மேல் அம்மா... என்னால் முடிஞ்சவரை உன்னை வச்சு... தங்கையைப் போல காப்பாத்த முயற்சிக்கிறேன். ஆனால் உன் கையில் ஒரு தொழில் இருக்கிறது நல்லதும்மா... அதுதான் உனக்கு பெரிய ஊன்றுகோலா'' உதவும்.

''கல்யாணத்துக்கு முந்தி நான் பள்ளிக்கூட ஆசிரியராக வேலை பார்த்தேன். அந்தப் படிப்பும் பயிற்சியும் கூட இருக்கு.''

''எதுக்கு நீ பக்கத்திலிருக்கிற தட்டெழுத்து நிலையத்திலே சேர்ந்து... தட்டெழுத்து... குறுக்கெழுத்தெல்லாம் சீரா கத்துக்கோம்மா. வாத்யார் வேலை கிடைக்காட்டி டைப்பிஸ்ட் வேலையாவது கிடைக்கும்.. என்ன சொல்றே?''

''உங்கள் யோசனைப்படியே செய்றேன் அண்ணா... அதுக்கு முந்தி நீங்க எனக்கு இன்னொரு காரியம் செய்ய முடியுமா?''

''சொல்லுமா?''

திட்டக்குடிக்கு ஒரு நடைபோய்... அப்பாகிட்டே எல்லாம் விவரமா சொல்லி அவர் யோசனையைக் கேட்டுக் கொண்டு வந்தா ரொம்ப உதவியா இருக்கும்.''

''இந்த வாரக் கடைசிலே... லீவு வரது. கிராமத்துக்கு ஒரு பயணம் போயிட்டு வரேன். ஆனால் இந்த நிலையிலே நீ கிராமத்துக்குப் போய்க்கிறது சாத்தியப்படாத காரியம் அம்மா. பட்டணத்திலாவது சண்டை ஆள் நமக்கென்னன்னு போயிடுவாங்கம்மா... கிராமத்திலே நீ உன் புருஷனை விட்டு வந்துட்டதாக ரொம்ப பேசிடுவாங்கம்மா... உன் அப்பாகிட்டே போய் நீ இருப்பது முறையின்னாலும்... யோசிச்சு செய்ய வேண்டிய காரியம். பிறகு உன் இஷ்டம் அம்மா?'' என்றான் காசிலிங்கம்.

திட்டக்குடிக்குப் போயிருந்த காசிலிங்கத்தின் வரவிற்காக அவள் மிகவும் ஆவலுடன் காத்திருந்தாள்.

ஊரிலிருந்து வந்த அவன் முகத்தைப் பார்த்ததுமே தெரிந்து கொண்டுவிட்டாள்.

அப்பாவிடமும் அவளுக்குத் தோல்வி! நம்பிக்கையெல்லாம் நலிந்து சிதறிப் போயின.

''ஊருக்குள்ளே போனதுமே விஷயம் சொல்லுன்னு போயிருந்ததைக் கண்டுகொண்டேன். ஜயந்தன் உனக்கு கணவர் இல்லைம்மா, பரம விரோதின்னு தெரிஞ்சுக்கோ. ஊர் கணக்கப் பிள்ளைக்கும் உங்கப்பாவுக்கும் உன் கணவர் கடிதம் எழுதிப் போட்டிருக்கார்.

''திருவேங்கடம் அவர்களின் மகள் என்னுடன் வசிக்க மறுத்து குழந்தையுடன் ஒருநாள் இரவு கொட்டும் மழையில் என்னுடன் நண்பனாகப் பழகினவனுடன் புறப்பட்டுப் போய்விட்டாள். இந்த அவமானத்தை தாங்கமுடியாது நான் ஊரைவிட்டே போய் விடலாமாவென்று தவித்துக் கொண்டிருக் கிறேன்.''

இப்படி ஒரு கடிதம் கணக்கப்பிள்ளைக்கும்.. ''உங்கள் மகள் குழந்தையுடன் காணாமல் போய்விட்டாள். கொஞ்சகாலமாக அவள் நடத்தையைப் பற்றி நான் சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தது முடிவில் உண்மையாகியது. என் வீட்டுக்கு வந்துபோய்க் கொண்டிருந்த என் நண்பனுடன் தொடர்பு கொண்டு - துணிவுடன் குழந்தையை எடுத்துக் கொண்டு மறைந்து விட்டாள். இந்த அவமானம் என் வாழ்க்கையை மிகவும் பாதித்து விட்டது.''

''இப்படி ஒரு கடிதம் உன் அப்பாவுக்கும் போட்டிருக்கிறார்.''

''கணக்கப்பிள்ளையிடம் பேசிக் கொண்டிருந்தபோது அவர்



தமக்கு வந்த கடிதத்தை எடுத்துக்காட்டி... உன்னைப் பற்றி மிகவும் கோபமாகப் பேசினார்.''

''உன் அப்பாவைப் பார்க்கப்போனபோது, தமக்கு வந்த கடிதத்தை காட்டி... அவர் குலுங்கி அழுதார்.''

''நீ என்னோடு தங்கியிருப்பதைப் பற்றி நான் மூச்சு விடவேயில்லை. இன்னும் உன் நிலைமை மோசமாகிவிடும் என்று அவரை சமாதானப்படுத்திவிட்டுக் கிளம்பினேன். தங்கச்சி இப்போ நீ கிராமத்துப் பக்கம் போகவே முடியாது...''

''உன்னைப் பட்டணத்தில் வாழவிடாது துரத்தினது போதாமல் ஜயந்தன் உன்னை கிராமத்துப் பக்கம் போக விடாது பெயரை நாசப்படுத்தி விட்டிருக்கிறார்.''

இன்னும் உனக்கு இந்த துரோகியோட வாழணும்னு ஆசை இருக்காம்மா?'' கோபமும் துயரமுமாகக் கேட்டான்.

இந்த அதிர்ச்சியைத் தாளமுடியாது அழுவதைத் தவிர அவளுக்குப் பதில் சொல்லவே தெரியவில்லை.

சில தினங்களுக்குப் பின்னர் அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது.

பலவழியிலும் அவளது வாழ்வை நாசப்படுத்திவிட்ட கணவனை நேரில் கண்டு... மனம் ஆறும் மட்டும் சில கேள்விகளைக் கேட்டுவிட்டு வர வேண்டும்.

மௌனமாக - கோழையாக - பயந்தவளாக - பணிவுடன் இருந்ததால்தானே தலையில் ஏறி மிதிக்காத குறையாகத் தன் காலடியில் அவளது உணர்வுகளைப் போட்டுத் தேய்த்து மிதித்தான்.

இனி எதற்குப் பயப்பட வேண்டும். தலைக்குமேல் ஓடும் வெள்ளம். ஆத்திரம் தீரக் கேட்க வேண்டும் . அவளது சூடான வார்த்தைகளைக்கேட்டு... வெட்கப்படட்டும்.. அப்போதுதான் மனக் கொதிப்பு கொஞ்சம் அடங்கும்.

குழந்தை முரளியைப் பள்ளிக்கனுப்பிவிட்டு வீட்டைப் பூட்டிக் கொண்டு கிளம்பினாள்.

நகரத்தில் அவன் வேலை பார்க்கும் அலுவலகம் அவளுக்குத் தெரியும். துணிவுடன் பஸ்ஸைப் பிடித்து அலுவலகத்தருகே யிருந்த நிலையத்தில் இறங்கினாள். லிப்டிற்குள் ஏறி... மூன்றாவது தளத்தை அடைந்தபோது அவளது நெஞ்சு படபடவென்று உணர்ச்சி வேகத்திலே துடித்தது.

என்ன கேட்கவேண்டும் - எப்படிப் பேச வேண்டும் என்ற ஒத்திகையுடன் வேகமாக ரிஷப்சனை அணுகினாள்.

''ஜயந்தன் அவர்களைப் பார்க்கணும்... அவர் எந்த அறையில் இருக்கார்.. சொன்னால்...''

மேஜைக்குப்பின் புன்னகையோடு நின்ற அந்தப் பெண் அவளை ஏற இறங்கப் பார்த்தாள்.

''நீங்க யார்னு சொல்லமுடியுமா?...''

நாக்கைக் கடித்துக் கொண்டாள் கௌசல்யா. ''ஜயந்தன் அவர்களுக்கு ரொம்பத் தெரிந்தவள். அவ்வளவுதான்.''

''ஸாரி மேடம்'' சிரித்தாள் அந்தப் பெண். ''மிஸ்டர் ஜயந்தன் ஒரு பத்துநாளாக லீவில் இருக்கிறார். அதுக்குப் பிறகு இங்கிருந்து மாற்றம் என்று கேள்வி.''

கோபத்தை விழுங்கிக் கொண்டு இறங்கி வந்தாள். ஆனாலும் மனதில் புயலாக கொந்தளித்த ஆத்திரத்தை அடக்க முடிய வில்லை. லீவில் இருப்பதென்றால் - வீட்டிலே தானே இருக்க



வேண்டும். நேரே வீட்டுக்குப் போனால்... ஆத்திரத்தை அடக்க மாட்டாது... இன்னொரு பஸ்ஸைப் பிடித்து... அவர்கள் தங்கியிருந்த நுங்கம்பாக்கம் பகுதிக்கு விரைந்தாள். அதற்குள் பொழுது உச்சியை அடைந்து விட்டிருந்தது. கோடைக் காலத்தின் துவக்கத்தைப் போல சூரியன் அன்று எரிச்சலோடு எரிந்தது. காலையில் வெறும் காப்பியுடன் வயிற்றை பொருட்படுத்தாது கிளம்பிவிட்டிருந்தாள். பஸ் நிலையத்தில் காத்திருந்து அலுவலகத்திற்கு நடந்து... ஏமாந்து திரும்பி வந்து... மறுபடியும் நடந்து அவள் மிகவும் சோர்ந்து விட்டிருந்தாள். பசி குடலை முறுக்கியது. தாகம் நாக்கை வாட்டியது. சுள்ளென்ற வெயில் தலையைப் பிளக்க தத்தித் தடுமாறிக் கொண்டு வீட்டருகே வந்து விட்டாள். கேட்டை தொடுமுன் ஒரு பெரிய அல்சேஷியன் உறுமிக் கொண்டு பாய்ந்து வந்ததைக் கண்டு அரண்டு போய்விட்டாள்.

''யாரும்மா நீ! வேளையில்லாத வேளையில் பிச்சை கேட்க வந்துவிட்டே?'' அதட்டிக் கொண்டே கட்டையும் குட்டையுமான ஒரு ஆள் கேட்டருகே வந்தான்.

''பிச்சைகேட்க வரலை! ஜயந்தன் அய்யா வீட்டில் இருக்காரான்னு கேட்க வந்தேன்.''

''ஜயந்தன் அய்யாவா?'' புருவங்களை உயர்த்தினான் அவன்.

''ஓ புரிகிறது. முன்னாடி இதில் குடியிருந்தவரைச் சொல்றீங்களா. அவர் காலி பண்ணிக் கொண்டுபோய் புதுசா இங்கே வேறே ஒருத்தர் வந்து ஒரு மாசமாகிறதே!... ஆமாம் அவர்கிட்டே உங்களுக்கு'' சந்தேகத்துடன் இழுத்தான் அவன்.

அவள் பேசவில்லை. வெறுப்புடன் திரும்பினாள்.

"சம்பளப்பாக்கியா.. சித்த முன்னாடிகூட ஒரு ஆள் வந்து அவரைத் தேடிட்டு போனார். கடைபாக்கியாம். பெரிய கடன்காரன் போலிருக்கு" வேலையாள் உரக்கப் பேசிக் கொண்டு போனது காதுகளில் கேட்டது.

பொங்கிப் போனாள் கௌசல்யா - கடன்காரன்தான் ஜயந்தன். வாழ்க்கையில் அவளுக்குப் பட்டிருந்த கடனை ஒழிக்காமல் ... அவள் கேட்க வந்ததை முடிக்க முடியாது பாக்கி வைத்துவிட்டுப் போயிருக்கும் ஒரு பெரிய கடனாளி.

அவனை அவள் இப்போது எங்கே போய்த் தேடுவாள்? தேடிக் கண்டுபிடித்துதான் பயன்?... துயரத்தில் உணர்வுகள் தோய்ய... கால்கள் பின்ன மெல்லத் திரும்பி நடந்தாள்.

## 7

கணவனுக்கு வேண்டாத மனைவி- அப்பாவுக்கு அவமானத்தை தேடிக் கொடுத்த மகள்.

இருவருக்கும் இனி அவளது உறவு தேவையில்லை.

இனி அவள் மேலே என்ன செய்ய வேண்டும்?

காசிலிங்கத்துக்குப் பாரமாக எவ்வளவு காலம் அவள் இருக்க முடியும்?

உடனடியாக ஒரு வேலை தேடிக்கொண்டாக வேண்டும். பள்ளி ஆசிரியர் வேலைக்கு மனுப்போட்டு முயற்சி செய்ய அவளிடம் சான்றிதழ்கள் இருக்கவில்லை. ஜயந்தனுடன் வாழாது வாழப் போவதாகக் கனவு கண்டு பி.யூ.சி படிப்பு, ஆசிரியர் பயிற்சி இத்யாதிகளுக்குண்டான சான்றிதழ்களை ஒரு கடித



உறையில் போட்டு ஒட்டி அப்பாவின் அலமாரியில் பத்திரமாக வைத்துவிட்டு வந்திருந்தாள்.

முடிவில் துணிவுடன் அப்பாவுக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டாள். சில தினங்களில் தபாலில் அவளுக்கு அந்தக் காகித உறை வந்து சேர்ந்துவிட்டது. ஆனால் அப்பா ஒரு வரிகூட கேட்டு எழுதவில்லை. இந்த முகவரியிலா இருக்கிறாய்? யாருடன் இருக்கிறாய்? கேட்கவே இல்லை. மூத்த மகளைப் பற்றிய நினைவை... அந்தக் கடித உறையுடன் துடைத் தெறிந்து விட்டார்.

கேள்விப்பட்ட இடங்களுக்கெல்லாம் பத்திரிகையில் கண்ட விளம்பரங்களுக்கெல்லாம் மனு எழுதிப் போட்டாள். நேராகச் சென்று விசாரித்துப் பார்த்தாள்.

பள்ளி ஆசிரியர் வேலை அப்படி சுலபமாகக் கிடைக்கும் வழியாக இருக்கவில்லை.

ஏதாவது ஒரு அலுவலகத்தில் வேலை தேடிக் கொண்டால்?

அதற்கு தட்டெழுத்து பயிற்சி தேவைப்பட்டது?

காசிலிங்கத்தின் உதவியுடன் அருகிலிருந்த தட்டெழுத்து நிறுவனத்தில் தட்டெழுத்து - சுருக்கெழுத்து இரண்டிலும் பயிற்சி பெற ஆரம்பித்தாள்.

வீட்டை கவனித்து நிர்வகிப்பது - குழந்தையைப் பொறுப்பாக வளர்ப்பது... இவற்றிற்கிடையே தட்டெழுத்துப் பயிற்சி. ஆரம்பத்தில் அவளுக்கு சிரமமாகத்தானிருந்தது. காசிலிங்கத்திற்குத் தொடர்ந்து தொல்லை தரக்கூடாது என்ற வீம்பில் அவள்... தீவிரமாக முயன்றாள். ஓராண்டு காலம் ஓடியது... தட்டெழுத்தில் இரண்டு பகுதிகளிலும், சுருக்கெழுத்தில் ஒரு பகுதியிலும் அவள் தேர்வில் வெற்றி பெற்றுவிட்டிருந்தாள்.

அடுத்தபடியாக வேலை வேட்டை.

இந்த தகுதிகளுக்குப் பின்னரும் வேலை கிடைப்பது அவ்வளவு எளிதான காரியமாக இருக்கவில்லை. பத்திரிகைகளில் வரும் விளம்பரம் அனைத்திற்கும் மனுப் போட்டாள். சில இடங்களிலிருந்து அழைப்பு வந்தது. நேர்முகமாக சென்றபோது அவளைவிடத் திறமை படிப்பு இத்யாதிகளுடன் வந்திருந்தவர்களுக்கு வேலை கிடைத்தது. அவளுக்கு ஏமாற்றம்தான் கிடைத்தது. அலுவலகத்தில் பையன் வேலைக்குக் கூட பலத்த சிபாரிசு தேவைப்பட்டதை உணர்நது மன அயர்ச்சி அடைந்தாள். அவளுக்கு சிபாரிசு செய்ய யார் இருக்கிறார்கள்?

விண்ணப்பம் செய்து கொண்ட ஒரு அலுவலகத்து வேலைக்கு நேர்முகப் பார்வைக்கு சென்றுவிட்டு மனம் தளர்ந்துபோய் அவள் பஸ் நிலையத்தில் நின்று கொண்டிருந்தாள். அவள் போக வேண்டிய பஸ் வர அன்று வெகுநேரம் சென்றது... காத்துக் கொண்டிருந்தாள்.

அலுவலகத்தில் வேலை செய்கிறவர்கள் போல காணப்பட்ட இரு இளம்பெண்கள் அவள் அருகே பஸ்ஸிற்காக நின்று கொண்டிருந்தனர். பொழுதை ஓட்ட பேசிச் சிரித்துக் கொண்டிருந்தனர். சினிமா...சாப்பாடு... என்று என்னென்னமோ பேசிக் கொண்டிருந்தவர்களில் ஒருத்தி அழுத்தமாகச் சொல்லியதைக் கேட்டு கௌசல்யா திடுக்கிட்டுப் போனாள்.

அவள் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

அவர்கள் அவளது கணவனைப் பற்றியல்லவா பேசுகிறார்கள். போக்குவரத்து இரைச்சலில் காற்றோடு கரைந்து கொண்டுபோன அவர்கள் பேச்சைக் காது கொடுத்து கேட்டு அறிந்து கொள்ள இன்னும் சற்று அருகில் நெருங்கி அவர்கள் பின்னால் வந்து நின்று கொண்டாள்.



ஜயந்தன்! என்ற பெயரைக் கேட்டதும் இன்னமும் அவள் ஏன் இப்படி அதிர்ந்து நிலைகுலைந்து போகவேண்டும்? அவளுக்கே விளங்காத ஒரு அதிசயம்.

''எந்த ஜயந்தனை சொல்றே.. ஓ! அந்த உரக்கம்பனியில் பெரிய வேலை. நீல பியட் வச்சுக்கொண்டு ரொம்ப இனிக்க பேசுவானே?''

''அவனேதான்... படுபோக்கிரி. ஆள் அழகன்.. ஆனால் துப்பட்டிக்காரன் என்பாங்க. அதுபோல அவனது படிப்பு தோற்றம், இதுகளை மட்டும் பார்த்துட்டு மயங்கிப் போயிட்டா... நம்ப ரஞ்சனி''.

''அப்படியா... ரஞ்சனிக்குக் கல்யாணம் ஆயிட்டதுன்னு கேள்விப்பட்டேன்'' அதுக்குப்பிறகு அவள் வெளிநாட்டுக்கு கணவனுடன் போ:யவிட்டதாகச் சொன்னாங்க. இதுதானா விஷயம்? ரஞ்சனிக்கும் ஜயந்தனுக்கும் கொஞ்ச காலமா காதல். ஒரு தடவை கடற்கரையிலே நாம அவளை அவனோட சந்திச்சது ஞாபகமில்லையா... என் பியான்சின்னு கூட அறிமுகப் படுத்தினாளே...''

''ஆமாம்..ரஞ்சினி அவனைக் கல்யாணம் செய்துக்கலையே ஏன்?''

''அவங்களுக்குள்ளே என்னவோ... கேட்டா ரஞ்சனி மேல்தான் தப்பு. அதனாலேதான் அவன் அவளைவிட்டுட்டு ஒரு கிராமத்துப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டான்னு சொல்றாங்க. இன்னும் விசாரிச்சா... அவன் மேலே தப்பு... ரொம்ப குடிக்கிறான்னு ரஞ்சனி மறுத்துட்டா... மனம் கசந்து வேறு ஒருத்தனை கட்டிக் கொண்டு வெளிநாட்டுக்கு போயிட்டாங்கறாங்க.''

"மொத்தத்திலே ஜயந்தனுக்கும் - ரஞ்சனிக்கும் கல்யாணமாக லேன்னு சொல்லு... ஆமாம் ஜயந்தனை சமீபத்திலே பார்த்தியா என்ன?"

"பார்த்தேன்... அவன் மனைவி அவன் கூட வாழலையாம். விட்டுட்டு போயிட்டாளாம். நம்ம நிர்மலா அந்த ஆபிசிலேதான் வேலைபார்க்கிறா... அவ சொன்னா... அவனுக்கு இங்கிருந்து கல்கத்தாவுக்கு மாற்றலாகிவிட்டதாம். இப்போ ஒரு புது சிநேகிதியாம்."

தொண்டையை அடைத்த வேதனையை விழுங்கிக் கொண்டாள். கண்களை மறைத்த கண்ணீரை சமாளித்துக் கொண்டு பஸ் வரும் திக்கைப் பார்த்தாள்... கௌசல்யா... நான்கு வருஷம்... ஒருத்தனுடன் மனைவி என்று வாழ்ந்து விட்டதின் விளைவு? நாலாயிரம் வருஷம் பழகிவிட்டது போன்றதொரு பாசம், ஆழமாகத் தன் மனது படுத்துவதை உணர்ந்தாள்.

ஜயந்தனைப் பற்றி யாரோ மூன்றாவது மனிதர்கள் பேசுவது கேட்டு அப்படி வேதனைப்படுகிறாளே?... கவலைப்படு கிறாளே. அவன் அவளைப்பற்றி சிறிதாவது நினைத்துப் பார்க்கிறானா? ஆணுக்கும் பெண்ணுக்கும் உணர்வுகளில் எத்தனை வித்தியாசம். எத்தனையோ முயன்றும் அவள் மனதினின்று ஜயந்தனது நினைவுகளை விரட்டி... வெறுப்பை வரவழைத்துக்கொள்ள முடியாத ஒரு கோழைத்தனம் ஏன்?... ஜயந்தனைத் தேடிக் கொண்டு அவள் கல்கத்தாவுக்குப் போக முடியாது. ஆனால் அவனைத் தேடிக்கொண்டு ஓடும் நினைவைத் தடுக்க முடியாது போலிருக்கிறதே.

பஸ் வந்ததும் அந்தப் பெண்கள் பயணப்பட்டு விட்டனர். வீட்டுக்கு வந்ததும் வெகுநேரம் அவள் தன் கணவனைப் பற்றியே நினைத்துக் கலங்கிக் கொண்டிருந்தாள்.



ஆரம்பத்திலிருந்து அவர்களுக்குள் நிறைவான அன்பான மணவாழ்க்கை அமையாதிருந்ததற்கு அந்த ரஞ்சனி ஒரு காரணம். அந்த ரஞ்சனியை மணந்து கொள்ளாது புறக்கணித்து விட்டு கிராமத்தைத்தேடி வந்ததின் நோக்கம்? வேறு காரணம் ஏதேனும் இருக்குமா?

மறுபடியும் வேலை தேடும் படலத்தில் மும்முரமாக இறங்கினாள். மறுபடியும் - தோல்விமேல் தோல்வி - காலம் விரைந்து கொண்டு சென்றது. அப்பொழுதுதான் அன்று காலை பத்திரிகையில் அந்த விளம்பரத்தைப் படித்தாள்.

ஊனமுற்றோர் இல்லத்திற்கு தேவை - என்ற தலைப்பில் வெளிவந்திருந்த சிறு விளம்பரம்.

"புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள எங்களது ஜோதி இல்லத்திற்கு பெண் கணக்கர் தேவை. ஊனமுற்ற பெண்களின் பாதுகாப்பு, பயிற்சியில் ஈடுபட்டுள்ள இந்த இல்லத்திற்கு அன்பும் அனுதாபமும் தட்டெழுத்துப் பயிற்சியும் அனுபவமும் உள்ள பெண் கணக்கர் தேவை. சம்பளம், சலுகை இவைகளைப் பற்றி நேர்முகப் பார்வையில் மதிப்பீடு செய்யப்படும் - தலைவி சாருமதி."

விளம்பரத்தைக் கண்டதும் உடனடியாக எழுதிப் போட்டாள். மிகவும் ஆவலுடன் பதிலுக்குக் காத்திருந்தாள்.

ஒருவார காலத்திற்குள் பதிலும் வந்தது. நேர்முக பார்வைக்கு அழைப்பு அனுப்பியிருந்தார் தலைவி.

பூந்தமல்லி நெடுஞ்சாலையின் கடைசிப் பகுதியிலிருந்து பிரிந்து சென்றதொரு பாதைக்குள்ளே சில கிலோமீட்டர் தொலைவில்... புதிதாக உருவாகிவிட்டிருந்ததொரு கட்டடத்தில் ஜோதி இல்லம்.

நகரத்தின் நடுவிலிருந்து வெகு தொலைவிலிருந்த போதிலும் அந்த வேலைக்கு வந்து தலைவியின் அறைவாசலில் காத்திருந்த பெண்களின் கூட்டத்தைக் கண்டதுமே நடுநடுங்கிப் போனாள் கௌசல்யா.

பி.ஏ. வரை படித்த பெண்கள் - ஏற்கெனவே அலுவலகங் களில் தட்டெழுத்துப் பணியில்... அனுபவமிக்கவர்கள் என்று அணியாக இருந்த கூட்டத்திலே தனக்கு வாய்ப்பு கிட்டும் என்ற நினைப்பு துளியும் இன்றி... உணர்வுகள் தொய்ந்து - உற்சாகம் மங்கி தன்முறை வரும்வரை... பெஞ்சின்மேல் விரக்தியாக உட்கார்ந்திருந்தாள்.

''திருமதி கௌசல்யா...''

அழைத்தாள் ஒரு பெண்மணி.

ஜோதி இல்லத்தின் ஊழியரில் ஒருத்தி போலும்... திடுக்கிட்டு விழித்துக் கொண்டு எழுந்து சுற்றிலும் பார்த்தாள். அவள்தான் வரிசையில் கடைசி.

இத்தனை பெயர்களில் யாரையாவது... தலைவி தேர்ந்தெடுத் திருப்பார்கள். ஒப்புக்கு...எல்லா நிறுவனமும்... அவளை அழைத்தது போல இங்கேயும் அழைக்கிறார்கள் - மனதிலே தெம்பு இன்றி நடை தளர்ந்து உள்ளே சென்றாள்.

தலைவி சாருமதிக்கு அறுபது வயதுக்கு மேலிருக்கும். தும்பைப் பூவான தலை, முகத்திலே வயதிற்கேற்ற சுருக்கங்கள்... ஆனால் கண்களில் ஒரு தனிப்பட்ட அமைதி...

மற்ற இடங்களில் நேர்முக அழைப்பிற்குப் போனபோது அவளைச் சிலர் நிற்க வைத்தே பேசி கண நேரத்தில் வெளியே தள்ளிவிட்டிருந்தனர்.

''உட்காரம்மா...''



தலைவி இடது கையைத் தூக்கியபோது கவனித்தாள். ஊனமுற்றோர் இல்லத்தில் ஈடுபாடு கொள்ள காரணம் ஓரளவு விளங்கியது.

தலைவியின் இடதுகை நெருப்புக் காயத்தினால் வெந்து - விரல்கள் சுருங்கி - வளைந்து நீட்ட முடியாது ஊனமாகி விட்டிருந்தது.

எடுத்த எடுப்பிலே தலைவி கேட்டாள்.

''இதற்குமுன் எந்த அலுவலகத்திலாவது அனுபவம் உண்டா?''

''தட்டெழுத்திலும் சுருக்கெழுத்திலும் தேர்ந்துவிட்ட ஒரே தகுதிதான். முன்பின் அனுபவம் கிடையாது!'' கௌசல்யாவின் தொண்டை அடைத்துக் கொண்டது.

''....கொஞ்சம்கூட அனுபவம் இல்லை என்றா சொல்றே?''

தலைவி அதிசயத்துடன் கேட்டதும் கௌசல்யா கண் கலங்கிப் போனாள்.

''ஆசிரியர் வேலை பார்த்துக் கொண்டு... கிராமத்திலே இருந்தவ கல்யாணமானதும் சென்னைக்கு வந்தேன்'' அதற்கு மேல் பேச முடியாது நிறுத்திவிட்டு சட்டென்று வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

''உங்கள் கணவருக்கு என்ன ஆயிற்று?'' அனுதாபத்துடன் தலைவி கேட்டாள்.

''கணவர் என்னை விட்டுப்போய் விட்டார்... உண்மையை முழுவதும் சொல்லி விடுகிறேன். பிறகு உங்க இஷ்டம்'' என்று திணறிய கௌசல்யா தன்னைப்பற்றிய விபரம் முழுவதையும் வேகமாகச் சொல்லி முடித்தாள்.

''காசிலிங்கம் கல்யாணமாகாத தனி மனிதர் - நான் கணவர் இல்லாத பெண்...இருவரும் சேர்ந்து வசிப்பது என்றால். அண்ணன் தங்கைபோல பரிசுத்தமானதொரு அன்போடு ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டாலும் உலகம் அதை நீடித்து நம்பாது என்ற கலக்கத்தினால்தான் நான் தனியே வாழத் தகுதி தேடிக்கொள்ள தட்டெழுத்து பயிற்சியை மேற்கொண்டேன். எத்தனையோ இடங்களில் வேலை தேடிப் போனேன். கிடைக்கலை. அனுபவம் இல்லை என்று அனுப்பி விட்டார்கள். எங்கேயாவது ஒரு இடத்தில் வேலை கிடைத்தால்தானே அனுபவம் ஏற்படும்... முதலுக்கே மோசமென்றால்..'' துக்கத்துடன் திணறினாள்...

தலைவி தனது வலது கரத்தை நீட்டி அவள் கையை மெல்லத் தொட்டு தட்டினாள்.

''கவலைப்படாதே. என்னவோ உன்னைப் பார்த்ததும் எனக்குப் பிடித்து விட்டது. பளிச்சென்று ஒளிவு மறைவு இல்லாமல் நீ பேசினது அதற்குமேல் பிடித்துவிட்டது. இது ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு தரும் இல்லம். வாழ்க்கையில் நீயும் ஒரு வகையில் ஊனமுற்றவளாக இருக்கிறாய்... உனக்கு இந்த வேலையைத் தருகிறேன். அதற்கு ஏற்றபடி நடந்து கொள்வது உன்பாடு. மாதம் முன்னூற்று ஐம்பது ரூபாய்கள்... ஆசிரியர் பயிற்சியும் கூட இருப்பதால்... இங்குள்ள ஊனமுற்ற முதிய பெண்களுக்கு... கல்வி போதிக்கவும் நீ உதவ வேண்டும் என்ன சொல்றே?''

தடைசொல்வதற்கு ஏதும் இருக்கவில்லை. சம்மதம் தெரிவித்துவிட்டாள். காசிலிங்கத்திற்கு முதலில் மனத்தாங்கலாகத்தானிருந்தது. அண்ணனாக இருந்து கடைசிவரை காத்து ரட்சிக்க தான் இருக்கையில் அவள் தனியாக வீடு தேடிக் கொண்டு பிள்ளையுடன் வாழப் புறப்படு விட்டதைக் கண்டு



மனம் வருந்தினான். தீவிரமாக சிந்தித்தபோது அதுவும் சரியென்றுதான் அவனுக்குப் பட்டது. தன் கல்வி - திறமை இவைகளை ஊன்றுகோலாக பற்றிக் கொண்டு அவள் வாழ முயற்சிப்பது பாராட்டுக்குரிய விஷயம் என்று எண்ணி அவளுக்கு வேண்டிய உதவிகளைத் தந்தான்.

ஜோதி இல்லத்தருகே இருந்த ஒரு சந்தில் ஒரு சிறு வீட்டின் முன்பகுதியில் ஒட்டுக் குடித்தனத்தில் வாழ அவள் இடத்தை வாடகைக்கு எடுத்துக் கொண்டான். அந்த ஆண்டு முடிவு பெற்றதும் மகனை அருகிலிருந்த பள்ளிக்கு மாற்றிக் கொண்டாள். தன்னந்தனியாகப் பாடுபட முயன்றபோது வாழ்க்கையிலுள்ள ஒவ்வொரு திருப்பமும்... பயங்கரமாக... சிரமமாகத்தானிருந்தது. ஆனால் துணிவுடன் போராட முன் வந்தவளுக்கு... ஒவ்வொரு தடங்கலும் ஒரு சவாலாகவே தான் தோன்றியது.

மாதத்திற்கு ஒருமுறை - காசிலிங்கம் ஓய்வு கிடைத்தபோது வந்து தங்கையைப் பார்த்துவிட்டுப் போய்க் கொண்டிருந்தான்.

ஆரம்பத்தில் அங்கேயும்... வம்புகள் பரிமாறப்பட்டன. தன்னந்தனியே ஒரு குழந்தையுடன் ஒரு இளம்பெண் வசிக்கிறாள் - எவனோ ஒருத்தன் அண்ணன் என்று வந்து போய்க் கொண்டிருக்கிறான் - கல்யாணமானவள் என்பதற்குத் தாலிச்சரடும் - குங்குமமும்தான் சாட்சி. கணவன் எங்கே? கவலைப்பட்டனர் மற்ற குடியிருப்புப் பகுதியினர்.

ஒருசமயம்... தாலிச்சரட்டை அணிந்து கொண்டு... குங்குமப் பொட்டு துலங்க குடும்பப் பெண்போல....வேறு இழிவான காரியத்தில் ஈடுபட்டிருப்பாளோ....

வேலைக்குப் போகிறாளாமே, உண்மையா? பக்கத்து வீட்டுக்காரக் கிழவருக்கு சந்தேகம். ஒருநாள் அவள் பின்னால்

பஸ்ஸில் புறப்பட்டு ஜோதி இல்லம்வரை... சென்று பார்வை யிட்டு உண்மை என்று கண்டுபிடித்து வந்தார்.

புருஷனை விட்டு வந்திருப்பவள் - நடத்தை பிசகோ... என்னவோ... நீ போய் அவகிட்ட பேசிக்கிட்டு... நிக்காதே... அதட்டி தன் மகளை அடக்கிய பின்பகுதி குடித்தனக்காரி. சில நாட்களில் பல்லை இளித்துக் கொண்டு தானே பரிவுடன் பழக நெருங்கினாள்.

அக்கம்பக்கத்திலிருந்த குழந்தைகளுக்கு அந்திப் பொழுதில் பள்ளிக்கூடம் கொடுத்த வீட்டுப்பாடங்களில் உதவி செய்தாள் கௌசல்யா.

''கணக்கு சரியா வரல்லையா? இங்கே வா... சொல்லித் தரேன்... சரித்திர பாடமா? உட்காரு சேர்ந்து படிப்போம்... பூகோளம் உனக்குப் பிடிக்காதா? தெரிஞ்சு கொண்டா ரொம்ப நல்லா இருக்குமே...''

தன் குழந்தையோடு மற்ற குழந்தைகளையும் அரவணைத்துக் கொண்டு அன்போடு பழகினாள். அங்கு குடியேறிய சில மாதங்களில் தெருவே அவளுடன் நட்புரிமை கொண்டாடத் துவங்கிவிட்டது.

''டேய்! அந்தப் பெண்ணை அப்படி முறைக்காதே - அது எங்க பேட்டைப் பொண்ணு - எங்களுக்கு தங்கச்சி போல... எங்க குழந்தைகளுக்கு வாத்தியார்... உன் கை வரிசையை வேறே இடத்திலே வச்சுக்கோ..'' தெருவுக்கே... ரவுடி என்று பெயர் வாங்கிய சோலையப்பனுக்கு அவள் மீது பரிவு - கருணை - அவளைக் காப்பது தன் பொறுப்பாக நினைக்கும் துணிவு ஏற்பட்டிருந்தது

''காரக்குழம்பு வச்சப்போ உன்னை நினைச்சுகிட்டேன். வேலை செஞ்சிட்டு களைச்சு வர்றியே..''கோடி வீட்டு



குப்பம்மாள் அனுதாபத்துடன் கிண்ணத்திலே குழம்புடன் வந்தாள்.

''சாவியை எங்கிட்டே உட்டுட்டுப்போ... குழாயிலே தண்ணி அடிச்சு ஒருகுடம் உனக்கும் வச்சுட்டுப் போறேன். என்னைப்போல நீயும் நாதியத்துப் போயிருக்கே. நாம ஒருத்தருக்கு ஒருத்தர் உதவாட்டா?'' சட்டம் பேசினாள்... நடுவீட்டுக் குடித்தனக்காரி... சிறு வயதிலே விதவையாகிவிட்ட அலமேலு ஆப்பம் சுட்டு விற்று பிழைப்பை நடத்தி வரும் துணிச்சல்காரி...

ஆபீசர் மனைவி என்று பெரும் அந்தஸ்திலே தனி வீடு தோட்டம் கார் என்ற தகுதிகளுடன் வாழ்ந்த காலத்திலே இல்லாத ஒரு நிம்மதி அவளுக்கு அந்த ஒண்டுக் குடித்தனத்தில் - கீழ் மட்டத்து சராசரி மனிதர்களுடன் வாழும் நிலையில் கிடைத்து விட்டிருந்தது. எல்லாருக்கும் நல்லவளாக, உதவி செய்யும் பண்பானவளாக, • சிநேகிதியாக... நெருக்கமாக இணைந்து அவர்களுடன் வாழ்ந்தாள். தெருவிலே யார் வீட்டிலேயாவது கல்யாணம் கூடிவிட்டால்... கூப்பிடு வாத்தியார் அம்மாவை - அழகாக தலை ஜோடனை செய்து கொடுப்பாங்க... என்று கல்யாண வீட்டார்கள் அழைத்தனர்.

யாராவது இறந்துபோனாலோ... வாத்தியார் அம்மா வந்து திருவாசகத்திலிருந்து ஒரு பதிகம் படித்தால்தான் செத்தவன் சுவர்க்கத்துக்குப் போவான் போல ஒரு நம்பிக்கை அவர்களுக்கு. உடம்புக்கு முடியாம கிடக்கும் தாத்தாவை ஆஸ்பத்திரியில் அனுமதிப்பதா வீட்டோட வச்சுக்கொள்வதா? ஆலோசனை சொல்ல அவளைத் தேடினர்.

தெருவில் உள்ள அத்தனை பேருக்கும் அவள் உறவாகிப் போனாள். கணவன் - அப்பா இருவராலும் கைவிடப்பட்ட கௌசல்யாவுக்கு இப்போது எத்தனை நண்பர்கள்

உறவினர்கள் அவளைப் பத்தி அக்கறை தெரிவிக்க எத்தனை பேர்கள். அவளாலேயே நம்ப முடியாத ஒரு முன்னேற்றம். காலம் இந்த ரீதியில் மிக விரைவாக ஓடிக்கொண்டிருந்தது.

காசிலிங்கம் இன்னமும் தனிக்கட்டையாகவே வாழ்ந்து கொண்டிருந்தான். தங்கை பத்மாவுக்கு குழந்தை பிறந்திருக்கிறது - அடுத்த சகோதரி சுபாவுக்குக் கல்யாணமாகியது. தம்பி கணேசன் பிளஸ் டூ முடித்துவிட்டு பக்கத்து கிராமத்து மருந்துக்கடையில் வேலை பார்க்கிறான். அப்பா திருவேங்கடம் வேலையினின்று ஓய்வு பெற்றுக் கொண்டுவிட்டார். உடம்புக்கு முடியாமல் வீட்டோடு இருக்கிறார். காசிலிங்கம் ஊர்போய் வந்தபோதெல்லாம் இப்படி ஏதாவது ஒரு சேதியைக் கொண்டு வந்து சொல்லிக்கொண்டிருந்தான். பிறந்த வீட்டார்களை அவள் பார்த்து வருஷங்க்ள் பல சென்று விட்டிருந்தன. ஆனாலும் அவர்களைப்பற்றி அப்போதைக்கப்போது ஏதாவது தெரிந்து கொண்டுதான் இருந்தாள். ஆனால் வருஷங்கள் ஏழு ஓடியும் - கணவன் ஜயந்தனைப் பற்றிய சங்கதி ஏதுமே அவளுக்குத் தெரியவில்லை. ஒருசமயம் அவன்... வேறு ஒருத்தியை மணந்து கொண்டு வாழ்கிறானோ என்னவோ..

அதெப்படி சாத்தியப்படும். விவாகரத்து செய்யாது மறுமணம் செய்து கொள்வது சட்டவிரோதமாயிற்றே-

எண்ணி மனம் கலங்கியபோது அவளுக்கு சிரிப்பும் வந்தது.

ஜயந்தன் சட்டத்தைப் பற்றியோ சமூகத்தைப் பற்றியோ என்றைக்காவது அக்கறை காட்டியிருக்கிறானா?

கட்டிய மனைவி நண்பனுடன் ஓடிவிட்டாள் என்று கூசாது கதை கட்டியவனுக்கு...மறுமணம் செய்து கொள்ள வழியா இருக்காது? முதல் முதலாகக் கல்யாணம் செய்து கொள்கிறவன் போல...



முதல்முதலாக ஒரு பெண்ணைக் கண்டு காதலிப்பது போல நடிக்கவா தெரியாது.

ரஞ்சனி என்பவளைக் காதலித்து கல்யாணம் செய்து கொள்ளும்வரை வந்துவிட்டு உதறிவிட்டு.. கிராமத்திற்கு வந்து... கோலம் போட்டுக் கொண்டு நின்றவள்முன்... வேஷம் போட்டவனாச்சே? வாழ்க்கையில் தன் முயற்சியாலேயே அவள் நிமிர்ந்து நின்றாள். அன்புகாட்ட மகன் இருந்தான். பசியில்லாது வாழ வேலை இருந்தது. அரவணைத்துக் கொள்ள தெரு மக்கள் அத்தனை பேரும் இருந்தனர். ஆனாலும் மனதில் ஒரு மூலையில் ஏக்கம் ஒரு சிறு துளியளவு நெருடிக் கொண்டிருந்தது.

ஜயந்தனின் அன்பான - பணிவான - பொறுமையான நல்ல மனைவியாகத்தானே அவள் வாழ முயன்றாள்.

அவன் ஏன் அவளைப் புரிந்துகொள்ள மறுத்துவிட்டான்.

கணவன் இறந்துவிட்டான் என்றபோது ஒரு பெண்ணுக்கு ஒரே துக்கத்துடன் போய்விடுகிறது.

கணவன் இருந்தும் சேர்ந்து வாழ முடியாத நிலை... விதவை என்பதிலும் பெரிய கொடுமையாச்சே...

எண்ணி எண்ணி தன்னுள் மருகிக்கொண்டுதான் இருந்தாள்.

## 8

அன்று ஜோதி இல்லத்தின் ஆண்டுவிழா. இல்லத்திலே நூற்றுக்குமேற்பட்ட ஊனமுற்ற பெண்கள் தங்கியிருந்தனர். இருபதிலிருந்து எழுபது என பல தரப்பட்ட வயதினர் - பலவகை

ஊனங்களைக் கொண்டவர்கள். இல்லத்து கட்டடத்தின் முன்பக்கமிருந்த வெளியில் அமைக்கப்பட்ட கொட்டகை விழாவுக்காக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஒரு பக்கம் ஊனமுற்றவர்கள் அமர்ந்துகொள்ள வசதிகள் செய்யப்பட்டிருந்தது. சக்கர வண்டியைத் தாமே தள்ளிக்கொண்டு வந்து அங்கே சில பெண்கள் வந்து அமர்ந்து கொண்டனர் - சிலரை இல்லத்துப் பெண் ஊழியர்கள் கைத்தாங்கலாக நடத்திக் கொண்டு வந்து உட்கார வைத்தனர்- சிலர் தமது ஊன்றுகோல் உதவியுடன் மெல்ல நடந்து வந்து தாமே உட்கார்ந்து கொண்டனர். மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலிருந்தவர்கள் கட்டடத்திற்குள்ளேயே தங்களது படுக்கையிலேயே தங்கியிருந்தனர். விழாவில் நடக்கும் நிகழ்ச்சி விவரங்களை அருகில் பொருத்தப்பட்டிருந்த ஒலி பெருக்கியால் அவர்கள் அறிந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அவர்களை அழைத்து வந்து உட்கார வைக்கும் பணியில் கௌசல்யாவும் ஒரு சேவகியாக ஈடுபட்டிருந்தாள். ஜோதி இல்லத்தின் சீருடையான பச்சைக்கறை... வெள்ளை நூல் சேலை தரித்துக் கொண்டு விழா சேவகி என்னும் அறிவிப்புப் பட்டயத்தை தோள்பட்டையில் பொருத்திக் கொண்டு பரபரப்பாக செயல்பட்டுக் கொண்டிருந்தாள். விழா தொடங்கிச் சிறிது நேரமே இருந்தது. எழுந்து நடக்க முடியாத - ஒரு கால் ஊனமாகிவிட்ட வயதான பெண்மணியை விழாவுக்காக சுத்தமான புடவை அணிவித்து தலையை வாரி ஒழுங்கு செய்து அழைத்துவர தாமதமாகி விட்டது.

விழாவுக்கு அனுப்பப்பட்ட அழைப்பு கிடைத்து நகரத்திலிருந்தும் பல நிறுவனத்திலிருந்தும் பல ஸ்தாபனங்களிலிருந்தும் பார்வையாளர்கள் அதிக அளவில் வந்து கொட்டகையை நிறைத்துக் கொண்டுவிட்டனர். ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு அமைக்கும் பணியைப் பற்றி சிந்திக்க வேண்டிய



ஆண்டு... கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேச... பிரபல அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் கந்தசாமி வந்திருந்தார். அவரது பேச்சைக் கேட்க... நகரத்திலிருந்து சில வைத்தியர்களும் வந்திருந்தனர். கடைசியாக வந்து அமர வேண்டிய அந்த ஊனமுற்ற பெண்மணியை கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு கொட்டகைக்குள் வந்தபோது. கூட்டம் நிறைந்து விட்டிருப்பதைக் கண்டு சிறிது பதறிப் போனாள் கௌசல்யா... தலைவி முகம் சிணுங்கி விடப் போகிறாளே என்ற கவலையுடன் அந்தப் பெண்மணியை ஒரு பக்கம் உட்கார வைத்துவிட்டு - தானும் ஒரு பக்கம் அமர்ந்து கொண்டாள்.

உடல் ஊனம் - உணர்வுகள் ஊனம்... சமூகத்திலே பெண்களுக்கு ஏற்படும் ஊனம் என்று பலதரப்பட்ட ஊனங்களைப் பற்றி அந்தந்தத் துறையில் நீண்டசேவை செய்து அனுபவப்பட்டவர்கள் பேசினர். தலைமை வகித்த கந்தசாமியின் கருத்துமிக்க சொற்பொழிவுடன் கூட்டம் இனிதே நடந்து முடிந்தது. வந்திருந்த பிரமுகர்களுக்கும் - பார்வையாளர்களுக்கும்.... தேநீரும் கேக்கும் வழங்கப்பட்டது. அவைகளை வினியோகிக்கும் பணியில் ஜோதி இல்லத்து ஊழியர்களுடன்... கௌசல்யாவும் பங்கேற்றுக் கொண்டாள். மரத்தட்டிலே வரிசையாக வைத்திருந்த தேநீர் கோப்பைகளை... விநியோகித்துக் கொண்டு வந்தபோது...

''மிஸஸ் ஜயந்தன்!... இங்கே வந்து என்ன பண்றே?'' கையை நீட்டி கோப்பையை எடுத்துக் கொண்டவரின் குரல் அதட்டலாக இருக்கவே - வியப்புடன் நிமிர்ந்து பார்த்தாள்.

அவளது குடும்ப வைத்தியர் வைத்தியநாதன் கன்னத்து சதை கழுத்திலே தொங்க - முன் தலை முழுதும் ரோமமின்றி பளபளக்க முன்னைவிட கிழவராகி எதிரில் நின்று கொண்டி

"அடையாளமே தெரியலை... ஆமாம் இங்கே வந்து" அவர் கேட்டுக்கொண்டே ஜாடை செய்து அவளை ஒருபுறமாக அழைத்துச் சென்றார்.

தந்தை திருவேங்கடத்தைப் பார்த்துவிட்டதுபோல... பரிவு மிக்க அவரது பார்வையும் பேச்சும் நெஞ்சை நெகிழ்த்தவே... அவளது கண்களில் லேசாக நீர் புரண்டு கொண்டது.

"உங்களுக்குத் தெரிந்திருக்கும்னு நினைக்கிறேன்... அவர் என்னை வெளியே அனுப்பிவிட்டார்..." பேச முடியாது திணறினாள்.

"ஒருநாள் நன்றாகக் குடித்துவிட்டு என் கிளினிக்குக்கு வந்திருந்தான். உன்னைப் பற்றி ரொம்ப பேசி வருந்தினான். அவனை எனக்கு சின்ன வயதிலிருந்து தெரியும். திடீர் என்று அவனுக்கு வெடித்துக் கொண்டு கோபம் வருவதற்கு காரணம் என்ன என்பதும் எனக்குத் தெரியும். பண்பும் அன்பும் உள்ள நல்ல வாலிபனாக பார்த்துக் கொண்டிருந்த காலத்திலிருந்து நான் அவனை அறிவேன்."

கண்களில் நீர் ஒழுகி கன்னங்களில் வழிய அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு மௌனமாக இருந்தாள்.

"உன்னை இப்படி இங்கே பார்க்கும்போது என் மனம் வேதனைப்படுகிறது. ஒரு காரியம் செய். ஒருநாள் நீ என் கிளினிக்குக்கு வர முயற்சி பண்ணு. நேரே வந்தால் காலை பதினொரு மணி அல்லது மாலை ஐந்துமணிக்கு மேல் கொஞ்சம் ஓய்வாக நான் இருப்பேன். நோயாளி கூட்டமிருக்காது. வந்தால் உன்னிடம் கொஞ்சம் பேச முடியும்" சொல்லிவிட்டு அவர் நகர்ந்தார்.

அவரைப் பார்த்தவுடன் கொட்டும் மழையிலே கொடுமையாகத் தள்ளி கதவைச் சாத்திய அந்த பயங்கர நினைவு



சட்டென்று வந்துவிட அவள் அழுகையை அடக்கிக் கொண்டு மேலே காரியத்தை கவனிக்கத் திணறிப் போனாள். தனக்கிழைக்கப்பட்ட அநியாயத்தை எண்ணி மனம் பதைத்தது.

அன்று மாலை தொலைபேசியில் முன்கூட்டியே தெரிவித்து விட்டு அவள் அவரது கிளினிக்கில் நோயாளி வரிசையில் காத்திருந்தாள். கடைசி நோயாளியைப் பார்த்து முடித்துவிட்டு அவளை உள்ளே அழைப்பதற்குள் ஒரு யுகமாகிவிடும் போல அவளுக்கு மிக்க மலைப்பாக இருந்தது.

முடிவில் டாக்டர் வைத்தியநாதன் அவளை உள்ளே அழைத்தார். எதிரே கிடந்த நாற்காலியில் அமரச் சொல்லி உபசரித்தார்.

"நடந்ததை நான் முதலில் சொல்லிடறேன்... பிறகு நீங்க சொல்லப் போவதைப் பேசலாம்..." என்றபடி ஆரம்பித்த கௌசல்யாவுக்கு பேச முடியாது துக்கம் இடை இடையே குறுக்கிட்டது. கண்ணீரும் விம்மலுமாக மெல்ல எல்லாவற்றையும் சொன்னாள். கல்யாணத்திற்கு முன்னர் கிராமத்திலே முதன் முதலாக அவனை சந்தித்ததிலிருந்து காசிலிங்கம் உதவியால்... முன்னேறி...அந்த ஊனமுற்றோர் இல்லத்தில் வேலை பார்க்கும் வரை நடந்ததை அனைத்தும் சொல்லி முடித்தாள்.

டாக்டர் வைத்தியநாதன் அவளை மிகவும் கனிவுடன் பார்த்தார்.

"இத்தனைக்கும் ஜயந்தன் முற்றிலும் பொறுப்பானவன்னு நான் சொல்லமாட்டேன். மெட்ரிக் வகுப்பு மாணவனாக இருந்த காலத்திலிருந்து அவனை எனக்கு நன்றாகவே தெரியும். சின்ன வயதிலேயே தந்தையை இழந்துவிட்டவன். தாயன்பிலே வளர்ந்தவன்... மிகவும் மெல்லிய உணர்வுகளுடையவன். தொட்டால் சுருங்கி போல சின்ன வயதில் சின்ன விஷயங்களுக்

கெல்லாம் மனம் பதைத்துப் போய்விடும் சுபாவம். ஒரு ஆண் பிள்ளை இப்படி கோழையாக இருக்கக்கூடாது என்று நான் பல தடவைகள் உபதேசித்திருக்கிறேன். அவன் பட்டம் பெற்று வேலைக்கு வருமுன் தாயார் இறந்து போனாள் - அது ஒரு பெரும் அதிர்ச்சி.

''அதனின்று மீண்டும் தன் உணர்வுகளை சமாளித்துக் கொண்டு வேலை ஒன்றை ஏற்று அவன் அமைதியாக வாழ முற்படும் பொழுதுதான் அவனுக்கு ரஞ்சனியின் சந்திப்பு ஏற்பட்டது. ஒரு தடவை அந்தப் பெண் ரஞ்சனியை அவன் இங்கே எனது கிளினிக்குக்கு அழைத்து வந்திருந்தான். கார் கதவில் அடிபட்டு நகம் பெயர்ந்து விட்டிருந்ததற்கு சிகிச்சை செய்யத்தான் கூட்டி வந்திருந்தான். அது பிரமாதமானதொரு காரியமல்ல. கதவில் லேசாக அடிபட்டு நகத்தோரத்திலே கொஞ்சம் ரத்தக் கசிவு ஏற்பட்டிருந்தது. அந்தப் பெண் வசதியானதொரு வீட்டைச் சேர்ந்தவள். அந்தஸ்தில் அவனை விட பல மடங்கு உயர்ந்தவள். பட்டதாரி - மிக்க முற்போக்கான கொள்கைகள்... கொஞ்ச நேரத்திலேயே எனக்கு விடை கிட்டிவிட்டது.

''இவனுக்கு இந்தப் பெண் சரிப்பட்டு வராது... காதல் என்ற உணர்வுகளைக் குழப்பிக் கொள்ளுமுன்... மெல்ல இவன் நழுவிக் கொள்ள வேண்டும்....'' என்றுதான் நினைத்தேன்.

''பிறகு அவனைத் தனியே சந்தித்தபோது...என் அபிப் ராயத்தைச் சொல்லி... அவனைக் காப்பாற்ற முயன்றேன்.''

அம்மா கௌசல்யா! இந்த மாதிரியான விஷயங்களில் ஆணாகட்டும் பெண்ணாகட்டும் - பிறர் பேச்சை மதிக்க மாட்டார்கள். நெருப்பு சுடும் என்று எத்தனை தூரம் எச்சரித்தாலும் குழந்தை கேட்காது - தொட்டு கையைச் சுட்டுக் கொண்ட பிறகுதான் அறிவு பிறக்கும்...அனுபவம் என்பது



ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் அன்றாடம் போதனை செய்யும் ஒரு ஆசான்.

ரஞ்சனி மீது கரைகாணாத காதலில் கட்டுண்டுபோய் இருந்தான். விளையாட்டு பொம்மையொன்றை வைத்து விளையாடிக் களைத்துப் போனபின் வீசி விட்டெறியும் குழந்தை மனம் ரஞ்சனிக்கு. ஆழமான காதல் உணர்வுகளை மதிக்கத் தெரியாத அசட்டையான மனப்போக்கு. தன் அழகு. அந்தஸ்து - பணம் இவைகளைப் பற்றி கர்வம்.

''அவளது புரட்சிகரமான... முற்போக்கு கொள்கைகளை ஏற்க முடியாது சங்கடப்பட்டான்... சண்டை ஏற்பட்டது.''

காலுக்கு உதவா செருப்பை கழற்றி எறிவதுபோல... இரண்டு வருஷம் காதல் கொண்டாடிவிட்டு...உதறிவிட்டாள் ரஞ்சனி. கல்யாணமா? உன்னையா?...கடவுளே! உனக்கும் எனக்கும் ஒத்துவராது. நெருங்கிப் பழகினோம். ஆனால் அதற்காக வாழ்க்கை முழுவதும்... மன ஒற்றுமை இல்லாத ஒருவனுடன் மாட்டிக்கொண்டு திண்டாட முடியுமா? ஒரேயடி யாக மறுத்து விட்டாள். ஒரு சில நாட்களில் அவளுக்கும் அவள் தந்தையின் தொழில் பங்காளி மகனுக்கும் கல்யாணமாகியது - மணமக்கள் வெளிநாட்டுக்குப் புறப்பட்டுப் போய்விட்டனர்.

''நண்பர்கள் - தெரிந்தவர்கள் முன்னால் தனக்கு ஏற்பட்ட அவமானத்தை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. பல நாட்கள் பைத்தியக்காரனைப்போல அவன் எதிலும் பிடிப்பு இல்லாமலிருந்தான். வருஷம் ஒன்றுக்கு மேலாகிவிட்டது... மறந்துவிட்டான் என்றுதான் நான் எண்ணிக் கொண்டேன்.

அடுத்தபடியாக தனது அந்தஸ்துக்கு ஒத்த இடத்திலே தானே பார்த்த ஒரு பெண்ணை... கல்யாணத்திற்கு நிச்சயம் செய்யும் வரை முன்னேறிவிட்டிருந்தான்.

''இந்த முறை அந்தப் பெண்ணை எனக்குக் காட்டி அபிப்ராயம் பெற என் கிளினிக்குக்கு சும்மாவே அழைத்து வந்திருந்தான். வயதிலும் அனுபவத்திலும் பெரியவன் நான்... அப்படியிருந்தும் நானே-ஏமாந்துபோனேன். அந்தப் பெண்ணின் கபடமற்ற பார்வையும் குழந்தை முகமும் என்னைக்கூட ஏமாற்றிவிட்டன.

''உனக்கு பொருத்தமான ஜோடி... கோ அகெட்டு''னு அவனை ஆசீர்வதித்து அனுப்பினேன்.

''பிறகுதான் உண்மை தெரிந்தது. இந்தப் பெண் நர்மதா அவனுக்கு வேறு ஒரு வகையில் அதிர்ச்சி கொடுத்து விட்டாள். நிச்சயம் செய்ய சில தினங்களுக்கு முன் அவன் நண்பர்களுடன் சினிமாவுக்குப் போயிருந்தபோது... மேல் வகுப்பு ஆசனத்தில் நர்மதா இன்னொரு வாலிபனுடன் உட்கார்ந்திருந்தாள்.''

''அவள் பார்க்கவில்லை. நல்லவேளை அவனது நண்பர்களும் கவனிக்கவில்லை. ஆனால் அவன் பார்த்து அதிர்ந்து போனான். பின்னர் விசாரித்ததில் ஏற்கெனவே நர்மதாவுக்கு ஒரு காதலன் இருந்திருக்கிறான் என்று தெரிந்தது.''

''இந்தத் தடவை இவன்...வேண்டாம் என்று நர்மதாவை உதறிவிட்டான். ஆனாலும் அவள் தந்த அதிர்ச்சியின் பாதிப்பை உதற முடியவில்லை.''

''அத்துடன் நிற்கவில்லை... நர்மதாவிற்கு கல்யாணம் நிச்சயமாகுமுன்... வேறு இடம் பார்த்து முடித்துக்கொண்டு விடவேண்டுமென்ற ஆத்திரத்திலே... அவசரமாக ஒரு இடத்தில் பெண் பார்த்தான். அவனுக்கும் பெண்ணை மிகவும் பிடித்திருந்தது. பெல்பாட்டம், ஸ்லாக், மாக்ஸி என்று உடுத்தும் இந்தக்காலத்து இளம்பெண். ரஞ்சனிக்கு ஈடான ஒரு நாகரிகமான பெண்ணை முடிவு செய்துவிட்டோம் என்று கொஞ்சம் பெருமையோடுதான் இருந்தான்.



''மூன்றாவது பெண் விசாலியும் அவனுக்கு அதிர்ச்சியைக் கொடுக்கபோகிறாள் என்று அவன் சிறிதும் எதிர்பார்க்கவே யில்லை.''

''ஒருநாள் மாலை தனியே கடற்கரைக்கு சென்றபோது... தான் பார்த்து முடிவு செய்துவிட்டிருந்த விசாலி.. தன் தோழிகளுடன் மணற்பரப்பில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பதைக் கண்டான். அங்கேயிருந்த மீனவர் படகின் பின்னால் அமர்ந்துகொண்டு அவர்கள் பேச்சை ரசிக்க காதைத் தீட்டிக் கொண்டான். விளையாட்டும் வேடிக்கையுமாக கலகலத்த பெண்கள் விசாலியை பரிகசித்துக் கொண்டிருந்தனர். மாப்பிள்ளை ரொம்ப ஜோராக இருக்கிறாராமே... உனக்கும் அவருக்கும் ரொம்ப பொருத்தம் இல்லையா'' ஒரு பெண் கீச்சுக்குரலில் கத்தினாள்.

''யார் அவனை எனது மாப்பிள்ளை என்ற சொன்னது. எனக்கு அவனைப் பிடிக்கலைன்னு அப்பாகிட்டே சொல்லிட்டேன்.''

வெடுக்கென்று விசாலி பேசியது காதில் அறைவது போலக் கேட்டது.

''என்ன அப்படி சொல்றே... கண்ணுக்கு அழகா இருக்கான் - படிச்சவன் - பெரிய வேலையிலே இருக்கான்... கார்... வீடுன்னு வசதியான வாழ்க்கை - வேண்டாம்னு ஏன் சொன்னே'' ஆச்சரியப்பட்டாள் தோழி ஒருத்தி.

''படிப்பு.. பட்டம் இதெல்லாம் இருந்து என்ன பிரயோஜனம்? ஆசாமிக்குக் குடிபழக்கம் உண்டாம். குடிக்கிறவனை கட்டிக்கிற தில்லைனு நான் தீர்மானிச்சிருக்கேன்..''

''மாக்ஸி - காப்ரவுண்ட்ன்னு [illegible] உடை போட்டுக்கறதைப் பார்த்து நீ [illegible] நினைச்சோம்...''.

39795
5693998

''உடையில் நாகரிகத்தை அனுசரிக்கிறேன். உண்மை. அதுவும் இந்த இளவயசிலே இதெல்லாம் போட்டுக்கொண்டால் தப்பில்லைன்னு இப்போ போட்டுக் கொள்கிறேன். கல்யாண மானதும் புடவைதான் உடுத்தரதுன்னு கொள்கை... குடிக்கிறதை நான் நாகரிகம்னு நினைக்கிறதில்லை.. அதனாலே எனக்கு இவன் வேண்டாம்னு அப்பாகிட்டே சொல்லிட்டேன்.''

''மூன்றாவது தோல்விக்குப் பிறகு கல்யாணம் என்றாலே அவனுக்கு ஒரு அலர்ஜிபோல... ஆகிவிட்டிருந்தது. கொஞ்ச நாட்களுக்கு கிராமங்கள் பக்கம் உர விற்பனையை அதிகரிக்க சுற்றுப்பயணம் செய்ய ஒரு வாய்ப்பு கிட்டியது. பட்டணத்துப் பெண்கள் -மெத்த படித்த பெண்கள் - பணக்கார பெண்கள் எல்லாருமே... தனக்கு ஒவ்வாதவர்கள் என்ற நம்பிக்கையில் அவன் விரக்தியடைந்து போயிருந்தபோதுதான் உங்கள் கிராமத்திற்கு வந்தான் - உன்னை சந்தி தான்... மனதில் ஒரு ஆறுதல் உணர்வு ஏற்பட்டது. உன்னுடைய பதவிசான போக்கு - மௌனம் - மென்மையான பார்வை எல்லாம் பிடித்துவிட்டது. கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்தான்... இத்தனையும் என்னவோ நேரில் பார்த்ததுபோல் சொல்றதாக நினைக்கிறே... இல்லையா!

''இவ்வளவையும் அவன் என்னை ஒரு தந்தை ஸ்தானத்தில் வைத்து என்னிடம் கொட்டி அளந்திருக்கிறான். அவ்வப்போது நான் அவனது உணர்வுகள் கலங்கிப் போகாதிருக்க அறிவுரை தந்து ஆறுதல் சொல்லியிருக்கிறேன். தூங்க முடியாது தவித்தபோது மருந்து கொடுத்து உதவியிருக்கிறேன். அமைதி யேற்பட சில மாத்திரைகளை தந்து கவனித்திருக்கிறேன்... மென்மையான சுபாவமுடையவனாக இருந்தவன் தொடர்ந்து ஏற்பட்ட அதிர்ச்சிகளில் மனம் கடினமாகி முரடனாக மாறிவிட்டான்.

''மென்மையான சுபாவத்திற்கும் - முரட்டு குணத்திற்கும் கால்



இழை அளவுதான் இடைவெளி. மனிதரது மனம்... ஒரு கத்தி முனைமேலே இருப்பது போன்ற ஒரு நிலையில் உள்ளது... இந்த பக்கம் தவறினாலோ அந்தப் பக்கம் தவறினாலோ போதும் - பாதிப்புகளில் விபரீதத்தை பிரதிபலிக்கும்... இயல்புடையது.''

''கல்யாணத்திற்கு முந்தி - மிகவும் அன்பாக - பண்பாக நடந்து கொண்டவர் கல்யாணத்திற்கு வந்தபோது மிகவும் மாறி விட்டிருந்தாரே.... அதற்குக் காரணம்?'' கௌசல்யா இடைமறித்துக் கேட்டாள்.

''மூன்று அனுபவங்களுக்குப் பின்னர் அவனுக்கு பெண்கள் மீதும் ஒரு சந்தேகம் தானே ஏற்பட்டுவிட்டது. யாரையும் நம்பக்கூடாது என்றவரை அழுத்தமான எண்ணம், உன்னை பேசி முடித்துவிட்டு வீட்டுக்கு வந்ததும் அவனுக்கு ஒரு அனாமதேயக் கடிதம் வந்தது. உன் தந்தைக்கும் அவரது நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் உனக்கு வந்த அதிர்ஷ்டத்தைக் குறித்து பெருமையாக இருந்திருக்கும். உங்களுக்கு வேண்டாதவர் களுக்கு பொறாமை ஏற்பட்டிருக்கலாம். இதெல்லாம் சகஜமாக நடக்கக்கூடியது. யாரோ உன்னைப்பற்றி தவறாக... உன் நடத்தையைப்பற்றி இழிவாக ஒரு எச்சரிக்கை கடிதம் எழுதியிருந்தான்.

''அனாமதேயக் கடிதங்களைப்பற்றி யாருமே அக்கறை எடுக்கக்கூடாது.''

முகம் வெளுத்துப் போனாள் கௌசல்யா... ''டாக்டர் நான் ஒரு எறும்புக்குக்கூட தீங்கு நினைத்ததில்லை; என்னைப் பற்றி யார் எழுதியிருப்பாங்க.''

''யாரா இருந்து இப்போ என்ன? சராசரி மனிதர்களுக்கு நண்பர்கள் இருப்பது போலவே வேண்டாதவர்களும் இருப்பார்கள். யாரோ எழுதிய கடிதத்தை அவன் பெரிது செய்து கொண்டுவிட்டான்.

''மறுபடியும் ஒரு தோல்வியா? என்று ஒரு ஆத்திரம். பெண் என்ற மாயப் பிசாசையும்...யாரையும் நம்பவே கூடாது என்ற ஒரு முரட்டு எண்ணம். இந்தப் பெண்ணை கல்யாணம் செய்து கொண்டே தீருவேன். ஆனால் இவளுக்கு நான் யார் என்று புரிய வைப்பேன் என்று அனாவசியமானதொரு சவால்... இந்த மாதிரியான எண்ணங்களுடன் திரும்பி வந்தவன் குணம் கெட்டு... முரடனாகத் தோன்றினான். சந்தேகத்தின் மீது ஆரம்பமாகிய திருமண வாழ்க்கை - எனவேதான் நீ சிரித்தால் தப்பு- உட்கார்ந்தால் தவறு என்று கணக்கிட்டு....குழம்பத் தொடங்கினான்.

''அனாவசியமாக ஆத்திரப்பட்டான் - சண்டை போட்டான் - குடித்தான் - குழம்பினான் - அந்த சமயம்தான் ராஜன் வந்து உங்கள் வாழ்க்கையில் குறுக்கிட்டான். நீ என்ன செய்வாய் என்பதை ஆராய்ந்து தெரிந்துகொள்ளத்தான்... அப்படி ஒரு சோதனை செய்து பார்த்தானாம். வாசலில் வந்த சிநேகிதனை நீ ஏன் உபசரிக்கலை என்று சொல்லிப் பார்த்தானாம். நீ மிதமிஞ்சி உபசரித்து விட்டதைக் கண்டு அவன் சந்தேகம் ஊர்ஜிதமாகி விட்டது.''

''வாசலில் வைத்து அனுப்பினால் கோபிப்பாரோ என்று அவர் மனம் கோணாதிருக்கத்தான் நான் நண்பன் ராஜனை உபசரித்தேன்.

''இவர் என் நடத்தையைப் பரிசோதிக்க இப்படியெல்லாம் பேச்சை மாற்றிக் கொள்கிறார்னு நான் கண்டேனா... டாக்டர்! அப்படி பரீட்சை செய்து பார்க்க வேண்டியது அவசியமா?'' கண் கலங்க -நெஞ்சு கொதிக்க கேட்டாள் கௌசல்யா.

''முட்டாள்தனம்... ஆத்திரத்தில் கண் மூஞ்சி தெரியாது... குடிபோதையில் வெளியில் விரட்டியதும் தப்பு - தொடர்ந்து



அதே ஆத்திரத்தில் ஊருக்கு உன்னைப் பற்றி அவதூறாகக் கடிதம் எழுதினதும் தப்பு. யாரோ மூன்று பெண்களிடம்... ஏற்பட்ட தோல்வியின் பாதிப்பை - வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ள வந்த கள்ளங்கபடமற்ற உன்னிடம் காட்டி உன்னை சித்ரவதை செய்தது தப்பு... எல்லாவற்றையும் உணர்ந்த பின்னர் அவன் தவித்த தவிப்பு?''

''அவர் ஏன் தவிக்கணும் டாக்டர்?''

''மறுபடியும் உன்னைத் தேடிக் கண்டுபிடித்து கூட கல்கத்தா வுக்கு அழைத்துப் போகணும்னு தவித்தான்... நீ எங்கேயோ போய்விட்டாய் என்று உன் தகப்பனார் கையை விரித்துவிட்டார்.''

கிராமத்தில் உன்னைக் காணவில்லை - நகரத்திலும் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை. மனமொடிந்து திரும்பிப் போய்விட்டான்.''

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவள் கேட்டாள்.

''இப்போ அவர் இருக்கிற இடம்... முகவரி எல்லாம் தெரியுமா?''

''தெரியும். உன்னை எதேச்சையாக சந்திச்சதைப் பத்தி அவனுக்குக் கடிதம் போட்டிருக்கேன். பதில் வரும் என்று நம்புகிறேன். அதற்குள் நீயே ஒருநடை குழந்தையை அழைத்துக் கொண்டுபோய்ப் பாரேன்...

கணவன் மனைவி இருவரிடைய பிரிவு ஏற்படறது ரொம்ப சகஜம். பல காரணங்களால் பிரிவு ஏற்படலாம்... ஆனால் அந்த பிரிவை... பெரும் பிளவாக்காது... இருவரும் மறுபடி ஒன்று கூடி வாழவும் முடியும் - மனது வைத்தால் எதுதான் ஆகாது சொல்லு. ஜயந்தன் இப்போ ரொம்ப மனம் மாறியிருக்கிறான். நீயும்

எல்லாவற்றையும் மறந்து மறுபடி அவனோட வாழ முயலுவது அவசியம்.

இந்த சின்ன வயசில்...இப்படிப்பட்ட தனிமை உனக்குத் தேவையில்லையம்மா.''

எழுந்துசென்று அலமாரியைத் திறந்து தமது டைரி ஒன்றை எடுத்தார். அதில் ஒரு பக்கத்திலே குறிப்பிட்டிருந்த முகவரியை ஒரு துண்டு காகிதத்தில் எழுதிக் கொடுத்தார்.

''நன்றி வரட்டுமா டாக்டர்..'' அவள் கிளம்பினாள்.

''நாங்க வரப்போகிறோம் டாக்டர்னு சொல்லிட்டு போ. விரைவில் உங்க ரெண்டுபேரையும் சேர்த்து பார்க்கணும்னு ஆசையா இருக்கு...'' வைத்தியநாதன் கையை ஆட்டினார்.

இந்த முறையும் அவள் காசிலிங்கத்திடம்தான் உதவி கேட்க நேர்ந்தது. பயணத்திற்குத் தேவையான தொகையுடன் தன் கைப்பட ஒரு கடிதமும் எழுதிக் கொடுத்து காசிலிங்கத்தை கல்கத்தாவிற்கு அனுப்பி வைத்தாள்.

தன் வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்படப் போகிறது என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த கௌசல்யாவுக்கு பெருத்த ஏமாற்றம்.

அவள் கணவன் அந்த முகவரியில் வசித்துக் கொண்டு இருக்கவில்லை. அவன் வேலை பார்த்ததாக சொல்லப்பட்ட அலுவலகத்துக்கு சென்று விசாரித்தபோதும் அதே பதில்தான்.

''ஜயந்தன் என்பவரா! ஆமாம் இங்கேதான் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். வேலையில் கவனக்குறைவு என்ற காரணம் பற்றி அவர் மீது புகார்கள் ஏற்படவே வேலையை ராஜினாமா செய்துவிட்டுப் போய்விட்டார். இப்போ அவர் எங்கே யிருக்கிறார் என்று இங்கே யாருக்கும் தெரியாது.''



## 9

அன்று முரளியின் பிறந்த நாள். வேலையினின்று விடுப்பு அந்த ஒருநாள் அவள் விடுப்பு எடுத்துக் கொண்டிருந்தாள். காலையில் சீக்கிரம் எழுந்து தலைமுழுகிவிட்டு அருகிலிருந்த பிள்ளையார் கோவிலுக்குச் சென்று மகன் பெயருக்கு அர்ச்சனை செய்துகொண்டு வந்திருந்தாள். பள்ளிக்கூடம் புறப்பட ஆயத்த மான மகன் அருகில் வந்தான். ''அப்படி நில்லுங்க... உங்களை தொட்டுக் கும்பிடணும்...'' பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து விட்டு எழுந்த மகனை தன் மார்போடு சேர்த்து கட்டிக் கொண்டாள். திடீரென்று அடக்க மாட்டாது விசும்பி விட்டாள்.

''என்னம்மா இது?'' மகன் அதட்டினான்.

''பதினாலு வயது முடிஞ்சு - பதினைஞ்சு... என்னமா உசரமா வளர்ந்திட்டே'' சொல்லிக்கொண்டே கோயிலிலிருந்து கொண்டுவந்து வைத்திருந்த பிரசாதத்தை எடுத்தாள். திருநீற்றை விரலில் தொட்டு அவன் நெற்றி மீது மெல்லக் கோடிட்டாள்.

அதுக்கு என்னத்துக்கு அழணும்... இன்னும் கொஞ்ச காலம் பொறுத்துக்கோங்க... நான் படிப்பை முடிச்சு ஒரு வேலைக்குப் போனதும் நீங்க... நிம்மதியா வீட்டிலிருக்கலாம். சீக்கிரம் வளர்ந்து ஆளாக மாட்டோமான்னு மனசு அடிச்சிக்கிறதம்மா!'' அன்போடு சொன்ன முரளி... அவள் கன்னத்தைக் கோடிட்ட கண்ணீரைத் தன் கையால் மெல்ல துடைத்துவிட்டான்.

புல்லரித்துப் போனாள் கௌசல்யா... முரளியின் அன்பைத் தான் ஆதாரமாகக் கொண்டு அந்த ஒரு பிடிப்பினால் தானே அவள் தனிமையுடன் - வறுமையுடன் போராட முடிந்தது.

''அதுக்கில்லை தோளுக்கு மிஞ்சின பிள்ளைனு சொல்வாங்க... உண்மையிலேயே என் தோளுக்கு மேலே நீ உயரமா... உன் அப்பாவைப் போலவே... சாயலா வளர்ந்திட்டு வரே... திடீர்னு உன் அப்பா நினைவு வந்தது...'' தழதழத்தாள். முரளியின் கண்களில் கோபம் தெரிந்தது.

''அம்மா அவர் பேச்சே இந்த வீட்டிலே பேசக்கூடாதுன்னு உங்ககிட்ட எத்தனை தரம் சொல்லியிருக்கேன்? காய்ச்சலில் திணறிக் கொண்டிருந்த என் முதுகிலே அன்னிக்கு ஓங்கி அடிச்சாரே அது என் முதுகிலே இல்லைம்மா... என் நெஞ்சிலே அடிச்ச அடி. மறக்காதீங்க... அவரை நான் ...''பற்களைக் கடித்தான்.

''முரளி...'' அதற்குமேல் பேசமுடியாது... மீண்டும் கண் கலங்கிப் போனாள்.

''நம்ம வரை அப்பா செத்துவிட்டார் அம்மா.''

கௌசல்யா பதறிப்போனாள். ''முரளி! அப்படியெல்லாம் பேசக்கூடாது. அம்மா நெத்தியிலே இருக்கிற இந்த பொட்டும்...'' முரளி கோபததுடன் சிரித்துவிட்டான்.

'' அம்மா! இந்த பொட்டும் பூவும் உங்களுக்கு என்ன விதத்தில் உதவி செஞ்சது. பாடுபட்டு உழைக்கிறீங்க. பசியாற சாப்பிட்டுவிட்டு இருக்கோம். உபகாரச் சம்பளம் கிடைக்கிறது. படிக்கிறேன். எனக்கு நீங்க - உங்களுக்கு நான்னு வாழ்க்கை அமைஞ்சு போச்சு. ஓடிப்போன அப்பாவைப்பத்தி நாம் ஏன் நினைக்கணும். அவரை ஒரேயடியாக மறந்து போகணும்னு தான் நான் ஆசைப்படறேன். ஆனால் அவர் செய்த கொடுமை மனசிலே அப்போ அப்போ வந்து நிழலாடுது... கனவு போல சில சமயம் மனதை ரொம்ப வேதனைப்படுத்தறது. அதனாலே மறக்க முடியலை.''



''முரளி நீ ரொம்ப கடுமையா பேசக் கத்துக் கொண்டிருக்கே...''

''உண்மையைப் பேசத் தெரிஞ்சு கொண்டிருக்கேன் முன்னெல்லாம் ய: ராவது பள்ளிக்கூடத்திலே அப்பாவைப் ப த் கேட்டா பயந்து ந ங்கிப்போய் விடுவேன். வெட்கப் படுவே - அழுகை வரும். இப்போ... துணிவா பேசறேன். ஆமாம்! என் அப்பா எங்களை விட்டுட்டு போய்ட்டார். அவருக்கும் எங்களுக்கும் ஒத்துவரலை... நாங்கள் தனியா வந்துட்டோம். ஏன் கேட்கிறே? என்று கேட்கிறவங்ககிட்டே முறைக்கிறேன். என் மூஞ்சியைப் பார்த்து பசங்க மேலே கேட்கப் பய்ப்படறாங்க. அம்மா இன்னிக்கு என் பிறந்தநாள். அவரைப் பத்தி பேசாதீங்க. நாம் மறக்க வேண்டியவர்.''

பதினாலு வயது பிள்ளையா பேசுகிறது. பிஞ்சு பருவத்திலே அவன் மனதிற்குள் புகுந்து கொண்ட வெறுப்பும் கசப்பு மல்லவா பேசுகின்றன? அயர்ந்து போனாள் கௌசல்யா.

டாக்டர் வைத்தியநாதனுடன் பேசிவிட்டு வந்தபிறகு காசிலிங்கம் கல்கத்தாவில் தேடி இல்லை என்று வந்த பிறகு அவள் மனதில் கணவனைப் பற்றிய நினைவு... நெருப்பாக... சுவாலைவிட்டு எரிந்து . கொண்டிருந்தது. பார்க்க மாட்டோமா?ஒரே ஒரு தடவையாவது அவரைப் பார்க்க மாட்டோமா... பார்த்து எனக்கு எல்லாம் தெரியும்... கடந்து போன சம்பவங்களை நினைச்சு சங்கடப்பட்டு... சந்தேகப்பட்டு நம்ம வாழ்க்கையை நாசப்படுத்திக் கொண்டு விட்டீர்களே? என்னை நம்புங்க... நான் உங்களை உண்மையாக நேசித்த நல்ல ஒரு மனைவின்னு நம்புங்க... உண்மையைத் தெரிஞ்ச பிறகு என் மனதில் இருந்த வருத்தமெல்லாம் மறைஞ்சு போயிடிச்சு. என் வரையில் நீங்கள் முரளி போல ஒரு குழந்தை.

ஒரு மனைவிக்கு கணவன் சில சமயங்களில் குழந்தைதான்... தெரிஞ்சுக்கோங்க... உங்க மகனைப் பாருங்க... உங்களைப் போல வளர்த்திருக்கான். அவனை பாடுபட்டு வளர்த்து விட்டுட்டேன். இனிமேலே பிழைச்சுக்குவான். படபடவென்று மனதை அழுத்தும் அத்தனையையும் கொட்டி ஒரு மூச்சு அழுதுவிடவேண்டும் என்ற ஆத்திரத்திலே துடித்தாள். அவளுக்கு அப்போது ஜயந்தன் மீது கோபமுமில்லை... பயமுமில்லை. ஆனால் பிள்ளை முரளி... தந்தையை விஷமாக வெறுக்கிறானே.

''என்னம்மா! அப்படி பார்க்கிறீங்க...?''

''உன் அப்பாவும் சின்ன பிள்ளையாக இருக்கும்போது இப்படித்தான் உன்னைப்போல் புத்திசாலியா வாட்டசாட்டமான நல்ல பிள்ளையாக இருந்தாங்களாம்.''

''போதும்மா, அவர் புராணம். எனக்கு அவர் பேச்சையே கேட்கப் பிடிக்கலை. நேரே பார்த்தா முகத்தைத் திருப்பிக் கொண்டு அப்பாலே போயிடுவேன்'' கோபமாகப் பேசிய மகன் தாயின் அருகில் வந்து அவளது கன்னத்தை மெல்லத் தொட்டான். ''அம்மா பள்ளிக்கூடம் கிளம்பிகிட்டிருக்கேன்... என்னை சந்தோஷமா அனுப்பி வையுங்க... நீங்க அழுதுக் கிட்டிருப்பதை நினைச்சா எனக்கு பாடத்திலே மனது ஓடாது..''

சட்டென்று நினைவுக்கு வந்தாள். உள்ளத்தில் கொதித்தெழுந்த உணர்வுகளை சமாளித்துக் கொண்டு மெல்லியதாகச் சிரித்தாள். ''போய்விட்டு வாப்பா... என்னவோ நினைப்பு என்னவோ பேசிவிட்டேன். நீ படிச்சு.. பெரியவனாகி சுகமா வாழணும்... வாழ்த்தரேன்'' என்றாள்.

மகன் வெளியே சென்றபின் கதவைச் சாத்திக்கொண்டு சுவற்றில் சாய்ந்தபடி உட்கார்ந்தவள் ஓவென்று அழுது விட்டாள்.



ஜயந்தன் இப்போது மகனைப் பார்த்தால் ஒரு சமயம் மனம் திருந்தி மனிதனாக மாறிவிடலாம்.

ஆனால் முரளி தன் தந்தையை சந்திக்க நேர்ந்தால்?-

அப்பொழுதுதான் கவனம் வந்தது. முரளியின் பிறந்த நாளுக்கு அவள் எதுவும் இன்னமும் வாங்கவில்லை. வெளியே போக உடுத்திக்கொள்ள ஒரு ரெடிமேட் ஷர்ட் ஒன்றை சில நாட்களுக்கு முன்னர் ஒரு துணிக்கடையில் பார்த்து வைத்து விட்டிருந்தாள். அவ்வளவு பணம் அப்போது அவளிடமிருக்க வில்லை. மாதம் பிறந்துவிட்டது. சம்பளம் கிடைத்திருக்கிறது. ஷர்ட்டுக்குத் தேவையான பணத்தை அவள் முன்னதாக எடுத்து ஒதுக்கி வைத்திருந்தாள்.

மாலை முரளி பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வருமுன் அவள் விரைவாக கடைத் தெருவுக்குச் சென்று அந்த சட்டையை வாங்கிவிட வேண்டும். பரபரப்புடன் சமையலை முடித்தாள். வெளியே செல்ல உடுத்திக்கொண்டு புறப்பட்டாள்.

அண்ணாசாலையில் நடைபாதையிலே மெல்ல அவள் நடந்து கொண்டிருந்தாள்.

''அம்மா நீங்களா?...'' ஆணின் குரலைக்கேட்டு திகைப்புடன் நிமிர்ந்து பார்த்தாள்.

மழித்துவிட்ட தாடையும் சுத்தமான உடையுமாக மேல் மட்டத்தில் வசிக்கும் தோற்றத்திலே ஜயந்தனின் நண்பன் ராஜன் எதிர்ப்பட்டான்.

''அடையாளமே தெரியாம மாறிட்டீங்களே?'' அவளது முன் நெற்றியில் இழையோடிய நரைத்த கூந்தலை வியப்புடன் பார்த்தான்.

''நீங்க கூட மாறிட்டீங்க...''மேலே ஏதும் சொல்லாது மௌனமாகினாள்.

''ஆமாம்... இப்போ எனக்குக் கல்யாணமாகிவிட்டது. இரண்டு குழந்தைகள்...ஹைதராபாத்திலேதான் வேலை பார்க்கிறேன். பதவி - சம்பளம் எல்லாம் உயர்ந்துவிட்டிருக்கு. விஷயத்தைக் கேள்விப்பட்டேன். ரொம்ப மனது வேதனைப் பட்டது. உங்களை இங்கே இப்படி எதிர்பாராத இடத்தில் சந்திப்பேன்னு கனவிலும் நினைக்கலை...'' என்றான் அனுதாபத்துடன்.

''நீங்க சுகமா இருக்கிறதைப் பத்தி சந்தோஷம். நாங்களும் ஏதோ காலத்தை ஓட்டிக்கிட்டு போய்க் கொண்டிருக்கோம்... அப்ப நான் வரட்டுமா...''

''அம்மா!'' அவன் குரலில் தொனித்த கனிவு அவளை மேலே போகவொட்டாது தடுத்தது.

''உங்களோட கொஞ்சம் பேசணும். நான் முழுவதும் வேலையா ஊரைச்சுற்ற டாக்ஸி முழு நேரத்துக்கும் பேசி வச்சிருக்கேன். உங்க வீட்டிலே கொண்டுவிடறேன். ரொம்ப முக்கியமான விஷயம். உங்க கணவரைப் பத்தினது... அதனாலே'' ஜயந்தனைப் பற்றியா - அவள் உடம்பு முழுவதும் உணர்ச்சி வசத்தில் நடுங்கியது. மார்பு படபடத்தது. கண் இமைகளை நீர் சுட்டது.

''உண்மையா? அப்ப கொஞ்சம் இங்கேயே இருங்க - இந்த கடைக்குள்ளே போய் ஒரு சட்டை வாங்கிட்டு வந்துடறேன்... முரளிக்கு இன்னிக்கு பிறந்த நாள் - பதினைந்தாவது வயது துவங்குகிறது'' ''முரளி அத்தனை பெரியவனா'' அதிசயித்தான்... ராஜன்.

''ஆமாம் அண்ணா- அவன் பெரியவனாக ஆயிட்டான் என்



மேலே பிராணனையே வச்சுக்கிட்டிருக்கான். எனக்கு இனிமேலே கவலையில்லை... வண்டி இழுத்தோ - மூட்டை தூக்கியோ என்னைக் காப்பாத்திடுவான்...'' கண்ணீரை சமாளித்துக் கொண்டு கடைக்குள் புகுந்தாள்.

ராஜனைக் கண்டு அவள் ஏன் இனி பயப்பட வேண்டும்? கணவனைப்பற்றி ஏதோ சொல்லப் போகிறான். வீட்டுக்கு அழைத்துச் சென்று விசாரிக்க வேண்டும். தெருவில் உள்ளவர்களுக்கு அவனைப் பற்றி தெரியும். வெளியூரிலிருந்து வந்திருக்கும் கணவனின் நண்பன்... என்று கேட்பவர்களுக்கு அச்சமின்றி அறிமுகப்படுத்தினால் போயிற்று.

காந்தியடிகள் சொன்னதுபோல... சந்தர்ப்பங்கள் கிடைக்காத போது நல்ல பெயருடன் யாரும் வாழ முடியும்... சந்தர்ப்பங்கள் சூழ்நிலை அனைத்தும் இருந்தும் கெட்டுப்போகாது... இருக்கும் போதுதான் கற்பு சிறப்படைகிறது.

தனியாகப் பல ஆண்டுகள் வாழ்ந்தாள். இளமையின் கனவுகள் அழியாத வயதுதான். சூழ்நிலையில் சுதந்திரம் இருந்தது. விரும்பியிருந்தால் அவள் எப்படியெல்லாமோ... கெட்டழிந்து சீர்கேடடைந்து வாழ்ந்திருக்க முடியும். அழகை விலை கூறிக்கொண்டு வாழ்க்கையை உயர்த்திக் கொண்டிருக்கலாம்.

ஆனால்... ஒரே மன உறுதியோடு.. மகனது வருங்காலத்துக்காக வைராக்கியமாக வாழ்கிறவளுக்கு ராஜனைப் பற்றி இனி ஏன் பயம். அவனுடன் பேசுவதில் தவறு என்ன வந்துவிடப் போகிறது. இனி யாருக்கு அவள் பயப்படவேண்டும்? மகனுக்குப் பிறந்த நாள் பரிசாக அந்த சட்டையை வாங்கி முடித்துக்கொண்டு வெளியே வந்தாள். பொறுமையுடன் பாதை ஓரத்திலே ராஜன் காத்திருந்தான்.

''வாங்கோ அண்ணா என் வீட்டுக்குப் போகலாம். கொஞ்சம் தாகத்துக்கு ஏதாவது சாப்பிட்டுவிட்டு பிறகு பேசலாம்..'' சொல்லிக் கொண்டு கதவைத் திறந்துவிட்ட ராஜனைத் தாண்டிக் கொண்டு டாக்சிக்குள் உட்கார்ந்தாள்.

''முரளிக்கு பிறந்தநாள் அல்லவா? கொஞ்சம் வடை சுட்டு, பாயாசம் வச்சிருக்கேன். முதலில் இனிப்பை சாப்பிடுங்கோ, காப்பி எடுத்துவரேன்'' உபசரித்தாள்.

முன்னறை போன்ற அந்த சிறு பகுதியில் ஒரு மோடா மீது உட்கார்ந்துகொண்ட ராஜன் தன்னைச் சுற்றிலும் பார்த்துக் கொண்டான்.

என்னண்ணா ரொம்ப யோசனை...''சிரித்துக் கொண்டே காப்பி டம்ளரை அருகில் வைத்துவிட்டு சற்று தூரமாகத் தரையில் உட்கார்ந்து கொண்டாள்.

''எப்படி வாழ்ந்தவங்க... நான் சாதாரண நிலையில் இருக்கும்போது காரும்... பங்களாவுமாக.. சௌக்கியமாக இருந்த குடும்பம் இப்போ'' அழுத்தமாகப் பேசிக் கொண்டே காப்பியை பருகினான் ராஜன்.

அதனால் என்ன- பங்களாவுக்குள்ளே அடஞ்சு கிடந்தேன். கொட்டும் மழையிலே இரவிலே குழந்தையை எடுத்துக்கிட்டு போகும்போது ஏன்னு கேட்க நாதியில்லாம இருந்தேன். இப்போ குடிசைபோல இருக்கும் இந்த சின்ன இடத்திலே ஒண்டு குடுத்தனத்திலே இருக்கேன். ஆனால் எனக்கு மனுஷங்க எத்தனை பேர் தெரியுமா அண்ணா? உதவிக்கு வாங்கோன்னு ஒரு குரல் கொடுத்தா போதும் திமுதிமுன்னு ஆணும் பெண்ணுமா இந்த தெருவே ஓடிவந்து துணை நிற்கும். இதைவிட அந்த பணம் - பதவி - பங்களா உயர்ந்ததா சொல்லுங்கோ-''



''அன்னிக்கு என்ன நடந்ததுன்னு தெரியும். மேலே எங்கே போனீங்க எப்படி வாழறீங்கன்னு தெரியாது இருந்ததினாலே நான்கூட உங்களைப் பிறகு சந்தித்து , உதவ முடியலை'' வருத்தப்பட்டான்.

''நல்லவங்களுக்கு ஆபத்துக்கு தெய்வம்போல யாராவது வந்து உதவுவாங்க. எனக்கு ஒரு புண்ணியவான் சகோதரனைப் போல் வந்து அந்த இரவு என்னை ஆபத்துக்கள் அணுகா வண்ணம் பாதுகாத்தார். எங்க கிராமத்தைச் சேர்ந்தவர் - தங்கச்சியாக என்னை மதிச்சு காப்பாத்தினார். அவருக்கு நான் ரொம்ப நன்றி பாராட்டரேன் - எப்படியோ மேலே படிச்சு நான் வேலை தேடிக்கொண்டு விட்டேன். அதுபோகட்டும், என்னவோ என் கணவரைப் பத்தி...''

ஆவலுடன் அவன் முகத்தைப் பார்த்தாள்.

''இனிப்பைக் கொடுத்தவங்களுக்கு இனிப்பான விஷயத்தை சொல்லத்தான் விரும்பறேன். ஆனால் கேட்டா உங்க மனது ரொமப வருத்தப்படும். உங்க கணவர் இங்கே சென்னையிலே தான் இருக்கார்.''

திடுக்கிட்டுப் போனாள். உடம்பெல்லாம் சிலிர்க்க பதறிக் கொண்டு எழுந்து அருகில் தரையில் உட்கார்ந்தாள்.

''சொல்லுங்க அண்ணா! அவர் எங்கேயிருக்கார்...''

''அவசரப்படாதீங்க... நிதானமா கேட்டுக்கோங்க... உங்களைப் பிரிஞ்ச பிறகு... ஜயந்தன் வாழ்க்கை சீரழிய ஆரம்பிச்சுடுச்சு. மாற்றலாகி கல்கத்தா போனார். அந்த நிறுவனத்திலே ஒழுங்கா வேலை செய்யாம குடிச்சு கெட்டழிஞ்சதிலே வேலை போயிடுச்சு. பல நாட்கள் வேலை இல்லாம திண்டாடி... பிறகு தகுதிக்குக் குறைஞ்ச வேலையை ஏற்றுக்கிட்டு... அதிலும் நிலைச்சிருக்காம, செலவுக்கு பணம்

பத்தாம் வாடகை வீட்டிலே போட்டுக் கொண்டிருந்த மரச்சாமான்களிலிருந்து மாற்று சட்டை வரை வித்து சாப்பிட்டு... வேலைபோய்... உடம்புக்கு முடியாம சீக்காகி.. யார் காலிலோ விழுந்து சென்னைக்கு வந்து சேர்ந்தார்.''

''இதெல்லாம் எப்படி உங்களுக்குத் தெரியும் அண்ணா?''

''இதுக்குதாம்மா விதின்னு சொல்றது. நான் என் வேலை சம்பந்தமா ஹைதராபாத்திலிருந்து வந்தவன் தடுக்கி விழுந்தது போல ஜயந்தனை சந்திக்க நேர்ந்தது. ஒரு நண்பனை சந்திக்க அவன் தங்கியிருந்த லாட்ஜுக்குப் போனேன். அவன் இருக்கவில்லை. இருட்டும் சமயம். அது நகரத்திலே ஒரு சந்துக்குள்ளே இருக்கிற ஒரு சாதாரணமான லாட்ஜ்... வாசல் பக்கம் வராந்தா போல இருந்த இடத்திலே ஒரு ஆள்... தட்டுத் தடுமாறிக் கொண்டு ஒரு மூட்டையும் கம்புமாக உட்கார்ந்தான். லாட்ஜ் ஆட்கள் அவனை அங்கிருந்து போகும்படி விரட்டிக் கொண்டிருந்தார்கள்.''

''ஐயா! கண்பார்வை சரியா இல்லாதவன். இந்த இருட்டு வேளையிலே விரட்டாதீங்க. ஒரு பக்கமா ஒண்டிக் கொண்டிருந்து விட்டுப் போயிடறேன்னு - அவன் கெஞ்சினான். குரலைக் கேட்டு எனக்கு என்னமோ மாதிரி இருந்தது.

''பாவம் யாரோ கண் தெரியாதவன் - அவனை விரட்டராங்களேன்னு பரிதாபப்பட்டுக் கொண்டு - அருகில் சென்று பார்த்தபோது அதிர்ந்து போய்விட்டேன். என் நண்பன் ஜயந்தன். அதுக்குள்ளே கிழவனாகிவிட்டவன் போல நலிந்து ஒடுங்கி தலைமுடி பட்டைபட்டையாக நரைத்து - எல்லாவற்றிலும் கொடுமையாக கண்பார்வை குறைந்தவனாக... பிச்சைக்காரனைப் போல கிழிந்த சட்டையும் அழுக்கு வேட்டியுமாக மூலையில் ஒடுங்கி உட்கார்ந்திருப்பதைக் காண என் மனது வேதனையால் வெடித்தது.



''கத்தாதீங்க ஐயா! இந்த ஆளை நான் கூட்டிகிட்டு போறேன்'' - அப்படின்னு அந்த லாட்ஜின் வேலையாட்களை அடக்கிவிட்டு ஜயந்தன் கையைப் பிடித்துக் கொண்டேன்.

''ஜயந்தன்! வா எழுந்திரு... என்னோட ஹோட்டலில் நீ தங்கிக்கலாம். வா... என்று நான் அழைத்தபோது அவன் அப்படியே ஸ்தம்பித்துப் போய்விட்டான்.''

''யாரது? கேட்ட குரலா இருக்கே... யார்? என்று அவன் மிரள விழித்தபோது எனக்குப் பரிதாபமாக இருந்தது.

''நான்தான் உன் நண்பன் ராஜன் என்று அறிமுகம் செய்து கொண்டபோது... அவன்...பச்சைக் குழந்தையைப் போல கட்டுப்படுத்த முடியாத துயரத்தோட என்னைக் கட்டிக்கொண்டு அழுதகாட்சி கல்மனதையும் கரைச்சடும்...''

''அவர் இப்போ எங்கே இருக்கார் சொல்லுங்க. உடனடியாக அவரை நான் பார்க்கணும்...'' விம்மி விம்மி அழுதாள் கௌசல்யா...

''மிச்சத்தையும் கேட்டுக்கோங்க. மனதை தளரவிடாதீங்க. ஒரு டாக்சியிலே அவனை ஏத்திக்கிட்டு நானிருந்த ஹோட்டலுக்கு அழைச்சுக் கொண்டு போனேன்.

''என்னவோ இடையிலே எங்க போறாத காலம் என்னென்னவோ நடந்துவிட்டது. ஆனால் அந்நாளில் நாங்க ஒன்னாப் படிச்சு முன்னுக்கு வர துடித்த நண்பர்கள். என் மேலே அவனுக்கு ரொம்ப பிரியம்? எனக்கு எத்தனையோ உதவிகள் செஞ்சான். ஆழமான நேசத்தோடு பழகினவன். தனக்கு கல்யாணம் என்கிற அனுபவங்களில் ஏற்பட்ட அதிர்ச்சியினைப் பற்றி மனம் விட்டுப் பேசியிருக்கான். உங்களைக் கட்டிக் கொண்டு வந்தபோது நான் ரொம்ப சந்தோஷப்பட்டேன். உங்களால் அவன் வாழ்க்கையில் அமைதி நிலவ போறதுன்னு

நினைச்சேன். ஆனால் வேறுவிதமாக மாறிடுச்சு. அந்த குடிப் பழக்கம் அவனது வாழ்வை நாசமாக்கி வேலையைப் போக்கி மனைவி மக்களை இழக்க வைச்சு நடுத்தெருவிலே நிக்க வச்சதோட பார்வையையும் பறிச்சிடுச்சி...''

''ஹோட்டலுக்கு அழைச்சிட்டுப் போய் முதல்லே குளிக்கச் சொல்லி என்கிட்டேயிருந்த மாற்றுவேட்டி சட்டையைக் கொடுத்து உதவினேன். தாடி மீசையை மழிக்க ஏற்பாடு செய்யணும்... பிறகு குடும்ப டாக்டர் வைத்தியநாதன் கிட்டே அழைச்சிட்டு போகணும்னு நினைச்சுக் கொண்டுதான் வெளியே கிளம்பி வந்தேன். உங்களைப் பத்தி ராத்திரி பூரா புலம்பிக் கொண்டிருந்தான் ஜயந்தன். அன்னிக்கு நான் முரட்டுத்தனமாக நடந்து கொண்டதைப் பத்தி சொல்லி மனம் குலைந்து போனான். எனக்கு பரிதாபமாக இருந்தது. நீங்க இருக்கிற இடம் தெரியாது. அதனாலே அவனுக்கு என்ன சொல்றதுன்னு புரியாம குழம்பிக் கொண்டிருந்தேன். இப்போது உங்களைப் பார்த்ததிலே எனக்கு ஏற்பட்டிருக்கிற மகிழ்ச்சியும் - மன அமைதியும் கொஞ்ச நஞ்சமல்ல... ஜயந்தன் உங்களை இப்போது சந்திச்சால் ரொம்ப சந்தோசப்படுவான்.

''தங்கச்சி! அவன் ரொம்ப மாறிப் போயிருக்கிறான். நீங்க நடந்ததை எல்லாம் மறந்துட்டு மன்னிச்சுட்டு...?''

அவள் முகத்தை ஆவலுடன் பார்த்தான்.

கண்களும் முகமும் சிவக்க... விசித்து அழுதுகொண்டிருந்தவள் - சட்டென்று எழுந்தாள். உள்ளே சென்று முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டு பொட்டை பெரிதாக வைத்துக் கொண்டு வந்தாள்.

அண்ணா! ஒரு முடிவுக்கு வந்திருக்கேன். அவரை நான் வந்து அழைத்துக் கொண்டு வந்து காப்பாத்திக்கப் போறேன். ஆனால் நான் யார்னு நீங்க சொல்லக்கூடாது.



''அண்ணா உங்களோட கூடவே வரேன். நான் டாக்சியிலே கீழே இருக்கேன்...நீங்க ஏதாவது சொல்லி அவரை என்னோட அனுப்பி வச்சுடுங்கோ...உங்களுக்குப் புண்ணியமுண்டு'' தழதழத்தாள்.

''நான் திரும்ப ஹைதராபாத் போகணும் - மேற்கொண்டு ஜயந்தனை யார் வசம் ஒப்படைத்துவிட்டு போறது... எங்கேயாவது ஒரு சிறு ஹோட்டலில் தங்கவச்சு பணம் கட்டிவிட்டு போகலாமா- பிறகு வந்து பார்த்து ஏதாவது உதவலாமா... பார்வையற்றவர் விடுதியில் இடம் கிடைக்குமா என்று கேட்டுத் தேடிச் செல்ல எனக்கு நேரமில்லையேன்னு தவிச்சுக் கொண்டிருந்தேன். எதிர்பாராத இந்த சந்திப்பு... தெய்வச் செயல் அம்மா... நீங்களும்... உங்க கணவரும் மறுபடியும் சந்திக்கணும்னு இருக்கம்மா...'' உணர்ச்சிவசப்பட்டுப் பேசினான் ராஜன்.

ஹோட்டல் எதிரே நிறுத்தப்பட்டிருந்த டாக்ஸிக்குள் கைத்தாங்கலாக ஜயந்தனைப் பிடித்து அழைத்து வந்து ராஜன் ஏற்றினான். ஓவென்று வாய்விட்டு அழவேண்டும் போன்று துயரத்திலே துவண்டு போனாள் கௌசல்யா...

வாட்ட சாட்டமாக ஆண் அழகனாக - கம்பீரமாக இருந்த அவள் கணவன்... நலிந்து, நிறம் மாறி, நரைத்த முடியும் - மழிக்கப்படாத முகமுமாக... எப்படி மாறிவிட்டிருந்தான்.

''யார் அது...'' அருகில் எழுந்த மூச்சின் ஒலியை உணர்ந்து கேட்டான்... ஜயந்தன்...துன்பத்தின் சுமை தாளாது சுக்கலாகி விடும் போல நெஞ்சு கனத்தது. கண்களில் நீர் பொங்கியது.

''ராஜன் அவர்களுக்கு தெரிஞ்சவங்க.. அவர் திரும்ப தமது வேலைக்குப் போகணும் - மறுபடி இங்கே வரும் வரை கொஞ்ச நாள் எங்களோட வச்சுக் கொண்டிருக்கும்படி கேட்டுகிட்டார் -

அதனாலே...'' மெல்லிய குரலில் பேசினாள். கண்பார்வையில்லா கணவனிடம் பொய் சொல்லலாமா? அவள் உள்ளம் ஓலமிட்டது.

''இந்த குரல்... ரொம்ப பழக்கமான குரல்போல காதுக்கு படரது... ஒரு சமயம் எனது மனசு பிரமையாக இருக்கலாம்.. அம்மா நீங்க யாராக இருந்தாலும் சரி... முன்பின் தெரியாதவனுக்கு உதவ வந்திருக்கீங்களே - ரொம்ப நன்றி...'' கையெடுத்து அவன் கும்பிட்டபோது... கௌசல்யாவின் கண்கள் குளமாயின... புடவைத் தலைப்பை வாயில் அடைத்துக் கொண்டு அழுகையை சமாளிக்க முயன்றாள்.

## 10

பள்ளிக் கூடத்திலிருந்து வெளியே வந்தான் முரளி. தூக்கிவாரிப் போட்டது அவனுக்கு.

அவனது தாய் அவனைத் தேடிக் கொண்டு பள்ளிக்கூடத்திற்கு அதுவரை வந்ததே கிடையாது.

என்ன நேர்ந்துவிட்டது?வியப்பும் திகைப்புமாக வெளியே கேட்டருகே.. ஒரு ஓரமாக நின்ற தாயிடம் வேகமாய் வந்தான்.

குற்ற உணர்வுடன் கௌசல்யா அவனைப் பார்த்து மெல்லியதாக முறுவலித்தாள். ''ஒண்ணுமில்லை... பயந்துடாதே... உன் பிறந்த நாளுக்கு பரிசாக வாங்கின சட்டையை எடுத்துக் கொண்டு வந்தேன். நேரே உன்னை கோயிலுக்கு அழைச்சுட்டு போகணும்னு தோணிச்சு...''

அவனால் நம்ப முடியவில்லை. அம்மா பேசும்போது ஏன்



இப்படி முகம் சிவந்துபோய்.. உதடுகள் துடிக்கப் பதட்டமாக காணப்படுறாங்க? என்னவோ நடந்திருக்கு... மறைக்கப் பார்க்கிறாங்க... நான் பயப்படுவேன்னு மெள்ள சொல்ல நினைத்திருக்காங்க. ஊரில் உடம்புக்கு சுகமில்லாம தாத்தா படுத்திருந்தாரே.. அவர் இறந்து போயிட்டார்னு சொல்லத்தான் இப்படி இங்கே வந்தாங்களா?

வீட்டிலே மெதுவாக சொல்லியிருக்கலாமே! ஊகும் என்னவோ விஷயம் இருக்கு...புத்திசாலியான அவனுக்கு பலவும் ஊகிக்க முடிந்தது.

''காலையிலேதான் பிள்ளையாருக்கு அர்ச்சனை பண்ணி முடிச்சிட்டீங்களே. மறுபடியும் கோயிலுக்குப் போகணுமா?''

''சாமியை எத்தனை வாட்டி கும்பிட்டா என்ன குறைஞ்சா போயிடுவோம்.''

''ஆமாம் இந்த சட்டை பார்சலைக் கூட கையோட கொண்டு வரணுமா?''

''உனக்கு கலர் பிடிக்கிறதான்னு தெரிஞ்சுக்கணும். பிடிக்காட்டி உடனடியா மாத்தணும்னு தோணிச்சு...''

''நீங்க எது வாங்கித் தந்தாலும் எனக்குப் பிடிக்கும்...''

''எதைச் செய்தாலும் பிடிக்குமா முரளி...'' கேட்குமுன் அவள் தொண்டையை துயரம் அடைத்துக் கொண்டது.

தாயும் மகனும் சாலையில் மௌனமாக நடந்தனர்.

இருவர் மனதிலும் இனங்காணாத உணர்வுகளின் போராட்டம்.

எப்படிச் சொல்வது? மகனை எப்படி சமாளிப்பது. அவளுக்குக் கவலை.

சும்மா மனதில் எதை வச்சுக் கொண்டு இப்படி மர்மமா பேசறாங்க? அவனுள் கேள்வி.

வழியிலிருந்த அந்த விநாயகர் கோயில் அருகே வந்ததும் பாதணிகளை வெளிப்புறம் விட்டுவிட்டு உள்ளே சென்றனர்.

அந்திமங்கும் வேலையில்தான் கோவிலில் அதிகக் கூட்டம் இருக்கும். அவர்களைப் போல வந்த சில பக்தர்களுக்காக அவர்கள் தீப ஆராதனை காட்டி தட்டை முன் நீட்டினர்

கற்பூர ஜோதியை வணங்கிவிட்டு ...திரும்பிய மகன் கரத்தைச் சட்டென்று கௌசல்யா பிடித்துக் கொண்டாள்.

''இப்படியே...இந்த கல்லு மேலே கொஞ்சம் உட்காரு'' கோவில் உட்பிரகாரத்தில் ஒரு ஓரமாகக் கிடந்த ஒரு கல் மீது இருவரும் அமர்ந்து கொண்டனர்.

''இந்த சட்டை உனக்குப் பிடிக்கிறதான்னு பார்த்து சொல்லலையே? கையிலிருந்த அட்டைப் பெட்டியைத் திறந்து... அவன் முன் நீட்டினாள். லேசான பச்சை வண்ணம் அவனுக்குப் பிடித்த நிறம்... புதுவிதமாக வெட்டித் தைக்கப்பட்ட சட்டை.

''நல்லா இருக்கு. விலைகூட அதிகமாக இருக்கும்...''

''விலையை விடு. உனக்கு பிடிச்சிருக்கா? உன் பிறந்த நாளுக்கு என் பரிசு...''

''ரொம்ப பிடிச்சிருக்கு... உங்களுக்கு ஏன் இந்த செலவு. என் பிறந்த நாளுக்கு... என்னை பெத்து வளர்த்து ஆளாக்க பாடுபடும் உங்களுக்கு நான் பரிசு கொடுக்கணும்.. ஏம்மா நீங்க இப்படி மனதை போட்டு அலட்டிக்கிறீங்க. நீங்க எது எடுத்துக் கொடுத்தாலும் எனக்குப் பிடிக்குமே.''

''என்ன செஞ்சாலும் உனக்கு பிடிக்குமா முரளி'' அவள் குரல் உடைந்தது.



தாயின் முகத்தை திகைப்புடன் பார்த்தான்.

'இவங்க என்ன சொல்ல இப்படி சுத்தி வளைக்கிறாங்க?'

''பிடிக்கும்மா.. நீங்க எப்பவும்.. எது செய்தாலும் எனக்குப் பிடிக்கும். ஏன்னா நீங்க ஒரு தவறும் செய்ய மாட்டீங்க.''

''அப்படி உனக்கு என் மேலே பூரண நம்பிக்கையிருக்கா முரளி... உன் நம்பிக்கையும் அன்புந்தான் எனக்கு இந்த உலகத்திலே இருக்கிற ஆஸ்தி.''

''ஏம்மா இப்படி பேசறீங்க.''

''பேசறதுக்கு ஒரு காலம் வந்திடுச்சு. அதனாலே மனம் விட்டு உண்மையை சொல்லிடப்போறேன்.''

''அம்மா! ஏம்மா இப்படி திடீர்னு கண்கலங்கி போறீங்க... நான் ஏதாவது தப்பு செய்தேனா?''

''இல்லடாப்பா என் கண்ணே- தப்போ சரியோ... இப்ப நான் செய்திருக்கிற காரியத்தைப் பத்தி நீதான் சிந்தித்து எனக்கு உதவணும். உன் பிறந்த நாளின்போது எனக்குப் பரிசு வாங்கித் தருவேன்னு சித்த முன்னே சொன்னியே... ஒரு பரிசு எனக்கு வேணும்னு கேட்டா தருவியா...''

''நான் படிக்கிற பையன் - இன்னும் சம்பாதிக்க ஆரம்பிக்கலை. என்ன வேணும்னு சொல்லுங்க.''

''பணத்தால் வாங்கிற பரிசு இல்லை.. உன் மனத்தால் வாங்க முடிந்த பரிசு...''

''அம்மா நீங்க புதிர்போட்டுகிட்டு விளையாடுறீங்க..''

''விளையாடலை. வேதனை தாங்காம சொல்றேன். உன்னை வீட்டுக்கு அழைச்சிட்டுப் போக பயமா இருக்கு...'' பெத்த

மகன்கிட்டே தாயார் பயப்படற துர்பாக்கியம் எனக்கு வந்து சேர்ந்திருக்கு... முரளி! நான் ஒரு காரியம் செய்துவிட்டிருக்கேன். உன் அப்பாவைக் கண்டுபிடிச்சுட்டேன். அவரை அழைச்சிட்டு வந்திருக்கேன். வீட்டிலே வச்சிருக்கேன். அவர் உடம்புக்கு முடியாம இருப்பதால் உன் அறையிலே உன் படுக்கையிலே படுக்க வச்சுட்டு... கதவைச் சாத்திட்டு வந்திருக்கேன்.''

''அம்மா!'' கிரீச்சிட்டு கத்தினான் முரளி. கோவில் பிரகாரத்தைச் சுற்றிக் கொண்டிருந்த பக்தர் ஒருவர் திடுக்கிட்டு அவனைத் திரும்பிப் பார்த்தார்.

கோபத்துடன் தாயை முறைத்தான் அவன்.

''நான் வீட்டுக்கு வரலையம்மா. நீங்க போங்க...!'' ஆத்திரத்துடன் சீறினான்.

''முரளி!...முரளி! என் பேச்சைக் கேள். நன்னா யோசிச்சுப் பார். உன் அப்பா இல்லாமல் தனியா வாழ நான் எத்தனை சிரமப்பட்டேங்கிறதை இன்னும் கொஞ்சம் பெரியவனானப்ப புரிஞ்சுக்குவே-''

''அவர் என் மனசிலே எத்தனை வெறுப்பை ஏத்தி வச்சிருக்கார் என்கிறதை நீங்களும் புரிஞ்சுக்கோங்க...''

''என்ன இருந்தாலும் அவர் உன் அப்பா... இப்படி வெறுப்போட பேசக்கூடாது.''

''அம்மா! முடிவா சொல்லிட்டேன். உங்களுக்கு அப்பா வேணுமா... நான் வேணுமா?''

''ஒரு பெண்ணுக்கு கணவன்தான் துணைன்னு நான் துடிச்சபோது அவர் என்னை உதறிட்டார்... பிள்ளைதான் இனி நமக்கு பெரும் துணைன்னு நம்பிக்கொண்டிருக்கிறச்சே நீ என்னை உதறிவிட யோசிக்கிறே... கணவன் இல்லாட்டி



பிள்ளைன்னு... என் வாழ்க்கையிலே ஒருத்தர்தான் இருக்கணும்னு இருக்கு... நீ கோவிச்சுக் கொண்டாலும் சரி... என் முடிவை நான் மாத்திக்க முடியாது. அவர் ஆடம்பரமா ஆஸ்தியும் - பங்களாவும் பதவியுமாக இருந்தார்னா... நான் அவரைப் பத்திக் கவலைப்பட்டிருக்க மாட்டேன். எல்லாம் போய்... ஒரு பிச்சைக்காரனா.. நடுத் தெருவில் நிக்கிறார்... அதுவும் பார்வையில்லாத மனிதனா பரிதவிக்கிறார். இந்த நிலையிலே அவரை என்னால் ஒதுக்க முடியலை. கடமைன்னு ஒண்ணு இருக்கு. கொஞ்ச காலம் எனக்கு வாழ்வு கொடுத்து ஒரு குழந்தைக்குத் தாயாகும் தகுதி தந்தார்... அந்த ஒரு காரணத்துக்காக அவரை நான் இப்ப வச்சு பாதுகாத்து அவருக்கு துணையாக இருக்க விரும்பறேன்...''

''உங்கள் இஷ்டம். ஆனால் நான் அந்த வீட்டுக்கு வரப்போற தில்லை.''

''முரளி நீ பதினாலு வயது பையன். படிக்கிறே... உன் மனதில் தோணினபடி செய் - தோளுக்கு மிஞ்சிப்போன பிள்ளையை நான் அடக்கி ஆள முயலமாட்டேன்'' திக்கித் திணறிக் கொண்டு அவள் எழுந்தாள்.

வியப்புடன் அவளை வெறித்துப் பார்த்தான் முரளி.

''அன்னிக்கு இருட்டிலே நம்மை விரட்டினாரே அதை நினைச்சுப் பார்த்தீங்களா அம்மா! அன்னிக்கு ஏற்பட்ட திகில் இன்னும் என் கனவுகளில் வந்து என்னை எப்படி பயமுறுத்துரது தெரியுமா? எத்தனை முயன்றாலும்... அம்மாவுக்குன்னு நினைச்சாலும்... என்னால் மனசை சமாதானப்படுத்திக்க முடியாது. நான் வீட்டுக்கு வர மாட்டேன். இப்படியே எங்கேயாவது போய்விடப்போறேன்.''

''அன்னிக்கு அப்பா செய்த தவறுக்கு இன்னிக்கு அவரைப்

பழிவாங்கணும்னு எனக்குத் தோணலை. இதையெல்லாம் மறந்தாதான் மனிதாபிமானத்தோட நாம வாழ முடியும்.. முரளி!'' கையை மெல்ல பற்றிக் கொண்டு எழுந்திருந்தாள்.

''அம்மா! என்னை விடுங்க... எனக்கு அன்னக்கி அப்பா இல்லைன்னு ஆயிட்டது - இன்னிக்கு அம்மாவும் இல்லை'' சொல்லிக்கொண்டே விருவிரு என்று பிரகாரத்தைத் தாண்டி வெளியே வந்தான். பாதணிகளை காலில் திணித்துக் கொண்டு எதிர்புறமாக திரும்பி வேகமாக நடந்த மகன் பின்னால் ஓட முடியாது- பொங்கிவந்த துயரத்தை அடக்க முடியாது.. விம்மிக் கொண்டே அவள் மெல்ல அங்கிருந்து புறப்பட்டாள்.

## 11

கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த கௌசல்யா விளக்கைப் போட்டாள். கையில் சுமந்து வந்த அட்டைப் பெட்டியை முக்காலி மீது வைத்துவிட்டுப் பாக்சை போட்டாள்.

''யாரது'' அதட்டிய ஜயந்தன் கயிற்றுக் கட்டிலின் மீது எழுந்து உட்கார்ந்தான்.

''நான்தான்- வெளியிலே ஒரு வேலையா போயிருந்தேன். இப்பத்தான் வந்தேன்...விளக்கைப் போட்டேன்.''

மெல்லிய குரலில் பதிலளித்தாள்.

''இருட்டிப் போச்சா அப்படியா! நான் அசந்து தூங்கிட்டேன்'' வியப்புடன் கேட்டான்.

இருட்டுக்கும் வெளிச்சத்துக்கும் வித்தியாசம் தெரியாத அளவு பார்வை மிகவும் மங்கிவிட்டிருக்கிறதே... நெஞ்சைப்



பிசைந்த துயரத்தை விழுங்கிக் கொண்டாள். ''கொஞ்சம் இருங்கோ... சாப்பாட்டை சூடு செய்து கொண்டு வரேன்...'' என்றாள்.

''என்னம்மா ...என்னை எழுப்பி உட்கார வச்சுட்டு போயிருக்கலாம். கதவை சும்மா சாத்திக்கொண்டு போயிருக்கே. யாராவது வீட்டுக்குள்ளே பூந்து... சாமான்கள் எதையாவது எடுத்துப் போயிருந்தால்..'' அனுதாபப்பட்டான் அவன்.

''எடுத்துப்போக இங்கே அப்படி உயர்ந்த பொருள் எதுவும் இல்லை. மேலும் இது ஒண்டுக் குடித்தனம் - பின்பக்கத்து குடித்தனக்காரங்க கவனிச்சுப்பாங்க.. இந்த தெரு மனிதர்கள் அந்த விஷயத்திலே ரொம்ப ஒற்றுமையானவங்க... ஒருத்தர் இல்லாட்டா ஒருத்தர் கவனிச்சுப்பாங்க...''

''எத்தனை நம்பிக்கையா பேசுறீங்க அம்மா'' வியந்தான் அவன்.

'நம்பிக்கை என்ற உணர்விலேதான் உலகமே இயங்குகிறதுன்னு பெரியவங்க சொல்வாங்க. தாயார் தனக்கு போடும் சோறு ருசியானது... அன்போடத்தான் போடறாங் கன்னு குழந்தை நம்பிக்கையோட சாப்பிடணும்... குழந்தை வளர்ந்து ஆளானா நம்மை கைவிடமாட்டான் பாதுகாப்பான்னு நம்பிக்கையோட்டத்தான் தாய் குழந்தையை வளர்க்கணும்... ஆரம்பத்திலே நம்பிக்கை குறைஞ்சுட்டா வாழ்க்கையில் அமைதி கெட்டுடுமே...''

சிறிது பொழுதில்.. அவள் உள்ளே வந்து மெல்ல தோளைத் தட்டினாள். ''இந்தாங்க... ஒரு கம்பு. இதை ஊன்றிக்கிட்டு என் கையைப் பிடிச்சிட்டு எழுந்து வாங்க... கழிவறைக்கு அழைச்சிட்டு போறேன். கை கால் சுத்தம் செய்துக்கோங்க... ஒரு நாற்காலி தரேன் உட்காருங்க. சாப்பாடு சூடா எடுத்து வச்சிருக்கேன்'' உபசரித்தாள்.

''இப்போ எனக்கு நடக்க உதவ ஒரு ஊன்றுகோல் அவசியமாயிடுச்சு. இப்படி நேரும்னு நான் அப்போ நினைச்சுப் பார்த்ததில்லை'' விரக்தியாக சிரித்துக் கொண்டே எழுந்திருந்தான். அவள் கொடுத்த கம்பைப் பற்றிக் கொண்டு மெல்ல நடந்தான்.

நாற்காலியில் உட்காரவைத்து முக்காலியை அருகே நகர்த்தினாள். தட்டிலே சாதமும் குழம்பும் வார்த்து... அவனது கையைப் பிடித்து அதன் மீது வைத்தாள். ''பிசைஞ்சு சாப்பிடுங்கோ. இந்த ஓரத்திலே பொரியல் இருக்கு. இடது பக்கம் சின்ன மேஜையிலே தண்ணீ வச்சிருக்கேன்'' ஜயந்தனுக்கு நல்ல பசி. கம்மென்று முகத்திலே வீசிய வெங்காய சாம்பாரின் வாசனை... நாக்கில் நீர் ஊறியது.

அவசரமாக சோற்றைக் கலந்து... ஒரு பிடி வாயில் அள்ளிப் போட்டுக் கொண்டான். ''அம்மா! ஒண்ணு கேட்கிறேன் கோவிச்சுக்காதீங்க... முன்பின் தெரியாத ஒருத்தனுக்கு இப்படி அன்பா உதவுறீங்களே... உங்களுக்கு எத்தனை குழந்தைகள். உங்க வீட்டுக்காரர் வேலையிலிருந்து வந்துவிட்டாரா? எனக்கு இடம் கொடுத்து உதவ முன்வந்த உங்களுக்கு ஒன்று சொல்லணும்னு ஆசையா இருக்கு...'' கண்களில் முட்டிய நீரை விரல்களால் தட்டிவிட்டாள் கௌசல்யா.

''நானும் என் மகனும்தான் இந்த வீட்டிலே இருக்கோம். என் வீட்டுக்காரர்... இப்போ என்னோட இல்லை.''

''கேட்டதுக்கு மன்னிச்சுக்கோங்க... உங்க மகன் இன்னும் வேலையிலிருந்து வரலையா?'' கவலையுடன் விசாரித்தான்.

''பள்ளிக்கூடத்திலே படிக்கிறான். பரீட்சைக்கு படிக்க சிநேகிதன் வீட்டிற்கு போயிருக்கான்... குழம்பு காரமா இருக்கா. இந்தாங்க தண்ணி..'' தம்ளரை எடுத்து அவன் கையில் கொடுத்தாள்.



''இல்லேம்மா... இந்தக் குழம்பின் ருசி... எனக்கு என்ன னென்னவோ நினைவுகளை உண்டாக்கிவிட்டது. என் மனைவி ருசியா உரைப்பும் புளிப்பும் அளவா இருக்கிறாப்பல சமைப்பாள்.''

''அப்படியா?...'' அதற்குமேல் கேட்க துணிவின்றி துயரத்துடன் மௌனமானாள்.

''இதென்ன பாயசமா.. என்னம்மா... வீட்டுக்கு விருந்தாளி வந்திருக்கேன்னு உபசாரம் பண்றீங்களா?...'' வறட்சியாக சிரித்தான் ஜயந்தன்.

''காலையிலே வச்ச பாயசம்... இன்னிக்கு என் மகனது பிறந்த நாள்.''

''அப்படியா... ஆமாம் என்ன தேதி''

''ஜனவரி இருபத்திரண்டு... ஏன் கேட்கிறீர்கள்?''

''என் மகனது பிறந்த நாளும் இதே தேதியில்தான் வரும். என் மனைவி பால் பாயசம் செய்து... விநாயகருக்கு அர்ச்சனை செய்துட்டு ரொம்ப அடக்கமா கொண்டாடுவா...''

கன்னத்திலே வழிந்த கண்ணீரை மெல்ல துடைத்துக் கொண்டாள் கௌசல்யா. ''அப்படியா... ஆச்சர்யம்'' என்றாள் மெல்லிய குரலில்.

''ஒண்ணு மறுபடியும் கேட்க விரும்பறேன். தப்பா நினைச்சுக்கக் கூடாது உங்க குரல் எனக்கு ரொம்ப பழக்கப்பட்ட குரலாட்டமா இருக்கு... இந்த குழம்பு - பொரியல் இதுகளை சமைச்சிருக்கிற விதமும் எனக்கு ரொம்ப பழக்கப்பட்ட விதமா இருக்கு... உங்க மகன் பிறந்த நாளும் என் மகனது பிறந்த நாள் அன்றே வருகிறது... ரொம்ப ஒற்றுமைகளை கவனிக்கிறேன். அம்மா நீங்க யார்னு சொன்னா நன்னாயிருக்கும். வீணா

மனசிலே பல எண்ணங்கள் எழுந்து என்னை சஞ்சலப்படுத்தாது...''

''ராஜன் என்பவருக்கு நீங்க ரொம்ப நெருங்கிய நண்பர்னு கேள்விப்பட்டேன். அவர் வேண்டிக்கொண்டதாலே உங்களை இங்கே வச்சு பாதுகாக்க ஒப்புக் கொண்டேன். உங்களுக்கு சவுரியப் படறபோது உங்களை அவருக்கு தெரிஞ்ச டாக்டர் வைத்தியநாதன் என்பவரிடம் அழைச்சிட்டுப் போகனும்னு கேட்டுக் கொண்டார். ஒப்புக் கொண்டேன்.''

''ஏம்மா ஒப்புக் கொள்ளணும் - உனக்கு எத்தனை சிரமம் -செலவு...''

''செலவுக்கு அவர் பணம் தந்து விடுவதாக ஒப்புக் கொண்டிருக்கிறார். இங்குள்ள ஊனமுற்றோர் இல்லத்திலே நான் ஒரு டைப்பிஸ்ட் வேலை பார்க்கிறேன். இந்த ஆண்டு ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு தரும் ஆண்டாக உலகமெங்கும் கொண்டாடப்படுகிறது. என்னால் முடிஞ்ச ஒரு சிறு உதவியை... ஊனமுற்ற யாருக்காவது செய்யணும்னு நினைச்சுக் கொண்டிருந்தேன். உங்களுக்கு உதவும்படி அவர் கேட்டதும் ஒப்புக் கொண்டேன்.''

''உனக்கு ரொம்ப நல்ல மனசு அம்மா... இத்தனை நல்ல குணம் படைச்ச உங்களை விட்டுட்டு உங்கள் கணவருக்கு வெளியேற எப்படித்தான் மனம் வந்துச்சோ'' பரிதாபப்பட்டான் ஜெயந்தன்.

சாப்பிட்டதும் மீண்டும் அவனது கையைப் பிடித்து மெல்ல அழைத்துச் சென்று கைகழுவ உதவினாள். பின்னர் கட்டிலில் கிடந்த படுக்கையைத் தட்டி ஒழுங்கு செய்தாள். ''இப்படி படுக்கைமேலே உட்கார்ந்து கொள்ளுங்க. தூக்கம் வர்ற வரை... இந்த டிரான்ஸ்சிஸ்டரில் எதையாவது திருப்பி பாட்டு பேச்சு



ஏதாச்சும் கேட்டுக் கொண்டிருங்கோ...'' என்று தன் மகனின் டிரான்சிஸ்டர் ரேடியோவை அவன் கையில் கொடுத்தாள்.

''அம்மா நீங்களும் உங்கள் குழந்தையும் சுகமா இருக்கணும்னு கடவுளை வேண்டிக்கிறேன். கூடிய சீக்கிரம் உங்கள் கணவர் திரும்பி வந்து உங்க குடும்பத்திலே மகிழ்ச்சி நிறைந்து இருக்கணும்னு பிரார்த்தனை செய்துக்கிறேன்...'' சொல்லிவிட்டு ...கட்டிலின் மீது சாய்ந்துகொண்டான்.

கௌசல்யாவுக்குப் பசியிருக்கவில்லை. சாப்பாட்டை அப்படியே மூடிவைத்துவிட்டு அந்த அறைக்கு முன்னாலிருந்த தாழ்வாரத்தில் பாயை விரித்துக் கொண்டு படுத்தாள்.

என்ன கட்டுப்படுத்தியும் தாளமாட்டாது துயரம் பொங்கிக் கொண்டு வந்தது.

கட்டின கணவன் கண் பார்வையின்றி அருகில் அறையில் படுத்துக் கிடக்கிறான். உண்மையைச் சொல்ல முடியாது ஊமையாக இருக்க நேர்ந்துவிட்ட கொடுமையை எண்ணி... கலங்கி..கண்ணீர் உகுத்தாள். ஓசையின்றி... வெகுநேரம் அழுது கொண்டு உட்கார்ந்திருந்தாள். பிறந்த நாள் அன்று பிரிந்துவிட சம்மதித்த மகனை எண்ணி மருகினாள். குழந்தை பசியோடு இருப்பானே. கையில் காசுகூட எடுத்துக் கொள்ளவில்லையே. எங்கே போயிருப்பான். அவள் எங்கே போய் தேடுவாள்... இந்தக் கொடுமையை யாரிடம் சொல்லி அழுவாள்... எண்ணி...எண்ணி மனம் புண்ணாகிக் போனாள்.

ஒருபக்கம் மகன் - இன்னொரு பக்கம் கணவன் இருவர் இடையே அவளுக்கு நிம்மதியே கிடையாதா?

மெல்லியதாக ஒலித்த வானொலி பாடல்கள் அடங்கிப் போயின. எழுந்து அறைக்குள்ளே எட்டிப்பார்த்தாள். வயிறு நிறைய சாப்பிட்ட களைப்பு - ஜயந்தன் லேசாகக் குறட்டை விட்டுக்கொண்டு உறங்கிக் கொண்டிருந்தான்.

பாயின்மீது வந்து படுத்தாள்- மகனைப் பற்றிய கற்பனைகளில் திகிலடைந்து போனவளுக்கு உறக்கமும் வரவில்லை.

அருகிலிருந்த அலாரம் கடிகாரத்தை விடிவிளக்கு வெளிச்சத்திலே எடுத்து அடிக்கடி பார்த்தாள்.

ஒன்பது -பத்து- பதினொன்று- பனிரெண்டு ஆகிக் கொண்டு போனது... மார்பு படபடக்க... கவலையுடன்...பாயில் புரண்டு கொண்டிருந்தாள்.

அவளையும் மீறிய களைப்பு... கண்ணயர்ந்து போனாள். வாயில் கதவை யாரோ லேசாகத்தட்டும் ஓசை... திடுக்கிட்டு விழித்துக் கொண்டு எழுந்து சென்று மெல்லத் திறந்தாள்.

வராந்தா விளக்கொளியில் வாசலில் முரளி நிற்பது தெரிந்தது. மௌனமாக புத்தகமூட்டையைச் சுமந்து கொண்டு உள்ளே வந்தான். காலணிகளைக் கழற்றி வைத்துவிட்டு... தாழ்வாரத்தில் உட்கார்ந்தான்.

கதவைச் சாத்திவிட்டு உள்ளே வந்தாள் கௌசல்யா..

முகம்வாடி.. களைத்துப் போயிருந்த மகனைப் பார்க்கவும் வேதனையாகத்தான் இருந்தது.

''அம்மா!..'' முனகினான் முரளி.

''என்னப்பா என்ன வேணும்'' அருகில் ஆவலுடன் வந்து உட்கார்ந்து கொண்டு முன்நெற்றியில் புரண்ட முடியை ஒதுக்கி விட்டாள். குற்ற உணர்வில் தடுமாறின குரலில் மெல்ல கேட்டான் மகன். ''அப்பா இருக்கிறாரா அம்மா?'' அவள் ஆமாம் என்று தலையை அசைத்தாள். உரத்து பேசக்கூடாது என்பதற்கு அடையாளமாக வாயில் விரலை வைத்து ஜாடை செய்தாள். முக்காலிமீது வைத்திருந்த அட்டைப்பெட்டியை எடுத்து மடிமீது வைத்துக் கொண்டு உதட்டை... மடித்து கோணலாக புன்முறுவலித்தான் முரளி.



''இந்த சட்டை எனக்கு ரொம்ப பிடிக்கிறது அம்மா நன்றி.''

''சந்தோஷம்... பசியா இருப்பியே சாப்பாடு வச்சிருக்கேன் சாப்பிடறியா'' கனிவோடு கேட்டாள் அவள். ''சாதத்தை பிசைந்து உருட்டி கையில் போடுங்கம்மா. ரொம்ப நேரம் உங்களைப்பற்றி நினைச்சுக்கொண்டே தெருத் தெருவாக சுத்திக்கிட்டிருந்தேன். முடிவில் நீங்க சொல்றதுதான் சரின்னு பட்டுது. உங்களுக்கு நானும் வேண்டும். அப்பாவும் வேண்டும். நான் சம்பாதித்துக் கொடுக்க இன்னும் ரொம்ப காலமாகும். அதனாலே இப்பவே என் பிறந்த நாளுக்கு உங்களுக்கு பரிசு கொடுக்கிறதுன்னு தீர்மானிச்சுட்டேன்'' அருகில் வந்த மகன் தாயின் கழுத்தைக் கட்டிக் கொண்டான்.

''அப்பா நம்மோட இருக்கட்டும். நாம யார்னு அவரா தெரிஞ்சுக்கிறவரை நான் வாயைத் திறக்கமாட்டேன். அவர் மேலே வச்சிருந்த கோபத்தை உங்களுக்காக விட்டுடறேன் - அதுதான் நான் உங்களுக்கு பிறந்த நாளுக்கு கொடுக்கிற பரிசு...''

பொலபொலவென்று கண்ணீர் உகுத்த கௌசல்யா மகனை தன் மார்போடு அணைத்துக் கொண்டு கன்னங்களில் முத்தமிட்டாள். ''முரளி! அம்மாவுக்கு இனி ஒண்ணும் வேண்டாம். இந்த வாக்குறுதி ஒண்ணே கோடானுகோடி பெறும்'' தாயும் மகனும் விசித்து அழுதனர்.

முகத்தைத் துடைத்துக் கொண்டு கைகளைக் கழுவிக் கொண்டு உள்ளே சென்ற கௌசல்யா சோற்றைப் பிசைந்து தட்டில் எடுத்து வந்தாள்.

''வாயைத்திற.. நானே என் கையால் ஊட்டிவிடுறேன்...'' சொல்லிக் கொண்டே மகன் எதிரே உட்கார்ந்து பாப்பாவுக்கு சோறு ஊட்டுவது போல... பதினைஞ்சு வயதுக்கு வந்துவிட்ட மகனுக்கு அவள் ஊட்டிவிட்டாள்.

எத்தனை வயதானால் என்ன. .. ஒரு தாய்க்கு மகன் எப்பொழுதும் குழந்தைதானே?

அதற்குப் பின்னர் பாயின் மீது இருவரும் நிம்மதியாக உறங்கிப் போயினர்.

மறுநாள் காலை அவளுக்கும் - முரளிக்கும் விடுமுறை. சூரியன் உதிக்கும் முன்பே எழுந்து குளித்துவிட்டு காப்பியை கலந்து எடுத்து வைத்தாள். மூலையில் சாத்திக்கிடந்த கம்பை எடுத்துக் கொண்டு அவள் அந்த அறைக்குப் போவதைக் கண்டதும் முரளி ஓடிவந்து அதைத் தன் கையில் வாங்கிக் கொண்டான்.

''அம்மா! நான் அவரை அழைச்சிட்டுப் போய் பல் விளக்க உதவி செய்கிறேன். நீங்க காபி பலகாரத்தை எடுத்துக் கொண்டு வாங்க'' என்று கூறி மெல்ல மெல்ல உள்ளே சென்றான்.

அவன் வருவதை உற்றுக்கேட்டவன், ''வாடா முரளி'' என அன்போடு அழைத்தான் ஜயந்தன்.

பார்வை மங்கிவிட்ட அவருக்கு எப்படி தான் வந்திருப்பது தெரிந்தது என்று அதிர்ச்சியில் திகைத்து நின்றான் முரளி.

அப்போது கௌசல்யா உள்ளே வந்தாள்.

அப்போது திகைப்பும் வியப்புமாகக் கண்கலங்கி முரளி அருகில் நின்று கொண்டிருந்தான்.

''பார்வை மங்கிவிடும்போது- மனிதனுக்கு மற்ற உணர்வுகள் கூர்மையாகிறது. இயற்கையின் திருவிளையாடல்களில் இதுவும் ஒண்ணு. உனக்கு இந்த உண்மை தெரியுமோ என்னவோ... என்னால் சிறு சத்தத்தைக் கூட இப்போதெல்லாம் நல்லா உணர முடிகிறது. ஒரு தடவை கேட்ட காலடி ஓசையை மறுதடவை புரிஞ்சுக்க முடிகிறது- மூக்குக்கு முன்னைவிட வாசனையை முகரும் சக்தி அதிகமாகிவிட்டிருக்கு. மூளையில் முன்பு பதிந்த



நினைவுகள்- பசுமையாக அப்படியே பதிஞ்சு இருக்கு.''

''சாப்பிடுங்கோ - உங்க மனசிலே என்னவோ கலவரம் ஏற்பட்டிருக்கு போல தோணுது- கவலைப்படாதீங்க- டாக்டர் உங்க கண்களைப் பரிசோதிச்சு ஏதேனும் பரிகாரம் செய்வார்'' என்றாள் துக்கத்திலே தடைபட்ட குரலில் கௌசல்யா.

''பார்வை இருந்தப்போதான் குழப்பமும் சந்தேகமும் எனக்கு ஏராளமாக இருந்துச்சு - இப்போ அறிவுக் கண் திறந்திடுச்சு- எல்லாத்தையும் நல்லாவே பார்க்க முடிகிறது - உண்மையைச் சொல்- நீ கௌசல்யாதானே?'' திடுக்கிட்டுப் போனாள் அவள். மகனின் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தாள்- கண்களில் நீர் வெள்ளமாகியது.

''சாப்பிடுங்கோ ரொம்ப குழப்பமா பேசறீங்க'' தழு தழுத்தாள்.

''இல்லை. நல்ல தெளிவோடதான் கேட்கிறேன்- நேத்து நீ என்னை அழைக்க வந்திருந்தியே - அப்பவே என் உள்ளுணர்வு சொல்லுச்சு.''

பக்கத்திலே உட்கார்ந்திருக்கிற இந்த பெண்- உனக்கு ரொம்ப தெரிஞ்சவள்னு சொல்லுச்சு.

''பிறகு குரலை கேட்டப்ப மனசிலே ஒரு குழப்பம் ஏற்பட்டது. இந்தக்குரல்- நமக்கு பழக்கமான குரலாச்சேன்னு - ரொம்ப நேரம் யோசிச்சிட்டிருந்தேன்.

''உன் கையை நீட்டி என்னைத் தொட்டு நீ எழுப்பினபோது - உன் கையை பிடிச்சுக் கொண்டபோது- எனக்கு மேலும் விளங்கிடுச்சு. மெத்துனு பஞ்சுபோல உடம்பைத் தொடும் இந்த கை-கௌசல்யாவுடையது - அவளது பார்வை- உபசரிப்பு எல்லாமே பூப்போல மெத்துனு இருக்குமேன்னு மனம் கலங்கிப் போனேன் கேட்கத் துணிவு வரலை.''

''ராத்திரி போட்ட சாப்பாட்டை சாப்பிடும்போது நாக்கு ருசி... மேலே திட்டவட்டமா விளக்கிடுச்சு.

''கௌசல்யாதான் காரமும் புளிப்பும் உறவுகூடி- நாக்கை சுழட்டறாப்பல- குழம்பு வைப்பாள்னு... அந்த பழைய ருசியை நாக்கு கண்டுபிடிச்சுடுச்சே. நளமகராஜன் சமையலை... தமயந்தி கண்டுகொண்டாளாமே... அதுபோலத்தான் வச்சுக்கோ .... நான்... ருசியிலேயே.. கண்டுபிடிச்சுட்டேன்... பாயாசம் சாப்பிட்டப்போ.. மகனுக்கு பிறந்தநாள்னு சொன்னியே... உடனேயே நல்லாவே புரிஞ்சுடுச்சு... கௌசல்யா... ஏன் என்கிட்டே இன்னும் உண்மையை மறைக்கிறே! கிட்டவா - உன்னைப் பார்க்க விரும்பலைன்னு துரத்தினேன். அந்த பாவத்துக்குத்தான் பார்க்கணும் என்கிறபோது பார்வை இல்லாம தவிக்கிறேன்.. முரளி... கண்ணே... நீ பெரியவனா வளர்ந்திருப்பே - உன்னைத் தொட்டாவது பார்க்க ஆசைப்பட்றேன். ரெண்டு பேரும் கிட்ட வாங்க'' கூறிவிட்டு கைகளை நீட்டி அவர்களை அழைத்தவண்ணம் - குலுங்கி அழுதான்.

அதற்குமேல் தாங்க முடியாத கௌசல்யா- அவன் அருகே வந்து மண்டியிட்டு அமர்ந்து கொண்டாள். அவனைத் தன் இரு கரங்களாலும் தழுவி - ''நான்தாங்க - உங்க கௌசல்யாதான். இன்னமும் சந்தேகப்பட்டுகிட்டு நீங்க மனசு ஒடிஞ்சுபோய் இருக்கீங்களோன்னு பயந்துதான் - உண்மையைச் சொல்ல அச்சமாயிட்டுது. உங்களை இந்தக் கோலத்தில் பார்க்கணும்கிற கொடுமைக்குத்தான் எனக்கு பார்வையை வச்சிருக்கார் பகவான். முரளி...கிட்டவா... அப்பா...வப் பிடிச்சிக்கோடா- உன்னைத் தொட்டுப் பார்க்க அவர் எப்படித் துடிக்கிறார் பாருடா... குழந்தை'' குமுறியபடி தலையை ஜயந்தன் மடிமீது வைத்துக் கொண்டான்.

''கௌசி!... அழாதே என் மனசிலே அடக்க முடியாது புகைஞ்சு கிடந்த ஏமாற்றத்திலே வீணான சந்தேகத்திலே உன்



வாழ்க்கையை நாசப்படுத்திட்டேன். எனக்கு இந்தத் தண்டனை வேணும். இன்னமும் வேணும்.''

''அப்படியெல்லாம் சொல்லாதீங்க- எனக்கு இப்பத்தான் வாழ்க்கை மேலே பெரும் நம்பிக்கை வந்திருக்கு...'' கௌசல்யா விசும்பினாள்.

அவளது கூந்தலை வருடிக் கொண்டு வறட்சியாக சிரித்தான் ஜயந்தான். ''பங்களா - பதவி - பார்வை எல்லாம் இருக்கும் போது உன்னை அசட்டை பண்ணினேன். கொடுமை செய்தேன். நீ படும்பாடு போதாதுன்னு இப்போ உனக்கு பாரமா வந்திருக்கேன். வாழ்க்கையிலே நம்பிக்கை வந்திருக்குன்னு நீ சமாளிக்கிற கௌசி... என்னை மன்னிச்சிடு.. அதுபோதும்..''

''இல்லீங்க பங்களா பதவி எல்லாம் கொடுக்காத நிறைவு இந்த ஏழ்மையான சூழ்நிலையிலே உங்களோட இருக்கப் போகிற ஒரு மகிழ்ச்சியிலே அமைஞ்சுடுச்சு - எனக்கு அதெல்லாம் வேண்டாங்க... நீங்க - என் கணவர் என்கிற நீங்க தரப்போகும் துளி அன்பு அதுபோதும்- என்னைப் புரிந்து கொண்டு விட்டீங்க என்கிற திருப்தி - அது கோடி கோடி பெறுங்க'' குமுறி அழுதாள்.

தன் கரத்தை ஆதரவுடன் பற்றிய மகனை இழுத்து தன் மார்போடு அணைத்துக் கொண்டான்.

''முரளி! இப்போ என்னால் பார்க்க முடியாது. ஆனால் நிறைய பேசமுடியும். உன்னோட சின்ன வயசிலே கதை சொல்லி பேசிச்சிரிச்சு உனக்கு நான் துணையாக இருந்ததில்லை: அதுக்கு ஈடு செய்யராப்பல உன்னோட தினம் உட்கார்ந்து நிறைய பேசறேன்- கதை சொல்றேன். நான் பட்ட அனுபவங்களை எல்லாம் சொல்லி உன் அறிவை விசாலமாக்க முயல்கிறேன் ஓ. கே'' என்றான் கனிவுடன்.

''முரளி! அப்பாவுக்கு கை கழுவ தண்ணி கொடு. ராஜன் மாமா வச்சுட்டு போயிருக்கிற புது உடைகளை கொடுத்து உதவு - டாக்சி பிடிச்சுட்டுவா - டாக்டர் வீட்டுக்கு அழைச்சிட்டுப் போவணும்'' உத்தரவிட்டாள் கௌசல்யா.

வெளியே கிளம்பத் தயாரானவன் கையில் கம்பைக் கொண்டு வந்து கொடுத்தாள். ''இதை வச்சுக்கிட்டு இப்ப சத்தியா நடமாட பழகிக்கோங்க. டாக்டர் வைத்தியநாதன் உங்களை ஐ ஸ்பெஷலிஸ்ட் கிட்ட அழைச்சிட்டு போக ஏற்பாடு பண்ணுவார். இந்தக் காலத்தில் எத்தனையோ சிகிச்சை முறைகள் வந்திருக்கு. உங்களுக்கு பழையபடி பார்வை கிடைக்க நான் கடைசிவரை முயற்சி செய்யப் போறேன் - கவலைப்படாதீங்க'' கையை நீட்டி அவன் கரத்தை அன்போடு பற்றிக் கொண்டாள்.

''கௌசி! எனக்கு முழுசாகூட பார்வை வரணும்னு ஆசையில்லை. ஒரு துளி நிழல்போல உன் முகத்தைப் பார்க்கிற அளவு பார்வை லேசா தெரிஞ்சா போதும். குழந்தை முரளி உயரமா வளர்ந்திட்டான் என்கிறதை கொஞ்சம் பார்க்க முடிஞ்சா போதும். அதுவரை இந்தக் கம்பை ஊன்று கோலா வச்சுகிட்டு... உன் துணையை ஊன்றுகோலா... எப்பவும் பிடிச்சுக் கொண்டு இனியாவது உனக்கு உகந்த ஒரு கணவனா இருக்க முயற்சிப்பேன் - கௌசி எங்கே கையைக் கொடு. அந்தப் பட்டுக் கையை மறுபடியும் தொட்டுக்கொண்டே இருக்கணும்னு ஆசையா இருக்கு...'' உற்சாகமாகச் சிரித்தான் ஜயந்தன்.

மனைவி-மக்கள் இருவரையும் இரண்டு கரங்களாலும் அணைத்தபடி பார்வை சிறிதளவாவது திரும்பக்கூடும். ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு திட்டங்களில் அவனுக்கும் ஒரு வேலை கிட்டும்... அன்பும் பண்பும் உள்ள தன் ஆசை மனைவி... மகனுடன் வருங்காலம் சுகமாக இருக்கப் போகிறது- என்ற [illegible] நம்பிக்கையுடன் - அவர்களைத் தன் ஊன்று கோலைக் கொண்டு... மெல்ல வெளியே நடந்தான்.

முற்றும்

39795
5693998